விலை ரூபா 30

பக்கங்கள் 56

# உதயன்

சுடர் 31 கதிர் 178 வள்ளுவர் ஆண்டு 2047 வைகாசி 09, ஞாயிற்றுக்கிழமை 22.05.2016

மகாராஜா பொதிகள் சேவை

சிக்கனப் பொதிகள் சேவை

Per Kg

லண்டன் 449/= கனடா 549/= சுவிஸ் 449/=

GTV Enterprises (Pvt)Ltd.

இல 225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 - 2224338 / 021-4925024
இல 25, கந்தசாமி கோவில் வீதி, வவுனியா.
024 - 4930200 / 076 - 6908961

## வடக்கு அரசின் தீர்வுத் திட்டம் சம்பந்தனிடம்

கொழும்பு, மே 22

வடக்கு மாகாண சபையால் தயாரிக்கப்பட்ட தீர்வுத் திட்டம், எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனிடம் கையளிக்கப் பட்டது.

நேற்று மாலை 5.30 மணிக்கு, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம், வடக்கு எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா ஆகியோர் இணைந்து இதனைக் கையளித்தனர்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் பக்.53



### இளம் குடும்பஸ்தர் மாங்குளத்தில் சாவு



முல்லைத்தீவு, மே 22

வெள்ளத்தினால் பாதிப்படைந்த தற்காலிக வீடொன்றிலிருந்து இளம் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக மாங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுக் பக்.53

# இயற்கைப் பேரிடரால் அல்லாடும் அரநாயக்க

- நேற்று மாலையும் அங்கு மண் சரிவு
- பல வீடுகள் மண்ணில் புதையுண்டன
- ஆயினும் உயிர்ச் சேதம் எதுவுமில்லை
- மக்கள் மத்தியில் பதற்றநிலை

கொழும்பு, மே 22

இயற்கைப் பேரிடரிலிருந்து அரநாயக்க மீள்வதற்குள்ளேயே, நேற்று மீண்டும் மண் சரிவு அந்தப் பகுதியில் ஏற்பட்டுள்ளது. இந்த மண் சரிவு காரணமாக உயிரிழப்புக்கள் எவையும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், மீண்டும் மண் சரிவு ஏற்பட்டமையினால், அந்தப் பக்.53

"கேகாலை மாவட்டத்தின் அரநாயக்க பகுதியில் ஏற்பட்ட மண் சரிவு காரணமாக உயிரிழந்த 25 பேரின் சடலங்களே நேற்று மாலை வரையில் மீட்கப்பட்டுள்ளன. அத்துடன் 141 பேர் இந்தப் பகுதியில் காணாமற்போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. 600 இராணுவத்தினர் தொடர்ச்சியாக மீட்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்."

### இடர் பாதித்த பகுதிகளை ரணில் பார்வை

கொழும்பு, மே 22

மண்சரிவினால் பெரிதும் பாதிப்பை எதிர்கொண்டுள்ள கேகாலை அரநாயக்க பிரதேசத்துக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுச் சனிக்கிழமை பயணம் மேற்கொண்டுள் பக்.53

## இயற்கைப் பேரிடரினால் சோபையிழந்தது வெசாக்

### யாழ்ப்பாணத்தில் வழமைபோன்று இம்முறையும் கொண்டாட்டங்கள்

கொழும்பு, மே 22

கொழும்பு உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் வெசாக் கொண்டாட்டங்கள் இந்தமுறை களைகட்டவில்லை. கடந்த சில தினங்களாகத் தொடர்ந்த மழை மற்றும் நாட்டில் ஏற்பட்டுள்ள பேரிடர் பக்.53



நாட்டில் ஏற்பட்ட இயற்கை இடரினால் தென்பகுதியில் இம்முறை வெசாக் கொண்டாட்டங்கள் சோபையிழந்தன. ஆனால் யாழ். மாவட்டத்தில் பாதுகாப்புத் தரப்பின் ஏற்பாட்டில், யாழ். முற்றவெளிப் பகுதியில் வெசாக் தோரணங்கள் அமைக்கப்பட்டிருந்தன. (த-101)

## ராணுவத்துடன் இணைவதற்கு முன்வரவேண்டும் போராளிகள்

### வடக்கு ஆளுநர் கூரேயின் விருப்பம் இது

கிளிநொச்சி, மே 22

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளும், இலங்கை இராணுவச் சிப்பாய்களும் ஒன்றிணைவதே எனது எதிர்பார்ப்பாகும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே.



இலங்கை இராணுவத்தில், முன்னாள் போராளிகள் உட்பட தமிழ்இளைஞர்களும்இணைந்து கொள்ளவேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

வெசாக் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி இராணுவ ஒத்துழைப்பு பக்.53

### மலசலகூடக் குழியினுள் தவறி வீழ்ந்த சிறுவன் சாவு

கிளிநொச்சி, மே 22

வீட்டில் அமைக்கப்பட்டிருந்த மலசலகூடக் குழியினுள் தவறி விழுந்து 6 வயதுடைய சிறுவன் உயிரிழந் பக்.53

## இடர் முகாமைத்துவத்தை பலமிக்கதாக்கச் செயலணி

### நியமித்தார் ஜனாதிபதி மைத்திரிபால

கொழும்பு, மே 22

அரசினால் முன்னெடுக்கப்பட்டு வரும் இடர் முகாமைத்துவத்தை இன்னும் பலப்படுத்தும் வகையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நேரடி உத்தரவின் பேரில்விசேடசெயலணியொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த ஜனாதிபதி செயலணி, ஜனாதிபதியின் செயலாளர் பீ.பீ. அபயக்கோனின் தலைமையில் பக்.53

www.sdb.lk

நிலையான வைப்புகளுக்கு

உயர்ந்த வட்டி

ஐந்து வருட நிலையான வைப்பொன்றுக்கு

12.00%

உச்ச வருட வட்டி (முதிர்ச்சியில்)

வ.தே.வ. 9.86%

| | 3மாதம் | 6மாதம் | 1வருடம் |
|---|---|---|---|
| முதிர்ச்சியில் (வ.வ.வீ.) | 10.50% | 10.75% | 11.00% |
| வ.தே.வ. | 10.92% | 11.04% | 11.00% |

60 வயதுக்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரஜைகளுக்கு ரூ.1 மில்லியன் வரை 15% வருட வட்டியும், 55 வயதுக்கு மேற்பட்ட சகல பிரஜைகளுக்கு அதி உயர் வட்டியும் உரித்தாகும்.

ஏனைய நிலையான வைப்புகளுக்கும் கவர்ச்சிகரமான வட்டி வீதம்

மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள சணச அபிவிருத்தி வங்கிக் கிளையை நாடுங்கள்

011 5 411 411

SDBL சணச அபிவிருத்தி வங்கி பீஎல்சீ

தேசத்தின் முன்னோடி



# இமய மலையின் மேல் ஏறி இலங்கைப் பெண் சாதனை

கொழும்பு, மே 22
உலகின் மிகவும் உயரமான இடமான இமய மலையின் உச்சியில் ஏறி இலங்கைப் பெண் ஒருவர் சாதனை படைத்துள்ளார்.
ஜெயந்தி குரு உதும்பல என்ற பெண்ணே மலையேறிய முதலாவது இலங்கைப் பெண் என்ற சாதனைக்குச் சொந்தக்காரர் ஆகியுள்ளார்.
இமய மலையின் உச்சியை நேற்றுக் காலை சென்றடைந்த அவர் அங்கு இலங்கைக் கொடியைப் பறக்க விட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.
இதன் மூலம் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி இமய மலை ஏறிய பெண்ணாக அவர் வரலாற்றில் இடம் பிடித்துள்ளார்.
பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஜெயந்தி குரு உதும்பலவுக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார்.
அத்துடன் ஜெயந்தி குரு உதும்பலவுடன் சேர்ந்து இமய மலை ஏறுவதற்கு சென்ற யோஹான் பீரிஸ் இறுதி கட்டம் வரை சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
(ற-ஜ-5)

# இடரால் பாதிக்கப்பட்டோருக்கு உதவிகள் வழங்க ஏற்பாடுகள்

முல்லைத்தீவு,மே 22
யாழ்ப்பாணம், வவுனியா மாவட்டங்களை அடுத்து இயற்கை இடரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு உதவி வழங்குவதற்கான ஏற்பாடுகள் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
எனவே உதவிகளை வழங்க விரும்புவோர் முல்லைத்தீவு செயலகத்துடன் தொடர்புகளை மேற்கொண்டு உதவிகளை வழங்க முன்வருமாறு முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.
இடர் பாதிப்புக்களுக்கு உள்ளானவர்களுக்கான நிவாரண பொருள்கள் சேகரித்தலும், விநியோகித்தலும் பொறிமுறையானது முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திலும் உருவாக்கப்பட்டுள்ளது.
இந்தப் பொறி முறையானது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அறிவுறுத்தலுக்கு அமைவாக உருவாக்கப்பட்டுள்ளது.
இடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நன்கொடைகளை வழங்க முன்வரும் நலன் விரும்பிகள், மாவட்ட செயலக இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளருடன் 0773957886, 0212290054 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும், மற்றும் இடர் நிவாரண சேவைகள் உத்தியோகத்தரை 0772487804 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அரச அதிபர் தெரிவித்துள்ளார். (ற-ஜ-ரி7,21)

# திருட எத்தனித்தவரை மடக்கிப் பிடித்த மக்கள்

சாவகச்சேரி,மே 22
வீடுகளில் திருட்டு முயற்சியில் ஈடுபட்டனர் என்று குற்றஞ்சாட்டப்படும் மூவரில் ஒருவரைக் கிராம மக்கள் பிடித்து முறையான கவனிப்பின் பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். ஏனைய இருவரும் தப்பியோடியுள்ளனர்.
இந்தச் சம்பவம் கச்சாய் பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு நடைபெற்றுள்ளது.
நள்ளிரவில் மூன்று வீடுகளில் ஒரே நேரத்தில் திருடர்கள் புகுந்துள்ளனர். தொடர்ச்சியாக நாய் குலைத்ததால், ஜன்னல் ஊடாக வீட்டுக்காரர் பார்த்த போது வெளியில் திருடர்கள் நடமாட்டம் காணப்பட்டதை அடுத்து அயலவர்களுக்கு அலைபேசியில் அழைப்பு விடுத்துள்ளார்.
அலயவர்கள் ஒன்று சேர்ந்து சுற்றிவளைத்து ஓட முயன்ற திருடனைப் பிடித்து தமது முறையான கவனிப்பின் பின்னர் கொடிகாமம் பொலிஸாருக்கு தகவல் அனுப்பினர். அங்கு சென்ற பொலிஸாரிடம் தாம் பிடித்து வைத்திருந்த, திருட வந்திருந்தார் என்று குற்றஞ்சாட்டப்படும் நபரை ஒப்படைத்தனர்.
திருடனைப் பிடிக்க ஒவ்வொரு வீடுகளிலிருந்தும் ஆள்கள் ஓடியதால், மற்ற வீடுகளில் திருடுவதற்கான முயற்சியில் ஈடுபட்ட ஒளித்திருந்த இருவரும் வேறு திசையில் ஓடித் தப்பியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நபர் சாவகச்சேரி வைத்திய சாலையில் பொலிஸ் பாதுகாப்புடன் சேர்க்கப்பட்டுள்ளார்.
(ற-ஜ-4,9)

# இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பிய 140 குடும்பங்களுக்கு வீட்டுத் திட்டம்

யாழ்ப்பாணம், மே 22
யாழ்ப்பாண மாவட்டத்தில் வசிக்கும் இந்தியாவில் இருந்து தாயகம் திரும்பிய 140 குடும்பங்களுக்கும், இங்கு நிரந்தரமாக வாழ்ந்தவர்களில் 3 ஆயிரம் பேருக்கும் மீள் குடியமர்வு அமைச்சின் 8 இலட்சம் ரூபா பெறுமதியிலான வீடுகள் அமைப்பதற்கான அனுமதி கிடைத்துள்ளது என்று மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
யாழ்ப்பாண மாவட்டத்தில் இந்த ஆண்டு மீள் குடியமர்வு அமைச்சின் நிதியுதவியில் அதிக திட்டங்களுக்கான அனுமதிகள் கிடைத்துள்ளன. இதன் பிரகாரம் யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்டு போர் காரணமாக இடம்பெயர்ந்து இந்தியாவில் வசித்து, தற்போது தாயகம் திரும்பிய 140 குடும்பங்களுக்கும் இங்கு நிரந்தரமாக வாழ்ந்தவர்களில் 3 ஆயிரம் பேருக்கும் மீள் குடியமர்வு அமைச்சின் 8 இலட்சம் ரூபா பெறுமதியிலான வீடுகள் அமைப்பதற்கான அனுமதிகள் கிடைத்துள்ளன.
அதேபோன்று 750 வீடுகளுக்கு பகுதித் திருத்தத்துக்காக ரூபா 2 லட்சம் வீதம் வழங்கப்படவுள்ளன. அதேபோன்று உட்கட்டுமான அபிவிருத்திக்காக மீள் குடியமர்வு இடம்பெற்ற பகுதிகளில் உள்ள 25 வீதிகளின் புனரமைப்புக்காக 90 மில்லியன் ரூபா அனுமதிக்கப்பட்டுள்ளதோடு, எழுவைதீவு , அனலைதீவு, நாகர்கோவில் பாடசாலைகளின் புனரமைப்புக்கு 10 மில்லியன் ரூபாவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.
இதே போன்று தொண்டமானாறு தண்ணீர்த் தாங்கியில் இருந்து வளலாய் ஊடாக பலாலி வடக்கில் குடியமரும் மக்களுக்கு குடி தண்ணீர் வசதிக்காக 22 மில்லியன் ரூபாவும் , மாதகல் கிழக்கு, தெற்கு பகுதிகளின் குடி தண்ணீர்த் திட்டத்துக்கு 7 மில்லியன் ரூபாவும், பருத்தித்துறை சக்கோட்டை கிராமத்துக்கான குடி தண்ணீர் வசதிக்கு 19 மில்லியன் ரூபாவும் அனுமதிக்கப்பட்டுள்ளது - என்றார்.(ற-ஜ-101)

# மின்சாரத் தடை தொடர்பில் முறையிடப் புதிய இலக்கம்

கொழும்பு, மே 21
மின்சாரம் செயலிழப்பு மற்றும் மின் அனர்த்தங்களின் போது முறைப்பாடு செய்வதற்குப் புதிய தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக மின்சாரம் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய கூறினார்.
அதன்படி, ஏற்கனவே இருந்த 1987 மற்றும் 1901 என்ற எண்களுக்கு மேலதிகமாக 011 - 30 30 303 என்ற இலக்கத்திற்கும் மின்சாரம் செயலிழப்பு மற்றும் மின் அனர்த்தங்கள் பற்றி தகவல் வழங்க முடியும் என்று அமைச்சர் கூறினார்.
தெஹியோவிட்ட, ருவன்வெல்ல பகுதிகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகளை விநியோகிப்பதற்காக சென்றிருந்தபோது அவர் இவ்வாறு கூறினார்.
(து)

# பாவனையற்றிருந்த மலசல கூட அறைக்குள் பெண்கள் உள்ளாடைகள், இறுவட்டுக்கள், கணினி

## வவுனியா பொது நூலகத்தில் சம்பவம்; விசாரணைகள் ஆரம்பம்

வவுனியா, மே 22
வவுனியா பொது நூலகத்தில் பாவனையற்று பூட்டியிருந்த மலசல கூட அறை ஒன்றில் இருந்து இறுவட்டு, கணினி உட்பட பெண்களின் உள்ளாடைகள் என்பவை மீட்கப்பட்டுள்ளன என்று வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
வவுனியா பொது நூலகத்தின் பாவனை அற்ற மலசல கூடத்துக்கு நேரே மேல் உள்ள சீலிங் சீற்றானது வாள் பிளேற்றால் அறுக்கப்பட்டுள்ளதை நேற்றுக் காலை அவதானித்த பொது நூலகத்தின் ஊழியர்கள் சந்தேகம் கொண்டு குறித்த சம்பவம் தொடர்பாக அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியுள்ளனர். அதையடுத்து மலசல கூடத்தைத் திறக்க முற்பட்ட அதிகாரிகள் அறையின் திறப்பு இல்லாததால் பொலிஸாரை வரவழைத்து கதவை உடைத்துத் திறந்துள்ளனர். அதற்குள் பெண்களின் உள்ளாடைகள், இறுவட்டுக்கள் மற்றும் கணினி என்பன காணப்பட்டுள்ளன. அத்தோடு மலசல கூட அறையின் மேல் உள்ள சீற்றானது அறுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.



அதையடுத்து நூலகத்தினுள்ளே பூட்டப்பட்டிருந்த மலசல கூட அறையில் பொருள்கள் எவ்வாறு வந்தன. என்பது குறித்தும், குறித்த அறையில் தங்கியிருந்தவர் யார் என்பது குறித்தும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
இது தொடர்பாக வவுனியா பொது நூலக அதிகாரியிடம் கேட்டபோது இது தொடர்பாக வவுனியா நகரசபை செயலாளரிடம் கேட்டு தகவல்களைப் பெற்றுக் கொள்ளுமாறும் தனக்குத் தகவல் கொடுப்பதற்கு அதிகாரம் இல்லை எனவும் தெரிவித்தார்.
நகரசபை செயலாளரிடம் இது தொடர்பாக வினவியபோது அவரும் தனக்குத் தகவல் தருவதற்கு அதிகாரம் இல்லை எனவும் மேலதிகாரியான உள்ளூராட்சி உதவி ஆணையாளரைத் தொடர்பு கொண்டு விவரத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவித்தார்.
வவுனியா மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அசங்க காஞ்சன குமாரவை தொடர்பு கொண்டு கேட்ட போது அவர் சம்பவம் தொடர்பாக தனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும், தான் தற்போது (நேற்று) யாழ்ப்பாணத்தில் கலந்துரையாடல் ஒன்றில் கலந்து கொண்டுள்ளதால் நாளை (இன்று) இது தொடர்பாக அறிந்து கூறுகின்றேன் என்றும் தெரிவித்தார்.
(ற-21)

# படையினர் வசமுள்ள காணிகளை நேரில் பார்வையிட்டது ஜனாதிபதி செயலகக் குழு

யாழ்ப்பாணம், மே 22

பாதுகாப்புத் தரப்பினர் வசம் உள்ள தனியார் காணிகள் தொடர்பில் நேரில் சென்று பார்வையிட்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதியினால் பணிக்கப்பட்டதற்கு அமைய, ஜனாதிபதி செயலகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் குழு, வலி. வடக்கு உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளைக் கடந்த சில தினங்களாகச் சென்று பார்வையிட்டுள்ளனர்.

பாதுகாப்புத் தரப்பினர் வசம் உள்ள காணிகளின் விடுவிப்பு மற்றும் வடக்கு - கிழக்கு மீள் குடியமர்வு தொடர்பில், ஜனாதிபதி தலைமையில் கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தது. கடந்த மாதம் இடம்பெற்ற கலந்துரையாடலில், அரச அதிகாரிகள், உரிய தகவல்களை வழங்கவில்லை என்று ஜனாதிபதி கடுமையாகச் சாடியிருந்தார்.

அத்துடன் பாதுகாப்புத் தரப்பினர் வசமுள்ள காணிகளை நேரடியாகச் சென்று பார்வையிடுமாறும் பணித்திருந்தார்.

பாதுகாப்புத் தரப்பினரால் வழங்கப்படும் தகவல்களுக்கும் அரச அதிகாரிகளின் தகவல்களுக்கும் இடையில் முரண்பாடுகள் காணப்பட்டன.

இவை தொடர்பிலும், மீள்குடியேற்ற நிலைமைகள் குறித்தும் நேரில் சென்று ஆராயுமாறு ஜனாதிபதி செயலக அதிகாரிகளுக்குப் பணித்திருந்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

இதற்கமைய யாழ்.மாவட்டத்துக்கு வருகை தந்த ஜனாதிபதி செயலக அதிகாரிகளடங்கிய குழுவினர், கடந்த புதன் மற்றும் வியாழக்கிழமைகளில் பல்வேறு பகுதிகளையும் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

அத்துடன், வலி.வடக்கு மக்கள் இடம்பெயர்ந்து தங்கியுள்ள நலன்புரி நிலையங்களையும், வலி.வடக்கில் அண்மையில் மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்ட இடங்களையும் சென்று பார்வையிட்டுள்ளனர்.

மேலும், வலி.வடக்கில் கடந்த காலங்களில் குடியிருந்த மக்கள் தொகை எவ்வளவு ? எத்தனை பேருடைய தனியார் காணிகள் பாதுகாப்புத் தரப்பினர் வசம் இருக்கின்றன? காணிகள் இல்லாத குடும்பங்கள் எத்தனை? போன்ற சகல விவரங்களையும் அவர்கள் சேகரித்துள்ளனர்.

இந்தக் குழுவினர் ஜனாதிபதி செயலகத்தில் அறிக்கை சமர்ப்பித்த பின்னர், மீள்குடியேற்றத்துக்குப் பொறுப்பான ஜனாதிபதி செயலக உயர் அதிகாரி, யாழ். மாவட்டத்துக்கு வருகை தரக் கூடும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (த-வ-5-101)



## பெற்றோர்களை இழந்த மாணவர்களுக்கு உதவி

யாழ்ப்பாணம், மே 22

கொழும்புத்துறை மேற்கு வதிரி பீட விநாயகர் ஆலயம் கடந்த கால போர் நடவடிக்கைகளால் பெற்றோர்களை இழந்த பாடசாலை மாணவர்களுக்குக் கல்விக்கான உதவிகளை வழங்கி வருகின்றது.

ஆலயத்தின் வருடாந்த தேர்த் திருவிழாவின் போது பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு இந்த உதவிகளை ஆலய பரிபாலன சபையினர் வழங்கி வருகின்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற தேர்த்திருவிழாவில் கிளிநொச்சி உருத்திரபுரத்தைச் சேர்ந்த இரண்டு பாடசாலை மாணவர்களுக்கு கல்விக்கான உதவுதொகை வழங்கப்பட்டது.

ஆலய பரிபாலன சபையின் உப தலைவர் பொ.சிவப்பிரகாசம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் புலம்பெயர் நாடுகளில் இருந்து வருகை தந்த நடராஜா சிவநாதன் மற்றும் கந்தசாமி திருஞானசம்பந்தர் ஆகியோர் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உதவு தொகையை வழங்கினார்கள். (கு-17)

## குடிதண்ணீர்ப் போத்தல்கள் தறப்பாள்கள் வழங்குங்கள்

### யாழ். அரச அதிபர் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 22

இயற்கைப் பேரிடரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்ய விரும்புவர்கள் உணவுப் பொருள்களைத் தவிர்த்து, குடிதண்ணீர்ப் போத்தல்கள், தறப்பாள்கள் என்பவற்றை வழங்குமாறு, யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் கேட்டுள்ளார்.

இயற்கைப் பேரிடரினால் சிக்குண்டவர்களுக்கு, ஒவ்வொரு மாவட்டச் செயலகங்கள் ஊடாகவும் நிவாரணப் பொருள்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

கேகாலை மாவட்டத்தின் அரநாயக்க பிரதேசம் மண் சரிவினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. அங்கே பல தரப்பினரது நிவாரணப் பொருள்களும் குவிந்துள்ளதாக, அங்கிருக்கும் எமது செய்தியாளர் தெரிவித்தார். நிவாரணப் பொருள்களை அங்கே பாதுகாப்பாக வைப்பதற்குரிய இடங்கள் போதியளவு இல்லாமல் இருப்பதாகவும் அதிகாரிகள் குறிப்பிடுகின்றனர்.

அத்துடன் நிவாரணப் பொருள்களுடன் தொடர்ச்சியாக அந்தப் பகுதிக்கு வாகனங்கள் வருகின்றமையினால், பெரும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவித்தார்.

மேலும், அந்தப் பகுதி மக்கள் இது வரை 9 நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட் டிருந்தனர். தற்போது மேலும் பலர் இடம்பெயர்ந்துள்ளமையினால் நலன்புரி நிலையங்களின் எண்ணிக்கை 14 ஆக உயர்வடைந்துள்ளதாகவும்அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, மாவட்டச் செயலகங்களின் ஊடாக நிவாரணப் பொருள்கள் சேகரிப்புக்குப் பொதுமக்கள் பல்வேறு உதவிகளை வழங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போதைய சூழ்நிலையில் உணவுப் பொருள்கள் தவிர்த்து ஏனைய பொருள்களே அதிகளவில் தேவைப்படுவதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது.

தறப்பாள்கள், குடிதண்ணீர்ப் போத்தல்கள், பற்பசை, சவர்க்காரம் போன்றவையே அதிகளவில் தேவைப்படுவதாகவும், உதவி செய்ய விரும்புவர்கள் அவற்றைவழங்கிவைக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (த-வ-5-101)




## றோட்டரிக் கழகத்தின் வெள்ள நிவாரண உதவி

நாட்டில் நிலவும் அசாதாரண வானிலையால், பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப்பணிகளைக் கிளிநொச்சி நகர றோட்டரிக் கழகம் மேற் கொண்டு வருகின்றது.

இதற்கான உதவிகளைக் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த திணைக்களங்களும் மற்றும் நலன்விரும்பிகளும் வழங்கி வருகின்றனர்.

இதனடிப்படையில், கிளி நொச்சி மாவட்ட அரச அதிபரின் வேண்டுகோளுக்கேற்ப, கிளிநொச்சி தட்டுவன் கொட்டிப் பிரதேசத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 100 குடும்பங்களுக்கான உதவிகளைக் கிளிநொச்சி நகர றோட்டரிக் கழகம் நேற்றுச் சனிக்கிழமை வழங்கியது. மேலும் மண் சரிவினால் முற்றாக அழிவடைந்துள்ள கேகாலை, அரநாயக்க பிரதேச மக்களுக்காகக் கிளிநொச்சி மக்கள் வழங்கிய 5 லட்சம் ரூபாவுக்கு மேல் பெறுமதியான உதவிப் பொருள்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சியிலிருந்து லொறி மூலம் எடுத்துச் செல்லப்படவுள்ளன. (கு)

**வேலை வாய்ப்பு**

மீசாலை பமிலி கெயர் மெடிக் கிளினிக்கில் வேலை செய்வதற்கு அனுபவமுடைய தாதிய கற்கை நெறி பூர்த்தி செய்த அண்மையில் வசிக்கும் பெண்கள் தேவை.

தொடர்பு: 076 535 9284

**வேலையாள் தேவை**

உணவகம் ஒன்றுக்கு காசாளர் (ஆண்) தேவை.

தொடர்பு : 077 380 2329

**காணவில்லை**

சுமார் 2½ அடி உயரமுள்ள கிறேடன் இன கறுப்பு நரை நிற பெண் நாய் சுன்னாகம் சந்தியை அண்டிய பகுதியில் 18.05. 2016 இல் இருந்து காணவில்லை இதனைக் கண்டவர்கள் தயவு செய்து தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

தேவன் சன் எலற்றிக்கல்

தொடர்பு: 077 3912742, 077 6719063

**வீட்டுப்பணிப்பெண் தேவை**

வீட்டில் தங்கி இருந்து வேலை செய்வதற்குப் பணிப் பெண் ஒருவர் தேவை.

071 843 2098

**வாடகைக்கு உண்டு**

ஆனைக்கோட்டை பொன்னையா வீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு (மானிப்பாய் பிரதான வீதிக்கு அண்மையில்) வாடகைக்குண்டு

தொடர்பு: 077 778 8599

**இலவச கணினி வகுப்புக்கள்**

பாடசாலை மாணவர்கள், O/L, A/L பரீட்சைப் பெபேறு பெற்றவர்கள், பல்கலைக்கழக புகுமுக மாணவர்கள், உத்தியோகத்தர்களுக்கான

* Diploma in Ms-Office
* Diploma in Internet Technology

பிரிவு III- ஆரம்பம் : 28.29/05/2016

● பெறுமதி மிக்க சான்றிதழ் ● காலம்: 3 மாதங்கள்

IPS Thirunelvely (சாயி சமித்திக்கு அண்மை)
Mobile : 076 685 2529

**பணியாளர் தேவை**

கொக்குவிலில் இயங்கும் பிரபல வர்த்தக நிறுவனத்திற்கு முகாமையாளர், ரைப்செற்றிங் செய்பவர், விற்பனையாளர் தேவை. (முழுநேரம்/ பகுதி நேரம்) பெண்கள் விரும்பத்தக்கது.

077 314 6013/ 075 957 8283

**கடை வாடகைக்கு உண்டு**

கொழும்புத்துறை 3ஆம் குறுக்குத்தெரு 9ஆம்இலக்கத்தில் சகல வசதிகளுடன் கூடிய கொங்கிறீற் கூரை இடப்பட்ட புதிய கடைக்கட்டடம் தளவிஸ்தீரணம் 350 ச.அடி

076 914 1118 / 077 795 7826

**பணிநிலை வெற்றிடங்கள்**

01. பெண் சிறுமிகள் மேற்பார்வையாளர்
02. பெண் சமையலாளர்

குறிப்பு

01. வயது - 35 இற்கு மேற்பட்டவராகவும் 55 வயதுக்கு உட்பட்ட வராகவும் இருத்தல்.
02. இல்லத்தில் தங்கியிருந்து சேவையாற்றக் கூடியவர் விரும்பத்தக்கது.
03. கல்வித்தகைமைகள் அனுபவ விவரங்களுடன் விண்ணப்பிக்கவும்
04. ஊதியம் நேர்முகத்தேர்வின் போது கலந்தாலோசித்து தீர்மானிக்கப்படும்
05. விண்ணப்பம் முடிவு திகதி 10.06.2016

தலைவர்
ஸ்ரீபரமானந்தா சிறுவர், முதியோர் இல்லம்
வதிரி, கரவெட்டி
தொ.பே.இல. 021 321 5156, 021 2263136

**கன்டர் வாகனம் வாடகைக்கு விடப்படும்**

உள்ளூர், வெளியூர் இடங்களுக்கு பொதிகள் வீட்டு தளபாடங்கள் ஏற்றி இறக்கி கொடுக்கப்படும்.

தொடர்பு: 077 538 7973

**பணிப்பெண் தேவை**

யாழ். நல்லூரில் படுக்கையிலில்லாத வயோதிபப் பெண் ஒருவரை வீட்டில் தங்கியிருந்து பார்ப்பதற்கு குடும்பப் பாரமற்ற பெண் தேவை. மாதம் 15 000/=

077 6741 213

**வேலை ஆள்கள் தேவை**

பருத்தித்துறை வீதி, இருபாலைச் சந்திக்கு அருகிலுள்ள மெடிக்கல் கிளினிக்கில் வேலை செய்வதற்கு பெண்கள் தேவை.

077 837 8597

**சுயதொழிற் பயிற்சி**

- ஸ்கிறீன் பிறிண்டிங் — சகல பொருள்களிலும் அச்சடிக்கும் முறை.
- எச்சிங் - பித்தளை — மெடல்கள் கேடயங்கள், பெயர்ப்பலகை, புளொக் செய்யும் முறை.
- சான்ட் பிளாஸ்ட் — கருங்கல், கண்ணாடி, பிளாஸ்ரிக், எழுத்துக்கள் படங்கள் பொறிக்கும் முறை
- டோம் இடல் — படங்களைப் பாதுகாக்கும் முறை.

077 711 0610

# மனைவியை தாக்கிய கணவருக்கு மறியல்

சாவகச்சேரி,மே 22
மனைவியைத் தாக்கிக் காயப்படுத்திய குற்றச்சாட்டில் அவரது கணவரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்று கடந்த வியாழக்கிழமை உத்தர விட்டது.இவரது மனைவி காயமடைந்த நிலையில் வைத்தி யசாலையில் தங்கிச் சிகிச்சை பெற்றுவருகிறார். அவரது முறைப்பாட்டையடுத்து கணவரைக் கொடிகாமம் பொலி ஸார் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினர்.
நீதிவான் குறித்த நபரை எதிர்வரும் மூன்றாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ற-ஐ-9)

## மரண அறிவித்தல்

### திருமதி கண்மணி செல்லத்துரை



நவாலி வடக்கை. பிறப்பிடமாகவும் மானிப்பாய். கட்டுடை. அச்சுவேலியை வசிப்படமாகவும் தற்பொழுது நவாலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கண்மணி செல்லத்துரை 19.05.2016 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரையின் (மலயான் ஹாட் வெயர் உரிமையாளர்) அன்பு மனைவியும் காலஞ் சென்றவர்களான கந்தையா- அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தம்பையா - இல சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் சறோஜினிதேவி (ஆஸ்திரேலியா), பத்மலிங்கம் (ஆஸ்திரேலியா), சற்குண தேவி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ் சென்ற சந்திரராஜா மற்றும் அருள்மணி, ஜெகதீஸ்வரன் ஆகி யோரின் அன்பு மாமியும் யோகம்மா காலஞ் சென்றவர்களான கணேஸ்வரி. செல்லத்துரை. சண்முகரத்தினம். பாலசுப் பிரமணியம் ஆகியோரின் சகோதரியும் தபோநந்தினி. யோகானந்தன். கேசவன். தயானந்தன் ஆகியோரின் பெரிய தாயாரும் சிவகுமார். தேவகுமார். ஜீவகுமார். ஜனனி. சோபியா. கோபி துஸ்சன். இந்துஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அர்விந். அனிசா. தவினா. ஹருன். அற்விகா. அஸ்வினா ஆகியோரின் அன்பு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.05.2016) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் சகோதரியான ஆனந்தர் யோகம்மாவின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆரியம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


தகவல்: செல்லத்துரை குடும்பத்தினர்.
ஆனந்தர் யோகம்மா

வரகு சாட்டி வீதி,
நவாலி வடக்கு,
மானிப்பாய்.

யோகானந்தன்: 077 731 6138. கேசவன்: 077 725 2062

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை நாகராஜா



கீரிமலையைப் பிறப்பிட மாகவும் கொழும்பு, கனடா வில் வசித்தவருமாகிய வேலுப்பிள்ளை நாகராஜா கடந்த (17. 05.2016) செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமாகிவிட் டார்.

அன்னார் சுவர்ணாம் பாளின் அன்புக் கணவரும், காலஞ் சென்றவர்களான வேலுப் பிள்ளை-சிவபாக்கியம் தம் பதியரின் சிரேஷ்ட புத்திரனும், வேலாயுதம்- அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ் சென்ற கோணேஸ்வரன் (முன்னாள் முல்லைத்தீவு -புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர். பணிப்பாளர். கொழும்பு சமூகசேவை திணைக்களத் தொழில் பயிற்சி பிரிவு. அளவெட்டி கோணேஸ் மற்ஸ் அக்கடமி நிறுவுனர். J.P) கேதீஸ்வரன் (பிரான்ஸ்). நகுலாம்பிகாதேவி (கொழும்பு). நகுலேஸ்வரன் (கனடா. முன்னாள் இ.போ.ச. காப்பாளர். கோண்டாவில் டிப்போ) ஆகியோரின் பாசமிகு தந்தையும். பிரியதர்சினி (கொழும்பு), விமலச்சந்திரன் (கொழும்பு) , நவறஞ்சினி (பிரான்ஸ்). நளினி (கொழும்பு) ஆகியோரின் மாமனாரும். மிதுராங்கன், சுருதிகா. கேசிகா. நவீஸ். மொனீஸன் ஆகியோரின் பேரனும். செல்வராஜாவின் (ஓய்வுபெற்ற கிரா மிய வங்கி முகாமையாளர். தெல்லிப்பழை ப.நோ. கூட்டுறவுச் சங்கம்) அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுன்னாகம் நாகேஸ்வரி வீதியில் அமைந்துள்ள டாக்டர் சிவபாலனின் இல்லத்தில் இன்று (22.05.2016) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று நண் பகல் 12.00 மணியளவில் பூதவுடல் கீரிமலை செம்பொன் வாய்க்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
021 224 2237. 077 636 5841
077 9426408. 077 696 9517
077 717 4561

நாகேஸ்வரி வித்தியாசாலை வீதி.
பருத்திக்கலட்டி.
சுன்னாகம்.

## மரண அறிவித்தல்

### செல்லப்பா பரமநாதன்

பிறப்பு 01 . 11 . 1945



இறப்பு 19 . 05 . 2016

யாழ்.அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும். லண்டனை வதிவிடமாக வும் கொண்ட செல்லப்பா பரமநாதன் 19.05.2016 வியாழக் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - தையல் முத்து தம்பதிகளின் அன்பு மகனும். காலஞ்சென்றவர்களான கைலாசபிள்ளை - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமக னும், வரதாம்பிகையின் (சந்திரா) அன்புக் கணவரும். ரிஷோபன். ரிஷோதா ஆகியோரின் பாசமிகு தந்தையும். காலஞ்சென்றவர்களான செல்லம்மா. பாக்கியம். இராசதுரை. இராசம்மா. நடராசா. சிவலோகநாதன். தனலட்சுமி, தங்க ரத்தினம் (பேபி). மற்றும் நாகலோசனி (துரை). மகாலட்சுமி (சின்னன் ) ஆகியோரின் அன்புச் சகோதரரும். கருணாகரன், மங்கையர்க்கரசி(ரஞ்சி). தர்மகுலசிங்கம் (சின்னக்கிளி). சிறிதரன். பவானி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று லண்டன் மாநக ரில் நடைபெறும்.


இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி மகாலக்ஷ்மி சண்முகராசா

200/2, கண்டிவீதி,
அரியாலை.

## மரண அறிவித்தல்

### முத்தையா கிருஷ்ணசாமி



பிறப்பு 13.04.1939 இறப்பு 20.05.2016

சாவகச்சேரி, தாமோதரம்பிள்ளை வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாக வும் கொண்ட முத்தையா கிருஷ்ணசாமி 20.05.2016 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா - செல்லம்மா தம்பதிகளின் மூத்த புதல்வனும், மங்கையர்க்கரசியின் (ஆலா) அன்புக் கணவரும், இராசம்மா, அன்னபூரணம், செல்வரத்தினம் (தும்பி சிறி முருகன் ஸ்ரோர் சாவகச்சேரி), காலஞ்சென்றவர்களான நாகம்மா, கந்தசாமி, கனகரத்தினம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், தணிகாசலம், காலஞ்சென்றவர்கள்ான தில்லைநடராசா, மனோான்மணி, அம்பிகை ஆகியோரின் மைத்துனரும், உதயகுமாரி, கிருபாநிதி (மதுபான விற்பனையாளர் - சங்கானை), ஜெயாநிதி (கனடா), ஜெயகுமாரி, தயாநிதி (கனடா), சிவாநிதி (சாவகச்சேரி ப.நோ.கூ.ச), குணாநிதி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிருஷ்ணதாசன் (மதுபான விற்பனை நிலைய உரிமையாளர் -சங்கானை), விஜயகுமாரி, ஜெயாமதி (கனடா), தேவகுமாரன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - பிரதேசசபை- மல்லாகம்), பிறேமாவதி (கனடா) , லோகீதா ( ஆசிரியர்- சாவகச்சேரி இந்துக் கல்லூரி), சுபாஜினி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், மகிழினி, அபிவர்ணன், கரேசன், திவ்யா, ரஜிந்தன், தனுஜன், சரண், அஸ்வினி, யசோன், யதுர்சினி, யஸ்மினி, சயனி, சயன் (கனடா), பிரவின், தரனிகன் ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.05.2016) திங்கட்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தாமோதரம்பிள்ளை வீதி,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

தொ.பே - 077 361 8657

(c/21053)
(11,18)

# பேரிடரால் பாதிக்கப்பட்டோருக்கு சகல உதவிகளையும் வழங்குங்கள்

## கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கோரிக்கை

கொழும்பு, மே 22

சீரற்ற கால நிலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சகல வழிகளிலும் உதவிகள் வழங்கப்பட வேண்டும். -இவ்வாறு கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டில் நிலவி வரும் சீரற்ற காலநிலை தொடர்பில் விசேட அறிக்கை ஒன்றை அவர் வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையிலேயே மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது- மழை வெள்ளம் மற்றும் மண்சரிவால் ஏற்பட்டுள்ள பேரிடர் அதிர்ச்சியையும், கவலையையும் ஏற் படுத்தியுள்ளது.

சீரற்ற கால நிலையால் வெள்ளம் மற்றும் மண் சரிவு ஏற்பட்டுள்ளது. இதனால் லட்சக்கணக் கானவர்கள் இருப்பிடங்களை இழக்க நேரிட்டுள்ளது. உயிரிழப்புக்கள், காணாமல் போதல் சம்பவங்கள் பதிவாகியுள்ளதுடன், வாழ்வாதாரமும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

லட்சக் கணக்கானவர்களுக்கு உரிய உணவோ, உடு துணிகளோ, அடிப்படை வசதிகளோ கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது.

பாதிப்புக்கு உள்ளான அப்பாவி மக்களுக்கு அனைத்து வழிகளிலும் உதவிகள் வழங்கப்பட வேண்டும், அவர்களுக்காக இறைவனை மன்றாடி பிரார்த்தனை செய்ய வேண்டும்.- என்றார்.(ற-ஐ-5)

## தேசோதய விருது வழங்கும் நிகழ்வு

கொழும்புத்துறை, மே 22

யாழ்ப்பாண மாவட்ட தேசோதய சபையின் உறுப்பினர்களைக் கௌரவித்து தேசோதய விருது வழங்கும் நிகழ்வு நாளை முற்பகல் 9.30 மணிக்கு அரியாலை நெடுங்குளம் சந்தியிலுள்ள சர்வோதய மாவட்ட நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சர்வோதயத் தலைவர் கலாநிதி ஏ.ரீ.ஆரியரத்ன தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி எம்.இளஞ்செழியன் கலந்து கொள்ளவுள்ளார். நிகழ்வில் கௌரவ விருந்தினராக யாழ்.பல் கலைக்கழக முகாமைத்துவ பீடாதிபதி பேராசிரியர் க.வேல்நம்பியும், சிறப்பு விருந்தினராக தேசிய சேமிப்பு வங்கிக் கிளை முகாமையாளர் திருமதி துஷ்யந்தினி அருளானந்தமும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-ஐ-135)

### மரண அறிவித்தல்

**தெட்சணாமூர்த்தி ஞானசங்கர்**



அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தெட்சணாமூர்த்தி ஞானசங்கர் 21.05.2016 சனிக்கிழமை காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கூத்தன் சீமா,
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

தகவல்:
தெ. உதயசங்கர்
(தவில் வித்துவான்)

### மரண அறிவித்தல்

**வேலன் தம்பையா**



பிறப்பு 28 . 10 . 1936

இறப்பு 21 . 05 . 2016

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், V.H.லேன், இருபாலையை வதிவிடமாகவும் கொண்ட வேலன் தம்பையா நேற்று (21.05.2016) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் வேலன் - முத்தி தம்பதிகளின் பாசமிகு மகனும், செல்லர் - சின்னப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற நவமணியின் அன்புக் கணவரும், நிர்மலா (பிரான்ஸ்), தபேஸ்குமார், ஜெயக்குமார் (பிரான்ஸ்), சசிகலா, சதீஸ்குமார் (பிரான்ஸ்), பிரதீபன் (பிரான்ஸ்), மேகலா (கனடா), ஜெனிலா ஆகியோரின் பாசமிகு தந்தையும், இந்திரா (பிரான்ஸ்), சரஸ்வதி, ஜெகதிஸ்லா (பிரான்ஸ்), பாலினி (பிரான்ஸ்), சதீஸ்குமார் (கனடா), சந்திரகுமார் ஆகியோரின் மாமனாரும், லக்ஸிலி (பிரான்ஸ்), கலிஸ்ரன், கபிஸ்ரன் (பிரான்ஸ்), ஜெகமித்திரா (பிரான்ஸ்), ஜெரிஸ் (பிரான்ஸ்), சர்வஜா (பிரான்ஸ்), ஆத்மிகா (பிரான்ஸ்), சஜான் (கனடா), தபிசன் (கனடா), அஸ்வின் (கனடா), துஷான், சஜானா ஆகியோரின் அன்புப் பேரனும், சின்னத்துரை, கந்தசாமி, ராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கணேசம்மா, வேவி, சின்னமணி, காலஞ்சென்றவர்களான சண்முகம், பொன்னையா, ஏகாம்பரம் மற்றும் சகுந்தலா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.05.2016) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செக்கடி இந்து மயானத்தில் தகனம் செய்யப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

V.H. லேன்,
இருபாலை கிழக்கு.

(J/1496)
(11,17)

தகவல்:
குடும்பத்தினர்.

### கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 06.06.1947

இறப்பு 19.05.2016

மேற்படி எமது சங்கத்தின்
நெறியாளர் திரு.ந.சிவனேசன்,
சகபணியாளர்
திருமதி இ.நகுலேஸ்வரி
ஆகியோரினது தாயார்

**திருமதி நல்லையா நாகேஸ்வரி**

அவர்கள் 19.05.2016ஆம் திகதி காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பணிப்பாளர்கள்,
பணியாளர்கள், அங்கத்தவர்கள்
புங்குடுதீவு - நயினாதீவு
பல.நோ.கூட்டுறவுச்சங்கம்

**வீடு உடன் வாடகைக்கு**

சாவகச்சேரி பஸ்தரிப்பு, நீதிமன்றம் முன்பாக தேவாலயவீதி, டச்சுவீதி ஆகிய இருவீதியாலும் போகக் கூடிய இடத்தில் நான்கு அறை இணைந்த குளியல் அறை பெரிய வரவேற்பறை வாகன தரிப் பிடம் உள்ள வீடு அரச அரசசார்பற்ற நிறுவனங்கள், அலுவலகங்கள் ஆகியவற்றுக்கு வாடகைக்கு விடப்படும்

077 936 1366, 077 113 8513, 077 846 7526

**Joining Granton is the Best Choice**
**வேலைவாய்ப்பு**

யாழ்., முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், கண்டி, கொழும்பு ஆகிய பிரதேசங்களில் நிரந்தர வேலை தேடுபவராயின் உங்கள் தகைமைக்கேற்ப வேலையினைப் பெற அரியதொரு வாய்ப்பு....

(Application, Advertising) ஆகிய துறைகளில்......

1. Distributer's
2. Supervisors
3. Team Leaders
4. Office Assistents

தகைமைகள்

O/L (Six Subjects) இல் இருந்து . முன்னனுபவம் அவசியமற்றது. தங்குமிட வசதியுடன் கூடிய இலவசப் பயிற்சி.

Training Period : 8000 + and Incentives
After Training : 35000+

077 999 4807, 077 445 8134

**வேலைவாய்ப்பு**

முன்மாதிரியான பொய்யின்றி உழைப்புக்கேற்ப சம்பளம் பெற ஆண், பெண் இருபாலாருக்கும் வேலை வாய்ப்பு உண்டு. நூடில்ஸ், பால்மா, டொபி, டிபிடிபி ஆகிய பிரிவுகளுக்கு. சம்பளம் (25,000 - 35,000) உணவு, தங்குமிடம் முற்றிலும் இலவசம். வயது 18-50. OT யுடன் நாள் சம்பளம் 1500/=

072 223 1518, 076 701 5219

அன்பு உள்ளங்களே வேலை செய்து செய்து மாதம் முடியும் தருணத்தில் கையில் பணமேதும் இல்லாமல் உள்ளதா? இதோ எம் நாட்டின் தலைநகரான கொழும்பில் உள்ள விமான நிலையத்தில் வேலைவாய்ப்பு. Basic ரூ. 25,000 - 35,000. மூன்றுமாத காலங்களின் பின்னர் ரூ. 55,000 - 75,000இற்கு மேல் வழங்கப்படும். வயது 18-40 உணவு, தங்குமிடம் இலவசம். இன்றே தொடர்புகளுக்கு.

077 025 1155, 075 060 6968

புதிதாகத் திறக்கப்படவுள்ள ஐஸ்கிறீம், யோகட், பிஸ்கட் தொழிற்சாலைக்கு ஆண், பெண். லேபல், பொதியிடல் ஆகிய பிரிவுகளுக்கு. சம்பளம் Basic ரூ.30,000. மாதம் OT யுடன் 45,000 இற்கு மேல் பெற்றுக் கொள்ளலாம். உணவு, தங்குமிடம் முற்றிலும் இலவசம். உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

076 915 5233, 077 453 5669

இலங்கையில் பிரசித்திபெற்ற , பிரபலமான ஐஸ்கிறீம், ஜாம், சொக்லட், நூடில்ஸ், பால்மா, பிஸ்கட், டொபி இவ்வனைத்தும் உற்பத்தி செய்யும் இடங்களுக்கு வேலையாள்கள் தேவை. அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் இலவசம். ஒருநாளைக்கு 1200/= கிழமை சம்பளம் 10,000. மாத சம்பளம் 35,000. விருப்பமுள்ளவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும். வயது 18-55 வரை. வரும் நாளிலே வேலைக்கு சேர்க்கப்படுவீர்.

071 147 5324, 077 494 3502

ஏமாற வேண்டாம் பொய்க்கு ஏமாற்ற மடைய வேண்டாம். நாள் சம்பளம் 1600 (with OT) தங்குமிடம் இலவசம். உணவு 3 வேளை 116/=. பிரசித்தி பெற்ற தொழிற்சாலைகளில் அனைத்துப் பிரிவுகளுக்கும் வருகை தரும் நாளிலே வேலை வாய்ப்பு. வயது 18-45. ஆண், பெண்

077 634 6288, 077 635 4434

**விற்பனைப் பிரதிநிதி தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் கடை ஒன்றுக்கு விற்பனைப் பிரதிநிதி ஒருவர் உடனடியாக தேவை.(Van Sales)

077 354 9092

**Majestic** Cineplex Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




விசாரணை ☎ 021- 2227712
CeylonTheatres
www.ceylontheatres.lk

# அரநாயக்கவில் ஏற்பட்டது கில்லர் வகை நிலச்சரிவு

## பேராதனைப் பல்கலைக்கழக பேராசிரியர் தெரிவிப்பு

கொழும்பு, மே 22
கேகாலை மாவட்டம் அரநாயக்கவில் ஏற்பட்டது "கில்லர் நிலச்சரிவு" வகையைச் சார்ந்தது என்று பேராதனைப் பல்கலைக்கழக புவியியல் மற்றும் புவிச் சரிதவியல் பேராசிரியர் கபில தக நாயக்கா தெரிவித்தார்.

சுமார் நூறு வருடங்களுக்கு ஒருமுறை குறிப்பிட்ட இடத்தில் ஏற்படும் தன்மை கொண்டது இது என்றும், இது பாறைகள் சிதைவடைந்து மண் உருவாகும் இயற்கை செயற்பாட்டின் ஒரு கட்டம் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

மண்சரிவு ஏற்பட்ட இடத்தை நேரடியாகச் சென்று பரிசோதனைகளை மேற்கொண்ட பின்னர் அவர் ஊடகங்களுக்கு இதனைத் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அரநாயக்க விபத்து நடந்துள்ள இடத்தில் இதன் பிறகு சிறிய அளவிலான மண்படைகள் கழன்று விழுவதைத் தவிர வேறு இடர்அண்மையைகாலங்களில் ஏற்படும் வாய்ப்பு விஞ்ஞான ரீதியாக இல்லை. அரநாயக்க சிரிபுர பிரதேசம் நூறு வருடங்களுக்கு மேல் மண்சரிவு ஒன்றைச் சந்தித்த இடமாக இருக்கும். அது பற்றி அறியாத மக்களே அங்கு போய்க் குடியிருப்புக்களை அமைத்துள்ளனர்.

> மண்சரிவு ஏற்பட்ட இடத்தில் பல்வேறு வகையான கற்பாறைக் கலவைகள் இருக்கின்றன. இந்த வகை மண் நல்ல செழிப்பான அல்லது வளமான மண்ணாகக் கருதப்படுகின்றது. ”

நூற்றுக் கணக்கான வருடங்களாக ஏற்பட்டு வரும் இயற்கை மாற்றங்கள் காரணமாக பெரிய கற்பாறைகளுக்கிடையே தண்ணீர் சென்று உட்பகுதியிலுள்ள பாறைகள் சிதைவடைகின்றன. பாறைகளின் சிதைவிலிருந்தே மண் உருவாகிறது. இது தான் மண் உருவாகும் வரலாறாகும். அவ்வாறான மண் படைகளுக்குள் மேல் மீண்டும் மீண்டும் நீர் செல்வதால் அதன் கன அளவு அதிகரித்து அவ்விடம் வெடிப்படையும். அதுவே இவ்விடத்தில் ஏற்பட்டுள்ள மண்சரிவாகும்.

அப்படியாக ஏற்படும் வெடிப்பு பெரிய சத்தத்தை ஏற்படுத்தும். அத்தோடு கீழ்ப் பகுதியில் உள்ள காய்ந்த களிமண் படலத்தில் தூசித்துகள் ஏற்பட்டு புகை போன்று வெளிக்கிளம்பும். அவை வழிந்தோடும் தண்ணீருடன் சேர்ந்து கீழ்நோக்கிச் சகதியாக வரும்.

எனவே இது கில்லர்லாண்டசிலைட் அல்லது கில்லர் நிலச் சரிவு எனப்படும். இதற்கு முன்னர் இப்படியான பெரிய நிகழ்வொன்று இலங்கையில் பதிவாகவில்லை.

முன்னர் சிங்கராஜ பிரதேசத்தில் ஆரம்பித்த நிலச்சரிவு மற்றும் சமனலவௌ நிலச்சரிவு, மாத்தளை நிக்கலோயா சரிவு போன்றவை இதனையொத்த சிறிய சரிவுகளாகக் கொள்ளலாம்.

மண்சரிவு ஏற்பட்ட இடத்தில் பல்வேறு வகையான கற்பாறைக் கலவைகள் இருக்கின்றன. இந்த வகை மண் நல்ல செழிப்பான அல்லது வளமான மண்ணாகக் கருதப்படுகின்றது.

அதாவது மிகப்புதிய மண்ணாக அல்லது தாவரங்கள் இதுவரை வளராத மண்ணாகக் கொள்ள முடியும்.

இவ்விடத்திலுள்ள மண் வளமானதாக இருப்பதால் காலப் போக்கில் மக்கள் அங்கு குடியேறக் கூடும்.சுமார்100ஆண்டுகளுக்குப் பின்னர் இதே இடத்தில் அதே பாதையில் மீண்டும் மண்சரிவு ஏற்படும் நிலை உண்டு எனவும் குறிப்பிட்டுள்ளார். (ற-ஐ-5)

# பிரசைகள் குழுக்களின் ஒன்றிய ஆரம்ப நிகழ்வு



முல்லைத்தீவு, மே 22
வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்ட பிரசைகள் குழுக்களை உள்ளடக்கி வன்னிப் பிரசைகள் குழுக்களின் ஒன்றியம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த வன்னிப் பிரசைகள் குழுக்களின்ஒன்றியத்துக்கான ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் முல்லைத்தீவு ஒட்டுசுட்டானில் நடைபெற்றது.

வவுனியா,மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த பிரசைகள் குழுவினரும், முல்லைத்தீவு மாவட்ட பிரசைகள் உரிமைக்கான அமையமும் இணைந்து தமது செயற்பாடுகளை விஸ்தரிக்கும் நோக்கில், தமக்கான மாவட்ட இணைப்பை ஏற்படுத்தும் பொருட்டு வன்னி பிரசைகள் குழுக்களின் ஒன்றியத்தை உருவாக்கியுள்ளன என்று ஒன்றியத்தினர் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு தற்போது வன்னிப் பிரதேசத்தில் உள்ள பிரச்சினைகள், அபிவிருத்தித் தேவைகள், காணாமற் போனோர் பிரச்சினைகள், அரசியல் கைதிகள் விவகாரம் உள்ளிட்ட பல பிரச்சினைகளுக்கு கூட்டாக இணைந்து தீர்வைப் பெற தமது செயற்திட்டங்களை முன்னெடுக்கும் வகையில் இந்த ஒன்றியம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இந்த அமைப்பின் தலைவராக மன்னார் பிரசைகள் குழுத் தலைவர் வணபிதா இ.செபமாலையும், செயலாளராக வவுனியா பிரசைகள் குழுவின் செயலாளர் ஐ.யசோதரனும், உப செயலாளராக வவுனியா பிரசைகள் குழுவின் உறுப்பினர் இ.சபேசனும், பொருளாளராக முல்லைத்தீவு மாவட்ட பிரசைகள் உரிமைக்கான அமையத்தின் தலைவர் பா.நவரட்ணமும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் உறுப்பினர்களாக மன்னாரைப் பிரதிநிதித்துவப்படுத்தி அ.சகாயம், எஸ்.புண்ணியலிங்கம் ஆகியோரும், முல்லைத்தீவு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி த.பரமேஸ்வரன், வி.யோகலிங்கம் ஆகியோரும் வவுனியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தி தா.சலசலோசன், அ.ஜெயச்சந்திரன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ற-ஐ-ரி7,21)

# செஞ்சிலுவை சங்கம் நிதியுதவி

யாழ்ப்பாணம், மே 22
நாட்டில் ஏற்பட்ட இடர்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் பொருட்டு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளை ஒரு லட்சத்து ஐம்பது ரூபாவை இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்துக்கு அனுப்பி வைத்துள்ளது.

இந்த நிதி செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையின் எரிபொருள் நிரப்பு நிலையத்தின் மூலம் பெறப்பட்டது என்று யாழ்.செஞ்சிலுவை சங்கத்தின் தலைவர் கு.பாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். (ற-ஐ-7)

# இடரால் பாதிக்கப்பட்டோருக்கு சீனா 50,000 டொலர் நன்கொடை

கொழும்பு, மே 22
வெள்ளம், மண்சரிவு போன்ற இடர்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக சீன செஞ்சிலுவைச் சங்கம் 50 ஆயிரம் அமெரிக்க டொலரை நன்கொடையாக வழங்கியுள்ளது.

இதற்கான நிகழ்வு கொழும்பிலுள்ள சீனத்தூதரகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றது.

சீன செஞ்சிலுவைச் சங்கத்தின் சார்பில் வழங்கப்பட்ட உதவித் தொகையை கொழும்பிலுள்ள சீனத் தூதரகத்தின் அரசியல் பிரிவு ஆலோசகர் பாங் சாங் சேய், இலங்கை செஞ்சிலுவைச் சங்க பிரதிப் பணிப்பாளர் எஸ்.பி. மடுகலேவிடம் வழங்கி வைத்தார்.

அத்துடன் சீரற்ற கால நிலையால் உயிரிழந்த மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்காக சீன அரசின் சார்பாக சீனத் தூதரகத்தின் அரசியல் பிரிவு ஆலோசகர் தனது அனுதாபத்தையும் இதன் போது தெரிவித்துக் கொண்டுள்ளார். (ற-ஐ-5)

# மலையகத்துக்கான ரயில் சேவைகள் மீள ஆரம்பம்

கொழும்பு, மே 22
தடைப்பட்டிருந்த மலையகத்துக்கான ரயில் சேவைகள் நேற்று மீண்டும் ஆரம்பமாகியுள்ளன என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போது கடுகண்ணாவை மற்றும் ரம்புக்கணை இடையிலான ரயில் பாதை ரயில் போக்குவரத்துக்காகத் திறந்து விடப்பட்டுள்ளது என ரயில்வே போக்குவரத்து அத்தியட்சகர் விஜய சமரசிங்க கூறினார்.

நிலவும் சீரற்ற வானிலையைக் கருத்திற் கொண்டு இரவு நேர தபால் ரயில் சேவை மாத்திரம் நிறுத்தப்பட்டுள்ளது என்றும் ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. (ற-ஐ-5)

# பாடசாலை மாணவிகளுக்கு இளைஞர்கள் குழு தொல்லை

## பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

சாவகச்சேரி,மே 22
தென்மராட்சி வடக்குப் பிரதேசத்தில் பாடசாலை செல்லும் மாணவிகளுக்கு மோட்டார் சைக்கிள்களில் செல்லும் இளைஞர்கள் தொல்லை கொடுத்து வருவதால் மாணவிகள் பாடசாலைக்குச் செல்ல அச்சப்படுகின்றனர் என்று மாணவிகளின் பெற்றோர் முறைப்பாடு செய்துள்ளனர்.

இது குறித்து பெற்றோர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவிகள் பாடசாலைக்குச் செல்லும் வேளைகளிலும், தனியார் கல்வி நிலையங்களுக்குச் சென்று திரும்பும் வேளைகளிலும் மோட்டார் சைக்கிள்களில் வரும் சில இளைஞர்கள் பல்வேறு வகையிலான சிரமங்களை கொடுக்கின்றனர்.

இதனால் மாணவிகள் தனித்து மட்டுமன்றி, சேர்ந்து செல்வதற்கும் அச்சம் தெரிவிக்கின்றனர் என்றும் பெற்றோரால் தெரிவிக்கப்படுகிறது.

எனவே இந்தப் பகுதியில் விசேட பொலிஸ் குழுவை நியமித்து, தொல்லை கொடுக்கும் இளைஞர்களைக் கண்டிக்குமாறும் பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் கோரியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-4,9)

# இடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு யுனிசெப் உதவி வழங்க விருப்பம்

கொழும்பு, மே 22
இயற்கை இடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு யுனிசெப் மற்றும் உலகசுகாதாரஸ்தாபனமும்உதவி வழங்கவிருப்பம்தெரிவித்துள்ளன.

வெள்ளம் மற்றும் மண் சரிவு காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகளை வழங்க உள்ளதாக யுனிசெப் மற்றும் உலக சுகாதார ஸ்தாபனமும் அறிவித்துள்ளன என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மக்களுக்குத் தேவையான உலர் உணவுப் பொருள்கள்,மருந்து வகைகள் என்பனவற்றை அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மருத்துவர் குழுக்கள் உள்ளிட்ட நிவாரணப் பணியாளர்களும் பாதிக்கப்பட்டபகுதிகளுக்குஅனுப்பி வைக்கப்படவுள்ளனனர்.

சுத்தமான குடி தண்ணீரை' விநியோகம் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. (ற-ஐ-5)

# இயற்கை பேரிடர் அழிவுகள் குறித்து 11 மாவட்டங்களில் விவரம் சேகரிப்பு


நியூயோர்க், மே 22
இலங்கையில் இயற்கைப் பேரிடரால் ஏற்பட்ட பாதிப்புக்கள் குறித்து 11 மாவட்டங்களில் அரச சார்பற்ற அமைப்புக்கள் களதரவு சேர்க்கைகளில் ஈடுபட்டுள்ளன என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

இதன்போதுபாதிக்கப்பட்டவர்களின் தேவைகள் குறித்து தகவல்கள் சேகரிக்கப்படுகின்றனஎன்றுஐக்கிய நாடுகள் சபையின் பேச்சாளர் ஸ்டீபன்டுஜாரிக்தெரிவித்துள்ளார்.

களத்தின்தேவைகளைப்பொறுத்து இலங்கைக்கு ஐ. நா. சபை தொடர்ந்தும் உதவியளிக்கும்.

ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான விடயங்களுக்கான கூட்டிணைப்பு அலுவலகம் இலங்கையில் உள்ள ஐ.நா.வின் உள்ளூர் அலுவலகங்களின் ஊடாக உதவிகளை மேற்கொண்டு வருகின்றோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற-ஐ-5)

# சரியத் தயாராகும் இராட்சதப் பாறை; தீர்வின்றி தவிக்கும் 58 குடும்பங்கள்





கொழும்பு, மே 22

கொத்மலை பிரதேசத்தில் வேவண்டன் தோட்டத்தில் இராட்சத கற்பாறையொன்று சரிந்து வரும் அபாயமிருப்பதால், அந்தப் பகுதியில் வாழும் 58 குடும்பங்களைச் சேர்ந்தோர் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.

இந்தப் பகுதி மண்சரிவு அபாயமிக்க பகுதியாக 2010 ஆம் ஆண்டு முதல் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. ஆனாலும் உரிய வீட்மைப்பு ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படாததால் அப்பகுதியில் வாழ்ந்த மக்கள் தொடர்ந்தும் அங்கேயே வாழ்ந்து வருகின்றனர்.

தற்போது சீரற்ற காலநிலை நிலவுவதால், இடம்பெயருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ள போதிலும், தங்களுக்குரிய தீர்வு கிடைக்கும் வரை தாம் அங்கிருந்து வெளியேறப் போவதில்லை என்று மக்கள் கூறுகின்றனர்.

“மழைக் காலத்தில் மாத்திரமே எம்மை இடம்பெயரச் சொல்வார்கள். அதன் பின்னர் அநாதைகளாக விடப்படுவோம். 5 வருடங்களாக இடம்பெயர்வதும், மீள வருவதுமாக எமது வாழ்க்கை இருக்கின்றது.

ஒதுக்கப்பட்ட காணியும் மலை அடி வாரத்தை அண்டிய பகுதியாகவே இருக்கிறது. பிள்ளைகளே நிறைய வாழ்கின்றனர். இரவில் நித்திரை இல்லை. ஒன்று பாதுகாப்பாக எங்களை வாழவிட வேண்டும். அவ்வாறு இல்லையேல் கொன்று விட வேண்டும். சுமார் 500 பேர் வரை இங்கு வாழ்கின்றோம். நாங்கள் செத்த பின்பு பால் ஊத்துவதைவிட, வாழும் போதே எதையாவது அரசு செய்ய வேண்டும்'' என்று அந்தப் பிரதேச மக் கள் தாங்கள் சந்திக்கும் அவலங்களை எடுத்துரைத்தனர்.

நுவரெலிய மாவட்டத்திலுள்ள கொத்மலை பிரதேச செயலாளர் பிரிவுக்குப்பட்ட பகுதியில்தான் மேற்படி தோட்டம் உள்ளது. தோட்டத்தைச் சூழ பல கிலோ மீற்றர்கள் தூரத்துக்குப் பெரிய கற்பாறைகள் இருக்கின்றன. பல தடவைகள் கற்பாறைகள் சரிந்து வந்த சம்பவங்களும் நடந்துள்ளன. தடயங்களும் இருக்கின்றன. தற்போதும் சரிவுகள் இடம்பெற்ற வண்ணமுள்ளன. ஆனால், இன்னமும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதே பிரதேச மக்களின் கவலையாகும்.

“இந்தப் பகுதி தொண்டமானின் கோட்டை என்பதால் ஏனைய அரசியல்வாதிகள் எங்களைக் கவனிப்பதில்லை. அப்படியே ஏதாவது நடந்தாலும் இவர்கள் விடுவதில்லை. எங்கள் வாழ்க்கை இன்று அரசியல் பகடைக்காயாகியுள்ளது. அரச அதிகாரிகளிடம் மனுக் கொடுத்தும் இன்னமும் எதுவும் நடக்கவில்லை” என்று பிரதேசத்தில் வாழும் வயதானவரொருவர் தெரிவித்தார்.

“மீரியபெத்த, அரநாயக்க பகுதி போன்றுஎங்கள்கிராமமும்காணாமற் போகலாம். அப்போது எவருமே அனுதாபப்படாதீர்கள். வாழும் போது எங்களை எவருமே கண்டு கொள்ளமாட்டீர்களா?” என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (ற-ஜ-5)

## பேரிடர்களின்போது ஊடகங்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும்

### பிரதி ஊடக அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மே 22

நாட்டின் இடர் நிலைமைகளின் போது, ஊடகங்கள் மிகுந்த பொறுப்புணர்ச்சியுடன் செயற்படவேண்டும்-இவ்வாறுபிரதிஊடக அமைச்சர் கருணாரட்ன பரணவிதாரண தெரிவித்துள்ளார்.

பிரதிஊடகஅமைச்சரின்கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாட்டில் தேசிய இடர் நிலைமையொன்று ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமையைப் புரிந்து கொண்ட அச்சு, இலத்திரனியல் மற்றும் சமூக வலையமைப்பு ஊடகங்கள் மக்களுக்கு சரியான தகவல்களை வழங்கி வருகின்றன. பல்வேறு வழிகளில் பல்வேறு பயனுள்ள தகவல்களை மக்களுக்கு காத்திரமான வகையில் ஊடகங்கள் கொண்டு செல்கின்றன.

ஊடகங்களின் இந்த முயற்சி வரவேற்கப்பட வேண்டியதுடன், நன்றி பாராட்டப்பட வேண்டியது மாகும். ஊடகங்களின் இந்தமுயற்சிக்கு நான் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

எனினும், ஒரு சில சமூக வலையமைப்புக்கள் மற்றும் சில ஊடகங்கள் இடர் நிலைமையைக் கூட பிழையான வழிகளில் பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்கும் துர்ப்பாக்கிய நிலையைக் காணக் கூடியதாக உள்ளது. மக்களை ஆத்திரமூட்டும், மக்களை கிளர்ச்சியடைச் செய்யும் வகையில் பொய்யான தகவல்களை அவை வழங்கி வருகின்றன.

களனி கங்கை மதகுகள் உடைப்பெடுக்கப் போகின்றன என்று சில ஊடகங்கள் பொய்யான தகவல்களை வெளியிட்டிருந்தன. அம்பத் தளை நீர் சுத்திகரிப்பு நிலையம் செயலிழந்துள்ளது என்று சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. கொழும்பு மற்றும் கம்பகா மாவட்டங்களுக்கு குடிதண்ணீர் விநியோகம் செய்ய முடியாது எனவும் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

குறுகிய நோக்கங்களின் அடிப்படையில் போலியான செய்திகளை வெளியிடுவதை பொறுப்பு வாய்ந்த ஊடகங்கள் செய்யாது அது உசிதமானதல்ல - என்றுள்ளது. (ற-ஜ-5)

## மண் சரிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேறு இடங்கள்

### அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவிப்பு

கொழும்பு, மே 22

மண்சரிவுகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாற்று இடங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை விசேட உரை நிகழ்த்தியபோது அமைச்சர் சஜித் பிரேமதாச இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இயற்கைச் சீற்றம் காரணமாக, பல்வேறு வகையான இடர்களால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் உரிய நிவாரணங்கள் வழங்கப்படும். வீடுகளை இழந்தவர்களுக்கு புதிய வீடுகளும், சேதமடைந்த வீடுகள் திருத்தியும் கொடுக்கப்படும்.

இதன்போது அவர்களின் பொருளாதார பின்புலம் மற்றும் ஏனைய எந்தவொரு விடயமும் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

மண் சரிவு காரணமாக வசிப்பிடங்களை இழந்தவர்களுக்கு மாற்றுக் காணிகள் வழங்கப்பட்டு, அவர்கள் தங்கள் வீடுகளைக் கட்டிக் கொள்வதற்கும் உதவிகள் வழங்கப்படும்.

எந்தவொரு நபரும் இதன் போது கைவிடப்பட மாட்டார்கள் - என்றார். (ற-ஜ-5)

## இயற்கை பேரிடருக்கு பாகிஸ்தான் இரங்கல்

இலங்கையில் இயற்கைப் பேரிடர் காரணமாக உயிரிழந்த மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு பாகிஸ்தான் தமது இரங்கலை வெளியிட்டுள்ளது.

அத்துடன், இயற்கை இடரால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவும் முகமாக உரிய உதவிகளைஅனுப்புமாறுபாகிஸ்தானிய பிரதமர் நவாஸ் ஷெரீப் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் பாகிஸ்தான் மக்கள் தமது கவலையை இலங்கை மக்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம் என்று பாகிஸ்தான் தொலைக்காட்சி ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ற-ஜ-5)

## பேரிடர் மீட்பு நடவடிக்கைக்கு ஜப்பான் ரேடர் விமானங்கள்

கொழும்பு, மே 22

இலங்கையில் இடர்கால மீட்புப் பணிகளுக்கு உதவுவதற்காக இரண்டு ரேடர் விமானங்களை அன்பளிப்பாக வழங்குவற்கு ஜப்பான் முன்வந்துள்ளது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள நிலச்சரிவு மற்றும் வெள்ள மீட்புப் பணிகளுக்கு உதவும் நோக்கில், ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு முகவரமைப்பு இரண்டு டொப்லர் ரேடர் விமானங்களையும், நிலச்சரிவு நிலைமைகள் தொடர்பான செய்மதிப் படங்களையும், கொடையாக வழங்கி உதவ முன்வந்துள்ளது.

அதேவேளை, பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிப் பொருள்களையும் விமானம் மூலம் ஜப்பான் அனுப்பி வைத்துள்ளது.

நேற்றுக் காலை, கட்டுநாயக்கவை வந்தடைந்த இந்த விமானத்தில், கம்பளிப் போர்வைகள், தண்ணீர்த் தாங்கிகள், தண்ணீர் சுத்திகரிப்புக் கருவிகள், மின்பிறப்பாக்கிகள் மற்றும் அவசர உதவிப் பொருள்கள் எடுத்து வரப்பட்டுள்ளன. (ற-ஜ-5)

## அரநாயக்க மண்சரிவில் 350 சிறுவர்கள் பாதிப்பு

கொழும்பு, மே 22

அரநாயக்க மண்சரிவில் 350 சிறுவர் சிறுமியர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் பாதிக்கப்பட்ட சிறுவர் - சிறுமியர் நான்கு நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும் கேகாலை மாவட்ட உதவி மாவட்டச் செயலர் சமன் அனுர தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள சில சிறுவர் – சிறுமியரின் பெற்றோர் உயிரிழந்துள்ளனர், காணாமற் போயும் உள்ளனர்.

விளையாடிய வீட்டு முற்றம், விளையாட்டுப் பொருள்கள், பாடசாலை வாழ்க்கை என்று பல்வேறு விடயங்களில் இவர்களிடம் மாற்றம் ஏற்பட்டுள்ளது. அதனால் இந்தச் சிறுவர்கள் கடுமையான உளவியல் பாதிப்புக்களையும், அதிர்ச்சியையும் எதிர்ர்நோக்கியுள்ளனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ள சிறுவர், சிறுமியர் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியமானது- என்றார். (ற-ஜ-5)

# புலிகளுக்கு முன்னுரிமை; இராணுவம் புறக்கணிப்பு

## குமுறுகின்றார் மகிந்த எம்.பி.

கொழும்பு, மே 22
வடக்கில் புலிகளை நினைவுகூர அரசு முன்னுரிமை வழங்கியுள்ளது. ஆனால் நாட்டில் அமைதியை ஏற்படுத்திக் கொடுத்த இராணுவ வீரர்களின் வெற்றித் தினத்தை புறக்கணித்துள்ளது. - இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

குருநாகல் மாவட்டத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் பாதுகாப்பு நிலைமைகள் மற்றும் புலனாய்வுச் செயற்பாடுகள் திருப்திகரமாக அமையவில்லை. ஆட்சி மாற்றத்தில் இருந்து நாட்டில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆட்சி மாற்றத்தை வட மாகாணம் சாதகமாகப் பயன்படுத்திகொள்ளும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் வடக்கில் இடம்பெற்ற சம்பவங்கள் மற்றும் அவர்களின் அரசியல் நகர்வுகள் நாட்டில் பிரிவினையை ஏற்படுத்தும் வகையிலேயே அமைந்திருந்தன. அதை நிரூபிக்கும் வகையில் இப்போது வடக்கில் விடுதலைப் புலிகளை நினைவு கூர்ந்துள்ளனர்.

இந்தச் செயற்பாடுகள் தொடர்பில் அரசு எந்தவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. வடக்கில் புலிகளை நினைவுகூர அரசு முன்னுரிமை வழங்கியுள்ளது. ஆனால் நாட்டில் அமைதியை ஏற்படுத்திக் கொடுத்த இராணுவ வீரர்களின் வெற்றித்தினத்தைப் புறக்கணித்துள்ளது.

போர் வெற்றி கொள்ளப்பட்டதில் இருந்து நாட்டில் இராணுவ வெற்றி தினமாக கொண்டாடப்பட்டுவந்த தினம் இந்த ஆட்சியில் சாதாரண அனுஷ்டிப்புத் தினமாக மாற்றப்பட்டுள்ளது. எமது வெற்றியை நிராகரிக்கும் வேலையை அரசு மேற்கொண்டுள்ளது. இந்த முறை நிகழ்வுகளுக்கு அரசு எமக்கு அழைப்பு விடுக்கவில்லை. அதை வெளிப்படையாகவே தெரிவித்திருந்தது. போரை முடிவுக்குக் கொண்டு வந்த எம்மை அரசு நிராகரித்தாலும், நாம் தொடர்ந்தும் இராணுவ வெற்றித் தினத்தைக் கொண்டாடுவோம்.

மே 19 ஆம் திகதி இராணுவ வெற்றித் தினத்தை குருநாகலில் கொண்டாட நாம் தயாராகவிருந்தோம். ஆனால் நாட்டில் இயற்கை இடர் ஏற்பட்டது. இவ்வாறான நிலையில் எமது நிகழ்வுகளை நாம் பிற்போடோம். எனினும் நிலைமைகள் வழமைக்குத் திரும்பியவுடன் வெற்றித் தினத்தைக் கொண்டாடுவோம்.

போர்ச் சூழல் நிலவினாலும், இல்லாவிட்டாலும் நாட்டில் தேசிய பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டிய தேவை உள்ளது. எந்த அரசாக இருந்தாலும், நாட்டின் தேசிய பாதுகாப்பில் அதிக அக்கறை காட்ட வேண்டிய தேவை உள்ளது.

இந்த அரசும் தேசிய பாதுகாப்புத் தொடர்பில் அதிக அக்கறையுடன் செயற்பட வேண்டும். வடக்கில் நடக்கும் மோசமான சம்பவங்கள் தொடர்பில் சாதாரண கண்ணோட்டத்தில் பார்க்காது தீவிரமாக ஆராய்ந்து பாதுகாப்பில் அதிக அக்கறை காட்டவேண்டும்.

வடக்கில் இருந்து இராணுவம் வெளியேற்றப்பட்டபோதும், புலனாய்வுப் பிரிவைக் கட்டுப்படுத்திய போதும், நாம் எச்சரிக்கை விடுத்தோம். வடக்கில் எப்போதுமே பயங்கரவாத அச்சுறுத்தல் உள்ளது என நாம் கூறினோம். இப்போதும் அதையே நாம் தெரிவிக்கின்றோம். எனினும் அரசு அக்கறை செலுத்துவதாகத் தெரியவில்லை.

அரசு நாட்டை மிகவும் மோசமான பாதையில் கொண்டு சென்றுள்ளது. நாட்டின் பொருளாதாரம் முழுமையாக வீழ்ச்சியடையும் நிலையில் உள்ளது. பொருள்களின் வரி இருமடங்கு அதிகரித்துச் சென்றுள்ளது. இன்றைய நிலையில் விலை குறைக்க வேண்டிய பொருள்கள் அனைத்துக்கும் இருமடங்கு வரி அதிகரித்து மக்களின் வயிற்றில் நெருப்பைக் கொட்டியுள்ளனர். கொடுத்த வாக்குறுதிகள் எல்லாம் இன்று காற்றில் பறந்து விட்டன.

வெள்ளத்தில் மக்கள் பாதிக்கப்பட்டுள்ள போதிலும், அவர்களுக்கான உதவிகளைச் செய்வதில் அரசு அக்கறை காட்டவில்லை. மக்களின் தேவைக்கேற்றவாறு நிவாரண ஒதுக்கீடு அமையவில்லை. இந்த அரசு நிவாரணங்களையும் சர்வதேசம் தரும் வரையில் பார்த்துக் கொண்டுதான் உள்ளது - என்றார். (ற-ஐ-5)

## குரங்குகளின் அட்டகாசம் சாவகச்சேரியில் அதிகரிப்பு

சாவகச்சேரி, மே 22
சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குரங்குகளின் தொல்லை அதிகரித்துள்ளது என்றும், அதனால் தமது தொழிலைக் கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும் விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மாமரங்கள், முருங்கை மரங்களில் பிடித்திருந்த பிஞ்சுகளை கூட்டமாக வரும் குரங்குகள் பிடுங்கி வீசுவதால் தாம் பெரும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்குகின்றனர் எனப் பொதுமக்கள் தெரிவித்தனர்.

கூட்டமாக வரும் குரங்குகளைத் துரத்தும்போது, அவை வீடுகளின் மேல் பாய்ந்து செல்கின்றன. இதனால் கூரை ஓடுகள் பல உடைந்து போகின்றன. இவற்றைப் புதுப்பிக்கின்ற நிலையில் பெரிய பண நெருக்கடிகளையும், இடர்ப்பாடுகளையும் எதிர்நோக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் இதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கையில், கடந்த வருடம் மட்டும் 850 ஓடுகள் குரங்குகளால் சேதமாக்கப்பட்டன. இதனால் வகுப்பறைகள் மற்றும் கட்டடங்களில் மழை வேளையில், மாணவர்களின் கல்வி நிலையைப் பாதிக்குமளவுக்கு வெள்ளம் காணப்படுகிறது - என்று தெரிவித்தார்.

குரங்குகளைக் கட்டுப்படுத்தாதுவிடின் விளை பூமியாகக் காணப்பட்ட தென்மராட்சி பிரதேசத்தில் குரங்குகளின் தொல்லைகளால் வெறும் நிலமாக மாறும் அபாயம் காணப்படும் என சாவகச்சேரி நகரசபையின் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டவர்களால் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

பிரதேசத்தில் குரங்குகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கக் கோரி தென்மராட்சி பிரதேச செயலர் ஊடாக யாழ். அரச அதிபரைக் கோருவது என்றும் ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் நகரசபைச் செயலாளர் கா.சண்முகதாசன் தெரிவித்தார். (ற-ஐ-9)

## ஆசிரிய பயிற்சிக்கு 267 பேர் தெரிவு

யாழ்ப்பாணம், மே 22
கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் 2016-2017 ஆம் கல்வியாண்டில் புதிதாக ஆசிரிய பயிற்சியைப் பெறுவதற்கு 267 ஆசிரிய மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்று கலாசாலை அதிபர் வீ.கருணலிங்கம் தெரிவித்துள்ளார்.

ஆரம்பக்கல்விக்கு 148 பேரும், கிறிஸ்தவ சமயத்துக்கு 46 பேரும், கர்நாடக சங்கீதத்துக்கு 33 பேரும், உடற்கல்விக்கு 32 பேரும், விசேட கல்விக்கு ஒருவரும், வர்த்தகத்துக்கு 7 பேரும் என ஆசிரிய மாணவர்கள் புதிதாக கற்கை நெறிகளுக்கு அனுமதி பெற்றுள்ளனர்.

பதிவுகளை மேற்கொள்ளும் ஆசிரிய மாணவர்கள் பிரகடனப் படிவம், பிறப்புச் சான்றிதழ், நியமனக் கடிதம், தேசிய அடையாள அட்டை, சம்பவ திரட்டுக் குறிப்பு (பாடசாலையில் கடமை ஏற்றுக்கொண்டமை தொடர்பானது), க.பொ.த சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறு, க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறு, சம்பளம் பெறுவதற்கு வசதியாக இலங்கை வங்கிக் கணக்கு இலக்கம் என்பவற்றின் மூலப்பிரதியும், பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட்ட போட்டோ பிரதியுடன் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

மேலும், கலாசாலையில் பதிவுகளை மேற்கொண்ட முதல் நாள் கற்கை நெறி ஆரம்பமாவதால், அதற்குரிய ஆயத்தங்களுடன் புதிதாக அனுமதி பெறும் மாணவ ஆசிரியர்கள் வருகை தரவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ற-ஐ-ரி)

## திறப்பு விழாவும் கணினிப் பயிற்சி ஆரம்ப நிகழ்வும்

சாவகச்சேரி, மே 22
மீசாலை வடக்கு சமரச சன்மார்க்க சத்திய ஞானக் கோட்டத்தால் மட்டுவில் வடக்கு ஸ்ரீவேற்பிள்ளை சனசமூக நிலைய ஒழுங்கையில் அமைக்கப்பெற்ற வள்ளலார் தயானந்த இல்லத் திறப்பு விழாவும், இலவச கணினிப்பயிற்சிவகுப்புகளின் ஆரம்ப நிகழ்வும் எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளன.

காலை 9.15 மணிக்கு வள்ளலார் உருவச்சிலையை முத்துவேல் இராஜேந்திரன் திரை நீக்கம் செய்துவைப்பார். தொடர்ந்து பேராசிரியை திருமதி நாச்சியார் செல்வநாயகம் "வள்ளலாரும் ஜீவகாருண்யமும்" என்னும் தலைப்பில் உரையாற்றுவுள்ளார்.

நிலையத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சரவணாநந்த சுவாமிகள் திருவுருவச் சிலையை சோமசுந்தரம் பேரின்பநாதன் திறந்துவைப்பார். அன்று மாலை 4 மணிக்கு கணினிப் பயிற்சி வகுப்பைத் தொழிலதிபர் சிவஞான சுந்தரம் ராஜ்குமார் ஆரம்பித்துவைக்கவுள்ளார். (ற-ஐ-9)

## பாக்கு என வெங்காய வெடியை நொறுக்கிய குடும்பஸ்தர் காயம்

வவுனியா, மே 22
பாக்கு என நினைத்து வெங்காய வெடியைச் சுத்தியலால் அடித்த சைக்கிள் திருத்துநர், வெங்காய வெடி வெடித்ததில் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை வவுனியா மறவன்குளம் பகுதியில் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் சைக்கிள் திருத்தும் கடையை நடத்திவரும் ஆறுபிள்ளைகளின் தந்தையே படுகாயமடைந்தவராவார்.

வழமையாக வெற்றிலை பாக்கு வாங்கும் வயோதிபர் ஒருவரிடம் வெற்றிலை பாக்கை பெற்றுக் கொண்ட குறித்த நபர், வவுனியா மறவன்குளம் பகுதியில் உள்ள தனது சைக்கிள் திருத்தும் கடையில் வைத்துப் பாக்கை நொறுக்குவதாக நினைத்து சுத்தியலால் அடித்துள்ளார். இதன்போதே அது வெடித்துள்ளது என ஆரம்பக் கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதில் இரண்டு கைகளின் விரல்களும் பலத்த சேதத்துக்கு உள்ளாகியுள்ள நிலையில் அவர் வவுனியா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

போரின் போது குறித்த நபர் தனது ஒரு காலை இழந்த நிலையிலேயே, தற்போது சைக்கிள் கடையை நடத்தி வருகின்றார் என்றும், அவரது மனைவி வெளிநாட்டில் பணிப்பெண்ணாக தொழில்புரியச் சென்றுள்ளார் என்றும் தெரிவித்த பொலிஸார் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் தெரிவித்தனர். (ற-ஐ-21)

## பகலில் வீடு புகுந்து திருட்டு

யாழ்ப்பாணம், மே 22
பகல் நேரம் வீட்டுக்குள் புகுந்த திருடர்கள் தொலைக்காட்சிப் பெட்டி, டெக், தங்க மோதிரம், உண்டியல் என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளனர் என்று பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திருட்டு குப்பிளான் வடக்கு சுன்னாகம் பகுதியில் கடந்த வியாழக்கிழமை பகல் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் வீட்டின் உரிமையாளர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இந்தத் திருட்டில் தனக்கு 50 ஆயிரம் ரூபா பொருள் - நட்டம் ஏற்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

வழக்குப் பதிவு செய்துள்ள குற்றத்தடுப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-ஐ-4,107)

## வவுனியாவில் பாடசாலைகள் 184 மதுபான விற்பனைச் சாலைகள் 66

### மாவட்ட புள்ளி விவரங்கள் தெரிவிப்பு

வவுனியா, மே 22
184 பாடசாலைகள் உள்ள வவுனியா மாவட்டத்தில் 66 மதுபான விற்பனை நிலையங்கள் உள்ளன என்று மாவட்ட செயலக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

வவுனியாவில் உள்ள இரு கல்வி வலயங்களிலும் மொத்தம் 184 பாடசாலைகள் உள்ளன. ஆனால், இங்கு மொத்தமாக 66 மது விற்பனைக் கூடங்கள் இயங்குகின்றன.

குறித்த 66 மது விற்பனை மையங்களிலும் மதுபானச்சாலைகள் வகையில் 14 உள்ளன. அதேபோன்று 11 விடுதிகளும் இயங்குகின்றன. இவற்றுக்கு அப்பால் 41 உள்ளூர் கள்ளுத் தவறணைகள் இயங்குகின்றன என்று மாவட்டச் செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஒரு இலட்சத்து 89 ஆயிரம் மக்கள் தொகையைக் கொண்ட இந்த மாவட்டத்தில் மொத்தமாக 184 பாடசாலைகளும், சுகாதாரங்களையும் உடைய 14 வைத்தியசாலைகளும் உள்ள அதேவேளையில், 61 மது விற்பனை நிலையங்களும் உள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

## வருடாந்தப் பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், மே 22
வட்டு, மூளாய் றோட், ஐக்கிய நாணய சங்கத்தின் 83 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சங்கக் காரியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
சங்கத் தலைவர் க.இராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் புதிய நிர்வாக சபையும், இரு உள்ளகக் கணக்காய்வாளர்களும் தெரிவாகவுள்ளனர். (ற-ஜ-ரி)

## பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், மே 22
சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி சிவபாத சுந்தரனார் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
தலைவர் நாச்சியார் செல்வநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் புதிய நிர்வாக சபைத் தெரிவும் இடம்பெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-ரி)

# வவுனியாவில் கைவிடப்பட்டுள்ள குளங்களை உடன் புனரமைக்குக

## வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மத்திய நீர்ப்பாசன அமைச்சரிடம் கோரிக்கை

வவுனியா, மே 22
வவுனியா மாவட்டத்தில் நீண்டகாலமாக புனரமைக்கப்படாது கைவிடப்பட்ட நிலையில் உள்ள, நீர்ப்பாசனக் குளங்களை உடனடியாகப் புனரமைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். - இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர், மத்திய நீர்ப்பாசன அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

> புனரமைக்கப்படாதுள்ள குளங்களைப் புனரமைத்து மீள்குடியமரும் மக்களிடம் கையளிக்கும் பட்சத்தில் அவர்கள் தமது வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்ள முடியும் என மத்திய நீர்ப்பாசன அமைச்சரிடம் வடக்கு சுகாதார அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

வவுனியா மாவட்டச்செயலகத்தில் கடந்த புதன்கிழமை மத்திய நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சர் விஜயமுனி சொய்சாவுக்கும், வடக்கு சுகாதார அமைச்சருக்கும் இடையே கலந்துரையாடலொன்று இடம் பெற்றது. அதன்போதே அமைச்சர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.
வடக்கு மாகாணத்தில் பல குளங்கள் நீண்டகாலமாகப் புனரமைக்கபடாது பாழடைந்த நிலையில் உள்ளன. நீண்ட காலமாக போர் நடைபெற்றதால் விவசாயிகள் பயிர்ச் செய்கையில் ஈடுபடாது இருந்துள்ளனர். அதனால் பல குளங்கள் உடைபெடுத்த நிலையில் காடுகளாகக் காட்சியளிக்கின்றன. அவற்றைப் புனரமைத்து மீள்குடியமரும் மக்களுக்கு வழங்கும் பட்சத்தில் அவர்கள் தங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்ள முடியும்.
அத்துடன் வவுனியா, சிறுநீரக நோயால் பாதிக்கபட்டவர்கள் அதிகம் வாழும் மாவட்டமாகும். எனவே பாடசாலைகளில் வடிகட்டிய சுத்தமான குடி தண்ணீரை வழங்குவதற்கு மத்திய அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்தோடு வவுனியாவில் தண்ணீரின் தரத்தைப் பரிசோதனை செய்யும் உபகரண வசதிகள் இல்லை. அவற்றையும் வழங்க ஆவன செய்ய வேண்டும் என்று வடக்கு சுகாதார அமைச்சர் குறித்த சந்திப்பில் கேட்டுக் கொண்டார்.
அமைச்சருடைய கோரிக்கைகளுக்கு பதிலளித்த மத்திய அமைச்சர் விஜமுனி சொய்சா, திருத்தப்பட வேண்டிய குளங்களின் விவரங்களை உடனடியாகச் சமர்ப்பியுங்கள். அவற்றைப் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியுள்ளார்.
அத்துடன் குடி தண்ணீர் வசதி தேவைப்படும் பாடசாலைகளின் விவரங்களைச் சமர்ப்பிக்குமாறும் கேட்டுக் கொண்டதோடு தண்ணீரின் தரத்தைப் பரிசோதனை செய்யும் நடமாடும் உபகரணத் தொகுதியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உறுதியளித்தார். (ற-ஜ-21)



முள்ளிவாய்க்காலில் அழிக்கப்பட்ட மக்களின் ஆத்ம சாந்தி வேண்டி கடந்த வியாழக்கிழமை நாடளுமன்றத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டது. அதில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நாடளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, செல்வம் அடைக்கலநாதன், சாந்தி சிறிஸ்கந்தராஜா, துரைரட்ணசிங்கம், சிறிநேசன் ஆகியோர் கலந்து கொண்டு மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தினர். (ற-ஜ-56)

# குடாக் கடற்பரப்பில் மீன் பிடிபாடு அதிகரிப்பு

யாழ்ப்பாணம், மே 22
தற்போது ஆரம்பமாகியுள்ள பருவப் பெயர்ச்சிக் காற்றை அடுத்து குடாக் கடற்பரப்பில் மீனவர்களின் வலைகளில் மீன்களின் பிடிபாடு அதிகரித்துக் காணப்படுகிறது.
குறிப்பாக பாஷையூர், குருநகர் மற்றும் தீவுப்பகுதிக் கடற்பரப்பில் மீன்களின் பிடிபாடு கூடுதலாகக் காணப்பட்டன.
பாரை, கலவாய், ஓரா போன்ற மீன் இனங்களின் பிடிபாடு அதிகரித்துக் காணப்படுவதால், சந்தைகளில் மீன்களின் விலைகள் வீழ்ச்சியடைந்துள்ளன.
ஒரு கிலோ மீன் 300 ரூபா தொடக்கம், 400 ரூபா வரைக்கும் விற்பனை செய்யப்படுவதுடன் தென்பகுதியில் இருந்து வரும் கூலர் வாகனங்கள் மூலம் அதிகளவிலான மீன்கள் இங்கிருந்து எடுத்துச் செல்லப்படுகின்றன.
அதேவேளை நண்டு, கணவாய், இறால் போன்றவற்றின் விலைகள் சற்று அதிகரித்துள்ளன. (ற-ஜ-17)

## 40ஆவது ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், மே 22
யாழ்ப்பாணம் விழிப்புலனற்றோர் சங்கத்தின் 40 ஆவது ஆண்டு நிறைவு விழா நாளை திங்கட்கிழமை முற்பகல் 11.15 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-5)

# இன்று உதவிகளைப் பெறுவோர் நாளை உதவி வழங்க வேண்டும்

## வட மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் தெரிவிப்பு

வலி.வடக்கு,மே 22
மக்களின் வரிப்பணத்திலிருந்து உதவிகளைப் பெற்றுக் கொள்ளும் பயனாளிகள், அதன் பெறுமதியை உணர்ந்து தாம் பெற்றுக் கொள்ளும் உதவிகளை உரிய முறையில் பயன்படுத்தி , வாழ்வில் உயர்ந்து அதன் மூலம் பிறருக்கு உதவி வழங்கும் அளவுக்கு உயர வேண்டும். - இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் தெரிவித்தார்.
வட்மாகாண விவசாய மற்றும் கால்நடை அமைச்சால் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான ஆடுகள், மற்றும் கோழிகள் வழங்கும் நிகழ்வு சுன்னாகம் கால்நடை வைத்திய அதிகாரி பணிமனையில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது-
எமது மக்கள் ஒருகாலத்தில் பொருளாதார வளத்தில் உச்ச நிலையில் இருந்தார்கள். அதனால் எவரிடமிருந்தும் எதையும் இலவசமாகப் பெற்றுக் கொள்வதை விரும்பாதவர்களாக இருந்தார்கள். மிகவும் கடின உழைப்பாளிகளாகவும், சுயதொழில் ஆற்றல் மிக்கவர்களாகவும் அவர்களது வாழ்க்கை முறையும், பொருளாதார அமைப்பும் இருந்து வந்தன.
மக்களது இவ்வாறான இயல்புதான் இன்றைக்கு வரைக்கும் எவரும் அவர்களை எந்தச் சந்தர்ப்பத்திலும் விலை கொடுத்து வாங்கி விட முடியாத அளவுக்கு வைத்திருக்கிறது.
பல்வேறான நெருக்கடிகளையும், கடினமான காலகட்டங்களையும் கஷ்டங்களையும் அவர்கள் தாண்டி வந்திருந்தாலும், அவர்களது உணர்வுகள் விலை பேச முடியாதவையாகவே இருந்திருக்கின்றன. அப்படியேதான் இன்றும் இருந்தும் வருகின்றன.
இருப்பினும் எமது மூத்தவர்களின் பெருமையைப் பேசிக் கொண்டே நாம் இருந்து விட முடியாது. முன்னைய காலத்தில் மக்கள் எப்படி வாழ்ந்தார்களோ, அதே நிலைமைக்கு அவர்களை மீண்டும் கொண்டுவர வேண்டிய பொறுப்பும், கடமையும் எங்கள் ஒவ்வொருவருக்கும் இருக்கிறது. எவரும் இந்தப் பொறுப்பிலிருந்து நழுவிவிட முடியாது.
இப்படியான ஒரு நிலைமையில் தான் பெரிய எதிர்பார்ப்புக்களோடு, மிகவும் வசதி குறைந்த கிராம மக்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்க முடியும் என்ற எதிர்பார்ப்போடு இந்தச் செயற்றிட்டத்தை மாகாணம் முழுவதும் நடை முறைப்படுத்த முயற்சிக்கின்றோம்.
இதன் மூலம் மிகப் பெரிய அளவில் வருமானம் ஈட்டிட முடியாவிட்டாலும், எமது குடும்பத்தில் சிறு சிறு தேவைகளை நிறைவேற்றுவதற்கும், குடும்பப் பொருளாதாரத்தை ஓரளவுக்கேனும் கட்டுக்குள் வைத்திருப்பதற்கும் உதவும் எனும் நம்பிக்கை எமக்கு இருக்கின்றது.



என்னதான் திட்டங்களை அறிவித்து உதவிகளை வழங்கினாலும், முன்னேற வேண்டும் என்கின்ற சிந்தனை,நோக்கம் எமக்கு இருந்தால் மாத்திரமே எம்முடைய வளர்ச்சி சாத்தியமாகும். ஆகையால் இன்றைக்குப் பயனாளிகளாக இருக்கும் நீங்கள், நாளைக்கு வெற்றியாளர்களாக மாறுவதா அல்லது தொடர்ச்சியாக பயனாளிகளாகவே இருப்பதா என்பதைத் தீர்மானித்துக் கொள்ளுங்கள்.
உங்களின் வரிப் பணத்திலிருந்து உங்களுக்கு கொடுக்கப்படும் இந்த உதவிகளை சரியான முறையிலே பயன்படுத்தி, இவற்றின் பெறுமதியை உணர்ந்து கொண்டு உங்களுடைய குடும்பப் பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்ள வேண்டும்.- என்றார்.
நிகழ்வில் வலி.தெற்கு கால்நடை வளர்ப்போர் சங்கத் தலைவர் சி.குமரவேல், வடமாகாண கால்நடைகள் உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் திருமதி. அமிர்தலிங்கம் மற்றும் பயனாளிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். நிகழ்வில் 8 குடும்பங்களுக்கு தலா இரு ஆடுகளும், 31குடும்பங்களுக்கு கோழிகளும் வழங்கப்பட்டன. (ற-ஜ-25)

# ஜி-7 உச்சி மாநாடு அடுத்த வாரம்

கொழும்பு, மே 22

ஜப்பானில் அடுத்த வாரம் ஜி-7 உச்சி மாநாடு இடம்பெறவுள்ளது. அதில் பங்கேற்கவுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை, ஜப்பானியப் பிரதமர் சின்ஷோ அபேயின், சிறப்புப் பிரதிநிதி சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இலங்கைக்கு வந்த ஜப்பானியப் பிரதமர் சின்ஷோ அபேயின் சிறப்புப் பிரதிநிதி, ஹிரோரோ இசுமி, ஜனாதிபதி செயலகத்தில், மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துப் பேசினார்.

ஜப்பானில் நடக்கவுள்ள ஜி-7 தலைவர்களின் உச்சி மாநாட்டில் பங்கேற்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு சிறப்பு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த அழைப்பை ஏற்றுக் கொண்டுள்ள ஜனாதிபதிக்கு ஜப்பானிய பிரதமர் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொண்டுள்ள ஹிரோரோ இசுமி, ஜனாதிபதியுடன் இருதரப்பு பேச்சு நடத்துவதற்கு ஜப்பானியப் பிரதமர் ஆர்வத்துடன் எதிர்பார்த்திருக்கின்றார் என்றும் கூறியுள்ளார்.

அத்துடன் இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்காக ஜனாதிபதி முன்னெடுத்துள்ள நடவடிக்கைகளையும் அவர் பாராட்டியுள்ளார்.

இதன்போது, இந்த மாநாட்டுக்கு அழைப்பு விடுக்கப்பட்டதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நன்றியைத் தெரிவித்துக் கொண்டுள்ளார்.

42 ஆவது ஜி-7 உச்சி மாநாடு, எதிர்வரும் 26-27 ஆம் திகதிகளில் ஜப்பானில்நடைபெறவுள்ளது. இதில்அமெரிக்கா, பிரிட்டன், கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கின்றனர்.

இந்த மாநாட்டில் பங்கேற்கும் நாடுகளின் தலைவர்களுடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பேச்சு நடத்தவுள்ளார்- என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-ஜ-5)




# அனுர சேனநாயக்கவிடம் இரு நாள்கள் விசாரணை

## வசிம் தாஜுதீன் படுகொலை தொடர்பில்

கொழும்பு, மே 22

வசிம் தாஜுதீன் படுகொலை தொடர்பில் மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுர சேனநாயக்கவிடம், குற்றப் புலனாய்வுப் பிரிவின் சிறப்புக் குழுவினர் இரண்டாவது நாளாகவும் தீவிர விசாரணையை முன்னெடுத்துள்ளனர்.

கடந்த புதன் மற்றும் வியாழக்கிழமை இரு நாள்களும் நீண்ட விசாரணை அவரிடம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வசிம்தாஜுதீன்படுகொலைவிவகாரத்தில் குற்றத்தை மறைத்தமை, சாட்சிகளை அழித்தமை, விசாரணைகளை நிறுத்தியமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அவரிடம் விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன என்று பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தப் படுகொலை விவகாரம் தொடர்பில் உயர் பொலிஸ் அதிகாரிகள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். அத்துடன் நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலைய குற்றவியல் பிரிவு முன்னாள் பொறுப்பதிகாரி கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டதில் அவர் வெளிப்படுத்திய தகவல்களுக்கு அமைவாகவே, சேனநாயக்காவிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த புதன் கிழமை, குற்றப் புலனாய்வுப் பிரிவுக்குச் சேனநாயக்கா முதன்முறையாக அழைக்கப்பட்டிருந்தார். அன்று இரவு 11.30 மணி வரையில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார். இந்த நிலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு மீண்டும் அழைக்கப்பட்டு நீண்ட நேரம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இதனிடையே வசிம் தாஜுதீன் படுகொலை இடம்பெற்றதாகச் சந்தேகிக்கப்படும் நாரஹேன்பிட்டி, சாலிகா மைதான பகுதிக்குப் பொறுப்பான பொலிஸ் பிரிவின், அப்போதைய போக்குவரத்துப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய பொலிஸ் பரிசோதகர் சரத் சந்திர சம்பவம் தொடர் பில் நீதிமன்றுக்கு இரகசிய வாக்கு மூலம் வழங்கியுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு-ஜ-5)






## Want to Study in **Australia, New Zealand or Malaysia ?**



கொழும்பிலிருந்து வருகை தரும் **Edlocate** ஆலோசகர்களை மே மாதம் 25ம் 26ம் திகதிகளில் மாலை 03.00 மணிமுதல் 06.00 மணிவரை சந்திக்க ஓர் அரிய வாய்ப்பு

[தமிழ் பேசும் ஊழியர்களும் சமூகமளித்திருப்பர்]

Call **021 5700750** for appointments

edlocate 16 years of excellence
Reach Light Beyond Borders
www.edlocate.lk

**Edlocate (Pvt) Ltd**
IIS City Campus , 200, Sivan Pannai Road, Jaffna
E: jaffna1@edlocate.lk
FOLLOW US ON

---

## அபி பஷன் வேல்ட்



ஒரு வருடகால பூர்த்தியை முன்னிட்டு மாபெரும் பரிசு மழையை வென்றிடுங்கள்

ரூபா 10,000/= மேல் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

குலுக்கல் முறையில் பரிசில்கள் வழங்கப்படும்

முதலாம் பரிசு:
1 பவுண் தங்க நாணயம்

இரண்டாம் பரிசு:
குளிர்சாதனப் பெட்டி

மூன்றாம் பரிசு:
தொலைக்காட்சிப் பெட்டி

மேலும் பல பெறுமதிமிக்க ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படும்.

எனவே வாரீர் பரிசில்களை வென்றிடுங்கள்

**மே 1 முதல் மே 22 வரை**

யாழ். மண்ணில் முற்றிலும் குளிரூட்டப்பட்ட அனைத்து ஆடைத்தெரிவுகளுடன் கூடிய மிகவும் பிரமாண்டமான

**புடைவை மாளிகை...**

ABI Fashion World
No:112, K.K.S. Road, Jaffna, Sri Lanka.
Tel: 021 222 3738

---

## வெளிநாட்டு வேலை வாய்ப்புகள்

### மலேசியா

**வெயிட்டர்ஸ்/கிளினர்ஸ்**

விசா - 2 வாரங்களில்
தங்குமிடம் உணவு- இலவசம்
பணியாளர் விசா | வங்கிக்கடன் வசதி

**சம்பளம் - 45,000/= - 50,000/=**

### கட்டார்

பாரஊர்தி வாகன சாரதி (QATAR LICENCE )
சவள் ஒப்பரேற்றர் (QATAR LICENCE )
கிளினர்ஸ் - ஆண்கள்
கட்டிடவேலை உதவியாளர்கள்
சிவிலின் வேலைதச்சர்கள்
கம்பிகட்டுபவர்கள்

### வீட்டுப்பணி பெண்

**மலேசியா**
சம்பளம்
37,000/= - 45,000/=

**சிங்கப்பூர்**
சம்பளம்
54,000/= - 64,000/=

**சிங்கப்பூர்** | வேலைவாய்ப்பு மற்றும் உயர்கல்வி | வங்கிக்கடன் வசதி

★ விருந்தோம்பல் மேலாமை டிப்ளோமா

அரச அனுமதி பெற்ற நிறுவனம்

*பிளஸ் ஜொப்ஸ்*
32A 2/1 2வது மாடி,
ராஜ வீதி, மாத்தளை
plusjobsmp@gmail.com
SLBF LICENCE NO : 2532

**071 7 160 300**
**066 5 678 675**

---

## ஹைடெக் லங்கா

ISO 9001: 2008 CERTIFIED TRAINING INSTITUTE

**சர்வதேச தொழில் மற்றும் தொழிற்பயிற்சி நிறுவனம்**

சான்றிதழுக்கு மாத்திரம் மட்டுபபடுத்தப்பட்ட பெயரளவிலான கனரக இயந்திர இயக்குநராக அல்லாமல் உயர் தொழில் நுட்பமுடைய சிறந்த கனரக வாகன இயக்குநராகுவதற்கு அதிகூடிய செயன்முறை பயிற்சி நேரத்தை வழங்குகின்ற இலங்கையின் ஒரே நிறுவனம் ஹைடெக் லங்காவாகும்.

பழமையான இயந்திரங்களில் அல்லாமல் நவீன இயந்திரங்கள் மற்றும் புதிய தொழில் நுட்பங்களைப் பயன் படுத்தி அதிகூடிய பயிற்சி நேரத்துடன் சர்வதேச தரம் வாய்ந்த கனரக வாகன இயக்குநராக உருவாகி வாழ்க்கையில் வெற்றி பெற ஹைடெக் லங்கா சர்வதேச தொழில் மற்றும் தொழில் பயிற்சி நிறுவனம் வழங்குகிறது.

### கட்டிட நிர்மான மற்றும் கனரக இயந்திர இயக்குநர் பாடநெறிகள்

சர்வதேசத்திலும் உள்நாட்டிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட HIGHTEC சான்றிதழுடன் NTT,NVQ(3,4) தரச்சான்றிதழ் மட்டத்திற்கான பயிற்சி
(அங்கீகரிக்கப்பட்ட பாடநெறிகளுக்கு மட்டும்)

**பெக்கோ லோடர் பயிற்சி நெறி**
Backhoe Loader (JCB) Operator



பெக்கோ லோடர் பயிற்சி நெறியுடன் வீல் லோடர், ஸ்கிட் லோடர் மற்றும் போர்க்லிப்ட் பயிற்சிகள்

**எக்ஸவேட்டர் பயிற்சி நெறி**
Excavator Operator



எக்ஸவேட்டர் பயிற்சி நெறியுடன் பிரேக்கர், ஸ்கிட் லோடர்,போர்க்லிப்ட் பயிற்சிகள்






Mobile Crane Operator
மொபைல் கிரேன் பயிற்சி நெறி

Prime Mover Operator
ப்ரைம் மூவர் பயிற்சி நெறி

Wheel Loader Operator
வீல் லோடர் பயிற்சி நெறி

Skid Loader Operator
ஸ்கிட் லோடர் பயிற்சி நெறி



Motor Grader Operator
மோட்டர் கிரேடர் பயிற்சி நெறி

Dozer Operator
டோசர் பயிற்சி நெறி

Fork Lift Operator
போர்க்லிப்ட் பயிற்சி நெறி
With Reach Truck Training

பாடநெறி ஆரம்பிக்கும் திகதி **2016 ஜீன் 13**

பாடநெறிகளில் கலந்து கொள்ளும் உங்களுக்கு இலவசமாக
* பாதுகாப்பான இலவச விடுதி வசதி
* பாதுகாப்பான சீருடை
* இயந்திர பராமரிப்பு மற்றும் தொழில் நுட்ப அறிவு
* பலவீனமான மாணவர்களுக்கு மேலதிக பயிற்சி
* பல்லூடக வகுப்பறைகள்
* உயர் தரம் வாய்ந்த கற்பித்தல் உபகரணங்கள்
* விசேடமாக வடிவமைக்கப்பட்ட ஆங்கில பாட நெறி

மேலதிக விபரங்களுக்கும் விண்ணப்பத்துக்கும்

**0777-65 73 48** இலக்கத்துக்கு உங்களது பெயர் மற்றும் விலாசத்தை SMS செய்யவும்

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி
HIGHTEC LANKA INTERNATIONAL VOCATIONAL & TECHNICAL TRAINING INSTITUTE,
No.549,Kandy Road, Mawathagama, Sri Lanka.

Office: 037-22 97999, 037 22 99744 Fax: 037-22 96029
Hotline: 0777 65 73 48
Web:www.highteclanka.com
e-mail: highteclanka.int@gmail.com

கம்பனிகள் கட்டளைச்சட்டம் பதிவு இலக்கம் - PV – 81127
மூன்றாம் நிலைக் கல்வி பயிற்சி ஆணையகம் பதிவு இலக்கம் - P12/0113

# சிறுவிளம்பரங்கள்



## விற்பனைக்கு





## தேவை



### Rotweillar நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு

விலை பேசித் தீர்மானிக்கலாம். Parvo தடுப்பூசி போடப்பட்டுள்ளது. 44 நாள்கள். ஆண், பெண்.

**077 646 3021**

இடம்:- ஆனைக்கோட்டைசந்தி, மானிப்பாய்.

### காணி விற்பனைக்கு

கொடிகாமம் புகையிரத நிலையத்தில் இருந்து 200 மீற்றர் தூரத்தில் A9 வீதியில் 48 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. பிரித்தும் கொடுக்கப்படும்.

**077 6974852, 077460 5329**

### வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கொக்குவில் K.K.S. Roadஇல் 2 பரப்புக்காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.

இது Residence, Business, Hotels போன்றவற்றிற்கு உகந்தது.

**076 726 9953**

### வீடு/ காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் A9 வீதியில் சுண்டுக்குளியில் Bastian Hotel இற்கு அண்மையில் 3 பரப்புக் காணியில் அமைந்தவீடும். 4 பரப்புக் காணியில் அமைந்தவீடும். 5 பரப்புக் காணியில் அமைந்த வீடும் உடன் விற்பனைக்குண்டு.

**077 475 2535**

### விற்பனைக்குண்டு

யாழ். நகருக்கு மிக அண்மையில், கஸ்தூரியார் வீதி, முதலாம் ஒழுங்கையில் (பழைய வீட்டுடன் கூடிய) மூன்று பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு. விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம். (தரகர்கள் தேவையில்லை)

**077 928 1569**

### காணி விற்பனைக்கு

உரும்பிராய் தெற்கு, சிவகுல வீதியில் அமைந்துள்ள 5 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு.

**077 324 8821**

### மானிப்பாய் கட்டுடையில் காணி விற்பனைக்கு

மானிப்பாய், காரைநகர் பிரதான வீதியில் $3\frac{3}{4}$ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தரகர்கள் இன்றி நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

**077 299 9949**

### சுயதொழிற் பயிற்சி

- ஸ்கிறீன் பிறிண்டிங்
  சகல பொருள்களிலும் அச்சடிக்கும் முறை.
- எச்சிங் - பித்தளை
  மெடல்கள் கேடயங்கள். பெயர்ப்பலகை. புளொக் செய்யும் முறை.
- சாண்ட் பிளாஸ்ட்
  கருங்கல்,கண்ணாடி,பிளாஸ்ரிக், எழுத்துக்கள் படங்கள் பொறிக்கும் முறை
- டோம் இடல்
  படங்களைப் பாதுகாக்கும் முறை.

**077 711 0610**

### காணி விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு, பொற்பதி வீதியில் அமைந்துள்ள ஐந்து (05) பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. பகுதிகளாக பிரித்துக் கொடுக்கப்படும்.

**077 277 4596**

### வீடு வளவு விற்பனைக்கு

" கந்தரோடையில் $2\frac{3}{4}$ பரப்புக் காணியும் அதில் அமைந்துள்ள மின்சாரத் தொடர்புள்ள மூன்று அறைகள் கொண்ட வீடும் விற்பனைக்கு உண்டு. மேலும் இக் காணியில் நல்ல தண்ணீர்க்கிணறும், உயர் தண்ணீர்த் தொட்டியும், பயன்தரும் பலா, மா, தென்னை, செவ்விளநீர் மரங்களும் உள்ளன"

**077 234 1166**

### மணமகள் தேவை

32 வயது உடைய MBBS டாக்டருக்குப் படித்த, நற்குணமான, பண்பான, செவ்வாய்க் குற்றமற்ற மணப்பெண்ணை பெற்றோர் தேடுகின்றனர். பெண்ணின் குணாதிசயங்களுக்கே முன்னுரிமை கொடுக்கப்படும். நேரில் தொடர்பு கொள்ளவும்.

**077 549 4569**

### மணமகள் தேவை

வைத்தியலிங்கம் குகன் வயது 30 தொழில் சாரதி என்பவருக்கு 30 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை. விவாகரத்துப் பெற்றவர்களும் விரும்பத்தக்கது.

**077 154 8944**

### வேலையாள்கள் தேவை

மரத்தளபாட நிலையத்துக்கு, பெயின்ரர், கூலி வேலையாள்கள் உடன் தேவை. நல்ல சம்பளத்துடன் தொடர்ச்சியான வேலை வழங்கப்படும்.

தொடர்பு: விஜா மரத்தளபாட நிலையம், 249, 4/4, பிறவுண்வீதி, T.P. 077 3001763

### பகுதி நேர அல்லது முழுநேர வேலைக்கு பெண் வேலையாள் தேவை

21 வயதிற்கும், 30 வயதிற்கும் இடைப்பட்டவராகவும், Advanced level இல் Commerce படித்தவராகவும் இருத்தல் விரும்பத்தக்கது.

**மேலதிக விவரங்களுக்கு கீழ்கண்ட தொலைபேசி எண்னுடன் தொடர்பு கொள்ளவும்.**

**077 063 3116**

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1983 இல் பிறந்த பூராடம், 6இல் சூரி, செவ். கி.பாவம் 16 உடைய தனியார் துறையில் உயர் பதவி வகிக்கும் மணமகனுக்கு தகுந்த மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். சைவ போசனம் விரும்பத்தக்கது.

**075 545 8216, 077 315 1593**

### பெண் உதவியாளர் தேவை

இருவர் உள்ள வீட்டில் தங்கி இருந்து சமையல், வீட்டு வேலைகள் செய்வதற்கு பெண் ஒருவர் தேவை.

**தொடர்பு: 077 613 8964**

### மணமகன்கள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம்
- 1983, அத்தம், 12 இல் செவ்வாய்.
- 1986, கேட்டை, 2 இல் செவ்வாய்.

மணமகளமாருக்குப் பொருத்தமான வெளிநாட்டில்/ கொழும்பில் நிரந்தர வசிப்பிடத்தைக் கொண்ட மணமகன்கள் தேவை.

**077 771 2604**

### விற்பனைப் பிரதிநிதி (Sale Rep)

எமது நிறுவனத்தின் உற்பத்தி பொருள்கள் (sweet, spices, water, bise ) விற்பனை செய்வதற்கு அனுபவமுள்ள விற்பனைப் பிரதிநிதி யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற இடங்களில் வேலை செய்வதற்குத் தேவை.

தகைமை - G.C.E. O/L

அனுபவம் - குறைந்தது இரண்டு வருட. அடிப்படைச் சம்பளம் ரூபா 20,000/= மேலதிகமாக ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படும்.

சாரதி
(Driver) வயது 20-50 வயதுக்குட்பட்ட நல்ல தேக ஆரோக்கியம் உடைய சாரதி உடனடியாகத் தேவை.

**மேற்படி தொழிலுக்கு விருப்பமுள்ள தகுதியானவர்கள் 22.05.2016 முற்பகல் 10 மணிக்குப் பின்வரும் முகவரிக்கு நேரடியாக வரவும்.**

Kings Food and Shio
காரைகால் சிவன்கோயில் வீதி, கோயில் சந்தி.
076 852 4004, 075 410 5230

# ஏனையவை

### வாடகைக்கு உண்டு

பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் தபாற்பெட்டிச் சந்தி, தாளையடி ஒழுங்கையில் மாடி வீட்டின் மேற்பகுதி (04 அறைகள் 01 ஹோல், குசினி, இணைந்த குளியலறை) சிறிய குடும்பத்திற்கு வாடகைக்கு விடப்படும்.

**077 958 7199**

### வாடகைக்கு

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக்கு அருகில் Carpet Main Road முகப்புடன் சாப்பாட்டறை Store Room உட்பட 6 அறை வசதியான வீடு வாடகைக்கு உண்டு.

**077 203 5419**

### வேலைவாய்ப்பு

முன்மாதிரியான பொய்யின்றி உழைப்புக்கேற்ப சம்பளம் பெற ஆண், பெண் இருபாலாருக்கும் வேலைவாய்ப்பு உண்டு. நூடில்ஸ், பால்மா, டொபி, டிபிடிபி ஆகிய பிரிவுகளுக்கு. சம்பளம் (25,000- 35,000) உணவு, தங்குமிடம் முற்றிலும் இலவசம். வயது 18-50. OT யுடன் நாள்சம்பளம் 1500/=

**072 223 1518, 076 701 5219**

### USA GREEN CARD - 2017

அமெரிக்க கிறீன் கார்ட் விசா 2017இற்காக விண்ணப்பித்தவர்களில் அதிர்ஷ்டசாலிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பற்றிய விபரம் இம் மாதம் 3ஆம் திகதி வெளியாகியுள்ளது. கிறீன் கார்ட் விசாவுக்காக விண்ணப்பித்து அதிர்ஷ்டசாலிகளாகத் தெரிவுசெய்யப்படுபவர்களால் பூர்த்தி செய்யப்படவேண்டிய விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்துகொள்வதற்கு 2003ஆம் வருடம் முதல் தொடர்ச்சியாக அமெரிக்க கிறீன் கார்ட் விசா லொத்தர் விண்ணப்பம் தொடர்பான சேவையை மிக வெற்றிகரமாக வழங்கிவரும் எமது நிறுவனத்தைச் சேர்ந்த அனுபவம் வாய்ந்த பிரதிநிதியின் ஆலோசனையைப் பெறுவதற்கு பின்வரும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

எமது நிறுவனத்திற்கு கிளை அலுவலகமோ அல்லது பிரதிநிதிகளோ இலங்கையின் எந்த ஒரு பாகத்திலும் இல்லை என்பதை அறியத்தருகிறோம்.

Reg. WA 44843

**BRISTOL CYBER CAFE**
No. 8/3/4, Bristol Street, Colombo 01. Tel. 0112 393 919
Mobile : 077 4276579 www.bristolcc.biz

### அறை வாடகைக்கு

ஸ்ரான்லி வீதியில் இணைந்த குளியலறையுடன் அறை வாடகைக்கு. பெண்களுக்கு மட்டும்.

**077 758 5412**

### வீடு, கடை வாடகைக்குண்டு

பல்கலைக்கழகச் சந்தி, A9 வீதி, திருமுருகண்டியில் கடைத் தொகுதியும், பெரிய வீடும் வாடகைக்குத் உண்டு.

**077 026 5657**

### பிரத்தியேக வகுப்பு

O/L மாணவர்களுக்கான பிரத்தியேக வகுப்புக்கள்.
Commerce & Accounting

**Contact No: 075 409 9968**

### கதிர்காமத்தில் பாதுகாப்பான தங்குமிட வசதிகள்

குடும்பத்துடனும், தனி நபராகவும் பாதுகாப்பான தங்குமிட வசதிகள், சுற்றுலாப் பயணிகளுக்கு சைவ, அசைவ உணவுகள் சுகாதார முறைப்படி பெற்றுக் கொள்ளலாம். யால, உடவலவ, சரணாலயங்கள் பார்வையிடுவதற்கான போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

**077 672 9422 - P.ரவீந்திரன்**

### VACANCY

**Administrative Assistant (Female)**

கடந்த மூன்று ஆண்டுகளாக சிறந்த முறையில் இயங்கி வரும் ஆலோசனை நிலையத்துக்கு Administrative Assistant தேவை

**தகைமைகள்**
- ஆங்கிலப் பேச்சாற்றல் (சிங்களப் பேச்சாற்றல் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.)
- கணினி அறிவு (M.S.Office, Photoshop )
- வயதெல்லை 18- 28
- நீண்டநேரம் பணியாற்றக் கூடியவர்கள்
- பணி நிமித்தம் வெளிநாடு, வெளிமாவட்டங்களுக்குச் சென்று வரக்கூடியவர்கள்.

**Salary : 20,000/= + Commissions**

**தகைமையுடையவர்கள் 5 நாள்களுக்குள் புகைப்படத்துடன் கூடிய சுயவிவரக் கோவையினை தபால் / மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.**

இல.106, தபால்பெட்டிச்சந்தி, பலாலிவீதி, திருநெல்வேலி
email: winstarvc@gamil.com

### விஷேட பல் வைத்திய சேவை

- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

## ஓய்வூதிய சம்பளத்தை மீளாய்வுக்கு உட்படுத்த கோரிக்கை

கொழும்பு,மே 22
2015ஆம்ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியன்று அரச பணியிலிருந்து ஓய்வைப் பெற்றுக் கொண்ட அனைத்து அரச ஓய்வூதியர்களதும், ஓய்வூதியச் சம்பளத்தை அதற்கு ஏற்றவாறு மீளாய்வு செய்யுமாறு அரச சேவைகள்தொழிற் சங்கங்களின் சம்மேளனம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கையொன்றை முன்வைத் துள்ளது.

அத்துடன் 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் அரச ஊழியர்களையும்கருத்தில் கொண்டு, 2020 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி வரையில் அதிகரிக்கும் அடிப்படைச் சம்பளத்துக்கு ஏற்றவாறு, ஒரே தடவையில் ஓய்வூதியச் சம்பளத்தை கணிப்பிட்டு வழங்குமாறும், சம்மேளனம் ஜனாதிபதியிடம் எழுத்து மூலம் கோரியுள்ளது.

இதேவேளை அரச ஊழியர்களுக்கு அதிகரிக்கப்பட்டுள்ள சம்பளத்தை அடிப்படைச் சம்பளத்துடன் சேர்த்துக் கொள்ளும் செயற்பாடு 2020 ஆம் ஆண்டு வரையிலும் குறித்த கால இடைவெளிகளில்மேற்கொள்ளப் படவுள்ளது.

(ற-ஐ-ரி2,22)

**காணி விற்பனைக்கு**
திருநெல்வேலி Farm School இற்கு அருகில் கலைவாணி ஒழுங்கையில் 1 - 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு
தொடர்பு: 0773779704



# குருதேவர் அறநெறிப் பாடசாலை திறப்பு விழா

யாழ்ப்பாணத்து மாமுனிவர் சிவயோகசுவாமிகளின் சீடரும்
அமெரிக்க ஹவாய் சைவ ஆதீன ஸ்தாபகருமாகிய குருதேவர்
சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளின் கருணையால் முல்லைத்தீவு மாவட்டத்தில்
அமைந்தள்ள தேவிபுரகிராம சிறார்களின் நலன்கருதி குருதேவர் அறநெறிப்
பாடசாலை ஸ்தாபிக்கப்பட்டு அதற்கான புதிய கட்டடம்

**27.05.2016 அன்று காலை 9 மணிக்கு**
**ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளின் தாயார்**
**திருமதி சிவலோசனி கனகரத்தினம்**
அவர்களால் திறந்து வைக்கப்படும்.

**சிறப்பு விருந்தினர்கள்**

**உயர்திரு.கந்தையா நீலகண்டன் தம்பதிகள்**
(தலைவர் - அகில இலங்கை இந்து மாமன்றம்)
**செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன்**
(தலைவர் - தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம்,
சிவபூமி அறக்கட்டளை)

**- அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் -**

குருதேவர்
அறநெறிப்பாடசாலை.

தேவிபுரம்,
புதுக்குடியிருப்பு.

## யாழ்ப்பாணத்தில் காண்டம் வாசிக்கப்படுகின்றது

ஸ்ரீ கௌசிக அகஸ்திய நாடி சோதிட நிலையம் (pvt)Ltd

**P. ஜெய்சங்கர்**

கொழும்பில் கடந்த 25 வருடங்களாக,கௌசிக அகஸ்திய முனிவர்களால் எழுதப்பட்ட ஏட்டுச் சுவடிகள் மூலம், தங்களின் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம், கல்வி, திருமணம், குழந்தைகள், தொழில்வாய்ப்புகள் வெளிநாட்டுப் பயணம் போன்றவற்றைக் கூறிப் புகழ் பெற்ற சோதிடர்களால் தற்போது யாழ்ப்பாணத்தில் பலருடைய வேண்டுகோளுக்கு இணங்கி கீழ் கண்ட முகவரியில் காண்டம் வாசிக்கப்படுகின்றது.

தொடர்புகளுக்கு:
**384 A, நாவலர் வீதி,**
(கைலாசபிள்ளையார் கோயில் சந்தி, நல்லூர்)
**தொலைபேசி: 021 221 7944**
**கொழும்பு முகவரி:**
**19,1/1, கொத்தலாவல மாவத்தை, பம்பலப்பிட்டி.**
**தொலைபேசி: 011 258 6180/ 011 258 6208**

## வளர்ந்து வரும் படையில் இணையுங்கள்...



த ஃபினான்ஸ் கம்பனி பி.எல்.சி. ஆனது இலங்கையின் முதலாவது நிதி நிறுவனம் ஆகும். அத்துடன் பல ஆண்டுகளுக்கும் மேலாக இந் நிறுவனம் குடும்பச் சூழலிற்கான ஒரு நம்பிக்கை மிக்க பெயரைப் பெற்றுள்ளது. எப்போதும் விரிவடையும் ஒரு வாடிக்கையாளர் தளத்துடன் நிறுவனமானது, தன் வாடிக்கையாளர்களின் நிதித் தேவைகளை சிறந்த முறையில் எதிர்கொள்வதற்காக தன் பல்வகைமையைத் தொடர்கின்றது.

ஊக்கம் தரக் கூடியதும் பரிசளிக்கக் கூடியதுமான ஒரு பணிச் சூழலை வழங்குவதில் நாம் பெருமை கொள்கின்றோம். இப்பணிச் சூழலானது தொழில் ரீதியான மற்றும் தனிப்பட்ட வளர்ச்சிகளுக்கான கணிசமான வாய்ப்புகளை அளிக்கின்றது. எமது தொடர்ச்சியான வளர்ச்சிப் பாதையில், துடிப்பு மிக்க, சுய ஊக்கமுள்ள மற்றும் சிறந்த அடைவுகளைப் பெறுவதைக் குறிக்கோளாக உள்ள நபர்களை எம் தொழில் நிபுணத்துவம் மிக்க அணியில் இணைத்துக்கொள்ள ஆர்வமாயுள்ளோம்.

THE FINANCE COMPANY PLC
ESTD - 1940

தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன:

### உதவி முகாமையாளர்கள் / நிறைவேற்று அதிகாரிகள் - முதலீடு
(நாடு முழுவதுமுள்ள பெருநகர மற்றும் வெளியூர் கிளைகள்)

வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் முகமாக, நிதித் தீர்வுகளின் முன்னிறுத்தலால் நிறுவனத்தின் முதலீட்டுக் கலவையை அபிவிருத்தி செய்யக் கூடிய இலக்கில் ஆர்வமுள்ள நபர்கள்.

தேவைப்பாடுகள்
- க. பொ. த. (உ / த)
- விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் அல்லது கடன் முகாமை ஆகியவற்றில் முழுமையான அல்லது பகுதியான தொழில் விற்பனைத் தகமைகளை பெற்றிருத்தல் மேலதிக தகமை ஆகும்.
- நிதி / கடன் வழங்கல்களை முன்னிறுத்தும் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தலில் குறைந்தது நான்கு (04) ஆண்டுகள் அனுபவம்
- சிறப்பான மக்கள் உறவுத் திறன்கள் மற்றும் பேரம் பேசும் திறன்கள்
- வாடிக்கையாளர்களின் ஒரு நல்ல தொடர்பு வலையமைப்பைக் கொண்டிருப்பது ஒரு மேலதிக தகமையாக கருதப்படும்.
- செல்லுபடியாகக் கூடிய வாகனச் சாரதி உரிமம்

தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் ஒரு போட்டித்தன்மை மிக்க ஊதியப் பொதி ஒன்றைப் பெற முடியும். அத்துடன் உரிய பதவி வகுப்பிற்கேற்ப மேலதிக நன்மைகளையும் பெற முடியும்.

விண்ணப்பிக்கப்படும் பதவியானது கடித உறையின் மேல் இடது மூலையில் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும். விண்ணப்பத்துடன் தங்களுடைய விரிவான சுயவிபரக் கோவையினை இணைத்து அனுப்புவதோடு, உங்களுக்கு விருப்பமான நகரம் மற்றும் மாகாணம் ஆகியவற்றையும், உங்களுடன் உறவுமுறையில் இல்லாதவர்களும் உங்களைப்பற்றி தெரிந்தவர்களுமான இருவர்களின் பெயர்களையும் குறிப்பிட்டு, ஏழு (7) நாட்களுக்குள் பின்வரும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்:

தலைவர் - மனித வளங்கள்
**த ஃபினான்ஸ் கம்பனி பி. எல். சி.**
த ஃபினான்ஸ் ஹவுஸ்,
இல. 55, லௌரிஸ் பிளேஸ்,
ஆர். ஏ. டி மெல் மாவத்தை, கொழும்பு 04.

அல்லது, இந்த மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம் : hrd@thefinance.lk
(மின்னஞ்சலின் தலைப்புப் பகுதியில் பதவியைக் குறிப்பிடவும்)

## வீடு/காணி விற்பனைக்கு

பருத்தித்துறை சிவன்கோவிலுக்கு
அருகாமையில் IT/ஆங்கில
வகுப்புகள்
நடாத்த உகந்த 1 3/4 பரப்பு
காணியும் கட்டிடமும் விற்பனைக்கு

தொடர்புகளுக்கு
**077 1771 141**

## தேவை

இலங்கையில் அமைந்துள்ள நிறுவனங்களுக்கு பயிற்சி உள்ள பயிற்சி அற்ற ஆண்/பெண் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை. வயது 19-48 வரை சம்பளம் 22000/= OT 30 000/= சாப்பாடு, தங்குமிடம் செய்து தரப்படும் தேவைப்படும் பிரதேசங்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, திருகோணமலை, உயரமானவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**077 840 0867 இல. 145, கிரவல் றோட், கொழும்பு- 6**

## ஜீவகவாத ஒத்தட பத்து

முதுகுத்தண்டு,கழுத்து, கணுக்கால், முழங்கால், இடுப்பு, மணிக்கட்டு, முழங்கை, தோள்பட்டை ஆகிய இடங்களிலும் கார்ட்டிலேஜ் எனப்படும் எலும்பு திசுக்கள் குறைதல்,திசுக்கள் கடினமடைதல் அல்லது தேய்மானம் ஆகியன காரணமாக ஏற்படும் வலிகளுக்கு ஜீவகவாத ஒத்தட பத்து மருந்தை பயன்படுத்துவதன் மூலம் நிரந்தர தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியும்.
இதனைப் பயன்படுத்துவதன் மூலம் எலும்பு மூட்டுக்களில் திசுக்களின் வளர்ச்சி அதிகரிக்கும்.

Manufactured by :
jeewaka Herbal Products (pvt) Ltd
yakkala

அனைத்து பாமசிகளிலும் பெற்றுக் கொள்ளலாம்

சந்தைப்படுத்துவோர்
**சிவா நறுமணப் பூங்கா**
இல. 288, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.(சத்திரச்சந்தி சிக்னல் லைற்றுக்கு அருகில்)
தொ.பே. 021 222 2567

# Study in Europe

- Choose your own career path
- Select from a variety of recognized European Universities at affordable cost
- Visa Guaranteed
- Part time work opportunities
- Better work opportunities within the European union




"Join hands with Red Cross to build your career path"

Red Cross Student Consultancy Services
Consultancy arm of the Sri Lanka Red Cross Society

## கண்ணீர் அஞ்சலி



எமது சக பாதுகாப்பு உத்தியோகத்தர்
**திரு.தி. தவேந்திரன்** அவர்களின்
பாசமிகு தாயார்
*திருநாவுக்கரசு*
*நாகரத்தினம்(குவமணி)*
அவர்களின் மறைவுக்கு எமது
ஆழ்ந்த அனுதாபத்தைத்
தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
**பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன்புரி கூட்டுறவுச் சங்கம்.**
**யாழ். பல்கலைக்கழகம்.**


## சன சமூக நிலையத்தின் 56 ஆவது ஆண்டு விழா

யாழ்ப்பாணம்,மே 22
அரியாலை அருணோதயா சனசமூக நிலையத்தின் 56 ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை சன சமூக நிலையத்தின் சீவரத்தினம் கலையரங்கத்தில் நடைபெறவுள்ளது.
இந்த விழா நிகழ்வுகள் காலை, மாலை, இரவு என மூன்று பிரிவுகளாக நடைபெறவுள்ளன. இன்று காலை 6 மணிக்கு ஆண்களுக்கான 50 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டி இடம்பெறும்.
இன்று பிற்பகல் 1 மணிக்கு சன சமூக நிலையத்தின் தலைவர் சி.தயேஸ்குமார் தலைமையில் நடைபெறும் அரங்க நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சிறுவர் நன்னடத்தைத் திணைக்களத்தின் பதில் கணக்காளர் ந.சுதேஸ்குமார், சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற ஆசிரியர் க.சண்முகநாதன் ஆகியோரும்,இரவு நடைபெறவுள்ள நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன், சிறப்பு விருந்தினராக டாப் என்ர பிறைஸ் உரிமையாளர் மு.ஜெகதீசன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.
(ஐ-422)

### மகா கும்பாபிசேகம்

சாவகச்சேரி,மே 22
எழுதுமட்டுவாழ் தெற்கு பத்ரகாளி சமேத வீரபத்திரர் ஆலயத்தின் மகா கும்பாபிசேகம் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற வுள்ளது.
கும்பாபிசேகக் கிரியைகள் நேற்று ஆரம்பமாகியுள்ளன. இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை அடியார்கள் எண்ணெய்க் காப்பு சாத்துதல் இடம்பெறும்.
(ற-ஐ-9)


## எட்டாம் ஆண்டு நினைவலைகள்





**இராசையா முருகேசு**
பிறப்பு 01.07.1939 — இறப்பு 20.05.2008
திதி: பிரதமை (22.05.2016)

**திருமதி கமலாதேவி முருகேசு**
பிறப்பு 19.09.1941 — இறப்பு 04.05.2008
திதி: சதுர்த்தி (05.05.2016)

*என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்*

**கமலபதி,**
**கச்சாய் வீதி, கொடிகாமம்.**
**குடும்பத்தினர்.**



## 31ஆம் நாளின் கண்ணீர்ப் பூக்கள்



எமது சக பணியாளர் **திருமதி தர்மசுந்தரி**
அவர்களின் தாயாரான
திருமதி **தர்மதேவி இராஜசுந்தரம்**
அவர்களின் மறைவினால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில்
நாமும் பங்கு கொள்வதுடன் அவரின் ஆத்ம
சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.
**சக உத்தியோகத்தர்கள்,**
**இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்,**
**சங்கானை.**



## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 09 - 10 - 1972
இறப்பு 22 - 05 - 2012

**அமரர் செல்லத்துரை டேமியன்**
(யாழ்.ப.நோ.கூ.ச.கிளை முகாமையாளர்)

அந்திரான் -
சண்டிலிப்பாய்
**குடும்பத்தினர்.**



## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 24 . 05 . 1960
மறைவு 18 . 05 . 2011

**அமரர் இராமநாதன் லோகநாதன்**
(முன்னாள் செயலாளர் - காரைநகர் பிரதேசசபை)
திதி : பிரதமை (22.05.2016)

சென்றதுவோ ஐந்தாண்டுகள் செல்லவில்லை என் துயரம்
காற்றோடு கலந்து நீங்கள் கடவுளாக ஆனாலும் - என்றும்
காலத்தால் அழியாத காவியமாக மாறினாலும் - உங்கள் பிரிவால்
எரியும் என் இதயத்தை எள்ளளவும் அணைக்கவில்லை
சொரியும் என் கண்ணீரால் எவ்வித பயனுமில்லை.
ஓம் சாந்தி!

உங்கள் நினைவுகளைச் சுமந்து
வாழும் அன்பு மனைவி
**லோ.ரதீஸ்வரி**

5 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.
(ஊ/1250) (11)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணகம் மகிழ்ந்திட 16 . 07 . 1933
விண்ணகம் நெகிழ்ந்திட 03 . 06 . 2015

**அமரர் திருமதி சிவபாக்கியம் சின்னத்தம்பி**

குடும்பத்தின் ஒளிவிளக்கே அன்பின் பிறப்பிடமே
ஆண்டொன்று ஆனபோதும் ஆறவில்லை நம் துயரம்
இன்புற்றே இவ்வுலகில் இணையில்லா வாழ்வு வாழ்ந்து
உயிருக்கு உயிராய் இருந்து எம்மைக்காத்த எம் அன்னையே!
காலங்கள் பல சென்றாலும் கடைசி வரை
உங்கள் நினைவு எம் நெஞ்சை விட்டு அகலாது
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

" சிவவாசா"
சூராவத்தை,
சுன்னாகம்.

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரக்குழந்தைகள்.

# க.பொ.த உயர்தர வணிகத்துறை மாணவர்களுக்கு கருத்தரங்குகள்

யாழ்ப்பாணம், மே 22

யாழ்ப்பாணக் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் இந்த வருடம் நடைபெறவுள்ள க.பொ.த உயர்தரப் பரீட்சையில் வணிக பாடத்துறையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கான கருத்தரங்குகள் யாழ்ப்பாணக் கல்வி வலயத்தால் நடத்தப்படவுள்ளன.

இந்தக் கருத்தரங்குகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ளன என வலயக்கல்வி அலுவலகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் கருத்தரங்கு அந்தப் பாடசாலையைச் சேர்ந்த மாணவர்களுக்கும், யாழ்.இந்துக் கல்லூரி, பெரியபுலம் மகா வித்தியாலயம், மத்திய கல்லூரி, கனகரத்தினம் ம.ம.வி ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கும் நடைபெறவுள்ளது.

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறும் கருத்தரங்கு, அந்தப் பாடசாலையைச் சேர்ந்த மாணவர்களுக்கும், திருக்குடும்பக் கன்னியர் மடம், சென். ஜேம்ஸ் மகளிர் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, சென். சாள்ஸ் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கும் நடைபெறவுள்ளது.

பரியோவான் கல்லூரியில் நடைபெறும் கருத்தரங்கு, அந்தப் பாடசாலையைச் சேர்ந்த மாணவர்களுக்கும், சென்.பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்களுக்கும் நடைபெறவுள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறும் கருத்தரங்கு, அந்தப் பாடசாலையைச் சேர்ந்த மாணவர்களுக்கும், செங்குந்தா இந்துக் கல்லூரி, கோண்டாவில் இந்துக் கல்லூரி, கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயம், முத்துத் தம்பி மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கும், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் அந்தப் பாடசாலையைச்சேர்ந்த மாணவர்களுக்கும் உரும்பிராய் இந்துக் கல்லூரி, புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி, இடைக்காடு மகாவித்தியாலயம், அச்சுவேலி மத்திய கல்லூரி, அச்சுவேலி சென்.திரேசா பெண்கள் பாடசாலை, அத்தியார் இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாண வர்களுக்கும் நடைபெறவுள்ளது.

மாணவர்கள் தமது பாடசாலைச் சீருடையுடனும், பாடப் பொறுப்பாசிரியருடனும் கருத்தரங்குகளில் தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

(ற-ஜ-21)

# கவரிங் சங்கிலி அறுத்தவருக்கு 6 மாதங்கள் கடூழியச் சிறை

சாவகச்சேரி, மே 22

ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான கவரிங் சங்கிலியை அறுத்த புங்குடுதீவு வாசிக்கு 5 வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட 6 மாத கடூழியச் சிறைத் தண்டனையும் ஆயிரத்து 500 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

2012 செப்ரெம்பர் ஒன்பதாம் திகதி கொடிகாமம் பொலிஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள நாகநாதன் வீதியில் நடந்து சென்ற விடத்தற்பளையைச் சேர்ந்த 61 வயதுப் பெண்ணொருவர் அணிந்திருந்த கவரிங் சங்கிலியை சைக்கிளில் வந்த நபரொருவர் அறுத்துக் கொண்டு ஓடியுள்ளார்.

சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து, பொலிஸார் குறித்த நபரைக் கைது செய்து சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர்.

இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது ஐந்து வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட ஆறு மாத கடூழியச் சிறைத் தண்டனையும், ஆயிரத்து 500 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

(ற-ஜ-9,107)

# கஞ்சா வைத்திருந்தவருக்கு 24 ஆயிரம் ரூபா அபராதம்

யாழ்ப்பாணம், மே 22

சாவகச்சேரி நகரப்பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் 800 மில்லி கிராம் கஞ்சாவைத் தனது உடைமையில் வைத்திருந்த நபருக்கு 24 ஆயிரம் ரூபா அபராதம் சாவகச்சேரி நீதிமன்றால் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரிப் பொலிஸார் தாக்கல் செய்த குறித்த வழக்கு கடந்த வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட போது, சந்தேக நபர் தனது குற்றத்தை ஏற்றுக் கொண்டார். இதனையடுத்து அவருக்கு 24 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

(ற-ஜ-107)

# யாழ்.பல்கலை மாணவர்களுக்கு சிவன் பவுண்டேசன் நிதி உதவி

வலி.வடக்கு, மே 22

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மற்றும் இராமநாதன் நுண்கலைக்கழகம் ஆகியவற்றில் பயிலும் மாணவர்களுக்கு சிவன் பவுண்டேசன் அறக்கட்டளை நிறுவனம் கல்வி ஊக்குவிப்புக்கான நிதி உதவியை வழங்கியுள்ளது.

பல்கலைக்கழகம் மற்றும் இராமநாதன் நுண்கலைப் பீடத்தில் கல்வி பயிலும் 50 மாணவர்களுக்கு கல்வி ஊக்குவிப்பு நிதியும், இராமநாதன் நுண்கலைக் கழக அரங்கைப் புனரமைப்பதற்கு ஒரு லட்சம் ரூபாவும் சிவன் அறக்கட்டளை நிறுவனத்தால் நேற்று முன்தினம் வழங்கப்பட்டுள்ளன.

அங்கு உரையாற்றிய சிவன் அறக்கட்டளை நிறுவனப் பணிப்பாளர் தெரிவித்ததாவது-

இது முற்று முழுதாக எனது சொந்த நிதியாகும். முதற்கட்டமாக 50 மாணவர்களுக்கு இந்த நிதி வழங்கப்படுகின்றது. தொடர்ந்தும் பல மாணவர்களுக்கு கற்றல் ஊக்குவிப்புக்காக நிதியுதவிகள் வழங்கப்படவுள்ளன. நுண்கலைப் பீட அரங்க புனரமைப்புக்கு முதற்கட்டமாக ஒரு லட்சம் ரூபா வழங்கப்படவுள்ளது.- என்றார்.


இங்கு கருத்துத் தெரிவித்த சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் செயலாளர் கீதன் நகுலேந்திரன் தெரிவித்ததாவது-

வறிய மாணவர்களின் கல்வியில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவே நாம் இந்த உதவிகளை மேற்கொண்டு வருகின்றோம். எம்மிடம் உதவிகளைப் பெறுவதற்கு இணையத்தளம் மூலமாகவும் நீங்கள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பித்து, உதவி பெறுவதற்கு தகுதியுடையவராயின் நிச்சயமாக 15 நாள்களுக்குள் நாம் உதவிகளை வழங்குவோம் - என்றார்.


இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர், செயலாளர், கலைப் பீடத் தலைவர், செயலாளர், நுண்கலைப்பீடத் தலைவர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ற-ஜ-25,101)








FCA FCA


FCA FCA






FCA






FCA





FCA

# இயற்கையின் கோரத் தாண்டவக் காட்சிகள்

















Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## இயற்கைப் பேரிடர்களைத் தவிர்க்க உகந்த பொறிமுறைகள் தேவை

இயற்கை தந்த பேரிடர், எங்கள் நாட்டின் லட்சக்கணக்கான மக்களை, கடந்த சில நாள்களாக ஆட்டிப் படைத்துக் கொண்டு இருக்கிறது. அது ஓரளவேனும் தணியுமா என்று ஏங்கித் தவித்துக் கொண்டு இருக்கிறார்கள், அதனால் பெரிய அளவில் பாதிக்கப்பட்டு அவலப்படும் பல்லாயிரக்கணக்கானோர்.

நேற்றைய பிந்திய தகவல்களின் பிரகாரம், அண்மைய இயற்கைப் பேரிடரால் இதுவரை அறுபத்தி நான்கு பேர் இறந்துள்ளனர்; 173 பேர் காணாமற் போய்விட்டனர், ஐந்து லட்சத்துக்கும் அதிகமானோர் வாழ்க்கையை-வாழ்வை-இழந்து நிர்க்கதி நிலை அடைந்துள்ளனர்.

பாதிப்புற்ற மக்களுக்கு நிவாரணம் மற்றும் வசிப்பிடங்களை வழங்குவதற்கு மட்டும் நேற்று மாலைவரை 1,588 மில்லியன் ரூபா செலவாகி உள்ளதாக நிதி அமைச்சர் தகவல் வெளியிட்டுள்ளார்.

இந்தப் பெரும் மனித (மக்கள்) இடருக்கு வழங்கப்படும்--உதவிப் பொருள்களுக்கு, அரசு வரி விலக்கு அளித்துள்ளது.

லட்சக் கணக்கானோர், பசியாற முடியாமல், குந்தி இருக்க இடமின்றி, வாழ்க்கையை முற்றாக இழந்து, மனம் வெதும்பி சாவின் விளிம்பில் தள்ளாடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

ஆகவே, அவர்களுக்கு இயன்றளவு உதவ மனம் கொள்ள வேண்டும்.

பன்னிரண்டு வருடங்களுக்கு முன்னர், ஆழிப்பேரலை எனப்படும் சுனாமி, அதன் பின்னர் 2009 ஆம் ஆண்டில் மனிதனால்-கொழும்பு அரசின் ஆட்சியாளர்களால்-கட்டவிழ்த்து விடப்பட்ட தமிழ் இளைஞர்கள், தமிழ் மக்கள் மீதான பேரிடர் என்பவை இன்னமும் ஆழ்மனதை அழுத்தி அமுக்குகின்றன, அல்லவா?

அந்த நிலை மீளத்திரும்பாத வகையில், இயற்கை தந்த இடரில் சிக்கிய மக்களுக்கு-அதாவது உண்மையாகவே இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு--நொந்துபோய் உள்ள மக்களுக்கு--உரிய உதவிகள், உரிய வகையில் சென்றடைய வேண்டும்; பொறுப்பு வாய்ந்த அரச அதிகாரிகள் அதை உறுதி செய்ய வேண்டும்; நூறு வீதம் எதிர்பார்க்கலாமா??

காலநிலை மாற்றம் இப்போதெல்லாம், ஆண்டுக்கு ஆண்டு என்று கருதும் அளவுக்கு அடிக்கடிவந்து மனிதர்களைத் தண்டிக்கின்றது. வேகமாக மாறி வரும் காலநிலை மாற்றத்தால், உலக நாடுகள் பலவும், இயற்கைப் பேரிடர்களை அனுபவிக்க நேரிடுகிறது.

இலங்கைத் தேசமும் அதற்கு விதிவிலக்கு அல்ல. இத்தகைய சூழமைவில் எங்கள் நாட்டில், அதன் பிராந்தியங்களில் இயற்கைப் பேரிடர்களால் ஏற்படும் பாதிப்புக்களைத் தணிக்கவும் தடுக்கவும், அதற்கான பொறிமுறைகளை, ஆழ்ந்து அலசி வகுக்க வேண்டிய தேவை அதிகரித்து வருகிறது.

சுற்றிச் சுழன்று வந்து பார்த்தால், மனிதனால் உண்டாக்கப்படுகிற இடர்களை (Man made Disasters) களைந்தாக வேண்டும்.

அதற்கு நிலையான சமாதானமும், எல்லா இனமக்களும் சமத்துவ நிலைமை கொண்டவராக வாழ வழி செய்யும் ஆட்சியியல் பண்பும் உயர வேண்டும்.


நல்லாட்சி அரசு அதற்காக முனைப்புடன் செயற்படுமா? அல்லது குழிபறிக்குமா? அது கேள்விக் குறியாகவே இன்னமும் தொக்கி நிற்கிறது.

# ஜனநாயகத்தின் ஆணிவேரான தேர்தல்கள்

■ சேரலாதன்

ஜனநாயக ரீதியில் இடம்பெறுகின்ற தேர்தல்களே ஒரு நாட்டின் ஜனநாயகம் என்ற விருட்சத்தைத் தாங்கி நிற்கின்ற ஆணிவேராகக் கொள்ளப்படுகின்றது. இந்த ஆணிவேர் பழுது பட்டுப்போனால் அந்த விருட்சமே பட்டுவிடும்.

தேர்தல்கள் மக்கள் தமது ஜனநாயகக் கடமைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான வாய்ப்பை வழங்குகின்றன. வாக்குச் சீட்டுக்கள் மூலமாக பெரும் மாற்றத்தையே ஏற்படுத்திவிட முடியும். இதனால்தான் தேர்தல் காலங்களில் வேட்பாளர்களின் கண்களுக்கு வாக்காளர்கள் தெய்வம் போன்று காட்சியளிக்கின்றனர்.



வாக்காளர்களின் கால்களில் விழாதகுறையாக நின்று வாக்குப் பிச்சை கேட்கின்றனர். பல்வேறு வாக்குறுதிகளை அள்ளி வீசுகின்றனர்.

ஜனநாயகத்தின் பிறப்பிடமென பிரிட்டனைக் குறிப்பிடுவார்கள். ஜனநாயகம் என்ற சொல்லுக்கான அர்த்தத்தை அந்த நாட்டிடம் இருந்து தான் ஏனைய நாடுகள் புரிந்து கொண்டன. பிரிட்டனில் இன்றளவும் தேர்தல்கள் நேர்மையாகவும், நியாயமாகவும் இடம் பெற்று வருவதைக் காணமுடிகின்றது. அமெரிக்காவிலும் ஜனநாயகத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் தேர்தல்கள் நேர்மையாக இடம்பெற்றுவருகின்றன. எதிர்வரும் நவம்பர் மாதம் அங்கு புதிய ஜனாதிபதி ஒருவரைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் இடம்பெறவுள்ளது. தற்போது கட்சி அடிப்படையில் வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்கான் தேர்தல்கள் இடம்பெற்று வருகின்றன. இதில் வெற்றி பெறுபவர்களே நவம்பர்மாதம் இடம்பெறப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியும்.

அமெரிக்காவில் ஜனநாயகம் தழைத்தோங்கி நிற்பதை இது எடுத்துக் காட்டுகின்றது. இதைவிட கறுப்பினத்தவர் என்ற முத்திரை பதித்துள்ள பராக் ஒபாமா பெரும்பான்மையின வெள்ளை இனத்தவர்களால் இரண்டு தடவைகள் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதும், அமெரிக்க ஜனநாயகத்துக்குக் கிடைத்த வெற்றியாகும்.

இந்தியாவை உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடு என்று கூறுவார்கள். அந்த நாட்டின் மக்கள் தொகை உலகில் இரண்டாவது இடத்தை வகிப்பதால் மிகப் பெரிய ஜனநாயக நாடென்ற அந்தஸ்து அதற்குக் கிடைத்துள்ளது. ஆனால் அங்கு தேர்தல்கள் அரசியல்வாதிகளால் பிழையான வழிகளில் திசைதிருப்பப் படுவதையே காண முடிகின்றது. இந்தியர்கள் என்பதற்கு அப்பால் சாதியும், மதமும் அங்குள்ள மக்களை வேறுபடுத்தி நிற்கின்றன. மேலும் தேர்தல்கள் இடம்பெறும் போது இந்தச் சாதி, மதம் என்பவை பிரதான இடத்தை வகிப்பதையும் காண முடிகின்றது. வேட்பாளர்களின் தெரிவிலும் இந்த இரண்டினதும் ஆதிக்கம் தலைதூக்கிக் காணப்படுகின்றது. மேலும் தேர்தல் காலங்களில் வாக்காளர்களுக்குப் பணம் உட்பட வேறு அன்பளிப்புக்களும் வழங்கப்படுகின்றன. அண்மையில் இடம்பெற்ற தமிழ்நாடு சட்டசபைக்கான தேர்தல்களின்போது பணமும், அன்பளிப்புப் பொருள்களும் முக்கிய இடத்தை வகித்ததை அவதானிக்க முடிந்தது. உண்மையில் வாக்காளர்கள் சுதந்திரமாக வாக்களிக்கமுடியாத நிலையொன்று உருவாக்கப்படுவது ஜனநாயகத்தைக் கொலை செய்வதற்கு ஒப்பானது.

> எமது நாட்டில் இன வாதம் பேசி தேர்தல்களில் வாக்குகளைச் சேகரிப்பது வழமையாகிவிட்டது. இதுவே இனங்களுக்கிடையில் பிளவை ஏற்படுத்துவதற்கும் காரணமாக அமைந்துவிட்டது.

எமது நாட்டில் இனவாதம் பேசி தேர்தல்களில் வாக்குகளைச் சேகரிப்பது வழமையாகிவிட்டது. இதுவே இனங்களுக்கிடையில் பிளவை ஏற்படுத்துவதற்கும் காரணமாக அமைந்துவிட்டது. இலங்கையின் அரசமைப்பின் பிரகாரம் தமிழர் ஒருவர் ஜனாதிபதியாக வரவே முடியாது. பிரதமர் பதவியிலும் தமிழர் ஒருவர் இதுவரை அமர்ந்ததில்லை. இலங்கை ஒரு ஜனநாயகப் பாதையில் செல்லவில்லை என்பதற்கு இவை உதாரணங்களாக விளங்குகின்றன. மேலும் தேர்தல் காலங்களில் தேவையற்ற மோதல்களை உருவாக்கி, அவற்றின் மூலமாக வாக்காளர்களைப் பதற்றமடையச் செய்து வாக்களிக்க விடாமல் தடுக்கும் நடவடிக்கைகளும் இங்கு இடம்பெறுவதைக் காண முடிகின்றது. ஒருவரின் வாக்கை வேறொருவர் கள்ளமாக இடுவதும், போலியான வாக்குச் சீட்டுக்களை தேர்தல் அதிகாரிகளின் உதவியுடன் பெட்டிக்குள் திணிப்பதும் இங்கு இயல்பாகவே இடம்பெறுகின்றன. தேர்தல்களில் மோசடிகள் இடம்பெற்று மோசடி அரசியல்வாதிகள் பதவிக்கு வரும்போது, நாடு மோசமான படுகுழிக்குள் தள்ளி வீழ்த்தப்படுகின்றது என்பதை நாம் மறந்து விடக்கூடாது. பிழையான அரசியல்வாதிகள் பதவியில் அமர்ந்ததன்-காரணமாக இன்று இந்த நாடும் மக்களும் பேரவலங்களை எதிர்கொண்டு வருவதை அனைவருமே அறிவார்கள்.

ஆகவே ஜனநாயகநாடொன்றில் தேர்தல்கள் நேர்மையாகவும், நியாயமாகவும் இடம்பெறவேண்டும். மக்கள் எந்தவிதமான நெருக்குதல்களும் ஆளாகாமல், பதட்டமுமின்றித் தமது வாக்குகளைச் செலுத்துவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். இதில் இனம், மதம், சாதி ஆகிய வேறுபாடுகள் காண்பிக்கப்படக் கூடாது. நாட்டை ஆளுகின்ற தலைவர்கள் தகுதியடிப்படையில் தேர்தல்களில் தெரிவு செய்யப்படும் போதுதான் நாடு வளம் பெறும். மக்களும் நிம்மதியாக வாழ முடியும். ■



# குடாநாட்டின் வன்முறைகளும் பொலிஸாரின் செயற்பாடும்

ந.லோகதயாளன்

போர்க் காலத்தில் மக்களின் வாழ்விடங்களில் படையினர் நெருங்கி இருந்தமையால் படையினர் மூலம் குழப்பம் விளைவிக்க முற்பட்டமைபோன்று தற்போது பொலிஸார் மூலம் குழப்பம் விளைவிக்க முயல்கின்றனரா? என்ற ஏக்கம் குடாநாட்டு மக்களை அச்சம் கொள்ளவைக்கின்றது.

யாழ்.குடாநாட்டில் இடம்பெறும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்குப் பல தரபினரும் பல இடங்களிலும் கூடி இது தொடர்பில் ஆராய்ந்து கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளனர்.

இவ்வாறு இடம்பெறும் கலந்துரையாடல்களில் சட்டத்தைக்காக்கும் பொலிஸாரின் உயர் அதிகாரிகள் உள்ளிட்ட மாவட்டத்தின் மூத்த அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டு ஆக்கபூர்வமான கருத்துக்களைத் தெரிவிப்பது மட்டுமன்றி பல முக்கிய புலனாய்வுத் தகவல்களைக் கூட வெளியிடுகின்றனர்.

**குற்றச் செயல்களுக்குப் பொறுப்பு யார்?**

குறிப்பாக குடாநாட்டில் இடம்பெறும் குற்றச் செயல்களை ஆரம்பித்து வைத்தவர்கள் யார்? இவர்களால் யார் யார் இயக்கப்பட்டனர் என்பதோடு தற்போது இடம்பெறும் குற்றச் செயல்களில் நேரடியாகச் செயற்படும் சிறு இளைஞர்கள் மட்டுமே கைது செய்யப்படுகின்றனர். ஆனால் இவர்களை இயக்கியவர்கள் என்ற சந்தேகத்தின் பெயரில் குடாநாட்டின் ஒரு பொலிஸ் நிலையத்தின் பெயரைக் குறிப்பிட்டு அந்த நிலையத்தின் மூன்று பொலிஸார் கொழும்பில் இருந்து வருகைதந்த விசேட பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் எனக் கூறப்படுகின்றது என வட மாகாணத்தின் மூத்த அதிகாரியும் ஓர் அரசியல்வாதியும் சுட்டிக் காட்டிய போது வட மாகாண ஆளுநர் மற்றும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

அவர்கள் இக் கூற்றினைத் ஆமோதித்தே அமர்ந்திருந்தனர் என்பதே இங்கு சுட்டிக்காட்டத்தக்க விடயமாகும். இது குடாநாட்டின் அச்சத்திற்குரிய விடயமாகவும் கொள்ளப்படுகின்றது. அதாவது யுத்த காலத்திலும் அதன் பிற்பாடும், மகிந்தவின் ஆட்சி நிறைவுக்காலம் வரைக்கும், குடாநாட்டின் இராணுவத் தளபதியாக இருந்த கத்துருசிங்க குடாநாட்டில் பல வன்முறைக்கும்பல்களுக்கு ஊக்கமளித்து செயல்படுத்தினார் என்பது உலகறிந்த விடயம். இந்தக் கூற்றும் வட மாகாண ஆளுநர் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது நேரடியாகவே சுட்டிக்காட்டப்பட்டது.



இதில் கூறப்பட்டமை போன்று குடாநாட்டின் வன்முறையுடன் தொடர்புபட்ட பொலிஸார் மூன்று பேர் கைது செய்யப்பட்டனர் என்பதிலிருந்து குடாநாட்டின் பாதுகாப்பைக் கேள்விக் குறியாக்குவதில் தென்னிலங்கை அரசியல்வாதிகள் தற்போதும் நேரடியாகவே தலையிடுகின்றனர் என்ற ஆபத்தின் வெளிப்பாடாகவே மூத்த அரசியல்வாதிகள் முதல் கல்விமான்களின் ஏக்கமும் தென்பட்டது.

குறித்த கலந்துரையாடலில் குடாநாட்டின் வன்முறைகளில் போதைப்பொருள் மற்றும் மதுபானம் முக்கிய இடங்களை வகிப்பதனால் இவைதொடர்பில் முக்கிய கவனம் செலுத்துமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டதுடன் குடாநாட்டில் கடந்த காலங்களில் பல தரப்பட்ட போதைப் பொருள் கைப்பற்றப்பட்டபோதிலும் அதனை இயக்குபவர்கள் எவருமே கைது செய்யப்படாதமையும் பலத்த சந்தேகத்தை ஏற்படுத்துவதாகவும் சுட்டிக்காட்டப் பட்டது.

போதைப் பொருள் தொடர்பில் விசாரணை குடாநாட்டில் உலாவரும் போதைப்பொருள் தொடர்பில் சரியாக விசாரணைகள் இடம்பெறுமாயின் அவை மாளிகாவத்தையில் சென்று நிறைவுபெறும் என்றும், குடா நாட்டில் உள்ள மதுபானசாலைகள் மற்றும் பாடசாலைகளின் எண்ணிக்கையை அண்மையில் ஒரு பத்திரிகையில் ஓர் செய்தியாளர் பிரசுரித்திருந்தமை தொடர்பிலும் பிரஸ்தாபிக்கப்பட்டது.

> குடாநாட்டின் வன்முறைகளில் போதைப் பொருள் மற்றும் மதுபானம் முக்கிய இடங்களை வகிப்பதனால் இவைதொடர்பில் முக்கிய கவனம் செலுத்துமாறு கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

குறித்தளவு எண்ணிக்கையான 217 மதுபான விற்பனை நிலையங்கள் என்பது குடாநாட்டின் மக்கள் தொகையில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும். அதனால் உள்ளூர் உற்பத்தியான கள் விற்பனை நிலையங்கள் தவிர்ந்து மதுபானசாலைகள் மற்றும் ரெஸ்ரோரண்ட் தொடர்பில் மீள் பரிசீலனை மேற்கொள்ள வேண்டும் என்ற பலமான கோரிக்கை எழுந்தது.

இக் கோரிக்கையின் முக்கியத்தை அனைவரும் ஏற்றுக்கொண்டதுடன், இது தொடர்பில் விரைவில் தனியான சந்திப்பின் மூலம் ஆராய்ந்து பொருத்தமான ஏற்பாடுகளை மேற்கொள்வதுஎன்றபரிந்துரைக்கு வந்தனர். குறிப்பாக நகரின் மத்தியில் அதிகரித்த மதுபானசாலைகளையும் மக்கள் நெருங்கி வாழும் குடியிருப்பின் நடுவே உள்ள மதுபானசாலைகளினால் நிகழும் அசௌகரியங்களையும் பலரும் பட்டியலிட்டனர்.

**ஆளுநரின் ஏற்பாட்டில் கலந்துரையாடல்**

இவ்வாறு ஆளுநரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற கலந்துரையாடலுக்கு வடமாகாண சபையின் யாழ்.மாவட்ட அனைத்து உறுப்பினர்களுக்கும் அறிவித்தல் விடப்பட்ட போதிலும் மூவர் மட்டுமே கலந்து கொண்டனர். ஏனையோர் கலந்துகொள்ளவில்லை. அத்துடன் இவ் விடயம் தொடர்பில் மாற்று ஏற்பாடுகள் முன்கூட்டியே ஆரம்பிக்கப் பட்டுள்ளமையினால் இரண்டாவது ஏற்பாட்டில் கலந்துகொள்வில்லையென வட மாகாண அமைச்சரவை முடிவெடுத்துள்ளதாக வடமாகாணமுதலமைச்சர் ஆளுநருக்கு எழுத்தில் பதில் அளித்து அக்கலந்துரையாடலில் பங்குபற்றுவதில் இருந்து தவிர்த்திருந்தார்.

இவ்வாறு முதலமைச்சரினால் ஆளுநருக்கு அனுப்பப்பட்டிருந்த கடிதம் மேற்படி கலந்துரையாடலில் ஆளுநரால் வாசிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை யாழ்.மறைமாவட்ட ஆயர் தலைமையில் கொழும்புக்குச் சென்று நீதியமைச்சரைச் சந்தித்து குடாநாட்டு வன்முறையை கட்டுப்படுத்துவது தொடர்பில் ஆராய்ந்து அது தொடர்பில் யாழ் ஆயர் இல்லத்தில் ஓர் கலந்துரையாடல் இடம் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

எவ்வளவுதான் எத்தனைபேர் எங்கு எல்லாம் கூடி ஆராய்கின்றபோதும் குடாநாட்டின் வன்முறைகள் மட்டும் இன்னமும் கட்டுக்குள் வந்தபாடாக இல்லை.

## தமிழனுக்குச் சாவு இல்லை

மகாகவி பாரதியார் தமது புரட்சிகரமான கவிதைகளால் இளைஞர்களைத் தட்டி எழுப்பினார். அவரும் அன்று ஓர் இளைஞரே! சாவு என்பது சிலருக்குப் பயத்தை ஏற்படுத்துகின்றது. வீரம் நிறைந்த சாவுகள் பயத்தை ஏற்படுத்துவது இல்லை. பாரதியாரும் அப்படியே. சாவு அவரை நெருங்கும் போது அடிக்கடி எழுந்து நிற்பதும் பிறகு படுப்பதுமாக இருந்தார். அவர் சாவுக்கு அஞ்சியவர் அல்லர். காலனுக்கு உரைத்தல் என்பது அவரின் கவிதையில் "காலா உனை நான் சிறு புல்லென மிதிக்கிறேன், காலருகே வாடா, சற்றே உனை மிதிக்கிறேன்" என வீரத்தோடும் துணிவோடும் பாடியிருந்தார். அவர் இறக்கும் போது 39 வயது. உலக இளைஞர்களின் மனதில் வீரத்தையும் ஈரத்தையும் வளர்த்த அவரது இறுதிச் சடங்கில் இருபதுக்கும் குறைவானவர்களே பங்கு கொண்டார்கள்.

இன்று நம்மவரின் இறுதிச் சடங்கில் எத்தனையோ பேர் கலந்து கொள்கின்றனர். இறுதிச் சடங்கு என்பது திருமணமா? ஆடம்பரமாக உடைகள், நகைகள். ஏன் இந்த ஆர்ப்பாட்டம்? துக்க நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும்போது அமைதியாக எமது சோகங்களை நாம் பகிர்ந்து கொள்ள வேண்டும். இறந்தவர் சாதனை படைத்தாரா? இல்லை இளைஞர்களுக்கு வழிகாட்டியாக இருந்தாரா? இல்லை. பாரதியார் போல் வீரகவிதை எழுதினரா? சும்மா புகழ்வதும் அவர் நல்லவர் என்று பொய் சொல்வதும் என்ன வேடிக்கை.

மீண்டும் பாரதியாருக்கே வருகிறேன். சாவுக்குப் பின்பு 90 ஆண்டுகள் ஆன பின்பும் அவரது பாடல்கள் இளமையோடும் புதுப்பொலிவோடும் புரட்சிகரமான சிந்தனையோடும் விளங்குகின்றன. இன்னும் பல்லாயிரம் ஆண்டுகள் மட்டுமல்ல, உலகம் உள்ள வரை வாழும். இந்தப் புரட்சித் தமிழனின் புகழ் சாதனையுடன் நீண்டு செல்லும்.

அன்பரசன்
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி


## யானைகளை இப்படியும் விரட்டலாம்

யானைகளால் ஏற்படுகின்ற பாதிப்புப் பற்றி பத்திரிகைகளில் பலமுறை செய்திகள் வந்திருக்கின்றன. இந்தப் பாதிப்புக்கள் அனேகமாக வன்னி, கிழக்கு மாகாண படுவான்கரைப் பகுதி உட்பட தென்மாகாணங்களிலும் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் காட்டு யானைகளை அழிக்க முடியாது. மின்சார வேலிகளால் யானைகள் இறந்தமை பற்றியும் பத்திரிகைகளின் மூலம் அறிய முடிந்தது. இதுவொரு ஏற்றுக் கொள்ளத்தக்க நடவடிக்கையல்ல. முதலில் யானைகள் அதிகமாக வாழும் காடுகள் மனிதர்களால் அழிக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும்.

மேலும் யானைகளைப் பயமுறுத்தி திரும்பிஓட்டம்எடுக்கவைக்கச்சிறந்தவழி ஒன்று உண்டு. அதனை வெற்றிகரமாகச் செய்ததாக வன்னேரிகுளப்பகுதியில் விவசாயம் செய்த ஒருவர் தெரிவித்தார். வனவிலங்கு பகுதியினருக்கு அறிவித்தால் அவர்கள் உடன்வருவது கஷ்டம், அவர்களும் வன இலாகாவினால் வழங்கப்படும் பெரிய வெடிகளைக் கொடுப்பார்கள். இந்தவெடிகளை விட கூடிய பயனைத் தரக்கூடியது தீயுடன் (தீப்பொறி) சீறி பலதரம் பாயும், (ஏவுகணை போன்ற) மிகப்பெரிய சீறுவாணம் ஆகும். தைப்பொங்கல் காலங்களிலும், வாணவேடிக்கைக் காலங்களிலும் செலுத்தும் ஈக்கில், ஊர் ஆகாசம் போன்றவற்றை. யானைகளைக் குறிவைத்துச் செலுத்தினால் இவற்றைக் கண்டதும் யானைகள் திரும்பி ஓடிவிடுமாம். இவற்றை வெடிகள் உற்பத்தி செய்யும் பகுதிகளில் பெற்றுக் கொள்ளலாம் இவ்வாணத்தை செலுத்துபவர்கள் மிகவும் பாதுகாப்பான பெரிய மரங்களில் மேல் காவல் இருக்க வேண்டும். யானைகள் அனேகமாக வரும் வழிகளில் கரிய நிறக் கயிற்றை அந்த வழிக்குக்குறுக்கே கட்டி ஒரு கண்டாமணியுடன் இணைத்தால் யானை கிட்டத்தட்ட அரைமைல் தூரத்தில் அந்தக் கயிற்றில் இடறுப்படும்போது அது வருவது பற்றி அறிந்து பாதுகாப்பு நடவடிக்கையை உடன் எடுக்கலாம். அத்துடன் அவற்றை விரட்டியும் விடலாம்.

மகேந்திரன்
சுன்னாகம்





> வரலாற்றுப் புகழ்மிக்க கண்ணகை அம்மனின் அற்புதங்களை எடுத்துக் காட்டிய அந்தப் புனிதமான அதிசயமான அற்புதம் நிறைந்த பனிச்சை மரம் ஆலயத்தின் தெற்குப் பக்கத்தில் கம்பீரமாகக் காட்சியளித்துக் கொண்டிருந்தது. இது சம்பந்தமான உண்மைகளை மறைக்க முடியாது.

# வற்றாப்பளை கண்ணகை அம்மனும் பனிச்சை மரமும்

க.சண்முகலிங்கம்

கடந்த மாதம் 8 ஆம் திகதி உதயன் பத்திரிகையில் 7 ஆம் பக்கத்தில் பிரசுரமான வற்றாப்பளை பனிச்சைமரப் பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு என்ற தலைப்பிலான அந்தச் செய்தி தொடர்பாக ஆலயத்தின் பனிச்சை மரத்துக்கு நடந்த கதி சம்பந்தமான உண்மைகளைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

குறிப்பிட்ட செய்தியின் பிரகாரம் வற்றாப்பளை கண்ணகை அம்மன் பொங்கலுக்காக சிலாவத்தை கடலிலேயே தீர்த்தம் எடுப்பது வழமையான ஒன்று. குறிப்பிட்ட தீர்த்தக் குடம் சிலாவத்தையில் இருந்து கால்நடையாக மேளவாத்தியங்கள் இசைக்க தீப் பந்தங்கள் பிடித்துப் பெரிய வரவேற்பாக முள்ளியவளை காட்டாவிநாயகர் ஆலயத்துக்குக் கொண்டு வரப்பட்டு அன்றைய தினம் வற்றாப்பளையில் இருந்து எடுத்து வரப்பட்ட கண்ணகை அம்மனை காட்டா விநாயகர் ஆலயத்தில் உள்ள அம்மன் மண்டபத்தில் வைத்து அந்த உப்பு நீரில் விளக்கேற்றி அந்த வாரத்தின் இறுதி நாளான திங்கள் வற்றாப்பளையில் கண்ணகி அம்மனுக்கு குறிப்பிட்ட மிகுதி உப்பு நீரில் விளக்கேற்றிப் பொங்கல் நடைபெறும் அதிசயம் நடைபெறும். இது பல நூறு வருடங்களாக நடைபெற்று வரும் ஓர் அற்புதமாகும்.

குறிப்பிட்ட இந்தத் தீர்த்தாக் குடம் சிலாவத்தையில் இருந்து முள்ளியவளைக்கு வரும் பாதையில் பல இடங்களில் ஓய்வெடுத்தே வருவார்கள். அந்த வகையில் முள்ளியவளை - முல்லைத்தீவு வீதியில் வற்றாப்பளைச் சந்தியில் 3 ஆம் கட்டையில் ஒரு பனிச்சைமரத்தடியிலும் இளைப்பாறுவதும் ஒரு வழக்கமாகி விட்டது. இந்தப் பனிச்சை மரமானது வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமானது, ஒரு சாதாரண மரம். இந்தப் பனிச்சை மரத்தின் கிளைகள் கடந்த வருடம் வெட்டப்பட்டபோது ஆலய நிர்வாகிகள் சட்ட நடவடிக்கைகளில் இறங்கினர் எனவும், அந்தச் செய்தி கூறுகின்றது. குறிப்பிட்ட இந்தப் பனிச்சை மரம் ஒரு புதுமையானதோ, புனிதமானதோ, ஆலய வரலாற்றுடன் சம்பந்தப்பட்டதோ அல்ல. சாதாரணமாக இளைப்பாறும் ஓர் இடம்.

வற்றாப்பளை ஆலய வரலாற்றை அதன் அற்புதங்களைப் பறைசாற்றிக் கொண்டிருக்கும். ஆலயத்தின் தெற்குப் பக்கத்தில் நின்ற பெரிய பனிச்சை மரம் சம்பந்தமான தகவலை அதன் உண்மையை வாசகர்கள் அறிய வேண்டும் என்பதே இந்தச் செய்திக் கட்டுரையின் நோக்கம்.

இலங்கையை ஆங்கிலேயர்கள் ஆண்ட காலமது. கண்ணகை அம்மனின் அற்புதங்களில் அங்கே தெற்குப் பக்கமாக நின்ற பனிச்சை மரம் ஒன்றின் வரலாறும் குறிப்பிடக் கூடிய ஒன்றாக விளங்குகின்றது. இலங்கையை ஆண்ட ஆங்கிலேயர்கள் காலமது. அப்போது முல்லைத் தீவின் தலைவராக இருந்த நெவில் என்பவன் இந்த ஆலயத்துக்கு தனது படைகளுடன் வந்து பூசாரியைப் பார்த்து உங்கள் அம்மனின் அற்புதத்தை எனக்குக் காட்ட வேண்டும். தவறின் கடும் தண்டனை தருவேன் எனக் கட்டளையிட்டான். இதனைக் கேட்டுப் பயந்து நடு நடுங்கிய அந்தப் பூசாரி அம்மனை வேண்ட குறிப்பிட்ட பனிச்சை மரம் ஆடி தனது காய்களால் குறிப்பிட்ட பறங்கித் துரையையும் அவனது பரிவாரங்களையும் ஓட ஓடத் துரத்தித் துரத்தி எறிந்து கலைத்தது. இப்போதும் நந்திக்கடல் வெளியில் குதிரை பாய்ந்த பள்ளம் என்று ஓர் இடம் காணப்படுகின்றது. அது மட்டுமல்ல குறிப்பிட்ட பனிச்சை மரம் அதன் பின் காய்க்கவில்லை என்பதையும் மக்கள் கண்கூடாக அவதானிக்கின்றார்கள்.

ஆனால் இப்பேர்ப்பட்ட வரலாற்றுப் புகழ் மிக்க கண்ணகை அம்மனின் அற்புதங்களைப் பறைசாற்றிக்கொண்டிருந்த அந்தப் புனிதமான பனிச்சை மரம் ஆலயத்தில் தலவிருட்சமாகக் கருதப்பட்ட அந்த மரம் இன்று எங்கே? 1978 ஆம் ஆண்டளவில் தாமோதரம் பிள்ளை குமாரையா தலைவராக இருந்த காலகட்டத்தில் அந்தப் பழைமையும் புதுமையும் வாய்ந்த புனிதமான பனிச்சைமரம் வேரோடு அகற்றப்பட்டு விட்டது. இது ஒரு கவலைக்குரிய துர்ப்பாக்கியமான ஒரு சம்பவம். ஆனால் இது இவ்வாறு இருக்க அன்று மௌனமாக இருந்தவர்கள் இன்று வீதியில் உள்ள பனிச்சை மரத்துக்காக வாதாடுவது எந்த வகையில் நியாயமாகும்? இது மட்டுமல்ல குறிப்பிட்ட அந்தப் புனிதமான பனிச்சைமரம் சம்பந்தமாக அதன் அற்புதங்கள் கண்ணகை அம்மன் மலரிலும் கட்டுரையாக எழுதப்பட்டுள்ளது. ஆலயத்தில் உட்பக்கச் சுவர்களிலும் குறிப்பிட்ட பனிச்சை மரம் ஓவியமாகத் தீட்டப்பட்டு, பனிச்சங்காய்கள் பறங்கித் துரையை ஓடஓட விரட்டும் காட்சியும் அவன் குதிரையில் ஓடும் காட்சியும் மிகவும் தத்ரூபமாகத் தீட்டப்பட்டிருந்தன.

இத்தனைக்கும் மேலாக 1978 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட கண்ணகை அம்பாள் கருணை மலரின் 97 ஆம் பக்கத்தில் அற்புதங்களும், அனுபவமும் என்ற தலைப்பில் குறிப்பிட்ட அந்தப் பனிச்சை மரத்தின் அற்புதங்கள் அதன் புதுமைகள் பற்றி ஒரு கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

மேலும், அதே மலரின் 105 ஆம் பக்கத்தில் பனிச்சையாடிய பாடல் சிந்து என்னும் தலைப்பில் சி.இராசசிங்கம் என்பவராலும் குறிப்பிட்ட அந்தப் பனிச்சைமரம் பற்றி அதன் அற்புதங்கள் பற்றி மிகவும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

இப்பேர்ப்பட்ட வரலாற்றுப் புகழ் மிக்க கண்ணகை அம்மனின் அற்புதங்களை எடுத்துக்காட்டிய அந்தப் புனிதமான - அதிசயமான - அற்புதம் நிறைந்த பனிச்சை மரம் ஆலயத்தின் தெற்குப் பக்கத்தில் கம்பீரமாகக் காட்சியளித்துக் கொண்டிருந்தது. இது சம்பந்தமான உண்மைகளை மறைக்க முடியாது. இந்தப் பனிச்சை மரம் நின்ற இடமும் இல்லாமல் அகற்றப்பட்டமையானது வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய நிர்வாகம் விட்ட வரலாற்றுத் தவறாகும். இப்பேர்ப்பட்ட ஒரு தவறை எவ்வாறு நியாயப்படுத்தப் போகின்றார்களோ தெரியாது.

> ஆலயத்தில் உட்பக்கச் சுவர்களிலும் குறிப்பிட்ட பனிச்சை மரம் ஓவியமாகத் தீட்டப்பட்டு, பனிச் சங்காய்கள் பறங்கித் துரையை ஓடஓட விரட்டும் காட்சியும் அவன் குதிரையில்ஓடும் காட்சியும் மிகவும் தத்ரூபமாகத் தீட்டப்பட்டிருந்தன.






# தமிழகம் தந்த பாடம்!

தமிழகத் தேர்தல் முடிவுகள் ஆச்சரியத்தைஏற்படுத்தியிருக்கின்றன. மாற்றம் வேண்டும் மாற்றம் வேண்டும் என்று குரல் எழுப்பியவர்களும் சமூக வலைதளங்களே; இனிமேல் எல்லாமும் என்று நம்பியவர்களும் இடிந்துபோய் அமர்ந்திருக்கிறார்கள். எதிர்பார்ப்புகள் எல்லாவற்றையும் சுக்குநூறாக்கிய ஆச்சரியமான முடிவு தமிழக மக்களிடம் இருந்து வெளிப்பட்டிருக்கிறது.

ஒரு வகையில், இலங்கையில் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலின் வடக்கு–கிழக்கு நிலையை ஞாபகப்படுத்துவதாகவும்கூட தமிழகத்தின் தேர்தல் முடிவு அமைந்துள்ளது. இதையடுத்து களம் வேறு சமூக வலைத் தளங்கள் வேறு என்று கருத்து இப்போது ஆழமாகப் பதிவாகி வருகின்றது.

### அ.தி.மு.கவின் பெரு வெற்றி

தனித்து 131 இடங்களைக் கைப்பற்றியதுடன் கூட்டணியாக134 இடங்களைத்தமதாக்கி அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் (அ.தி.மு.க.) தனிப் பெரும்பான்மையை வென்றிருக்கிறது. இந்தக் கூட்டணியில் கொங்கு இளைஞர் பேரவை, முக்குலத்தோர் புலிப்படை (நடிகர் கருணாஸின் கட்சி), மனித நேய ஜனநாயகக் கட்சி என்பன தலா ஓர் இடத்தை உள்வாங்கியிருக்கின்றன. திராவிடர் முன்னேற்றக் கழகக் (தி.மு.க.) கூட்டணி 98 இடங்களைக் கைப்பற்றி இருக்கிறது. அதில் 8 இடங்களைக் காங்கிரஸும் ஓர் இடத்தை முஸ்லிம்லீக்கும் தம் வசப்படுத்தியிருக்கின்றன. ஆறாவது தடவையாக செல்வி ஜெயலலிதா தமிழகத்தின் முதல்வராகப் பதவியேற்க உள்ளார். ஆறாவது தடவை முதல்வராகும் ஒரே தலைவர் என்கிற சாதனையுடன் நாளை மு.ப 11 மணிக்கு சென்னை பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் அவர் பதவியேற்பார். இதற்கு முன்னர் மு.கருணாநிதி 5 தடவைகள் முதல்வராக இருந்துள்ளார்.

> ஒரு வகையில், நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலின் வடக்கு-கிழக்கு நிலைமை ஞாபகப்படுத்துவதாக எம்கூட - தமிழகத்தின் தேர்தல் முடிவு அமைந்துள்ளது. இதையடுத்து களம் வேறு சமூக வலைத் தளங்கள் வேறு என்ற கருத்து இப்போது ஆழமாகப் பதிவாகி வருகின்றது.





வாக்குகள் சிதறியமையே அ.தி.மு.க. வெற்றி பெறுவதற்கான வாய்ப்பாகிவிட்டது என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தெரிவித்திருக்கிறார். தேர்தலுக்குப் பின்னர் விடுத்த அறிக்கையில், அவர் இதனைத் தெரிவித்திருந்தார். அதில் உண்மை உண்டு. இந்த முறை தேர்தல் களத்தில் அதிமுக எதிர்ப்பு அலை தீவிரமாக வீசினாலும்கூட, அந்தக் கட்சி மீண்டும் ஆட்சியைப் பிடித்திருப்பதற்கு களத்தில் காணப்பட்ட பல முனைப் போட்டியும் நிச்சயம் காரணம்.

1984ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஆட்சியில் இருந்த ஒரு அரசே மீண்டும் ஆட்சிக்கு வந்திருப்பது இதுவே முதற்தடவை. இந்த இடைப்பட்ட காலத்தில் ஆளும் கட்சி அதிகார எதிர்ப்பலை அதனைக் கவிழ்த்து எதிர்க்கட்சியை ஆட்சிபீடம் ஏற வைப்பதே வழமையாக இருந்தது. இந்த முறை எல்லாமும் தலைகீழாகி, அ.தி.மு.க அரசுக்கு எதிரான அலையை எதிரணிகளால் அறுவடை செய்ய முடியாமல் போனமைக்கு அவை ஒன்றிணையாதமை முக்கிய காரணம்.

**6 முனைப் போட்டி**

வழக்கமாக தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. கூட்டணிகளுக்கு இடையே தான் போட்டி இருக்கும். இந்தக் கூட்டணிகளுக்குள் ஏனைய கட்சிகள் எல்லாமே அடங்கிவிடும். ஆனால், இந்தத் தேர்தலில் 6 முனைப் போட்டி இருந்தது. மக்கள் நலக்கூட்டணி – தேசிய முற்போக்குத் திராவிடர் கழகம் (தே.மு.தி.க.), தமிழ் மாநிலக் காங்கிரஸ் (த.மா.க.) ஆகியன இணைந்த மூன்றாவது கூட்டணி முதற்தடவையாகக் களம் குதித்தது. நான்காவதாக திரைப்பட இயக்குநர் சீமானின் நாம் தமிழர் கட்சியும் முக்கியமானதாக இருந்தது.

நீண்ட பாரம்பரியம்மிக்க இடதுசாரிகளும் வை.கோவின் மறுமலர்ச்சி திராவிடர் முன்னேற்றக் கழகமும் (ம.தி.மு.க.) இணைந்து மக்கள் நலக் கூட்டணியை உருவாக்கின. பின்னர் அதில் தே.மு.தி.கவும், தமாகவும் இணைந்துகொண்டன. இந்தக் கூட்டணி ஒரு எதிர்ப்பார்ப்பை ஏற்படுத்தியது. ஆனால் தேர்தலில் ஒரேயொரு ஆசனத்தைக்கூட அதனால் பெற முடியவில்லை.

இந்தக் கூட்டணியில் இடம்பெற்றிருந்த தே.மு.தி.க. 2011 தேர்தலில் 29 ஆசனங்களை வென்றிருந்தது. இப்போது அதன் தலைவர் விஜயகாந்த்கூட வெற்றி பெறவில்லை. கட்டுப் பணத்தை இழக்குமளவுக்குப் படுதோல்வி. இந்தக் கூட்டணியில் இடம்பெற்றிருந்த இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ் கட்சி (மார்க்சிஸ்ட்) மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (கம்யூனிஸ்ட்) என்பனவும் எந்த ஓர் இடத்தையும் வெல்லவில்லை. இந்திய சுதந்திரத்துக்குப் பின்னர் இடதுசாரிகள் இன்றி அமையும் முதலாவது தமிழக சட்டசபையாக 2016 சட்டசபை உருவெடுத்துள்ளது. இந்தக் கூட்டணியில் இடம்பெற்றிருந்த மற்றொரு கட்சி தொல் திருமாவளவனின் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி. கணிசமான தலித்துக்களைக் கொண்டுள்ள தமிழகத்தில் அந்தக் கட்சிக்குக்கூட ஒரு ஆசனமும் கிடைக்கவில்லை.

மக்கள் நலக் கூட்டணியுடன் தே.மு.தி.க. இணைந்தபோது, கப்டன் விஜயகாந்த் 'கிங்' நாங்கள் எல்லோரும் 'கிங் மேக்கேர்ஸ் என்று வர்ணித்தார் வை.கோ. இப்போது, தி.மு.க.வின் வாக்குகளைச் சிதறடித்து அ.தி.மு.கவின் வெற்றியைச் சாதகமாக்கியவர் என்ற ரீதியில் அவரைச் சமூக வலைத் தளங்களில் 'குயின் மேக் கர்' என்று வர்ணிக்க ஆரம்பித்துவிட்டார்கள். தோல்வி அவ்வளவு மூர்க்கமாகத் திருப்பித் தாக்கியிருக்கிறது.

**திராவிடக் கட்சிகளுக்கு மாற்று**

தமிழகத்தை மாறி மாறி ஆண்டு வந்த திராவிடக் கட்சிகளை அகற்றிவிட்டு ஊழலற்ற ஆட்சியை வழங்குவதற்காகவே மக்கள் நலக் கூட்டணி என்று பரப்புரை செய்யப்பட்டது. சந்தேகத்துக்கு இடமில்லாமல் இந்தக் கூட்டணி ஆட்சியைப் பிடிக்கும் என்று வை.கோ ஊடகங்களிடம் அடித்துக் கூறினார். ஒரு மாற்றம் தேவை என்பதே அவர்களது முதன்மை முழக்கமாக இருந்தது. புதுடில்லியில் ஆட்சியில் இருந்த காங்கிரஸ் கூட்டணிக்கு எதிராக மாற்றம் கோரிய அலை பாரதீய ஜனதாக் கட்சியை (பா.ஜ.க.) ஆட்சியில் அமர்த்தியமை, நடிகர் சங்கத்தில் மூத்த நிர்வாகிகளுக்கு எதிராக விஷால், கார்த்தி உள்ளிட்ட இளம் நடிகர்கள் மாற்றம் கோரிய அலையின் வெற்றி என்பவற்றால் இந்தக் கூட்டணியின் மாற்றம் என்ற முழக்கமும் கணிசமான கவனிப்பைப் பெற்றிருந்தது.



கூட்டணியில் தே.மு.தி.க. இணையும் வரைக்கும் இதுவொரு தன்நலமில்லா சமூக நீதிக்கான பொதுவுடமைக் கூட்டணி என்ற கணிப்பைப் பெற்றிருந்தது. இடதுசாரிகளுக்கு அப்பால் தலித்துக்களைப் பிரதிபலிக்கும் திருமாவளவனின் கட்சியும் கூட்டணியில் இடம்பெற்றிருந்தமை அதற்கு ஏதுவாக இருந்தது. இந்தக் கூட்டணி ஆட்சியைப் பிடிக்கா விட்டாலும் கணிசமான வெற்றியைப் பெற்று விட்டால் அதுவே மாற்றத்துக்கான அடிப்படையாக அமைந்துவிடும் என்று எதிர்பார்த்தவர்கள், நம்பியவர்கள் பலர் இருந்தனர்.

குறிப்பாகப் படித்தவர்கள், முற்போக்குச் சிந்தனை கொண்டவர்கள் மத்தியில் அந்த எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால் எல்லாவற்றையும் தவிடுபொடியாக்கி, மூனறாவது அணி என்ற முற்போக்குச் சிந்தனைக்கு தமிழகத்தில் இடமே இல்லையோ என்று எண்ணுமளவுக்கு படுதோல்வியை எதிர்கொண்டிருக்கிறது இந்த அணி.

**களம்வேறு வலைத்தளம்வேறு**

விஜயகாந்த் இந்தக் கூட்டணிக்குள் வரும் வரைக்கும் இது பெற்றிருந்த பரிணாமம், அதன் பின்னர் மாற்றமடைந்துவிட்டது. சமூக வலைத்தளங்களில் விஜயகாந்த் ஒரு கோமாளிக் கூத்தாடி ஆக்கப்பட்டார். முகப்புத்தகங்களில் மிமீஸ்கள் விஜயகாந்தையும் வைகோவையும் குறிவைத்து சரமாரியாகத் தாக்கின. சமூக வலைத் தளங்களில் இந்தக் கூட்டணி கடும் நக்கல்களையும் நையாண்டிகளையும் எதிர்கொண்டது போலவே ஆதரவு அலையையும் கொண்டிருந்தது. மாற்றத்தின் மீது நம்பிக்கை வைத்தவர்கள், முற்போக்காளர்கள், இடதுசாரி ஆதரவாளர்கள் தமது ஆதரவைத் தீவிரமாக வெளிப்படுத்தினர்.

ஆனாலும், சமூக வலைத் தளங்களின் தெறிப்பு களத்தைப் பாதிப்பதில்லை என்ற உண்மை மீண்டும் ஒருதடவை தமிழகத் தேர்தலிலும் உறுதிப்படுத்தப்பட்டது. இலங்கை நாடாளுமன்றத் தேர்தலின்போதும் இதுவே நடந்தது. சமூக வலைத் தளங்களில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினருக்காக அமோகமாகப் பரப்புரை இடம்பெற்றபோதும், களத்தில் அந்த முன்னணியால் கணிசமான வாக்குகளைக்கூடப் பெறமுடியாமல் போயிருந்தது. அதேபோல மக்கள் நலக்கூட்டணியாலும்கூட கணிசமான வாக்குகளைப் பெற முடியவில்லை. கடந்த ஆட்சியில் 29 ஆசனங்களை வைத்திருந்த தே.மு.தி.க. இந்தத் தடவை பாட்டாளி மக்கள் கட்சியைவிடவும் குறைவான வாக்குகளைப் பெற்று நான்காவது இடத்தையே பெற முடிந்தது.

**சீமானின் தோல்வி**

திராவிடக் கட்சிகளுக்கு மாற்று என்ற முழக்கத்துடனேயே களத்தில் நின்ற மற்றொரு அணி இயக்குநர் சீமானின் நாம் தமிழர் கட்சி. சீமானுக்கு ஆதரவாகவும், எதிராகவும் ஈழத் தமிழர்கள் பலரே முகப்புத்தகத்தில் குத்துச் சண்டை நடத்தும் அளவுக்கு அதனது ஆதரவு எதிர்ப்பு நிலமை சமூக வலைத் தளங்களில் தீவிரமாக இருந்தது. ஆனால் களத்தில் சீமானாலேயேகூட வெல்ல முடியவில்லை. அவரது கட்சி வெறும் ஒரு சதவீத வாக்குகளை மட்டுமே பெற்றது.

(39 ஆம் பக்கம் பார்க்க)



# அதிகாரிகளின் அசண்டையீனமே மண் சரிவு இழப்புக்குக் காரணம்

## கடுகண்ணாவை மக்கள் குமுறல்

இக்பால் அலி

கடுகண்ணாவையிலுள்ள இலுக்வத்த ரம்பலக்க மண் சரிவுச் சம்பவத்தில் ஆறு உயிர்கள் காவு கொள்ளப்பட்டது என்பது வேதனை அளிக்கிறது. மண் சரிவு அபாயம் குறித்துஉரிய அதிகாரிகளிடம் எவ்வளவுதான் இந்தப் பகுதி மக்கள் எடுத்துக் கூறி யும் எவரும் கவனத்தில் எடுத்ததாகத் தெரியவில்லை எனக் கூறுகின்ற மனக்குமுறல்கள் பேரதிர்ச்சியை உண்டு பண்ணி உள்ளது. அதிகாரிகளின் அசமந்தப் போக்கும் கவனவீனமும் தான் இந்தக் கோர மண் சரிவுக்குரிய முக்கிய காரணம் என்ற எண்ணம் உயிர்களை பறிகொடுத்த இரு வீட்டுக் காரர்களான 59 வயதுடைய பதுர்தீன் மற்றும் ரம்ஸான் ஆகிய இருவருடைய கதையிலும் மற்றும் இப்பிரதேச மக் களின் மத்தியிலும் இத்தகைய எண்ணம் உருவாகி இருக்கிறது. இந்த நாடும் இந்த நாட்டின் அரச அதிகாரிகளும் எப்படிக் கடமைபுரிகின்றார்கள் என்கிற கேள்வியை இது பலமாக எழுப்புகிறது.

இந்தப் பகுதியில் மண் சரிவுக்கான ஆபத்து இருப்பதாகவும் இதற்கான முழு நடவடிக்கையும் எடுக்கப்பட வேண்டும் எனவும் தம் பிரதேச கிராம உத்தியோகத்தர் சகிதம் கோரிக்கை விடுத்திருந்தோம் என்கின்றனர் மக்கள். கல்லுடைக்கும் தளமொன்று ரிடிகல மலைப்பகுதியில் அமைந்துள்ளது. இதனால் மண்சரிவு ஏற்படுவதற்கான ஆபத்துக்கள் இருப்பதாக மக்கள் சுட்டிக்காட்டிய போதிலும் எந்தக் கவனமும் எடுக்காதிருந்தமை அரச அதிகாரிகளின் கவனவீனமாகும்.



இந்தச் சம்பவங்கள் குறித்து பாதிக்கப்பட்டவர்களுடைய உறவினர்கள் கருத்துக் கூறுகின்றனர்.

“நான் அப்போது தூங்கிக் கொண்டு இருந்தேன். மனைவி சொன்னார் ஏதோ சப்தம் கேட்கிறது என்று. நான் எழும்பிப் பார்த்தேன் ஏதோ சர சரவனச் சப்தம் கேட்டது. நான் வெளியே வந்தேன். வந்து பார்த்தால் மின்சாரம் ஒன்றுமில்லை. டோர்ச்சை எடுத்து வந்து அடித்துப் பார்த்தால் எங்கள் கூரைக்கு மேல் பெரிய மரம் ஒன்று விழுந்திருந்தது. நான் கூரையின் மேல் மரம் விழுந்திருக்கிறது . மூன்று பிள் ளைகளையும் உடனே வெளியே எடுங்கள் என்று கூறினேன். நாங்கள் பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு இரண்டு அடி வைக்கவில்லை. அப்படியே காலுக்கு அருகாமையால் மண் அப்படியே இடிந்து போகி றது. நான் உடனே பிள்ளையைத் தூக்கிக் கொண்டு காட்டுக்குள் பாய்ந் தேன். அடுத்த வீட்டுக்காரர்களிடம் சொல்வதற்கு எந்த அவகாசமும் கிடைக்கவில்லை. எந்த வழியும் இல்லை. ஒரு செக்கனுக்குள் பள்ளத் துக்கு போய் விட்டது. சொல்வதற்கு நேர அவகாசம் இருக்கவில்லை.

இதற்கு முன்னர் இப்படியான சம்பவம் நடந்து பார்த்தது இல்லை. கல்லுடைக்கும் ஆலையால் நிலச்சரிவு அபாயம் உள்ளது பற்றி நாங்கள் ஆராய்ச்சிக்கும், கிராம உத்தி யோகஸ்தருக்கு முறைப்பாடு தெரி வித்திருந்தோம். வந்தாங்க. வந்து பார்த்தார்கள். அதற்கு ஒரு பதில் தருவோம் என்று கூறினார்கள். ஆனால் இதுவரை எந்த நடவடிக் கையும் இல்லை. இந்தப் பகுதியை விட்டு வெளியே போங்கள் என்று கூறவும் இல்லை. இங்கே இருக்க முடியாது. மண்சரிவு ஏற்படக் கூடியவாறான அறிகுறிகள் இருக்கின்றன. இருக்க இயலாது என்று நாங்கள் சொன்னோம். ஆனால் அவர்கள் கவனிக்கவில்லை.

மேலே உள்ள கல் உடைக்கும் இடத் தில் ஒரு நாளைக்கு 150, 200 தடவைகள் மின்சாரத்தின் உதவியுடன் வெடிக்க வைக்கிறார்கள். எங்கள் வீடெல்லாம் பயங்கரமாக நடுங்கும். சும்மா கட கட வென நடுங்கும் இதை யாரிடம் கேட்டாலும் சொல்வார்கள். நாங்கள் எவ்வளவோ சொல்லிப் பார்த்தோம். இதைத் தடுப்பதற்கு யாருமே இல்லை. தமது அரசியல் செல்வாக்கை வைத்துக் கொண்டு ஏதோசெய்து கொண்டு இருக்கிறார் கள். இது எங்களுக்குத் தெரியாது.”



**உறவினர் கருத்து**

“நாங்கள் தூங்கியிருந்தோம். இரவு 12.00 மணி அளவில் ஒரு சப்தம் கேட்டது. நான் சொன்னேன் நானா வீட்டில் மரம் ஒன்று விழுந்துள்ளது என்று. நானா வீடும் தங்கச்சி வீடும் மண்ணுக்குள்ள புதையுண்டு போய்விட்டன என்று நானா சொன்னார்.

நான் போய்ப் பார்த்தேன். மணல் கெட்டின மாதிரி இரண்டு வீடுகளும் மூடுபட்டு இருந்தன. அரச அதிகாரியின் கவனவீனமே இந்த மண்சரிவுக்குக் காரணம். இனியும் இது போன்ற நிகழ்வு இடம் பெறாமல் இருக்க அரசு இதைக் கவனத்தில் எடுக்க வேண்டும். கடந்த காலத்தில் இப்பிரதேச மக்கள் விடுத்த கோரிக்கைக்கு எந்தவிதமான பதிலும் அளிக்காமையே இந்த இழப்புக்கு முக்கிய காரணம். எதிர் காலத்தில் அரசுகள் உயிர்களுக்கு அளிக்கும் மதிப்பு நல்ல முறையில் அமைய வேண்டும். இந்த மண் சரிவினால் அயலிலுள்ள 9 வீடுகளில் வெடிப்பு விழுந்துள்ளது. இப்போது அவர்கள் யாவரும் அப்புறப்படுத்தப் பட்டுள்ளார்கள்.

ரம்மலக்க தக்கியா பள்ளிவாசலுக்கு உட்பட்ட 75 வீடுகளும் உள்ளன. இந்த வீடுகளில் இருந்த அனைவரையும் பாதுகாப்புக் கருதி வெளியே செல்லுமாறு கோரப்பட்டுள் ளது. 360 பேர் அளவில் தற்போது சொந் தக்காரர்களின் வீடுகளில் அகதிகளா கத் தஞ்சம் அடைந்துள்ளார்கள்.”-என்கிறார்கள்.

இது வரை நான்கு பேரின் உடல்கள் மீட்கப்பட்டு கண்டி போதனா வைத்தியசாலைக்கு எடுத் துச் செல்லப்பட்டுள்ளன. இதில் 23 வயதுடைய ரஸ்மின் அமனா வங்கியில் பணிபுரிந்தவர்.

கொட்டும் அடை மழையிலும் இராணுவத்தினர் மற்றும் பிரதேச இளைஞர்கள் மண்சரிவில் சிக்கியவர்களை பெக்கோ இயந்திரத்தின் மூலம் தேடி வருகிறார்கள். மலையிலுள்ள செம்மண், நீராக அங்கே கரைந்து ஓடிப் படிந்து கிடக்கிறது.

இந்தச் சம்பவத்தில் சபீனாபேகம், சபீக், சிஹான், மும்தாஜ்பேகம், ரஸ்வீன், அம்ஜத் ஆகியோர் உயிரிழந்துள்ளனர். மத்திய மாகாண சபை உறுப்பினர்களான முத்தலிப் ஹாஜியார், ஹிதாயத் சத்தார், லாபீர் ஹாஜியார், ஆகியோர்கள் இந்தச் சம்பவத்தை நேரில் சென்று பார்வையிட்டதோடு சம்தப்பட்ட உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கையிலும் ஈடுபட்டார்கள். தற்போது கால நிலை சீராக உள்ளன.

# தமிழக தேர்தல் அலையில் சிக்கிய கச்சதீவு தேவாலயம்!

**ஸுடோ ஸ்வாமி**

கடந்த 9ஆம் திகதி புதிய ஆலயம் அமைப்பதற்கென கச்சதீவில் நடப்பட்ட அடிக்கல் சர்ச்சை யைத் தோற்றுவித்திருக்கிறது. அந்தச் சர்ச்சை கிளம்பியிருப்பது இங்கிருந்தல்ல, தமிழ்நாட்டுத் தரப்பிடமிருந்து. அதுவும் தேர்தல் நேரத்தில்.

பழைய ஆலயத்தினை அழிப்பதற்கும் புதிய ஆலயத்தினை அமைப்பதற்குமான முயற்சிகளை முறியடிக்குமாறு தேர்தல் வாக்குப்பதிவுக்கு முன்னதாக தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுதியுள்ள கடிதத்தில் கோரியிருந்தார். அத்துடன் புதிய ஆலயம் எழுப்புவதற்கு இலங்கை மேற்கொண்டுள்ள தீர்மானம் ஒருதலைப்பட்சமானது எனவும் தெரிவித்திருந்தார். கச்சதீவு விவகாரம் தொடர்பில் அறிக்கை ஒன்றினை விடுத்திருந்த தி.மு.க. தலைவர் கருணாநிதி, புதிய ஆலயம் கட்டுவதனை தவிர்த்து பழைய ஆலயத்தினை விரிவுபடுத்தி, வலுப்படுத்தி புதுப்பிக்க வலியுறுத்தியிருக்கிறார்.

ஆலயத்தினை நிறுவுவதற்கு இலங்கை எடுத்துள்ள முயற்சியை இந்திய மத்திய அரசு நிறுத்தாவிட்டால் தொடர்ச்சியான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடப்போவதாக தமிழ்நாட்டு மீனவ சங்கங்கள் தெரிவித்துள்ளதாக த இந்து இணையத்தளம் தெரிவித்திருக்கிறது. இதனைவிட இலங்கை கடற்படையினரின் தளம் ஒன்றும் கச்சதீவில் அமையப்போவதாகவும் செய்திகள் வெளிவந்திருந்தன.

கச்சதீவில் புதிய ஆலயம் ஒன்றினை இலங்கைக்கடற்படையின் உதவியுடன் நிறுவுவதற்கான அடிக்கல் நடும் வைபவம் கடந்த 9ஆம் திகதியன்று திங்கட்கிழமை இடம்பெற்றது. இதில் யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் வண. யோசப் தாஸ் ஜெபரட்ணம் அவர்களுடன் பங்குத்தந்தை வண. அன்ரனி ஜெயரஞ்சன், உதவிப் பங்குத்தந்தை வண. நிக்ஸன் கொலின் மற்றும் வடபிராந்திய கடற்படைப் பொறுப்பதிகாரி றியர் அட்மிரல் பியல் டீ சில்வா ஆகியோர் பங்கேற்றிருந்தனர். இவர்களுடன் படைத்தரப்பினை சேர்ந்த வேறு சில கட்டளையிடும் தரநிலை அதிகாரிகளும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இந்த ஆண்டு இடம்பெற்ற கச்சதீவு வருடாந்தத் திருவிழாவில் கலந்துகொண்டு திருப்பலி நிறைவேற்றிய யாழ். ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம், கச்சதீவில் புதிய ஆலயம் ஒன்றினை அமைப்பதற்குரிய தேவை இருப்பது தொடர்பில் குறிப்பிட்டிருந்தார். அத்துடன் அந்த செயற்றிட்டத்திற்கு இலங்கைக் கடற்படையின் உதவியையும் அவர் கோரியிருந்தார்.

இலங்கையையும் இந்தியாவையும் பிரிக்கும் பாக்குநீரிணையில் அமைந்திருக்கும் 1.1 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட கச்சதீவு, 1974ஆம் ஆண்டு ஒப்பந்தத்தினைத் தொடர்ந்து இலங்கைக்கு உரித்துடைய - இலங்கையின் ஆளுகைக்குரிய தீவென அறிவிக்கப்பட்டது. மனிதர்கள் வசிக்காத இந்தத் தீவில், சிமெந்தினால் கட்டப்பட்டு ஓட்டினால் வேயப்பட்ட சிறிய அந்தோனியார் ஆலயம் ஒன்று காணப்படுகிறது. இந்த ஆலயம் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தமிழ்நாட்டு இராமநாதபுரம் தொண்டியை சேர்ந்த சீனிகுப்பன் படையாச்சி என்பவரால் கட்டப்பட்டதாக அறியப்படுகிறது. இலங்கையின் நெடுந்தீவுக் கரையிலிருந்து 9 கி.மீ. தூரத்திலும் தமிழகத்தின் இராமேஸ்வரம் கரையிலிருந்து 17 கி.மீ. தூரத்திலும் அமைந்துள்ள இந்தத் தீவில் வருடாந்தம் கிறிஸ்தவர்களின் தவக்காலப் பகுதியின் 2ஆம் வாரமளவில் (மார்ச் மாதத்தில்), ஆயிரக்கணக்கான இலங்கை, இந்திய பக்தர்கள் மற்றும் சமய குரவர்களின் பங்குபற்றுதலுடன் புனித அந்தோனியார் ஆலயத்திருவிழா நடந்தேறுகிறது.

தொடர்ச்சியாக இரண்டு நாள்கள் நடைபெறும் இந்தத் திருவிழாவுக்கான ஏற்பாடுகளை யாழ். மாவட்டச் செயலகத்தினர், நெடுந்தீவுப் பங்குத்தந்தை ஆகியோர் மேற்கொள்கின்றனர். கடற்படையினரும் உதவுகின்றனர்.

கச்சதீவு வருடாந்தப் பெருவிழாவினை நடத்தி முடிப்பதில் இலங்கை கடற்படையினரின் உதவி தவிர்க்க முடியாதது. போக்குவரத்து, தற்காலிக சுகாதார ஏற்பாடுகள், மின்சாரம், குடிதண்ணீர் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளை அவர்களே கவனிப்பதுண்டு. இதனைவிட கடந்த சில வருடங்களாக வருகை தரும் பக்தர்களுக்கு உணவு வழங்குவதையும் கடற்படையினரே செய்கின்றனர்.

கடைசியாக நடந்து முடிந்த ஆலயத்திருவிழாவில் யாழ். ஆயர் முன்வைத்த கோரிக்கைக்கு இலங்கைக் கடற்படை தரப்பினர் செயலுருக்கொடுக்க முன்வந்திருந்தனர். அதன் விளைவாகவே இந்த அடிக்கல் நடும் நிகழ்வு இடம்பெற்றிருந்தது.

கச்சதீவில் கடற்படையினரின் தளம் ஒன்று நிறுவப்படுவது போன்ற தோற்றப்பாட்டில் வெளிவந்த செய்திகளை மறுத்துள்ள இலங்கைக் கடற்படை தரப்பு, குறித்த ஆலய கட்டடப் பணியில் தமது வகிபாகம் ஊதிப் பெருப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. இந்தியாவின் தி இந்துவிற்கு இலங்கைக் கடற்படையின் கட்டளையிடும் தர அதிகாரி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜயகுணரட்ன வழங்கிய செவ்வியில் கச்சதீவில் கடற்படைத் தளம் அமைப்பது பற்றிய தகவல்கள் அடிப்படையற்றவை எனத் தெரிவித்திருக்கிறார்.

கச்சதீவில் ஏற்கனவே காணப்படும் ஆலயம் அழிக்கப்படாது என்பதைத் தெளிவுபடுத்தியுள்ள அவர், அது ஒரு புராதன சின்னமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதனைவிட, புனித பாப்பரசர் இலங்கைக்கு வருகை தந்தபோது கொட்டகை அமைக்கப் பயன்படுத்திய உருக்கு இரும்புத் துண்டங்களே புதிய ஆலயம் அமைக்கப் பயன்படுத்தப்படவிருப்பதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார். இந்தியாவின் கோவாவை சேர்ந்த யோசப் வாஸ் அடிகளாருக்கு புனிதர் பட்டம் வழங்கும் சடங்குக்காக பாப்பரசர் இலங்கை வந்தபோது அவரின் ஆசீர்பெற்ற பொருள்களை கச்சதீவு ஆலய கட்டமைப்பில் பயன்படுத்துவது இருநாடுகளுக்கும் இடையிலான பிணைப்பினை ஊக்குவிக்கும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

கச்சதீவில் புதிய ஆலயத்துக்கு அடிக்கல் நட்டதைத் தொடர்ந்து தென்னிந்தியாவிலிருந்து வெளியாகியுள்ள விமர்சனங்கள் தொடர்பில் அதிகம் அலட்டிக்கொள்ளாது திட்டமிட்டபடி புதிய ஆலயம் அங்கு அமையும் என்று உறுதிப்படுத்தியிருக்கிறார் யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் யோசப்தாஸ் ஜெபரட்ணம் அடிகளார். புதிய ஆலயத்தைத் தவிர வேறு கட்டடங்கள் எதுவும் அங்கு அமைக்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளதுடன், அமைக்கப்படவுள்ள புதிய ஆலயம் 70 அடி நீளமும் 30 அடி அகலமும் கொண்டதாக விசாலமானதாக அமையும் எனவும் தெரிவித்திருக்கிறார்.

கச்சதீவினைப் பொறுத்தமட்டில் அது 1974இல் இலங்கையிடம் கையளிக்கப்பட்ட பிற்பாடு, தமிழக அரசியல்வாதிகள் அதனை இந்தியா மீண்டும் தனது ஆளுகைக்குள் கொண்டுவரவேண்டும் என்று அவ்வப்போது குரல் எழுப்பி வருவதுண்டு. அதனை இந்திய மத்திய அரசு கண்டுகொள்வதில்லை.

ஆனால் தமிழகத்தின் கொழும்பு எதிர்ப்பு அரசியலின் அடிநாதமாகக் கச்சதீவு விவகாரம் எப்போதும் ஒலித்துக்கொண்டே இருந்திருக்கிறது; இருக்கிறது. எனினும் இரு தரப்புப் பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் மத்தியில் இந்த அரசியல் எந்தவிதமான பிரச்சினைகளையும் எற்படுத்தியதில்லை.

புதிய ஆலயத்துக்கான அடிக்கல் நடும் வைபவம், எதிர்பாராத வகையில் தமிழகத் தேர்தல் சூடு பிடித்திருந்த நேரத்தில் இடம்பெற்றதால் வரவேற்பிற்கு முரணாக எதிர்ப்பை எதிர்கொண்டுள்ளது.

இப்போது இது சர்ச்சைக்குள்ளாகிவிட்ட பின்னர் தான்தோன்றித் தனமான கருத்துக்களால் அதனை மேலும் வலுப்படுத்தாமல், அதே நேரத்தில் அரசியல்வாதிகளின் சலசலப்புக்களை ஒதுக்கி, புதிய ஆலயக்கட்டடப் பணிகளின்போது தமிழகத்திலிருந்து திரண்டுவரும் பக்தர்களின் கோரிக்கைகளையும் பங்களிப்புகளையும் கவனத்தில் கொள்வது இரு தரப்பு பிணைப்பினையும் மேலும் நெருக்கப்படுத்தும்.



# அதற்கும் வெளியே ஒரு வாழ்க்கை

கந்தர்மடம் அஜந்தன்

சிறுகதை

**2009** இற்கு பின்பு மே 18 ஆம் திகதி நெருங்குகிறது என்றாலே கயல்விழியின் மனதில் ஒரு வகையான ஏக்கமும் பயமும் துக்கமும் போட்டிபோட்டு மனதைக் கனப்படுத்திக்கொள்ளும். கயல் விழி புன்னகைத்து கடந்த பல வருடங்களாக எவரும் பார்த்ததில்லை. அன்றும் மீதமிருந்த ஒரு குடும்ப ஒளிப்படத்தை வெறுத்துப் பார்த்தபடி இருந்தாள். அவளின் நினைவுகள் எங்கோ நிலை குத்தியிருந்தன. இருபது வயதில் திருமணம். இரண்டு குழந்தைகள், கணவன், தாய் தந்தையுடன் அவளது வாழ்வு விசுவமடுவில் ஐந்தாண்டு காலம் மகிழ்வாகத்தான் நகர்ந்தது. அளவான குடும்பமும், போதிய வருமானமும், வயலும் தென்னந் தோப்பும் வாழ்வைச் செழிக்க வைத்தன. போர் அங்குலம் அங்குலமாக அவர்களையும் நகர வைத்தது. வீட்டையும், வயலையும், தென்னந் தோப்பையும் விட்டகல மனமின்றி நகரமறுத்த தாய் தந்தையை “இனியும் இஞ்ச இருந்தால் எல்லாரும் செத்திடுவம். வீடு வாசல் போனால் போகட்டும் வாங்கோ போவம்” என்று வலுக் கட்டாயமாக இழுத்துக் கொண்டு வெளியேறிப்போனாள்.

பிள்ளைகளையும் சுமந்தபடி கையில் அகப்பட்டவற்றை எடுத்துக் கொண்டு உழவு இயந்திரத்தில் சுதந்திரத்தை இழந்தவர்களாய் சுதந்திரபுரத்துக்கு நகர்ந்தனர். இடையில் தேராவில் குளம் நிறைந்து பாதையில் வெள்ளம் பெருகியது. அந்த வெள்ளத்தோடு கண்ணீரும் கலந்து ஓடியது. தேக்கங்காட்டை ஊடறுத்துப் புதிய பாதை ஒன்றை ஏற்படுத்தி வாகனங்களோடு மக்களும் மிகநெருக்கமாக நகர்ந்தனர். எறும்புக் கூட்டமே ஒதுங்கி நின்று இந்தக் கூட்டத்தை வியந்து பார்த்தது. “அழாதையுங்கோ பிள்ளையள் நாங்கள் இருக்கிறம் தானே கடவுளும் எங்களைக் கைவிடமாட்டார் பயப்பிடாமல் வாங்கோ நல்ல பாதுகாப்பான இடத்தில போய் இருப்பம்” கயல் விழியின் தந்தை அழுதுகொண்டிருந்த தன் பேரப்பிள்ளைகளுக்கு ஆறுதல் கூறினார்.

சுதந்திரபுரம் சுமை தாங்கும் புரமானது. கிடைத்த கிடுகுகளைக் கொண்டு சிறு கொட்டிலமைத்தார்கள். அருகிலேயே பதுங்கு குழியும். பாதிநாள் கொட்டிலிலும் மீதிநேரம் பதுங்கு குழியிலுமாக வாழ்க்கை நகரத் தொடங்கியது. அறுவடையில் மீதமிருந்த நெல்லை அரிசியாக்கி வைத்திருந்தால் ஏதோ கஞ்சியாக்கியாவது பசி போக்க முடிந்தது. “நான் சொல்லச் சொல்ல ஒண்டையும் எடுக்காமல் வாங்கோ எண்டு கத்தினனீர். நல்லவேளை இந்தக் கொஞ்ச அரிசியையாவது எடுத்துக்கொண்டு வந்ததால சாப்பிட முடிஞ்சுது” என்றார் கயல் விழியின் கணவர் அமுதன். இருந்தும் எத்தனை நாள்கள்தான் அது போதுமானதாக இருக்கும்?

பிள்ளைகள் பசியால் வாடினர். வேறுவழியின்றி உழவு இயந்திரத்தை மூன்று தேங்காய்களுக்கு விற்று நிவாரணமாய்த் தந்த முக்கூட்டுமா செய்து பிள்ளைகளுக்கு ஊட்டிவிட்டாள். உயிருக்காக மட்டுமன்றி நடந்து செல்லவும் உடலில் சக்தியை சேமிக்க வேண்டுமே, அதனால் மீதமிருந்ததை நால்வரும் பகிர்ந்து கொண்டனர். சுதந்திரபுரம் மீதும் எறிகணை பொழியப்பட்டது. குருதிவெள்ளம் கால் நனைக்கையில் பாதங்கள் மீண்டும் நகர ஆரம்பித்தன. இருட்டுமடு, இரணைப்பாலை, வலைஞன் மடம் வரை உயிர் காக்கபட்ட பாடுகள் சொல்லி மாளாது.

வலைஞன் மடக் கடற்கரையை நிலவொளியை ரசிக்கப் போபவர்கள் எல்லாம் அன்று நிலவொளியை வெறுத்தனர். அந்த குறைந்த வெளிச்சத்தில்கூட முகம் தெரிந்தால் உயிர் தப்புவது கடினம். கண்முன்னே நிகழும் உயிரிழப்பும் காயங்களும் ஆரம்பத்தில் ஜீரணிக்க முடியாத ஒன்றாய் இருந்தது. பயத்திலும் விரக்தியிலும் தூக்கமின்றியே இரவுகள் கழிந்தன. மறுநாள் காலையில் தாம் உயிரோடு இருப்பதே பெரிய ஆறுதலைக் கொடுக்கும் உண்மை என்றாகிப் போனது வாழ்க்கை.

செத்தவர், எரிந்தவர், காணாமலே போனவர்கள் போக, மீதமிருந்த மக்கள் கூட்டத்தோடு கயல்விழியின் குடும்பமும் முள்ளிவாய்க்கால் நோக்கி நகர்கின்றது. ஆனால் மக்கள் கூட்டத்தில் அலைமோதிய கயல்விழியின் குடும்பம் இரண்டாகப் பிரிந்துபோனது. கயல்விழியோடு ஒரு பிள்ளையும், தாயும், தந்தையும் ஓர் இடத்திலும் சற்றுத் தொலைவில் அவளது கணவரும் மற்றைய பிள்ளையுமாக கூட்டத்தால் உந்தப்பட்டுக் கொண்டு செல்லப்பட்டுவிட்டார்கள். மீண்டும் சேர்வது அந்த நெரிசலில் சாத்தியமில்லாமல் போய்விட்டது.

எறிகணைகளின் நடுவே நகர்வது கடினம். நின்று நிதானித்து செல்வதே அவசியம். மதியத்தை அண்மித்த வேளை நகரும் மக்கள் கூட்டத்தின் மீதே சரமாரியாக எறிகணைகள் விழுந்து சிதறின. மனித உடல்களும் சிதறுண்டன. கயல் விழி கதறி அழுதாள். அவளது கணவனும் ஒரு பிள்ளையும் நகர்ந்து சென்ற இடத்தில்தான் இறுதியாக எறிகணை விழுந்தது. அவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை. கயல்விழி மூர்ச்சையுற்றாள். தாய் தந்தையும் நிலத்தில் புரண்டு அழுதனர். அவளது மகன் செய்வதறியாது அச்சத்தில் உறைந்துபோய் தாயினருகே படுத்து விட்டான். நிலமையை அறிந்த மற்றவர்கள் சத்தம் ஓய்ந்த பின் இவர்களை ஒரு மரநிழலில் அமர்த்தி நடந்த கொடுமையை உணர வைத்தனர். அவளது கணவரும் பிள்ளையும் உடல் சிதைந்து பலியாகிக் கிடந்ததைப் பார்த்து மீண்டும் மயக்கமுற்றாள். தாய் தந்தை இருவரும் உயிர்வாழும் ஆசை யற்றவர்களாய் நடைப்பிணமாய் எஞ்சிய பேரப்பிள்ளையை மார் போடணைத்து அழுது தீர்த்தனர். ஆயிரம் பிணங்களோடு கயல் விழியின் கணவர் பிள்ளையின் பிணமும் அவசரக் குழியிலிட்டு மூடப்பட்டது. நடைப்பிணமானவளை மக்கள் கூட்டமே நகர்த்திச் சென்று முள்ளிவாய்க்காலில் விட்டது.

குறுகிய நிலப்பரப்பில் குந்தியிருக்கக்கூட இடமின்றி மக்கள் குடிகொண்டு நிரம்பி வழிந்தது. உடலும் உள்ளமும் நன்கு வாடிப் போன பின்பு கயல்விழியின் தாயும் இறந்து விட்டார். கால ஓட்டத்தில் முகாம்கள் மெல்ல மெல்ல மூடப்பட்டு மக்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பினர். கயல்விழியும் வீடு திரும்பினாள். கணவனும் பிள்ளையும் தாயும் வாழ்ந்த வீட்டை மீண்டும் வந்தடைந்தபோது அவள் மீறி அழுகை வெடித்தது. ஆழமாய்ப் பதிந்துபோன அந்தச் சோகத்தில் இருந்து அவளை மீட்டெடுக்கும் வழி வகை தெரியாமல் அவளது தகப்பனார் தள்ளாத வயதிலும் இயங்கிக் கொண்டே இருக்கிறார். இந்த 7 ஆண்டுகள் தன் மீதோ, தன் பிள்ளை மீதோ, தந்தை மீதோ, வீட்டின் மீதோ பற்றற்றவளாய் அவளது வாழ்வு நகர்ந்துகொண்டிருக்கிறது. ஒவ்வொரு மே 18இலும் அவள் அழுது தீர்க்கிறாள். அழுதால் மனம் ஆறும் என்று சொல்வார்கள் ஊரில். ஆனால் அவள் மனம் இன்னமும் ஆறவில்லை. எஞ்சியிருக்கும் பிள்ளைக்காகக்கூட அவளால் தன்னையும் மனதையும் மீட்டுவர முடியவில்லை.

இந்த மே 18ம் அவ்வாறே! தனது வீட்டில் தன் கணவர் நட்டுவைத்த மாமர நிழலில் தன்னை மறந்த ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியிருந்தாள் கயல்விழி. அந்த மரத்தை அவ்ள் வெறும் மரமாகப் பார்ப்பதில்லை. காயங்களோடு நிற்கும் அந்த மரம் தன் கணவனின் நிழல் என்று நம்பினாள். “சாம்பு சாம்பு” என்று தன் தந்தையை யாரோ அழைப்பதை உணர்வதற்கு அவளுக்கு நீண்ட நேரமெடுத்தது. குரல் வந்த திசைநோக்கிப் பார்த்தாள். அங்கே தனது தந்தையின் நண்பர்

(27 ஆம் பக்கம் பார்க்க)





# நேரம் எமது கையில்!

இணையவள்

'நாளும் கிழமையும் நலிந்தோர்க்கில்லை ஞாயிற்றுக் கிழமையும் பெண் களுக்கில்லை!' என்கிறார்– கவிஞர் கந்தர்வன்.

எமது கையில் இருக்கும் பொருள், செல்வம், மனிதர்களைக் கூட நாம் நிர்வகிக்கக் கற்றுக்கொள்ளலாம். ஆனால், நேரத்தை நிர்வகித்து, அதை காப்பாற்றிக் கொள்வது என்பது மிகப் பெரிய கலை.

பொதுவாக, வாழ்க்கை அமைப்பே, அடுத்தவர்களுக்காகவே வாழ்வது என இருப்பதால், நேரத் திருட்டு, தவிர்க்க முடியாதது. ஒரு வகையில் தனக்காக வாழ்கிற மனோபாவத்திலிருந்து மாறுபட்டது இது. இதில் மகிழ்ச்சி, துக்கம் இரண்டுமே உண்டு. 'எனக்கானதைக் கொடு' என்னும் புத்தி இப்போது அதிகரித்து வருகிறது.

மிகவும் சந்தோசப்படக் கூடிய விடயம் அல்ல இது.

அலுவலகத்தைப் போலவே, வீட்டிலும் நேரத்தை ஒழுங்குபடுத்திக் கொள்பவர்கள்,பெரியவர்களைக்கஷ்டப்படுத்துவதில்லை. இளம் பெண்களும் இதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

அலுவலகத்தில் வேலையை முடிப்பதில் இலாபகரமாக அமைய வேண்டும் என்பது மட்டுமே குறிக்கோள். ஆனால் வீட்டில், வீட்டை இனிமையாக்கு, வீட்டிலுள்ளோரை மகிழ்ச்சிகரமாக வைத்துக் கொள் என்பதே, தலையாய கடமையாக இருக்கும். வீட்டை நிர்வகிக்கிற பொறுப்பு, வீட்டின் பெண்களுடையது என்பதெல்லாம் மலையேறிவிட்டது. அதனால் ஆண்களும் ஈடுபாடு காட்ட வேண்டும்.

எமது நேரத்தை மற்றவர்கள் திருடிக்கொள்வதை, ஒரு அலுவலக நிர்வாகியாக எப்படி அனுமதிக்க மாட்டோமோ, அதே போலவே, எமது வீட்டிலும் எமக்கான நேரத்தை நாம் தான் ஒதுக்கிக் கொள்ள வேண்டும். அதில் யார் தலையிட்டாலும், எமது எதிர்ப்பை நாசூக்காகத் தெரிவிக்கலாம்; தப்பில்லை. குடும்பத்துக்கு நீங்கள் எவ்வளவு முக்கியமோ, அதே அளவு உங்களுக்கும் நீங்கள் முக்கியம். சுய திருப்திக்கு முக்கியத்துவம் அளிப்பவர் அடுத்தவர்களின் விமர்சனத்தைப் பற்றி கவலைப்பட வேண்டாம். தனது விருப்பு, பயன்களை கருத்திற் கொண்டு தமது காரியத்தைச் செய்யலாம். உங்கள் நேரத்தை மற்றவர்கள் களவாட ஒரு போதும் அனுமதிக்காதீர்கள்.

ஒவ்வொரு நாளையும், புதிதாய் தொடங்குங்கள். ஓய்வு நேரத்தைக் கண்டுபிடிக்க முடியாதவர், நோய் உபாதைகளில் நேரத்தை இழந்து நிற்பர் என்பதை, மனதில் நிறுத்திக் கொள்ளுங்கள்.

நமது குடும்பத்தை நாம்தானே பொறுப்பெடுத்து கொள்ள வேண்டும் என்ற உங்கள் பெருந்தன்மை கூடவே பெரும் தொல்லைகளுக்கும் வழி வகுத்துவிடும். வாழ்க்கை குறுகியது, நேற்றுத் தான் நீங்கள் தொட்டிலில் ஆடியது போல இருக்கும்; இன்று சாய்வு நாற்காலிக்கு வந்து விட் டீர்கள். அவ்வளவு மின்னலாய் காலம் ஓடிக் கொண்டிருக்கிறது. உங்கள் கையில் தான் இதற்கான தீர்வு இருக்கிறது. நீங்கள்செய்யவேண்டியது,அடுத்தவரிடம் ஒப்படைக்க வேண்டியது என, வீட்டின் வேலைகளைப் பாரபட்சம் இல்லாமல் பிரித்துக்கொடுக்க கற்றுக் கொள்ளுங்கள்.

வேறு எதையும் எவருக்கு இரவல் கொடுத்தாலும் திரும்ப வாங்கிக் கொள்ளலாம். ஆனால், இந்த நேரத்தை, நாம் தான் கைப்பற்றிக் காப்பாற்றி வைத்துக் கொள்ள வேண்டும்.

தன் சுழற்சி, சூரியனை வலம் வரும் பாதை என்று, எல்லாவற்றையும் கணக்கில் வைத்துத் தான், பூமி நேரத்தை நிர்வகிக்கிறது.

24 மணி நேரம், 30 நாட்கள், 365 நாள்கள் என்பதை எல்லாருக்கும் பொதுவாக பூமியே கவனித்துக் கொள்கிறது. வீட்டில் முதியவர்கள் பூமியாக இருக்க விரும்புங்கள்.

வெற்றிகரமான பெண்கள், தங்கள் வேலையை முடித்து ஓய்வை அனுபவிக்கின்றனர்.

திறமையற்றவரோ முடிவின்றித் தங்கள் வேலையுடன் போராடிக் கொண்டிருக்கின்றனர். நீங்கள் வெற்றிகரமானவரா... திறமையற்றவரா என்பதை நீங்களே தான் தீர்மானிக்க வேண்டும்.



# சுதந்திரப் பறவைகள்!

பெண் கல்வியறிவு பெற்றிருந்தால், அந்த வம்சமே கல்வி பெற்று விடும் என்ற நம்பிக்கை எப்படி உண்மையோ, அதுபோலவே, தனக்கான சுதந்திரத்தை ஒரு ஆண் தவறாகப் பயன்படுத்தினால் ஏற்படும் விளைவுகள், அந்தக் குடும்பத்தை மட்டும் பாதிக்கும் என்பதும் உண்மை.

## தொழில்நுட்ப வளர்ச்சி காரணமா?

ஆரம்பத்தில், வேகமாக வளர்ந்து வரும் தொழில்நுட்ப வளர்ச்சி, நல்லதை மட்டும் கொடுக்காமல், எதிர் விளைவுகளையும் கொடுக்கிறது. இளம் பருவம் என்பது நல்லதை எடுத்துக் கொள்வதைக் காட்டிலும், அதில் உள்ள எதிர்மறையான விடயங்களையே, ஒரு திரில் அனுபவமாக எடுத்துக் கொள்ளும். அதில் உள்ள, ஒரு நன்மையைக் காட்டிலும், 10 தீமைகளைத் தேடிக் கண்டுபிடித்து விடுகின்றனர். சுய கட்டுப்பாடு, சுய அறிவு இவையெல்லாம் ஏதோ கட்டுப்பெட்டித்தனமான வார்த்தைகள் என்கிற அளவுக்கு வந்து விட்டோம்.

## எது சுதந்திரம்?

ஆண்களை விட, பெண்கள் குறைந்தவர்கள் அல்லர், சளைத்தவர்களும் அல்லர். எனினும் பல ஆண் நண்பர்களையும் வைத்துக் கொள்ள முடியும் என்று, சம உரிமை கோட்ட ஆரம்பித்து விட்டனர், எமது இளம் பெண்கள்.

இதில் என்ன தவறு இருக்கிறது என்று கேட்கும் அளவுக்குப் பொருளாதாரத்திலும், தங்களை முன்னிறுத்திக் கொள்கின்றனர்.

இவ்வளவு குறைகளையும், ஒட்டு மொத்தமாக இளம் பெண்கள் மீது வைக்கும் நிலைக்கு கொண்டு வந்தது, பெற்றோராகிய நாம் தான். எமது வீட்டுப் பெண் பார்த்து ரசிக்கின்ற மாதிரி உடை அணிகிறாளா, முகம் சுளிக்கும் அளவுக்கு உடை அணிகிறாளா என்பது எம்மைத் தாண்டித் தானே வெளியில் போயிருக்க முடியும்? பெண் பிள்ளைகள் அப்பா, அம்மாவின் கண்காணிப்பில் தான் இருக்க வேண்டும் எனும் அளவுக்கு எம்மால் நேரம் ஒதுக்க முடிவதில்லை. கையிலேயே உலகத்தைக் கொண்டு வந்துள்ள தொழில்நுட்பம், பிரச்சினை வந்தால் பார்த்துக் கொள்ளலாம் என்கிற தவறான நம்பிக்கை, வந்தாலும் என்னால் தனியே வாழ முடியும்; அந்த அளவுக்கு என்னிடம் படிப்பு, வேலை, பொருளாதாரம், சமூகத்தில் வாய்ப்பு, வசதிகள், கருத்துச் சுதந்திரம் எல்லாமே இருக்கின்றன என்பது போன்ற தவறான எண்ணங்கள் மேலோங்கியிருக்கின்றன.

## பெற்றோர் காரணமா?

பெற்றோர் கொடுக்கும் சுதந்திரத்தைச் சரியாகப் பயன்படுத்த தெரியவில்லையா, கொடுக்கும் சுதந்திரத்தைச் சரியாகத்தான் பயன்படுத்துகின்றனரா என்பதை சரிவரக் கண்காணிக்க பெற்றோர் தவறி விட்டனரா? யாரை இங்கு குற்றம் சொல்வது? காரணங்கள் எவையாக இருந்தாலும் அவற்றை உடனடியாக சரிசெய்ய வேண்டியது எமது கடமை. இளம் பெண்களும், தனது சுய கௌரவம் எதில் இருக்கிறது என்பதைப் புரிந்து நடந்து கொள்ள வேண்டும். 'பெண்களுக்குரிய சுதந்திரத்தை வழங்காத வரை ஒரு நாடு சுபிட்சம் அடையாது என்கிறார்' நேரு. வழங்கப்படுகிற சுதந்திரத்தை மிகச் சரியாகப் பயன்படுத்துவதில் தான் அடைந்த சுபிட்சம் மேலும் வளரும், செழிக்கும். இது கண்டிப்பாக எம் இளம் பெண்களுக்குத் தெரியும் என்றே நம்புவோம்.

நகைச்சுவைத் தொடர் 12

# ராசி இல்லாத ராசா

மிருசுவில் தமிழ்தாசன்

இனியுமிந்தக் காதல் கத்தரிக்காயொண்டும் சரிவராது. லைனை மாற்ற வேண்டியதுதான். கல்யாணமொன்று செய்யத்தான்வேண்டும். ஆனால் இந்தக் காதல் கீதல் ஒன்றும் வேண்டாம்.
காதலுக்காகப் பட்ட அவமானங்கள், அலைச்சல்கள் ஏமாற்றங்கள் எல்லாமேபோதும் என்றாற்போதும். இந்த ஜென்மத்துக்கே இனிக்காதல் வேண்டாம்.
புறோக்கர் பசுபதி நல்ல மனிதர். புறோக்கராக இருந்தாலும் பொய் பித்தலாட்டங்களுக்கு ஒரு நேர்மையான மனிதர். இப்பொழுது அவர் மூலமாகவே கல்யாணப் பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றன.
இப்போது சோக்கர் சோமசுந்தரத்தாரின் மூத்த மகளைப் பெண் பார்ப்பதற்காக நானும், அம்மாவும் மாமாவும், புறோக்கர் பசுபதி சகிதம் வந்திருக்கின்றோம்.
பெண்வீடு சற்றுச் சிறியதாக இருந்தாலும் அங்கே இருப்பவர்கள் அனைவரும் உருவத்தில் பெரியதாக இருந்தார்கள். எங்களை நன்றாக வரவேற்றார்கள். செங்கம்பளம் ஒன்று மட்டும் விரிக்கவில்லை. மற்றும்படி அமர்க்களமான வரவேற்பு.
பெண்ணுக்கு அண்ணன் மார்கள் மூன்று பேர். தந்தை, தாய் உட்பட குடும்பத்தினர் அனைவரும் வந்து எங்களுடன் அமர்ந்து கொண்டனர். அண்ணன் மூவரையும் பார்த்தபோது சூரன், சிங்கன், தாரகன் நினைவுக்கு வந்து போயினர். தாய் தந்தையரும் தமது மிகப் பருத்த உடல்களுடன் காட்சி தந்தனர். மொத்தத்தில் இந்தக் குடும்பமே மிகப் பெரிய உடல் வாகைக் கொண்டவர்களாய் இருந்தனர். இந்தப் பூவுலகில் போதிய உடல் வளர்ச்சியையும் உடற் பலத்தையும் இவர்களுக்குக் கொடுத்துவிட்டுத்தான் ஏனைய மானிடப் பிறவிகளுக்கு உருவத்தை படைத்து விட்டானோ இறைவன் என்று எண்ணத் தோன்றியது எனக்கு.
மணப் பெண்ணை வரும்படி அழைத்தார்கள். அவளைப் பார்த்து விட என் மனம் பட்ட அவசரம் கொஞ்ச நஞ்சமல்ல. பெண் வந்து கொண்டிருந்தாள். நயினாதீவுத் தேரைப் பார்த்துப் பலவருடங்களாகி இருந்த எனக்கு இப்போது அதைப் பார்த்து விட்ட திருப்தி. ஆடி அசைந்து வந்து இருப்பிடத்தில் தரித்து விட்டது. அம்மாவும், மாமாவும் அவளைக் கண்டதும் உண்மையிலேயே பயந்து விட்டார்கள் ஏதாவது ஆபத்து நேர்ந்து விடுமோ என்று.
நயினாதீவுத் தேரைக் கண்குளிரப் பார்த்துவிட்டோம், அப்படியே வீட்டுக்குப் போகலாம் என்று எனக்குள் யோசித்தேன்.
எனக்கு ஏன்தான் எல்லாம் இப்படி நடக்கின்றதோ! யாரிடம் சொல்லியழ!
"சுருண்ட மயிர் குடும்பத்துக்குக்கூடாது" எனது அம்மாவின் முதலாவது அபிப்பிராயம். அம்மாவின் முகத்தைப் பார்த்தேன். அவருக்குக் கொஞ்சமும் திருப்தியில்லையென்பது புரிந்துவிட்டது.
"பொம்பிளைக்கு என்ன பேர்?"
எனது மாமாதான் ஏனோ ஒப்புக்காகக் கேட்டார். உடல் வளர்ச்சிதான் இப்படியாகி விட்டது. குரல் வளம் என்றாலும் சகிக்கக் கூடியதாக இருக்கின்றதா என்றொரு நப்பாசையாகவும் இருக்கலாம். அல்லது ஊமையாய் கீமையாய் இருந்து விடுவாளோ என்ற சந்தேகமோ! என்னவோ!
"கோகிலவதனசிங்காரரூபினி"
இந்தக் குரல் யாருடைய உதட்டிலிருந்து பிறந்ததென்று சத்தியமாய் ஒருவராலும் அறிய முடியவில்லை. சுத்தமான ஆண்களுக்குரிய குரலாக இருந்தது. அவளுடைய குரலோ அல்லது அவளுக்காக யாராவது டப்பிங் குரல் கொடுத்தார்களோ என்ன இழவோ! அது சரி! இத்தனை பெரிய நீ.... ள.... மா... ன பெயரை ஒரு விண்ணப்பப் படிவத்தில் முழுப் பெயருடன் நிரப்புவதென்றால் மிகவும் சங்கடமாய்த்தான் இருக்கும்.
என்னுடைய மனம் சூறாவளியாக அடித்தது. அம்மாவும் மாமாவும் செய்வதறியாது விழிகளைப் பிதுக்கியபடி இருந்தார்கள். புரோக்கர் வானத்தைப் பார்த்தபடி பல்லுக்குத்திக் கொண்டிருந்தார்.
பக்கத்தில் புடையன் பாம்பு சீறிக்கொண்டிருப்பதைப் போல கோகுல வதனசிங்காரரூபினி மூச்சுவிட மாட்டாது முக்கித்தக்கிக் கொண்டிருந்தாள். எங்களுடைய மனநிலையைப் புரிந்துவிட்ட புரோக்கர் பசுபதி,
அப்ப நாங்கள் போய் எல்லாத்தையும் அறிவிக்கிறம்... ஒருவாறு சொல்லிவிட நாங்கள் எல்லோரும் அந்த இடத்தை விட்டு மெல்ல கழரத் தொடங்கினோம். மிகப்பெரியதொரு கண்டத்திலிருந்து தப்பிவிட்ட திருப்தி. இப்போது எங்கள் எல்லோரையும்விட பசுபதிக்குத்தான் கவலையாய் இருந்தது.

(44 ஆம் பக்கம்)

"பொம்பிளைக்கு என்ன பேர்?" எனது மாமா தான் ஏனோ ஒப்புக் காகக் கேட்டார். உடல் வளர்ச்சி தான் இப்படியாகி விட்டது. குரல் வளம் என்றாலும் சகிக்கக் கூடிய தாக் இருக்கின்றதா என்றொரு நப்பாசையாகவும் இருக்கலாம். அல்லது ஊமையாய் கீமையாய் இருந்து விடுவாளோ என்ற சந்தேகமோ! என்னவோ! "கோகிலவதனசிங்கார ரூபினி" இந்தக் குரல் யாருடைய உதட்டிலிருந்து பிறந்ததென்று சத்தியமாய் ஒருவராலும் அறிய முடியவில்லை.





# அதற்கும் வெளியே ஒரு ....

(தொடர்ச்சி)


சட்டநாதர் நின்றிருந்தார். அதற்கிடையில் கயல்விழியின் மகன் ஓடிவந்து "தாத்தா வாங்கோ அம்மப்பா உள்ளுக்குத்தான் இருக்கிறார்" என்று அழைத்தான் அன்பாக. சட்டநாதர் சிரித்துக் கொண்டு "சரி தம்பி களைப்பா இருக்கு நானும் இந்த மரநிழல்ல இருக்கிறன் நீங்கள் அம்மப்பாட்டை சொல்லுங்கோ"என்றார்.
"எங்க போட்டுவாறாய் களைச்சுப் போனமாதிரிக் கிடக்கு" என்று கேட்டபடியே மர நிழலுக்கு வந்தார் கயல்விழியின் தந்தை. "ஓம்! ஓம்! நான் அன்பு இல்லம் எண்ட முதியோர் இல்லத்துக்கு போய் இண்டைக்கு என்ர செலவில சாப்பாடு குடுத்திட்டு ஆக்களோடை கொஞ்ச நேரமிருந்து கதைச்சிட்டு வாறன். எல்லாரும் தங்கட பிள்ளையள இழந்தாக்கள். பரிதவிச்சுப்போய் நிக்குதுகள். அதுகளோ இருந்ததில கொஞ்சம் மன நிம்மதி" என்றார் சட்டநாதர்.
"நல்ல காரியம். உனக்கு புண்ணியம் கிடைக்கும்." என்றார் கயல்விழியின் தந்தை.
"இல்லை சாம்பு என்ர மனுசியும் இந்த முள்ளிவாய்க்கால்ல செத்தபிறகுதான் வாழ்க்கையைப் புரிஞ்சு கொண்டன். அவ அடிக்கடி சொல்வா, சமையல் செய்யிறது கஷ்ரமா இருந்தாலும் நாலு பேற்ற பசியைப் போக்கிறம் எண்ட திருப்தி ஒரு பெரிய சந்தோம் எண்டு. நானும் அவ செத்ததுக்குப் பிறகு அடிக்கடி அதை நினைச்சுப் பார்க்கிறனான். மே 18 வருகுதெண்டால் அதை முன்னிட்டு இப்பிடி யாருக்கு சாப்பாடு குடுத்தால் மனுசியின்ர ஆத்மா சந்தோ-ப்படும் எண்ட ஒரு திருப்திதான்."
சட்டநாதன் தலைகுனிந்து மௌமானார்.
அதுவரை அமைதியாக இருந்த கயல்விழி சற்றுக் குழப்பத்தோடு "மாமா எப்பிடி உங்களால இந்த நாள்களில இப்படி ஒரு காரியத்தைச் செய்து சந்தோசமா இருக்க முடியிது?" என்றாள்.
"பிள்ளை எங்களால போன உயிர்களை திரும்ப வரவைக்க முடியாது. அதுக்காக நெடுகலும் அழுதுகொண்டு மீதி வாழ்க்கையை வீணாக்கக் கூடாது. எங்களால முடிஞ்ச வரைக்கும் மற்றவையளை சந்தோசமா வைச்சிருந்தமெண்டால் அதப் பார்த்தாவது நாங்களும் சந்தோசமா இருக்க முயற்சிக்கலாம். எங்களை நம்பியிருக்கிற பிள்ளையளும் சந்தோசமா இருப்பினம்.
இருக்கும் வரைக்கும் நான் சந்தோசமா இருக்கவேணும் என்றுதானே என்ர மனுசி பாடுபட்டது. அப்பிடி இருக்க அவ செத்த பிறகு நான் இஞ்ச கவலப் பட்டுத் திரிஞ்சால் அந்த ஆத்மாவும் அதப் பார்த்து அந்தரிச்சுத்தானே திரியும்."
சட்டநாதர் நீண்ட விளக்கம் கொடுத்தார்.
கயல்விழிக்கு அவர் சொல்வது சரி மாதிரி இருந்தாலும் முழுதாய் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆனால் அவள் இப்போது யோசிக்க ஆரம்பித்திருந்தாள். முள்ளிவாய்க்காலுக்கு வெளியே ஒரு வாழ்க்கை இருப்பதைப் பற்றி.



# சிவனின் சினமும் சிவபக்தனின் சாமகானமும்

சாம் ரமேஸ்குமார்

இலங்கை வேந்தனும் புலத்தியனின் பேரனும் விஸ்ரவசுவின் மகனுமான இராவணன் எந்தநேரமும் சிவ பக்தியில் மூழ்கித் திளைப்பவன். அவன் தனது புனித தவத்தின் வலிமை மூலம் எம் பெருமானாகிய சிவபெருமானையே நெருங்கி எண்ணற்ற வரங்களைப் பெற்றவன். அத்தகைய வலிமை பொருந்திய இராவணன் தனது வாழ்வில் எவருமே செய்யத் துணியாத செயலை செய்யத் துணிந்தான். அதுதான் பரமேஸ்வரனின் நிரந்தர இருப்பிடமான திருக்கைலாய மலையைப் பெயர்த்தெடுத்த நிகழ்வாகும்.



சிவபக்தனான இராவணன் சிவபூமியாகிய இலங்கையை ஆட்சி புரிந்த காலத்தில் வட திசையிலுள்ள அழகாபுரியை பெரும் செல்வந்தனான குபேரன் ஆண்டு வந்தான். ஒருமுறை அழகாபுரியின் மீது படையெடுத்த இராவணன் போரில் குபேரனை வெற்றி கொண்டு அவனது செல்வங்களையும் புஷ்பக விமானத்தையும் கைப்பற்றினான். வெற்றிக் களிப்பில் குபேரனின் புஷ்பக விமானத்தில் ஏறி இலங்கைக்குத் திரும்புகையில் சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருக்கையாலய மலையைக் கடக்க இராவணனுக்கு நேர்ந்தது. அப்போது அங்கு காவல் காத்த நந்திதேவர் இராவணா! பரமேஸ்வரன் கொலு வீற்றிருக்கும் இந்தத் திருக்கைலை மீது நீ பறந்து செல்வது நல்ல செயலல்ல! எனவே இவ்விடமிருந்து விலகிச் செல் என்றார். சினம் தாங்க முடியாத இராவணன் விழிகள் பிதுங்க நந்திதேவரை நோக்கி ஏய்! குரங்கு முகமுடையவனே நான் ஏன் விலகிச் செல்ல வேண்டும். என் வழியைத்தான் இந்த மலை வழிமறித்து நிற்கின்றது. இதை வேரோடு பிடுங்கி எறிவேன் என்று உறுமினான்.

நந்திதேவரோ ஏய் மூடனே இராவணா உன் ஆணவத்தை என்னால் தடுக்க இயலாது. உன் விருப்பம்போல் செயலாற்று. ஆனால் ஒன்று மட்டும் சொல்கின்றேன். என்னைக் குரங்கு முகமென்று நீ இகழ்ந்தாய். அதனால் உன் அரசு குரங்குகளாலேயே அழியும் என்று சாபமிட்டார்.

இராவணன் புஷ்பக விமானத்திலிருந்து கீழே இறங்கி தனது கரங்களால் திருக்கைலாய மலையைப் பெயர்த்தெடுக்க முயன்றான். இந்த அசுர செயலால் கைலாயமே அசைந்தது. பார்வதி தேவியோ பெரும் அச்சவுணர்வால் நடுங்கி பரமேஸ்வரனை அணைத்துக் கொண்டாள். தேவர்களும் பூதகணங்களும் நிலை தடுமாறினர்.

நிகழ்ந்த விபரீதத்தை உணர்ந்து கொண்ட சிவபெருமான் இராவணனின் ஆணவத்தைப் போக்க எண்ணி, தன் வலக் காலின் பெரு விரலால் திருக்கைலை மீது அழுத்தினார். அந்த அழுத்தத்தைத் தாங்க முடியாத பலம் வாய்ந்த இராவணனின்விழிகள்பிதுங்கியது. தோள்கள் நெரிபட்டன. தாங்க முடியாத வேதனையால் கண்ணீர்சிந்தியஅவன் முன்னால் வாகீசர் எனும் தவசிரேஷ்டர் காட்சியளித்தார்.

வேதனை கொள்வதில் எந்தப்பயனும் இல்லை இராவணா. சிவ னின் சினம் தணிய வேண்டுமானால் சாமகீதம் பாடு என்று சொல்லி மறைந்தார்.

தன் மூடத்தனத்தை உணர்ந்த இராவணன் பக்திமேலிட தன் பத்துத் தலைகளில் ஒன்றைக் கொய்து குடமாகவும், கரமொன்றைத் தண்டமாகவும் நரம்புகளைத் தந்தியாகவும் அமைத்து ஒரு வீணை செய்து சிவபெருமானின் உள்ளம் உருகுமாறு கண்ணீரோடு அதை மீட்டி சாமகானம் பாடினான். அந்தக் கானம் திருக்கைலாய மலையெங்கும் எதிரொலித்தது.

காம்போதி இராகத்தில் இராவணன் சாமகானம் இசைக்க அந்த இனிய இசையில் தேவர்கள் தங்களை இழந்தனர். சிவபெருமானோ அவன் இசையில் நனைந்து தன் கால் பெருவிரலை மெதுவாக எடுத்தார். அந்தத் தருணத்தில் இராவணன் திருக்கைலையை தன் தோள்களிலிருந்து கீழே இறக்கி வைத்து விட்டு, தன் இசையை முடித்துக் கொண்டான்.

இராவணனின் பக்தியைக் கண்ட சிவபெருமான் அவன் முன் காட்சியளித்து சந்திரகாசம் எனும் வாளையும் முப்பத்து முக்கோடி கால ஆயுளையும் அவனுக்கு வரமாக அளித்தார். பேரன்பின் மிகுதியால் தமக்கு இணையாக அவனுக்கு ஈஸ்வரன் என்ற பட்டத்தையும் அளித்தார்.

சிவபக்தனான இராவணனின் சாமகானத்தை நினைவுகூரும் விதமாக இன்றும் ஆலயங்களில் நடக்கும் திருவிழாக்களில் திருக்கைலாய மலை போன்ற வாகனத்தில் இறைவனையும் இறைவியையும் எழுந்தருளச் செய்து திருவீதியுலா வரும் காட்சி வார்த்தைகளில் அடங்காத ஒன்றாகும்.



# சிரிக்க சிந்திக்க சில வரிகள்

கலாபூசணம் மு.மாசிலாமணி

அண்மைக் காலமாக வடபகுதியில் ரயிலில் மோதி பலர் சாவடைந்து வரு வது கவலைக்குரிய விடயமாக உள்ளது. போருக்கு முன்னைய காலங்களில் நாள் ஒன்றுக்கு ஐந்துக்கு மேற்பட்ட பயணிகள் ரயில்கள் தென்பகுதிக்குப் போவதும் வருவதுமாக இருந்த காலங்களில் இவ்வாறு விபத்துக்கள் மிகவும் அரிதாகவே இருந்தன. இது என்ன மாற்றம் என்பது புரியவில்லை.

அந்தக் காலத்து ரயில் எஞ்சின்கள், முக்கியமாக கனேடியன் எஞ்சின் வரும்போது பலத்த சத்தத்துடன் வரும். தவிர தண்டவாளத்தில் அதன் அதிர்வு பலமாக இருக்கும். விபத்துக்கள் நடக்காமல் இருந்தமைக்கு அதுவும் ஒரு காரணம் எனலாம். தற்பொழுது புதிதாக இந்தியாவின் உதவியுடன் போடப்பட்ட தண்டவாள அமைப்பும் எஞ்சினும் ரயில் ஓடும்போது பலத்த சத்தம் ஏற்படாது ரயில் எமக்குக் கிட்ட வரும்போதுதான் சிறு சத்தம் எழுப்பும் வகை யில் உள்ளன. இதனால் ரயில் பாதையைக் கடக்க முற்படுபவர்கள் தடுமாறி அதற்குள் அகப்பட வாய்ப்புண்டு. பொதுமக்கள் ஒரு விடயத்தைக் கவனத்தில் கொண்டால் விபத்துக்களைத் தவிர்த்து விடலாம்.

இரு பக்கமும் ரயில் பாதையில் நடப்பதையோ கடப்பதையோ தவிர்க்க வேண்டும். சட்டப்படி இந்தப் பாதையில் நடப்பது தண்டனைக்குரிய செயல். ரயில்வேத் திணைக்களம் இதுவரை சட்டத்தை மீறுவோர் மீது எந்தவித நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை. மனித உயிர்கள் அநியாயமாகப் பறிக்கப்படுவது கவலைக்குரியது. போக்குவரத்துச் சேவையில் ரயில்கள் அரிய பங்கை வழங்கி வருகின்றன. மக்கள் இந்தச் சேவையைப் பயனுள்ளதாக மாற்றுவது அவர்கள் கையில்தான் உள்ளது.

அண்மைக் காலங்களில் ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்வதும் அதிகரிக்கின்றது. இந்தச் செயல் இருவகைப்படும். ஒன்று நன்கு திட்டமிட்டுத் தற்கொலை புரிவது. மற்றையது திடீர் என்று உணர்ச்சி வசப்பட்டு உயிரை மாய்த்துக்கொள்வது.

நன்கு திட்டமிட்டு தற்கொலை செய்ய ஒருவர் தீர்மானித்துத் தண்டவாளத்தின் மீது தலையை வைத்துப் படுத்து இருந்தாராம். பல மணி நேரம் படுத்திருந்தும் அவர் எதிர்பார்த்திருந்த ரயில் வரவில்லையாம். பொறுமையை இழந்த அவர் புகையிரத நிலைய அதிபரிடம் போய் "ஐயா ரயில் எப்ப வரும்?" எனக் கேட்க அதிபர் "ஒரு மணித்தியாலம் லேற்" என்றாராம். பசி தாங்க முடியாத தற்கொலையாளி சாகத்தான் போறன் எனது கடைசி ஆசையாக வயிறு முட்ட ஏதாவது சாப்பிட்டு விட்டு மீண்டும் தண்டவாளத்தில் படுப்போம் என முடிவெடுத்து அண்மையில் உள்ள சாப்பாட்டுக் கடையில் சாப்பிட்டுக் கொண்டிருக்க எதிர் பாராமல் ரயில் சென்றுவிட தனது தற்கொலை முடிவை மாற்றி விட்டு வீடு சென்றாராம். பசி வந்தால் பத்தும் பறந்து போய்விடும் என்பர். அந்தப் பத்து என்ன என்பது தெரியவில்லை. அந்தப் பத்துக்குள் தற்கொலையும் ஒன்றுதானோ எனச் சிந்திக்கத் தோன்றுகிறது.



# படிப்பா? பிள்ளையா? பாதுகாப்பா?

கே.எஸ்.சிவஞானராஜா

பூக்களே சற்று ஓய்வெடுங்கள். அவள் வந்துவிட்டாள். இனியென்ன? வீட்டிலே, வீதியிலே விழாக்களிலே ஜொலித்த பூக்களுக்கும் இனிமேல் விடுமுறை. தேன் குடிக்கும் வண்டு களுக்கும் திண்டாட்டந்தான். இங்கு இரசிப்பதற்கும் இயற்கையில் இறைவன் தட்டுப்பாடு என்று எதை யுமே விட்டுவைத்து விடவில்லை. எல் லாமே தாராளமாகக் கிடைக்கிறது. பிற கென்ன? ஆண்களுக்கோ, பெண் களுக்கோ, பிள்ளைகளுக்கோ, பணத் துக்கோ, கட்டடங்களுக்கோ, கோயில்களுக்கோ, கொண்டாட்டங்களுக்கோ, வாகனங்களுக்கோ, வசதிகளுக்கோ, தானங்களுக்கோ, தர்மங்களுக்கோ, தாபரிப்புக்கோ, தார் வீதிகளுக்கோ, தர்க்கங்களுக்கோ, தலைமைகளுக்கோ, எந்தவித தட்டுப்பாடும் இல்லை. போதாக்குறைக்கு, மது, கஞ்சா, ஹெரோயின், பவுடர், பீடா, சிகரெட், அபின் அடேயப்பா போதும் போதும் என்று தாராளமாகக் கிடைக்கிறது. மேலும் மேலும் சொல்லப்போனால் முதுமையை எவ்வளவுக்கு எவ்வளவு இளமையாக்க முடியுமோ அவ்வளவுக்கு அவ்வளவு பாலியலுக்கு உரமூட்டும் வகையில் "வசீரம்" ஆக்குவது. மற்றும் கடன்பட்டாவது எத்தனை வாகனங்கள் வாங்க முடியுமோ அத்தனை வாகனங்களையும் வாங்குவது. சின்ன வீட்டுக்குள் அவற்றை அடுக்கடுக்காய்த் தரித்துவிட வழிசமைப்பது. இன்னுமொரு முக்கியமான விடயம் யாதெனில் சொந்த பந்த உறவினர் அல்லாத முன்பின் தெரியாத மூன்றாவது நபர்களை வீட்டுக்குள் அழைத்து உற்சாகப்படுத்துவது, உபசரிப்பது, உறவு கொண்டாடுவது. இன்னும் சொல்வதானால் எதிலும் திருப்திகொள்ளாது அதற்கப்பால் வேலிதாண்டிப் போவது! குறிப்பாக எந்த விதத்திலாவது தன் கோலங்களை மற்றவர்களுக்கு விருந்தாக்குவது, போன்ற இன்னோரன்ன மலிவான செயற்பாடுகளால் மனித இனம் சேதாரமாய், தேய்மானமாய், நலிவடைந்து வருகின்ற பரிதாப நிலையை இங்கு காண்கின்றோம். ஏன் தான் இப்படியாயிற்று என்பதற்கு நாமும் ஒரு காரணமாகி விடுகின்றோம். யாருமே தப்பிவிட முடியாது. பரீட்சைப் பெறுபேறுகளில் சித்திபெற்றவர்களோடு மட்டும் சொந்தம் கொண்டாடும் பலர் சித்தி பெறாத மாணவர்களுக்கான நிவாரணங்களிலோ, வேதனைகளிலோ, பரிகாரங்களிலோ பங்கு கொள்ளாமல் தப்பித்து விடுகிறார்கள். அவர்களுக்கான பரிகாரம் நாட்டில் செய்யப்படுமாயின் நாடு ஒளிமயமாகும். தோல்வி அடைபவர்களது நயசுகங்களை யாருமே கவனித்து ஒப்பேற்றியுள்ளனரா என்பது பற்றி யாம் தேடிக்கொண்டு இருக்கின்றோம். இரண்டு மணிக்குப் பின்னர் விசேட பரிகாரக் கற்பித்தல் வெற்றிகண்ட ஆசிரியர்கள் நீடு வாழ்கின்றனர். இரவு நேரப்பாடசாலை நடத்தி வெற்றிகண்ட அதிபர்களையும், ஆசிரியர்களையும் கண்டு போற்றி வணங்குகின்றோம்.

**வீடு**

இதைப்பற்றி நான் சொல்லி ஏன் பேச்சு வாங்கவேண்டும். பெரும்பாலான வீடுகள் சீராகவும் நேர்த்தியாகவும், ஆரோக்கியமானதாகவும் இல்லை என்று சொல்ல முடியும். ஆனால் உங்களுக்குக் கோபமோ கவலையோ வரக்கூடாது. இது உங்களையல்ல! முதலில் தேவையற்ற பொருள்கள் பலவற்றை நாம் பராமரித்து வருகின்றோம். இவற்றை அப்புறப்படுத்தியேயாக வேண்டும்

குப்பை கூழங்களாக ஏராளமான பொருள்கள் சாமியறையிலிருந்து அடுக்களை வரை தேங்கியுள்ளன. இதேபோலவே தொப்பையிலும் குப்பைகள் சேர்ந்துள்ளன. கடைச் சாப்பாடு, காலம்போன சாப்பாடு, கொறிப்புச் சாப்பாடு, பைக்கற் சாப்பாடு, பதம் கெட்ட சாப்பாடு, இறக்குமதிச் சாப்பாடு, இரக்கமற்ற சாப்பாடு, ஈமொய்த்த சாப்பாடு, விறைச்ச சாப்பாடு, விலை கூடிய சாப்பாடு என எல்லாவிதமான சாப்பாடுகளையும் தொப்பை ஏற்று குப்பையாக்கி வைத்துள்ளது. இனி என்ன? குப்பையைச் சுத்தம் செய்வதென்றால் குப்பை விறாண்டியா விளக்குமாறா என்றால் சுகமாக எல்லோருமே சுத்தம் செய்து விடலாம்! எனவே தொப்பைகள் எல்லோருக்குமே அப்படி இப்படித்தான். இது மட்டுமா? உடுப்புகள், செருப்புகள், பாத்திரங்கள், தேநீர் கோப்பைகள், பிளேட்டுகள், முடிந்த சோப்புகள், முடியாத சோப்புகள், சுட்டபல்புகள், சுடாத பல்புகள் உடைந்த கோப்பைகள், உடையாத சட்டி பானைகள், அறுந்த கடகங்கள், சிரட்டைகள் பிளாஸ்ரிக், பொலித்தீன் பைகள், ரின்கள், போத்தல்கள் என வீட்டைக் குப்பையாக மாற்றிவிட முனைந்து விட்டோம். இனியென்ன வீடும் இட்டு முட்டாகிப் போய்விட்டது. வருத்தந்தான்.

**வீதியும், விதியும்**

வீதியில் இறங்கிவிட்டால் அங்கே சட்டத்துக்கும், சமயத்துக்கும், கல்விக்கும், நீதிக்கும் எந்த வித சம்பந்தமோ தொடர்போ ஈடுபாடோ இருக்காது. சண்டித்தனமே வெல்லுகின்ற பாணியில் பயணங்கள் இருக்கும். மது போதையில் சில வாகனம். இவை பெரும்பாலும் வானகம் போய் விடும். மாதுடைய போதையில் சில வாகனம். இவையும் பெரும்பாலும் கானகம் சென்றுவிடும். சோடியுடன் பல வாகனம். இவை சுவர்க்க உலகமதில் பாய்ந்து விடும். போக்குவரத்துச் சாதனங்களில் பலர் நெருக்கமாய்ப் பயணம். இது பலரின் உடல்வருத்தங்களுக்கு மருந்தாகிப் பயணமாகிவிடும். சிலருக்கு விருந்துமாகி விடும். இரவு நேரப் பயணங்களில் சிலரென்ன பலர் இந்த உலகத்தை மட்டுமல்ல ஜாதகத்தையே மாற்றிவிடுவார்கள். பயணங்களைப்பார்த்து பெற்றோர்களின் நெளிவு சுளிவுகளைப்பார்த்து பிள்ளைகள் இரட்டிப்பாகப் பின்பற்றி அவர்களையே வென்றுவிடுவார்கள். அப்பாவின் உடை நடை பாவனை அம்மாவின் உடைநடை பாவனை, இரண்டாமவர். மூன்றாமவருடன் பழகும் விதம் அல்லாமலும் வாகனங்களில் மாமாக்களுடன் பழகும் விதம் யாவற்றையும் பிள்ளைகள் முறையாகப் பதிவு செய்கிறார்கள். அப்பாவும் அம்மாவும் மெருகேற்றி தத்தம் நவீனங்களை வெளிக்காட்ட பிள்ளைகளும் தத்தம் படைப்புக்களை இல்லை ஓவியங்கள் பார்பவர்களுக்கு விருந்தாக்குகின்றார்கள். ஏலம் விடுவது போல யார் கூடவும் கூட்டியும் கேட்கிறார்களோ பாவங்கள் அன்பைக் கொடுத்து மீள எடுக்கமுடியாமல் சிக்குப்பட்டுச் சிதறுண்டுபோகிறார்கள். சிதறடித்தவர்கள் ஏதோ ஒருவிதத்தில் பிணையோடு வெளியே வந்து விடுகிறார்கள். சமூகம் குற்றவாளிகள் யாரென்று இனம் கண்டு கொள்கிறது. சட்டமோ அதைக் கண்டு பிடிக்க வருடங்களாகின்ற துர்ப்பாக்கிய நிலையில் குற்றங்கள் வலுவற்றதாகிப் பழங்கதையாகிவிடுகிறது. இதுவே இலங்கையன் தலைவிதியாகிறது. குற்றவாளி திருந்த வழி சமைக்கப்பட வில்லை. பிணை துணையாகிவிடுகிறது.

**போட்டி**

பயணிகளை ஏற்றுவதில் போக்குவரத்து வாகனங்கள் ஏற்படுத்தும் பயமுறுத்தும் வகையிலான இயம வேகம் குறிப்பாக யாழ்ப்பாண மக்களைக் கலக்க முறச் செய்கின்றன. இத்தகு அவசர, அசுர ஆத்திரமுறச் செய்யும் வேகத்தினால் நீதி நெறிகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. இதனைச் சரிசெய்ய முடியாமல் சட்டம் தவிக்கிறது. ஆயிரம் பேரைக் கொன்று பலி கொடுத்த பின்னரும் நாம் நம்மைத் திருத்தவில்லையாயின் ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது என்பது தானே உண்மை. வீதியிலும் கல்விதானே அவசியம் வேண்டப்படுகிறது. கல்விக்குரிய எந்தவொரு பக்குவத்தையும் வீதியில் காண முடியவில்லை. ஒதுங்கி போகவும் முடியவில்லை. ஓரமாகப் போகவும் முடியவில்லை. நடந்து போகவும் முடியவில்லை. கடந்து போகவும் முடியவில்லை. வாய்திறக்கவும் முடியவில்லை. நல்ல தமிழைக் கேட்கவும் முடியவில்லை. ஒரு விபத்து நடந்து விட்டால் பிழை, சரி என்று பார்ப்பதில்லை. வாகனங்கள் ரீதியாகக் கட்சி பிரிந்து பிழையைச் சரியாக்குவார்கள். சரியைப் பிழையாக்குவார்கள். இறந்தவர் அவ்வளவு தான்.

அண்மையில் இரு வாகனங்கள் மோதியதில் ஒரு பாலகன் அகாலமரணமாகி விட்டான். வாழும் பிள்ளை, வளரும் பிள்ளை, வைத்தியனாக வரக் கூடிய பிள்ளை, கண்ணுக்குள் நிறைந்த பிள்ளை, காலமெல்லாம் இந்த மண்ணைக் காப்பாற்றும் பிள்ளை அநியாய மாகப் பலியாகி விட்டதை எண்ணி எண்ணிக் கண்ணீர் விட வேண்டிய வாகன சாரதிகள் தாம் அந்தப்பாலகனுக்கு (இ)யமனாகி விட்டோமே என்று இன்று வரையல்ல இறக்கும்வரை நோக வேண்டியவர்கள். இப்போ கம்பீரமாகத் தலை நிமிர்ந்து செல்வதை எண்ணி இந்த மண் தனது அனுதாபங்களைக் கண்ணீரால் பதிவு செய்கிறது.

**துஷ்பிரயோகம்**

தந்தை, பெரியதந்தை, இரண்டாமவர், மூன்றாமவர், உறவினர், அயலவர், அடுத்தவர், அன்னியர், போலிச் சமயவாதிகள் எனப் பெரும்பாலானோரின் பலவீனங்கள் ஒவ்வொருநாளும் ஊடகங்களில் செய்தியாக வந்து கொண்டேயிருக்கின்றன. மாமா மருமகள், மாமி, மருமகன், குருசீடன் போன்ற சகல உறவு முறைகளும் ஸ்தம்பிதம் அடைந்து விட்டன. கூறமுடியவில்லை.

**எது முதல்**

இந்த நிலையில் பிள்ளைகளின் பாதுகாப்பே முதல் பிரதானம். இரண்டாவதாக உங்கள் பிள்ளைகள் இருபத்து நான்கு மணித்தியாலமும் மிகமிகக் கவனம். மூன்றாவது தான் படிப்பு. பெற்றோர் முதல் இரண்டையும் அறவே விட்டுவிட் டார்கள். அதுவே தற்போதைய யாழ்ப்பாணம்!




# கழுத்தின் கருமையைப் போக்க....

கழுத்து கருமை நிறம் மறைய சில எளிய வழிமுறைகள் இதோ.....

கோதுமை மா, ஓட்ஸ் பவுடர், பாசிப்பயறு மாவு இந்த மூன்றையும் சமமாக எடுத்து, பாலுடன் திக்காக குழைத்துக் கொள்ளவும். அதைக் கழுத்தில் தடவி சில நிமிடங்கள் மசாஜ் செய்து 20 நிமிடம் அப்படியே விட்டு விடுங்கள். பிறகு கழுவிக் கொள்ளவும்.

பப்பாளி பழத்தின் தோல், எலுமிச்சை பழத்தோல், ஓரஞ்சு பழத்தோல் இதில் ஏதாவது ஒன்றை நன்றாக அழுத்தி கழுத்தில் தேய்த்து வந்தால் படிப்படியாக கருமை நிறம் மறையும்.

முட்டைக்கோசை அரைத்து அந்தச்சாறையும்கறுப்பாக நிறம் மாறிய கழுத்தில் தேய்க்கலாம். இதனுடன் சிறிது தேன் அல்லது எலுமிச்சைசாறு கலந்து தேய்ப்பது கழுத்து கருமையை போக்குவதோடு மினுமினுப்பையும் தரும்.



# முகத்துக்கு ஏற்ற பேஸ் பேக்

### மிருதுவான சருமம்

கடல்பாசி ஒரு கரண்டி, தேன் ஒரு கரண்டி இரண்டையும் கலந்து நன்றாக முகத்தில் பூசி 10 நிமிடம் கழித்து குளிர்ந்த நீரில் கழுவவும்.

கடல்பாசியில் விற்றமின்கள் நிறைய இருப்பதால் மென்மையான சருமம் கொண்டவர்களுக்கு இந்த பேக் மிகவும் நல்லது.

### வறண்ட சருமம்

முல்தாணி மெட்டி ஒரு தேக்கரண்டி, தேன் ஒரு தேக். கரண்டி, முட்டையின் வெள்ளைக் கரு இதனை ஒன்றாகக் கலந்து முகத்தில் பூசி 15 நிமிடங்கள் கழித்து சிறிது வெது வெதுப்பான நீரில் கழுவவும்.

இந்த பேக் சருமத்தை மிருதுவாக்கி சுருக்கங்கள் ஏற்படாமல் தடுக்கும்.

### எண்ணெய்ச் சருமம்

வெள்ளரிக்காய்ச்சாறு ஒரு தேக்கரண்டி, தேன் ஒரு தேக்கரண்டி, எலுமிச்சைசாறு ஒரு தேக் கரண்டி. இதனை ஒன்றாகக் கலந்து முகம் மற்றும் கழுத்து பகுதிகளில் தடவவும். 15 நிமிடங்கள் கழித்து நீரில் கழுவவும். இந்த பேக் போடுவதால் சில நாள்களில் எண்ணெய் பசை குறைந்து விடும். பருக்களும் வராது.



# மாம்பழ குச்சி ஐஸ்

### தேவையானவை

- பால் - அரை லீற்றர்
- அரிசி மா - 2 கரண்டி
- சீனி - 100 கிராம்
- பாதாம் - சிறிது
- முந்திரி - சிறிது
- மாம்பழம் - ஒன்று

### செய்முறை

பாலை நன்கு வற்றக் காய்ச்சவும். அரிசி மாவுடன் சீனியைக் கலந்து கொண்டு சிறிது சிறிதாக கொதித்துக் கொண்டிருக்கும் பாலில் போட்டுக் கட்டிப் பிடிக்காமல் கலக்கவும். அல்லது மாவைத் தண்ணீரில் கரைத்தும் சேர்க்கலாம். சுமார் 5 நிமிடங்கள் விடாமல் கிளற வேண்டும். மா நன்கு வெந்து, கலவை கெட்டியானதும் நெய்யில் வறுத்த பாதாம், முந்திரி துண்டுகளைப் போட்டு கலக்கி இறக்கி ஆறவிடவும். இதற்கிடையே மாம்பழத்தைத் தோல் சீவி நீளநீள துண்டுகளாக நறுக்கி மிக்சியில் போட்டு கூழாக அரைக்கவும். பால் அரிசி மாக் கலவை ஆறியதும் அதில் மாம்பழக் கூழ் சேர்த்து கலக்கவும். பின்னர் இதை குல்பி அச்சில் ஊற்றி குளிர்சாதனப்பெட்டியில் வைக்கவும். குல்பி அச்சு இல்லாதவர்கள் சிறிய கிண்ணங்களில் ஊற்றி வைக்கலாம். மாம்பழ குல்பி உறைந்ததும் எடுத்து பரிமாறலாம்.



# பருக்கள் வராமல் இருக்க...

கண்டிப்பாக ஒவ்வொருவரும் பருக்களால் மிகுந்த கஷ்டத்தை அனுபவித்திருப்போம். இதற்காக எத்தனையோ கிறீம்களை வாங்கிப் பயன்படுத்தியிருப்போம். இருப்பினும் எந்த ஒரு பயனும் கிடைத்தபாடில்லை. ஆனால் நமது பாரம்பரிய இயற்கை மருத்துவ முறையான ஆயுள்வேதத்தில் பருக்கள் வராமல் இருக்கவும், வந்த பருக்கள் விரைவில் நீங்கவும் ஒரு சில குறிப்புக்கள் உள்ளன.

### கசப்பான உணவுகள் அவசியம்

ஆயுள்வேத மருத்துவமானது, உணவில் கசப்பான உணவுப் பொருள்களை அதிகம் சேர்க்கச் சொல்லும். ஏனெனில் கசப்பான் உணவுப் பொருள்கள் குருதியைச் சுத்தம் செய்வதோடு, சருமத்தில் எண்ணெய் சுரப்பையும் கட்டுப்படுத்தும். எனவே கசப்பான உணவுப் பொருள்களான பாகற்காயை வாரம் ஒருமுறை உணவில் சேர்ப்பதோடு, தினமும் சிறிது வேப்பிலையை உட்கொள்வது, பருக்கள் வருவதைத் தடுத்து விடுவதோடு, உடல் ஆரோக்கியத்தையும் மேம்படுத்தும்.

### தக்காளி ஜூஸ்

தக்காளியை அரைத்து சாறு எடுத்து, அந்தச் சாற்றைத் தினமும் இரவில் படுக்கும் முன் முகத்தில் தடவிக் கொண்டு தூங்கச் செல்ல வேண்டும். இப்படி அன்றாடம் பின்பற்றி வந்தால், முகம் பருக்களின்றி பொலிவோடு இருக்கும்.

### மஞ்சள் சிகிச்சை

பருக்களைப் போக்க ஆயுள்வேதம் என்று வரும் போது, அதில் நிச்சயம் மஞ்சளும் இடம் பெறும். அதற்கு மஞ்சள் மற்றும் இஞ்சியை சரிசமமாக எடுத்துக் கொண்டு அரைத்து பேஸ்ட் செய்து, இரவில் படுக்கும் போது பாதிக்கப்பட்ட இடத்தில் தடவ வேண்டும். இப்படி ஒரு 3 நாள்கள் தொடர்ந்து செய்து வந்தால், விரைவில் குணமாகும்.

### யோகா

யோகா உடல் ஆரோக்கியத்தை மட்டும் மேம்படுத்துவதோடு, பல சரும பிரச்சினைகளையும் குணப்படுத்த உதவும். அதற்கு வாயில் காற்றை நிரப்பி சிறிது நேரம் கழித்து மெதுவாக காற்றை வெளிவிட வேண்டும். இப்படி தினமும் 10-12 நிமிடம் செய்து வந்தால், நல்ல மாற்றத்தை நீங்களே உணர்வீர்கள்.

### சந்தன பேஸ்ட்

சந்தனப் பொடியை வேப்பிலை தண்ணீர் சேர்த்து கலந்து, முகத்தில் தடவி ஊற வைத்து கழுவ வேண்டும். இப்படி செய்தால், சருமத்தில் உள்ள எந்த ஒரு பிரச்சினையும் நீங்கி, சருமம் பிரகாசமாகவும், சுத்தமாகவும் இருக்கும்.



# வரலாற்றில் இன்றைய தினம்

1370 – பெல்ஜியத்தில் யூதர்கள் படுகொலை செய்யப்பட்டதுடன் எஞ்சியவர்க்ள வெளியேற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

1659 – பிரான்ஸ், இங்கிலாந்து மற்றும் நெதர்லாந்து ஆகியன ஹெறட்ஜஸ் கொன்செண்ரோ ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.

1799 – யூதர்களுக்கு ஜெருசேலத்தை மீள ஸ்தாபிப்பதற்கு ஆதரவாக நெப்போலியன் அறிக்கை வெளியிட்டார்.

1807 – சுட்லெஜ் ஆங்கில நகரின் பெரும் பகுதி தீயால் அழிந்தது.

1848 – கரிபியன் கடல் கிழக்குப் பகுதி மார்டினிக்கில், அடிமைத் தனம் இல்லாமல் செய்யப்பட்டது. இவ்வகையில், அடிமைத்தனத்தை ஒழித்த பிரான்சின் 18ஆவது பிராந்தியம் மார்டினிக் ஆகும்.

1888 – வானுயர்ந்த கட்டடங்களை அமைக்கும் முறைமைக்கான காப்புரிமத்தை லெறோய் பவிங்ரன் பெற்றுக் கொண்டார்.

1897 – தேமஸ் நதிக்குக் கீழான கறுப்புச் சுவர் சுரங்கப் பாதை உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

1906 – பறக்கும் இயந்திரத்துக்கான காப்புரிமத்தை அமெரிக்காவின் றைற் சகோதரர்களுக்கு வழங்கியது.

1927 – 8.3றிட்சர் அளவிலான உலகிலேயே மிக மோசமான நிலநடுக்கமொன்றில் – சீனாவின் சிணாங் பகுதிக்கு அண்மையில், 200, 000 பேர் வரை சாவு.

1939 – ஜேர்மனியும், இத்தாலியும் உருக்கு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.

1941 – பிரித்தானிய துருப்புக்களால் பாக்தாத் தாக்கப்பட்டது.

1942 – கூட்டுப்படைகள் சார்பில் மெக்ஸிக்கோ இரண்டாம் உலக மகா யுத்தத்தில் இறங்கியது.

1960 – தெற்கு சிலியில் 9.5 அளவிலான புவியதிர்ச்சி பதிவு. பதியப்பட்ட பதிவுகளில் இதுவே மிக அதிக அளவிலான புவியதிர்ச்சி ஆகும்.

1962 – கொன்ரினென்ரல் விமானம் 11 இல் குண்டு வெடித்ததில் விபத்துக்கு உள்ளாகியது.

1967 – பெல்ஜியம் புறுசெலில் எல் இனவேசன் கடைத் தொகுதியில் ஏற்பட்ட தீயில் 320 பேர் சாவு. 150 பேர் வரை காயம்.

1972 – இலங்கையில் புதிய அரசியலமைப்பு கொண்டுவரப்பட்டது. இதனூடாக நாடு சிறிலங்கா என்ற பெயருடன், பொதுநலவாய நாடுகளுடனும் இணைந்து கொண்டது.

1990 – வடயேமன், தென் யேமன் இணைந்து யேமன் குடியரசு உருவாகியது.

1990 – வின்டோஸ் –3 இயங்குமுறையை மைக்கிறோ சொப்ற் வெளியிட்டது.

1992 – பொஸ்னியா ஹெ ஷிகோவினா, குரோஷியா மற்றும் ஸ்லொவேனியா ஐ.நாவில் இணைந்தன.

1999 – தமிழ் இளைஞர்களை படையில் சேர்க்கும் முயற்சி தொடரும் என இராணுவத் தரப்பு அறிவிப்பு.

1999 – போரைத் தொடரக் கோரி பயங்கரவாதத்துக்கு எதிரான தேசிய இயக்கம் ஆர்ப்பாட்டம்.

2003 – வாகரை பிரதேச சபை முன்னாள் தலைவர் சுட்டுக் கொலை.

2003 – அல்ஜீரியாவில் பூகம்பம் 500 பேருக்கு மேல் உயிரிழப்பு.

2006 – நோர்வே தூதுவர் உதயன் அலுவலகத்தையும் தீவகப் படுகொலை இடங்களையும் நேரில் பார்வையிட்டார்.

2006 –இரண்டு நாள்களில் தமிழகத்துக்கு 314 இலங்கை அகதிகள் சென்றடைவு.

2012 – டோக்கியோ ஸ்கைட்றீ கோபுரம் பொது மக்களுக்குத் திறந்து வைக்கப்பட்டது.

# பழமொழி

1. வெயிலில் சென்றவனுக்குத் தான் நிழலின் அருமை புரியும்
2. கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்த்துக்கொண்டு கொடுக்கும்
3. விருந்தும் மருந்தும் மூன்று நாள்கள்
4. ஊரான் வீட்டு நெய்யே என் பெண்டாட்டி கையே
5. கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைக்காதே
6. உயிர் காப்பான் தோழன்
7. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்
8. போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து
9. ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு
10. படிப்பது இராமாயணம் இடிப்பது பெருமாள் கோயில்
11. சிறு துரும்பும் பல் குத்த உதவும்
12. ஏழை என்றால் மோழையும் பாயும்
13. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்
14. உதட்டில் உறவு உள்ளத்தில் பகை
15. ஆடு பகை குட்டி உறவா?
16. இளங்கன்று பயமறியாது
17. பேராசை பெரு நஷ்டம்
18. உப்பு விளைவதும் தண்ணீரிலே, கரைவதும் அதிலேயேதான்.
19. ஆடிப் பட்டம் தேடி விதை
20. விதை ஒன்று போட்டால் சுரை ஒன்று முளைக்குமா?



# இயற்கையின் குழந்தைகள்!

ஆர்த்தி, அன்பும் இரக்கமும்கொண்ட சிறுமி. அவளின் தங்கை கீர்த்தி, அதற்கு நேர்மாறானவள்.

ஆர்த்திக்கு இயற்கையின் மீது அவ்வளவு பிரியம். தன் வீட்டின் பின்புறத்தில் தோட்டம் அமைத்து, விதவிதமான பூச்செடிகளை வளர்த்துவருகிறாள். அங்கே வரும் பறவைகள், அணில், வண்டுகளுக்குக் கூட செல்லப் பெயர் வைத்து அழைப்பாள்.

கீர்த்திக்கு இது எல்லாம் கொஞ்சமும் பிடிக்கவில்லை. செடி வளர்க்கிறேன், கொடி வளர்க்கிறேன் என நீ செய்யும் காரியத்தால், பூச்சிகள்தான் வருகின்றன எனச் சிடுசிடுப்பாள்.

ஒரு நாள், ஆர்த்தி தோட்டத்தில் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றிக்கொண்டிருந்தாள். கீர்த்தியும் அங்கே இருந்தாள். அப்போது, ரோஜா முள்ளில் ஒரு அழகிய வண்ணத்துப்பூச்சி சிக்கிக்கொண்டு படபடத்தது.

அந்த வண்ணத்துப்பூச்சியை பக்குவமாகப் பிடித்த ஆர்த்தி, மெதுவாக விடுவித்து, பறக்கவிட்டாள்.

இதைப் பார்த்த கீர்த்தி, சரியான முட்டாள். இவ்வளவு அழகான வண்ணத்துப்பூச்சியை விளையாட வைத்துக்கொள்ளாமல் விட்டுவிட்டாயே என்றாள்.

இந்த உலகில் உள்ள ஒவ்வோர் உயிரினமும் சுதந்திரமாக வாழவே படைக்கப்பட்டவை. நமது சந்தோசத்துக்காக அவற்றை அடைத்துவைப்பது சரியல்ல என்றாள் ஆர்த்தி.

மறுநாள்... இருவரும் தோட்டத்துக்கு வந்தபோது, ஆச்சரியம் காத்திருந்தது. அங்கே ஒரு சிறுமி நின்றிருந்தாள். கண்ணைக் கவரும் அழகான ஆடையில் புன்னகைத்தாள்.

யார் நீ... எங்கள் தோட்டத்தில் நீ எப்படி வந்தாய்? எனக் கேட்டாள் கீர்த்தி.

உன் தோட்டமா? உனக்குத்தான் இந்தத் தோட்டமே பிடிக்காதே. ஆர்த்திதான் எல்லாச் செடிகளையும் வளர்க்கிறாள். நேற்று, என் குழந்தைகளில் ஒன்றான வண்ணத்துப்பூச்சியைக் காப்பாற்றினாள். அதற்கு நன்றி சொல்லவே வந்தேன் என்றாள் அந்தச் சிறுமி.

இதைக் கேட்ட ஆர்த்தி, இந்த விடயம் உனக்கு எப்படி தெரியும்? எனக் கேட்டாள்.

ஆர்த்தி, நான்தான் இயற்கைத் தேவதை. பூக்கள், பூச்சிகள், புழுக்கள் எல்லாம் எனது குழந்தைகளே. உன்னைப் போன்ற அன்பான மனிதர்களை நம்பியே அவற்றை நான் படைக்கிறேன். நேற்று நீ செய்த செயலுக்கு மிக்க நன்றி என்றாள்.

இதைக் கேட்ட கீர்த்தி, நேற்று, நான் பேசியதையும் இந்தத் தேவதை தெரிந்து கொண்டு இருக்குமே. என்னை ஏதாவது செய்யுமோ? எனப் பயத்துடன் பார்த்தாள்.

கீர்த்தியின் மனதைப் பிடித்ததுபோல அவள் பக்கம் திரும்பிய தேவதை, வருத்தப்படாதே கீர்த்தி. நீ விவரம் தெரியாமல்தான் அப்படி நடந்துகொண்டாய். இனியாவது இயற்கையையும் மற்ற உயிரினங்களையும் நேசிக்கப் பழகு. ஏனெனில், எவ்வளவு அறிவியல் தொழில்நுட்பம் இருந்தாலும் இயற்கைதான் எல்லாவற்றுக்கும் அடிப்படை எனச்சொல்லிவிட்டு காற்றில் கலந்தாள் இயற்கைத் தேவதை.

ஆர்த்தி, அந்தத் தண்ணீர் ஜாடியை இப்படிக் கொடு. இனி, நீ ஒரு நாள், நான் ஒரு நாள் என செடிகளுக்கு தண்ணீர் ஊற்றிக் கவனித்துக்கொள்வோம் என்றாள் –கீர்த்தி.

# இனிய மரங்களே வளருங்கள்

எங்கும் பசுமை உலவட்டும்
இனிய மரங்கயே வளருங்கள்.
விண்ணில் ஓசோன் ஓட்டையை
ஒழுங்காய் அடைக்க மரம் நடுங்கள்.

மண்ணில் மாசை நீக்கிடுங்கள்
மரங்கள் தூய காற்று தரும்.
கண்ணைக் காத்தல் இயல்பாகும்
கருத்தாய் மண்ணைக் காத்திடுங்கள்.


எங்கும் மரங்கள் உருவானால்
இயற்கை அன்னை சிரித்திடுவாள்!
சின்னஞ்சிறிய மலர் நீங்கள்
சிரித்து மகிழ்ந்து களித்திடுங்கள்!

உங்கள் வீடு பள்ளி யெலாம்
ஓங்கி உயர மரம் நடுங்கள்.
தங்க மின்னல் ஒளி வீசத்
தரணி யெங்கும் மழைபெய்யும்!

கொஞ்சு மேகம் மலை தழுவும்
குளிரும் பூமி மழை கொட்டும்!
பஞ்சம் போகும் பசி நீங்கும்



செ.தீர்க்கஜன்,
தரம் – 8C
யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்.



நந்தகுமார் விதுஷன்,
தரம் – 8C
யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்.



# இந்த வாரம்

**22.05.2016 முதல் 28.05.2016 வரை**

*உங்களுக்கு எப்படி?*

## மேடம்

சுக்கிரன், சூரியன், குரு, கேது அதிக அளவு நன்மை தருவர். வெகுநாள் திட்டமிட்டபணி நிறைவேறும். வாழ்வியல் நடைமுறை சிறப்பாகும். நண்பர்கள் கேட்ட உதவியை வழங்குவீர்கள். வீட்டில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். பயணங்கள் இனிதாக அமையும். புத்திரர்கள் விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். தொழிலில், அதிக உழைப்பால் உற்பத்தி, விற்பனை கூடும். பணியாளர்கள் சிறப்பாக பணிபுரிய அதிக தொழில்நுட்பம் அறிந்து செயல்படுவர். பெண்கள் குடும்பத்தின் எதிர்கால நலன்களை கருத்தில் கொள்வர். வாழ்க்கைத் துணைவர் உங்கள் எண்ணங்களுக்கு ஏற்ப நடந்து கொள்வார். மாணவர்கள் முயற்சியுடன் படித்து முன்னேறுவர்.

## இடபம்

சுக்கிரன், சந்திரன் அனுகூல பலன் தருவர். சுற்றுப்புறத்தில் நடக்கும் நிகழ்ச்சிகள் மனதை சிரமப்படுத்தும். நண்பர்களின் ஆலோசனை, உங்களை நல்வழியில் செயல்பட வைக்கும். கொடுக்கல் வாங்கலில், நிதானம் வேண்டும். வாகனப் பராமரிப்பு செலவு அதிகரிக்கும். உடல் ஆரோக்கியம் பலம் பெறும். புகைமைக் குணம் உள்ளவர்கள் விலகிப் போவர். தொழில், வியாபாரத்தில், அளவான மூலதனம் இட்டால் போதும். பணியாளர்கள் பணிகளை முடிக்கத் தாமதமாகி, நிர்வாகத்தின் அதிருப்திக்கு ஆளாகலாம். பெண்களுக்கு, கணவரின் பேச்சும் செயலும் ஆறுதலாக இருக்கும். மாணவர்களுக்கு நண்பர்களுடன் கருத்து வேறுபாடு வரலாம்.

## மிதுனம்

சூரியன், குரு, கேது தவிர, மற்ற கிரகங்களால் நன்மை கிடைக்கும். பேச்சு, செயலில் நிதானம் இருக்கும். திட்டமிட்ட பணிகளை ஆர்வத்துடன் நிறைவேற்றுவீர்கள். உறவினர்களுடன் மகிழ்ச்சிகர சந்திப்பு ஏற்படும். பயணங்கள் அதிகரிக்கும். புத்திரர்கள் அறிவார்ந்த செயலால் பெருமை தேடித்தருவர். கடனாக கொடுத்த பணம் திரும்ப கிடைக்கும். உடல் ஆரோக்கியம் சீராக இருக்கும். மனைவி விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். தொழில், வியாபாரத்தில், கூடுதல் உழைப்பால் மட்டுமே வளர்ச்சி கிடைக்கும். பணியாளர்களுக்கு சக பணியாளர்களுடன் பிரச்சினை வரலாம். பொறுமை தேவை. பெண்கள் குடும்ப நலனுக்காக சேமிக்க முயற்சிப்பர். மாணவர்களுக்கு விரும்பிய கல்லூரியில் இடம் கிடைக்கும்.

## கடகம்

சூரியன், புதன், குரு அனுகூல பலன் தருவர். புதிய திட்டங்களை விரைந்து முடிப்பீர்கள். நிகழ்வுகள் இனிதாக அமையும். உடன் பிறந்தவர்கள் உதவுவர். வாகனங்களை இயக்கும் போது கவனம் தேவை. புத்திரர்கள் உங்கள் வழிகாட்டு தலை ஏற்கத் தயங்குவர். குடும்பத்தில் ஒற்றுமை, மகிழ்ச்சியைப் பாதுகாக்க வேண்டும். உடல்நிலை பலம் பெறும். தொழிலில், உற்பத்தி, விற்பனை அதிகரித்து, இலாபம் கூடும். அரசு சார்ந்த உதவிகள் கிடைக்கும். பணியாளர்கள், நிர்வாகத்தின் பாராட்டைப் பெறும் வகையில் பணிபுரிவர். பெண்கள் நகை, புத்தாடை, ஆடம்பரப் பொருள் வாங்குவர். கணவருடன் கருத்து வேறுபாடு வரலாம். பொறுமை தேவை. மாணவர்கள், சுற்றுலாவில் ஆர்வம் கொள்வர். லட்சுமி நரசிம்மரை வழிபடுவது நல்லது.......

## சிங்கம்

சூரியன், சந்திரன், சுக்கிரன் அனுகூல அமர்வில் உள்ளனர். விலகிய உறவினர்கள் விரும்பி வந்து சேர்வர். எதிர்பார்த்த நன்மை நடக்கும். உடன் பிறந்தவர்களுக்கு, சுபநிகழ்ச்சி நடந்தேறும். வாகனம் இயக்கும்போது, கவனம் வேண்டும். புத்திரர்கள் பிடிவாதத்துடன் நடந்து கொள்வர். கடன் வாங்கும் சூழல் ஏற்படும். மனைவி பெருந்தன்மைக் குணத்துடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரத்தில் போட்டி குறைந்து, இலாபம் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். வெளியூர் பயணங்களை பயன் அறிந்து மேற்கொள்ளவும். பெண்கள், பிள்ளைகள் நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள், பாதுகாப்பற்ற இடங்களுக்கு செல்லக்கூடாது.

## கன்னி

சூரியன், குரு, ராகு தவிர மற்ற கிரகங்கள் அளப்பரிய நன்மை தருவர். மனதில் உற்சாகம் ஏற்படும். செயல்பாடுகள் சுறுசுறுப்பாக அமையும். நண்பர்களின் ஆலோசனை பலனளிப்பதாக இருக்கும். குடும்பத்தில் மங்கள நிகழ்வு உண்டாகும். எதிரிகளின் தொந்தரவு குறையும். பணவரவு நன்றாக இருக்கும். எதிர்காலத் தேவை கருதி சேமிப்பீர்கள். புத்திரர்களின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரம் செழித்து உபரி பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் பொறுப்புடன் பணிசெய்து நிர்வாகத்தின் பாராட்டைப் பெறுவர். பெண்கள் தாராள பணவசதியுடன் மகிழ்ச்சிகர வாழ்வு பெறுவர். மாணவர்கள், படிப்பில் தகுதி தேர்வில் வெற்றி காண்பர்.

## துலாம்

ராகு, குரு, சந்திரன் அனுகூல பலன் தருவர். திட்டமிட்ட பணிகள், அதிக முயற்சியால் நிறைவேறும். உறவினர்கள் பாசத்துடன் நடந்து கொள்வர். வாகனங்களை இயக்கும் போது, மிகுந்த கவனம் தேவை. கடந்தகால நற்செயலுக்கான புகழ் தேடி வரும். புத்திரர்கள் அறிவாற்றல் சிறந்து படிப்பு, வேலையில் முன்னேற்றம் காண்பர். உடல் ஆரோக்கியம் பலம் பெறும். வழக்கு விவகாரங்களில் வெற்றி கிடைக்கும். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில், புதிய திட்டங்களால் பணவரவு அதிகரிக்கும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்ததை விடக் கூடுதல் சலுகை கிடைக்கும். பெண்கள் சிக்கன செலவில் குடும்பத் தேவைகளை நிறைவேற்றுவர். மாண வர்களின் விருப்பம் நிறைவேற பெற்றோர் உதவுவர்.

## விருச்சிகம்

சந்திரன், புதன் ஓரளவு நன்மை தருவர். செயல்களில் மனிதாபிமானமும், நேர்த்தியும் நிறைந்திருக்கும். உடன்பிறந்தவர்களுக்கு உதவுவீர்கள். பயணங்கள் அதிகரிக்கும். பூர்வ சொத்து வகையில், வளர்ச்சியும், நிறைந்த பணவரவும் கிடைக்கும். புத்திரர்களின் குளறுபடியான செயல் மனதுக்கு சிரமம் தரலாம். கடன்களை அடைக்க வேண்டிய நிர்ப்பந்த சூழல் ஏற்படும். மனைவி வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புண்டு. தொழில், வியாபாரத்தில், போட்டியால் இலாபம் குறையலாம். பணியாளர்கள் சலுகை பெற தாமதமாகும். பெண்கள் பிறருக்காகப் பணப்பொறுப்பு ஏற்கக்கூடாது. மாணவர்களுக்கு, விரும்பிய கல்லூரியில் இடம் கிடைக்கும்.

## தனுசு

சுக்கிரன், கேது, சூரியன், குரு நன்மை தருவர். மனதில் புத்துணர்வு ஏற்படும். செயல்களில் மனப்பூர்வமாக ஈடுபட்டு வெற்றி பெறுவீர்கள். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். புதிய வீடு, வாகனம் வாங்க யோகம் உண்டு. புத்திரர்கள் மனதில் ஆன்மிக எண்ணமும், அறிவாற்றலும் வளரும். உடல்நிலையில் சிறு பின்னடைவு ஏற்படும். ஆடம்பரச் செலவால், பணம் கரையலாம், கவனம். மனைவி குடும்ப நலனில் அக்கறை கொள்வார். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி ஏற்படும். புதியவர்களின் ஆதரவு துணை நிற்கும். பணியாளர்கள் நிறைந்த சலுகையும், சன்மானமும் பெறுவர். பெண்கள் புத்தாடை, நகை வாங்குவர். மாணவர்கள் நண்பர்களின் உதவியால் நன்மை அடைவர்.

## மகரம்

செவ்வாய், சனி, புதன், சுக்கிரன் நன்மை தருவர். தர்மச் செயல்களில் ஈடுபடுவீர்கள். அக்கம் பக்கத்தவர், அன்புடன் நடந்து கொள்வர். உடன் பிறந்தவர்களின் பாசம் மனதுக்கு நெகிழ்ச்சி தரும். சிலர், வீடு மாறும் சூழ்நிலை ஏற்படும். மாறினாலும் நன்மையே ஏற்படும். பூர்வ சொத்தில் வளர்ச்சியும், பணவரவும் கூடும். கடன்களைச் செலுத்துவீர்கள். புத்திரர்கள், பெற்றோர் சொல்படி நடந்து பெருமை சேர்ப்பர். மனைவியின் செயல்களை முழுமனதுடன் பாராட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில், இடையூறு விலகி வளர்ச்சி ஏற்படும். பாக்கிப்பணம் கிடைக்கும். பெண்கள் உறவினர் குடும்ப சுப நிகழ்ச்சிகளில் பங்கேற்பர். மாணவர்களுக்கு, நினைத்த கல்வி நிறுவனத்தில் இடம் கிடைக்கும். சாஸ்தா வழிபாடு இடர் நீக்கும்.

## கும்பம்

குரு, சுக்கிரன், சந்திரனால் நன்மை உண்டு. மனதின் உற்சாகம் செயல்களில் வெளிப்படும். மற்றவர்கள் விடயத்தில் தலையிட வேண்டாம். நண்பர்கள், உறவினர்களால் பலன் கிடைக்கும். குடும்பத்தில் மங்கள நிகழ்வு ஏற்படும். வெளியூர் பயணம், இனிய அனுபவம் தரும். குழந்தைகள் குறும்பு செய்து சிரமத்தில் சிக்கலாம். கவனமாக பார்த்துக் கொள்ளவும். எதிரிகளால் உருவான தொந்தரவு விலகும். உடல்நிலை நன்றாக இருக்கும். மனைவி வழி உறவினர்களால் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரம், சுமாரான இலாபம்தரும். பணியாளர்களுக்குநிர்வாகத்துடன் கருத்து வேறுபாடு வரலாம். பெண்கள் வீட்டு செலவுக்கு திண்டாட வேண்டி வரலாம். மாணவர்கள், படிப்புடன் கலைகளிலும் ஆர்வம் கொள்வர். ஆஞ்சநேயர் வழிபாடு நன்மை தரும்.

## மீனம்

ராகு, சுக்கிரன், சூரியன், சந்திரன் ஆதாய பலன் தருவர். செயல்கள் சிறப்பாக அமைந்து நற்பெயர் பெறும். உடன் பிறந்தவர்கள் உதவி கேட்டு அணுகுவர். வீடு, வாகனத்தில் பராமரிப்புச் செலவு கூடும். புத்திரர்கள் உங்கள் சொல் கேட்டு நடப்பர். மனைவி உங்களுடன் ஒத்துழைப்புத் தந்து திட்டங்கள் நிறைவேற உதவுவார். அரச உதவி பெற அனுகூலம் உண்டு. தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரித்து, நிறைந்த வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் சிறப்பாக செயல்பட்டு சலுகை பெறுவர். பெண்கள் புத்தாடை, நகை வாங்குவர். மாணவர்கள் பெற்றோரிடம் பரிசு, பாராட்டு பெறுமளவு மதிப்பெண் பெறுவர். பெருமாள் வழிபாடு பெருமை சேர்க்கும்.

# சிரட்டைக் கள்ளு

■ ஜெ.காயா




அது ஓர் அகன்று விரிந்த சிரட்டை, அதைப் பக்குவ மாகச் சீவி அழுத்த மாக்சி வழுவழுப்பாயும், தூய்மையாயும் ஆக்கி வைச்சி ருந்தார் ஐயா. அதுதான் ஐயா கள்ளு ஊத்திக் குடிக்கிற சிரட்டை.

நீண்டு வளர்ந்து சோடை பத்திப்போன அந்தப் பனை அடிவாரத்தில் தன் நினைவுகளைப் பறக்கவிடுவார் ஐயா. முத்தத்தில் நிண்ட அந் மூன்று சீவல் பனைகளையும் நல்லையாவுக் குத்தான் குத்தகைக்குக் கொடுத்திருந்தார். மாசக் கடைசி எண்டால் கிட்டத்தட்ட ஆறு ரூபா வரைக்கும் வருமானம். அந்தக் காலத்தில அது முடியாத ஒண்டுதான். அந்தப் பருவத்தில ஆச்சியும் தன்ர கொட்டாப் பெட்டிக்குள்ள அந்தக் காசுகளைச் சேர்த்து வைச்சு அழகு பார்த்துக் கொள்ளுவா. அவாதான் அந்தக் கணக்கு வழக்குக்குப் பொறுப்பாயும் இருந்தவாவாம். நல்லையர் கள்ளுச் சீவ வரும்போது மரத்தடியில ஐயா தனிப்பனைக் கள்ளுக் கெண்டு தனியா ஒரு போத்திலும் வைச்சு விடுவார். மனுசனுக்கு உடம்பலுப் பாக்கும் எண்டு ஆச்சியும் ஒரு சாக்குப்போக்குச் சொல்லி விடுவா. ஐயா கள்ளுப் போத்தில் கழுவி வைச்சா, எங்களுக்கும் அண்டைக்குப் புளுகம்தான். சீவல்கார நல்லையரும் பருகிப் பார்த்து நல்லதாயுள்ள தனிப்பனைக் கள்ளில குளவிகள், வண்டுகள் இல்லாம வடிச்சுப் போத்திலுக்க ஊத்தித் தெளிய வைச்சுவிடுவார். அப்பதான் அந்தச் சிரட்டையை ஐயாவுக்குப் பக்கத்தில ஆச்சி கொண்டு வந்து வைப்பா. அது ஓர் அகன்று விரிந்த சிரட்டை, அதைப் பக்குவ மாகச் சீவி அழுத்தமாக்கி வழுவழுப்பாயும், தூய்மையாயும் ஆக்கி வைச்சி ருந்தார் ஐயா. அதுதான் ஐயா கள்ளு ஊத்திக் குடிக்கிற சிரட்டை. அந்த ஒரு போத்தில் கள்ளை இரு தடவைகளில் கொள்ளக்கூடியது அது. சிரட்டைக்குள்ள ஊத்தின அந்தக் கள்ளை முதலில சுவை பார்த்துக் கொள்ளுவார் ஐயா. அப்பேக்கதான் நாங்களும் அதைக்குடிக்க ஆவலோட சுத்தி நிற்பம். ஆளுக் கொரு முடறாக அந்தச் சிரட்டையைப் பிடிச்சு ஐயாவும் பருக்கி விடுவார். அதன் சில்லென்ற தன்மையும், இனிமையும் அண்டைக்கு எங்கட மாலை நேர விளையாட்டுப் பொழுதுக்கு உற்சாகமாயும் இருக்கும். மாலை மங்கிப் பொழுது சரிந்த பின்னர்தான் ஆரம்பிப்பார் ஐயா பக்திப் பரவசத்துடன் கூடிய இசைத் தோரணையை. அதுதான் ஐயாவுக்குள்ளிருந்த அந்தச் சிரட்டைக் கள்ளு.

# இராமர் அணை

■ வ.சி.ஸ்ரீஸ்கந்தராசா
ஆத்தியடி, புலோலி.





இலங்கைத் தீவின் மிக இளமையான நிலப்பரப்பு யாழ்.குடாவும், அயற்தீவுகளுமே. இலங்கை, இந்தியத் துணைக் கண்டத்தின் ஒரு பகுதியே. கலாநிதி க.குணராசா தரும் விளக்கமும் வடபகுதியின் நிலவியலை தெளிவாக்குகின்றது. இந்த நிலப்பரப்பு மயோசின் காலத்துக்குரிய சுண்ணாம்புக் கற்பாறைகளைக் கொண்டுள்ளன. இற்றைக்கு 25 மில்லியன் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலமே மயோசின் காலமாகும். சேதுக்கால்வாய்த் திட்டத்துக்காக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளும், 1977 இல் இலங்கையில் மன்னார் பேசாலை பெற்றோலிய ஆய்வுகளும் பல தகவல்களைத் தந்துள்ளன. இந்த ஆய்வுகள் கடல் அடித்தள தளப்பாறைத் தொடர்கள் சில வற்றை அடையாளம் கண்டுள்ளன. பாக்குத்தொடுவாய் கடலில் பிளவுப் பள்ளத்தாக்கு அமைந்திருப்பது கண்டறியப்பட்டது. இதன் ஒரு துறைத்தளம் மன்னாரிலிருந்து மண்டைதீவு நோக்கியும், மற்ற ஒரு துறைத்தளம் இராமேஸ்வரத்திலிருந்து பேதுரு கடலடித்தளமேடை நோக்கியும் அமைய கண்டறியப்பட்டது. இந்தியாவையும் இலங்கை யையும் இணைக்கின்ற கண்ட மேடை அமைப்பு ஒன்றாக இருந்தமைக்கு சான்று. காரைதீவு, வேலணை, புாலைதீவு, மண்டைதீவு, எழுவைதீவு, அனலைதீவு, நயினாதீவு, நெடுந்தீவு, இரணைதீவு, கச்சதீவு என்பனவும் வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி என்பனவும் இராமேஸ்வரத் தீவுகளும் மயோசின் காலத்தில் தோன்றிய சுண்ணாம்புக் கற்பகுதிகள் என்பது தெளிவு. அமெரிக்க நாசா நிறுவனம் பாக்கு நீரிணையின் செய்மதி நிழல் படங்கள் எடுத்தது. இவை கடலடித் தளப்பாதை உள்ளதைக் காட்டுகின்றன. இந்தப் பாதை கிட்டத்தட்ட 30 கிலோ மீற்றர் நீளம் கொண்டது. இந்தப் பாதையே ஆதாம் பாலம் என்றும் இராமர் அணை என்றும் வழங்கப்படுகின்றது. இதன் நிமித்தமே சேது சமுத்திரத் திட்டத்தின் தாமதம்.

# போதைப் பொருள்களின் மையமாக விளங்கும் குடாநாடு



ந.லோகதயாளன்

வடமாகாண இளைஞர் சமூகத்தைச் சீரழிக்கும் போதைப்பொருளுக்கும், மதுபானத்துக்குமான பிரதான விற்பனைக் களஞ்சியமாக காணப்படும் யாழ்ப்பாணக் குடாநாட்டை மீட்பதற்கு வரப்போகும் மீட்பர் எவர் என்ற ஏக்கமே தற்போதைய குடாநாட்டின் பிரதான கேள்விக்கணையாகவுள்ளது.

வடக்கின் ஐந்து மாவட்டங்களையும் பொறுத்த மட்டில் யாழ்ப்பாண மாவட்டமே அதிக மதுபானச் சாலைகள் நிரம்பி வழிகின்றது. யாழ் குடாநாடு முழுவதுமாக 47 மது பானச் சாலைகளும் 22 ரெஸ்ரோரண்களுமாக மொத்தம் 69 மது மையங்கள் தனியாரால் நடத்தப்படுகின்றன. இவற்றை மட்டுமே மதுவரித் திணைக்கள அதிகாரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தமுடியும் .

இவற்றைவிட இராணுவத்தினரால் நடத்தப்படும் சில ரெஸ்றோரண்டுகளும் உள்ளன. குறிப்பாக தல்செவன போன்றன. இதேபோல் அண்மையில் ஜனாதிபதியினால் நகரின் மத்தியில் திறந்துவைக்கப்பட்ட விடுதிகளை மதுவரித் திணைக்கள அதிகாரிகள் கூட எட்டியும் பார்க்க முடியாது. இவ்வாறானவையும் படையினரால் ஆறு இடங்களில் நடத்தப்படுகின்றன.

இவற்றுடன் உள்ளூர்த் தொழிலாளர்களின் உற்பத்தியான கள் விற்பனை மையங்கள் 148 இடங்கள் கள்ளுத் த்வறனைகளாக இயங்குகின்றன. இவை அனைத்தும் மாவட்ட மதுவரித் திணைக்களத்தின் புள்ளிவிவரங்களின் பிரகாரமே பெறப்பட்டது.

இதேவளை- அடுத்த சந்ததியை நல்வழிப்படுத்தி ஓர் மனிதனைப் பூரண மனிதனாக்கும் வாசிப்பு பழக்கத்துக்குரிய நூலகங்கள் உள்ளூராட்சி மன்றங்களின் கட்டுப்பாட்டில் 55 உம், தனியார் துறைகளின் கீழ் 07 உம் உள்ளதுடன் மத்திய அரசு சார்ந்த துறை சார் நூலகங்கள் 03 உம் என 65 நூலகங்கள் மட்டுமே உள்ளன. இதில் உள்ளூராட்சி சபைகளின் கீழ் உள்ளவற்றில் 06 நூலகங்களும் தனியாரின் கீழ் உள்ளவற்றில் 03 நூலகங்களும் பெயரளவில் மட்டுமே உள்ளன.

இந்த நிலையில் மாவட்டத்தின் பொது இடங்களில் உள்ள நூலகங்களின் எண்ணிக்கையை விடவும் மதுபான விற்பனை நிலையங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கக் காரணமாக இருந்த உயர் கல்வி கற்ற அதிகாரிகள் இன்று இந்த மதுபானங்களாலும் போதைப்பொருள்களாலும் தமது பிள்ளைகளை அதல பாதாளம் நோக்கி நகர்வதைத் தடுக்க முடியாமல் தவிக்கின்றனர்.

குடாநாட்டின் நகர்ப்புறத்தில் வாழும் அரச உயர் அதிகாரி ஒருவர் படும் பாடும் சொல்லிமாளாது. இவரது மனைவியும் அரச உயர் பதவி வகிப்பவர். ஒரேமகன் யாழ்.நகரின் பிரபல பாடசாலை மாணவன். ஆனால் சில காலமாக போதைக்கு அடிமையாகி நிலை தடுமாறுகின்றான். தடுக்க எவ்வளவோ முயன்றும் முடியவில்லை கல்வியை இடை நிறுத்தி கொழும்பு கொண்டு சென்றார் முடியவில்லை. தற்போது மீண்டும் குடாநாட்டுக்கே அழைத்து வந்து விட்டார். ஆனால் அவரின் வேதனை தீர்ந்தபாடில்லை.

இதேவேளை முல்லைத்தீவு ம்ற்றும் கிளிநொச்சி மாவட்டங்கள் சனத்தொகையில் சிறியதாகவுள்ளபோதிலும் நிலப்பரப்பில் பெரியவை. மாவட்டங்களில் இன்றுவரையான தகவலின் பிரகாரம் ஒரு மதுபான சாலை , இரு ரெஸ்றோரண்ட் என்பன ம்ட்டுமே உண்டு என்பதைப் பெருமையுடன் சொல்லிக்கொள்ள முடியும். இருப்பினும் மன்னார் மாவட்டத்தில் 10 மதுபானசாலைகளும் , ரெஸ்ரோரண்டுகளும் , 14 கள்ளுத் தவறணைகளும் உள்ளதோடு வவுனியாவில் 14 மதுபானசாலைகளும் , 11 ரெஸ்றோரண்ட் என்பவற்றுடன் 41 கள்ளுத் தவறணைகளும்உள்ளன.

இதேவேளை- 69 மதுபான விற்பனை நிலையங்களை உடைய யாழ்ப்பானக் குடாநாட்டில் சகல தரங்களையும் உடைய 45 வைத்தியசாலைகளே உள்ளதாக சுகாதார அமைச்சின் தகவல்கள் கூறுகின்றன.

அவ்வாறெனில் மாவட்டத்தின் அத்தியாவசிய தேவையான வைத்திய சாலையை விடவும் மனிதனை மனிதனாக்கும் நூலகங்களை விடவும் மதுபானச்சாலைகளுக்கே நாட்டின் ஆட்சியாளர்கள் முக்கியத்துவம் வழங்குகின்றனரா என்ற பலமான கேள்வியும் எழுகின்றது. இலங்கை ஒரு ஜனநாயக சோஷலிச குடியரசு என்றுதான் சொல்லப்படுகின்றது.

> “ வடக்கின் ஐந்து மாவட்டங்களையும் பொறுத்தமட்டில் யாழ்ப் பாண மாவட்டத்திலேயே அதிக மது பானச்சாலைகள் நிரம்பி வழிகின்றன. யாழ்.குடாநாடு முழுவதுமாக 47 மதுபானச் சாலைகளும் 22 ரெஸ் ரோரண்டுகளுமாக மொத்தம் 69 மது மையங்கள் தனியாரால் நடத்தப்படுகின்றன. இவற்றை மட்டுமே மதுவரித் திணைக்கள அதிகாரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தமுடியும் .

யாழ்.மாவட்ட மதுவரித் திணைக்களத்தின் தகவலின் பிரகாரம் விற்பனை வரிகள் அனுமதிபத்திர நடைமுறைகள் அனைத்தும் தவிர்த்து கடந்த ஏப்பிரல் மாதம் கள் அடைத்த வரி வருமானம் 68 லட்சத்து 5 ஆயிரத்து 500 ரூபாவும் , சாரயம் அடைத்தமைக்கான வரியாக 28 லட்சத்து 42 ஆயிரத்து 663 ரூபாவும் என மொத்தம் 96 லட்சத்து 48 ஆயிரத்து 163 ரூபா பெறப்பட்டுள்ளது. ஏனைய வருமானங்கள் தனியா னவையாகும்.

வட மாகாணத்தில் இத்தகைய மது பான விற்பனை நிலையங்களின் ஊடாக சமூகங்கள் சீரழிக்கப்படுகின்ற போதும் இறுதிப் போரின் 2009 இன் பிற்பாடே அரச கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்ட கிளிநொச்சி , முல்லைத்தீவு மாவட்டங்களில் தலா மூன்று மதுபானச்சாலைகள் மட்டுமே உள்ளன என்றால் அங்கு போர் மட்டும் வழி நடத்தப்படவில்லை அடுத்த சந்ததியும் வழிப்படுத்தப்பட்டுள்ளது. என்ற மறுக்க முடியாத உண்மை வெளிப்படு கின்றது.

வட மாகாணத்தின் மதுபானச் சாலைகளின் பணித்தொகுதிகளைவிடவும் அரச பணியாளர்களாக மதுவரித் திணைக்களத்தின் கீழ் மொத்தமாக 97பணியாளர்களேபணியாற்றுகின்றனர். ஆனால் அரசின் வருமானம் வருடம் ஒன்றுக்கு நூறுகோடியை தாண்டுகின்றது.

இவ்வாறு மதுப்பாவனையால் அழிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் சூழலில் மற்றுமோர் அழிவுப்பாதையாக போதைப்பொருள் பாவனையும் குடாநாட்டில் திறந்து விடப்பட்டுள்ளது.



யாழ் குடாநாட்டை ஒரு லட்சத்து 50 ஆயிரம் படையினர் சுற்றி வளைத்து நிற்க, குடாநாட்டுக்குள் ஆயிரக்கணக்கான கிலோ நிறையுடைய கேரள கஞ்சா உள் நுளைகின்றது எனில் எவரின் ஆசீர்வாத்தத்துடன் எடுத்து வரப்படுகின்றது என்பதும் புலனாகின்றது என மாகாண முதலமைச்சரே பகிரங்கமாகக் கூறுகின்றார்.



# எழுத்தறிவித்தவன் இறைவன் எழுத்தை எழுதுவித்தவன் ஆசிரியன்

பழனித்துரை தர்மகுமாரன்

ஆசிரியத்தொழில் என்பது புனிதமானதும், சமூகத்துக்குப் புத்துயிர் ஊட்டக்கூடியதும், எதிர்கால சமூகத்தை இலட்சியத்துடன் உருவாக்குவதும், தொழில்சார் நிபுணர்களையும் புத்திஜீவிகளையும் உருவாக்கி சமூகத்தில் நல்ல பிரசைகளை நடமாடச் செய்து அபிவிருத்தியடைந்த ஆரோக்கியமான கலை, கலாசாரப் பண்பாடுகளுடன் தமிழ் விழுமியங்களைப் பாதுகாத்து வாழுகின்ற ஒரு சமூகத்தை உருவாக்குவதே அன்றைய ஆசிரியர்களினதும் இன்றைய ஆசிரியர்களினதும் நோக்கம். இருந்தாலும் அன்றைய ஆசிரியர்களிடம் அதிகாரம் இருந்தது. இன்றைய ஆசிரியர்களிடம் எந்தவித அதிகாரமும் இல்லை.

ஏனெனில் இன்று மனித உரிமைகள் என்னும் சட்டத்தின் மூலமும் சிறுவர் உரிமைகள் என்னும் சட்டத்தின் மூலமும் ஆசிரியர்களின் அதிகாரம் கட்டப்பட்டுள்ளது. இதனால் இன்றைய ஆசிரியன் கண் இருந்தும் குருடனாகவும், காது இருந்தும் செவிடனாகவும் வாய் இருந்தும் ஊமையாகவும் காணப்படுகின்றான்.

எனவே மாணவர்கள் என்னத்தைச் செய்தாலும் கண்டும் காணாமலும் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

ஆசிரியர்கள் பாடசாலைகளில் கல்வி அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமையப் பாடப்புத்தகத்தில் உள்ள பாடப்பரப்புக்களைப் படிப்பித்து முடிந்தால் மட்டும் போதும். மாணவர்களைத் தண்டித்தோ கண்டித்தோ கற்பிக்கவேண்டிய தேவை இல்லை என்னும் நிலை உருவாகியுள்ளது.

தண்டித்தோ, கண்டித்தோ கற்பிக்கும் ஆசிரியர்களை மாணவர்கள் புகார் செய்தால் அவருக்கு இடமாற்றம் வழங்கப்படுகின்றது. இதனால் ஆசிரியர்கள் வாயடைத்து வலுவிழந்துள்ளனர்.

இதற்கு பெற்றோர்களே ஒரு விடிவை ஏற்படுத்த வேண்டும். ஏனெனில் ஒரு சிற்பி கல்லை சிறு உளி கொண்டு உடைப்பது வன்முறையின் காரணமாக அல்ல. அழகிய சிற்பத்தை உருவாக்குவதற்கே. அதேபோல முட்டையை உடைத்தால்தான் அதனை சிறந்த உணவாக மாற்றமுடியும்.

இதேபோலத் தான் ஓர் ஆசிரியன் மாணவர்களை சிறுதடி கொண்டு கண்டிப்பது அந்த மாணவனை சமூகத்திலே சிறந்தவாறு உருவாக்கவே. இதனைக் கருத்தில் கொண்டு பெற்றோர்கள், விழிப்பாக செயற்பட வேண்டிய காலம் உருவாகியுள்ளது. அதாவது நல்ல ஆசிரியர்களை இனம்கண்டு அவர் மீது நம்பிக்கை கொண்டு ஒரு போதும் அந்த ஆசிரியர் வன்முறையாக மாணவர்களைத் தாக்கவில்லை என்ற எண்ணம் எல்லா பெற்றோர் இடத்திலும் தோன்றினால் இன்றைய பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும்.

அதற்காக எல்லா ஆசிரியர்களையும் ஒரே மாதிரியாகக் கருதவும் முடியாது. ஏனெனில் சில பிரச்சினைகள் இதற்கான சான்றாக வெளிவந்தமை எல்லோரும் அறிந்ததே. இதனையும் பெற்றோர்களே இனம்கண்டு கொள்ள வேண்டிய தேவை உள்ளது.

இந்தச் செயற்பாட்டில் பெற்றோர்கள் தீர்க்கமாக, விழிப்பாக இனம்கண்டு கொள்ளும் செயற்பாட்டை மேற்கொண்டால் இன்று எமது சமூகத்தில் ஏற்பட்டுள்ள கலாசாரச் சீரழிவு, வாள் வெட்டு, போதைப் பொருள் பாவனை, களவு என்பவற்றைக் கட்டுப்படுத்த முடியும்.

இல்லையேல் இன்றைய சமூக செயற்பாடுபோலவே அடுத்த தலைமுறை சமூக அமைப்பும் உருவாகும் என்பதில் ஐயமில்லை. இதனைக் கருத்தில் கொண்டு பெற்றோர்களும், புத்திஜீவிகளும் உடனடியாக ஆக்கபூர்வமான செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டும். ஏனெனில் சட்டங்களில் எந்தவித மாற்றத்தையும் கொண்டுவர முடியாது. ஆனால் சட்டத்துக்கு உட்பட்டு பிரச்சினைகளை சுமுகமாகத் தீர்க்க முடியும். அதற்கு அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஒரு முகப்பட வேண்டும்.

அன்றைய காலத்தில் பாடசாலை அதிபரையோ, ஆசிரியரையோ கண்டால் மாணவர்கள் ஒதுங்குவார்கள். இன்று மாணவர்களைக் கண்ட அதிபர், ஆசிரியர்கள் ஒதுங்கும் காலம் உருவாகியுள்ளது. இதனை மாற்றியமைக்க வேண்டும். அன்றைய காலத்தில் பாடசாலைக்குள் அதிபர், ஆசிரியர்கள் கம்பீரமாகச் செல்வார்கள். மாணவர்கள் பயபக்தியுடன் செல்வார்கள்.

இன்றைய காலத்தில் மாணவர்கள் கம்பீரமாகச் செல்ல அதிபர், ஆசிரியர்கள் பயத்துடனேயே செல்கின்றனர். இன்று என்ன பிரச்சினை பாடசாலையில் எழுகின்றது அதனை எப்படி சமாளிப்பது எனத் தலையைப் பிய்த்துக் கொள்கின்றனர். வீழ்ச்சிக்கு இதுவும் ஒரு காரண மாக அமைகின்றது. இன்றைய கல்வித் துறையின் வீழ்ச்சிக்கு ஆசிரியன் தனது உரிமையை எவ்வாறு நேசிக்கின்றானோ அந்த அளவுக்கு தனது கடமையையும் நேசிக்க வேண்டும் அவையாவன: சகல சந்தர்ப்பங்களிலும் பெற்றோர் மற்றும் பிள்ளைகள் தம்மீது வைத்துள்ள நம்பிக்கையைப் பாதுகாத்தல். பெற்றோர் பாதுகாவலர் தொடர்பில் பிள்ளையின் நம்பகத் தன்மையை உறுதி செய்யக் கூடியவாறு செயற்படல்.

குலம், நம்பிக்கை, ஆண், பெண்பால், சமூக நிலைமைகள், சமயம், மொழி, பிறப்பிடம் ஆகிய காரணிகளைக் கருத்தில் கொள்ள சகல மாணவர்களுக்கும் நியாயமாகவும் பக்கச் சார்பற்ற தன்மையையும் கருணையையும் பாதுகாப்பையும் வழங்கல்.

தமது மாணவர்களைத் தமது பிள்ளைகள் போன்று அழைத்தல்.

மாணவர்களுக்கு இருக்கக்கூடிய விசேட தேவைகள், பிரச்சனைகளை இனம்கண்டு நிவர்த்தி செய்தல். இவ்வாறான கருத்துக்களை ஒவ்வொரு ஆசிரியனும் கடைப்பிடித்து பெற்றோரும் ஒத்துழைப்புடன் செயற்பட்டுக் கொண்டால் அன்றைய மாணவர்களையாவது எதிர்காலத்தில் சிறந்த நற்பிரஜைகளாக உருவாக்க முடியும்.

**கட்டுரையாளர்: ஆசிரியர்**
**உடுவில் மகளிர் கல்லூரி**

## வைகாசியின் மகிமை


தமிழ் மாதங்கள் ஒவ்வொன்றும் தனிச்சிறப்பு வாய்ந்தவை. உத்தராயண காலத்தின் ஐந்தாவது மாதம் வைகாசி. வெயிலின் தாக்கம் இந்த மாதத்தில் அதிகமாக இருக்கும். இந்த மாதத்தில் வெயிலின் தாக்கம் குறைந்து பருவநிலை மாறினால் நாட்டில் பஞ்சமும் நோய் நொடிகளும் அதிகரிக்கும் என்று ஞான நூல்கள் கூறுகின்றன என்று சொல்கிறார்கள்.

வைகாசி மாத விசாக நட்சத்திரம் மிகவும் சிறப்புடையது. அதன் மேன்மை கருதியே மாதத்தின் பெயர் வைகாசி மாதம் ஆனது. இந்த மாதத்தில் புனித நதியில் நீராடி மகா விஷ்ணுவை துளசி பத்திரங்களால் பூசை செய்தால் பேறுகள் பல அடையலாம். வைகாசி சுக்ல சதுர்த்தசியில் தான் மகா விஷ்ணு தன் பக்தன் பிரகலாதனுக்காக நரசிம்ம அவதாரம் எடுத்தார்.

முருகப் பெருமான் சரவணப் பொய்கையில் உதித்தது வைகாசி விசாகம் ஆகும். முருகப் பெருமானுக்கு விசாகன் என்ற பெயரும் உண்டு. நம்மாழ்வார் வைகாசி விசாகத்தில் பிறந்தவர்.

புத்தருக்கு போதி மரத்தடியில் ஞானம் கிடைத்தது வைகாசி மாத பௌர்ணமி நாள் ஆகும். அவர் மோட்சத்தை அடைந்ததும் வைகாசி பௌர்ணமியில்தான். வைகாசி மாத மூல நட்சத்திரம்தான் சம்பந்தரின் திருநட்சத்திர தினம். அன்று சம்பந்தர் திருவிழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

- வசந்தராணி சண்முகம்



# மீள் நினைவுகள்

நீங்காது... ஆம், இற்றைக்கு ஏழாண்டுகள் முன்னோக்கி, நாட்டில் நடந்தது என்ன? எமக்கு நடந்த சோதனை என்ன? ஒவ்வொரு விடியலும் ஓயாத குண்டு மழையாலும், ஏவுகணை சத்தங்களாலும் விடிந்தன. வாழ்வே இருட்டறையாக... அடைத்து வைத்த தவளையாக மனம் உடைந்து, உறவுகள் இழந்து, பட்டினி கிடந்து பசியும், துயரும், பயமும் எம்மை வாட்டி வதைக்க வதைந்து கிடந்தோம்.

எனக்குப் பத்தே வயதானாலும் பல இன்னல்களையம் கஷ்டங்களையும் நேரில் கண்டேன். எத்தனை உயிர்கள் மண்ணோடு மண்ணாய்ப் போனது. என் கண்முன்னே என் நண்பர்களும், ஆசான்களும் மடிந்துபோக எனக்குள்ளே நான் நொந்து கொண்டேன். வடிப்பதற்கு கண்ணீர்கூட இருக்கவில்லை அந்தச் சமயத்தில். விடிவுகளை நோக்கி நான் காத்திருந்த போது உயிர் மடிவுகள் தான் அதிகமாகிக் கொண்டிருந்தன. ஆசையாசையாய் பெரிய பள்ளியில் ஆறாம் தரம் கற்கவென கட்டுக்கட்டாய் அப்பியாசக் கொப்பிகள் வாங்கி வைத்தேன். அத்தனை பக்கத் தாள்களும் காயங்களுக்கும் இரத்தம் படிய வைப்பதற்கும் பஞ்சுக்குப் பதிலாய்ப் பயன்படும் என்று தெரிந்திருந்தால், நிச்சயம் நான் உயிரை மாய்த்திருப்பேன். அம்மா எப்ப நான் பெரிய பள்ளிக்கூடம் போய்ப் படிக்கப் போறேன்? என்று கேட்டபோது பெற்ற அன்னை என் கேள்விகளுக்கு விடையளிக்க முடியாது கண்ணீர்த் துளிகள் சிந்தியபடி கட்டியணைத்த ஞாபகங்கள் இன்னும் என்னைவிட்டு அகலவில்லை. எம் சொந்தங்கள் எம் முன்னால் கால் இழந்தும் கையிழந்தும், மூளை சிதறியும் இரத்த வெள்ளத்தில் மூழ்கி மடிந்த ஞாபகங்களை எப்படித்தான் மறப்பது?

நரகலோகம் சென்றிருந்தால்கூட இப்படியான வேதனைகளை தமிழர்கள் நாம் அனுபவித்திருப்போமா என்பது ஐயம்தான்! எத்தனை நாள்கள் உணவின்றிப் பட்டினி கிடந்திருப்போம். குடிப்பதற்கு பச்சைத் தண்ணீர் கூட இருக்கவில்லை. கால் கொத்து அரிசியில் நான்கைந்து குடும்பங்கள் சேர்ந்து தண்ணீர் விட்டு கஞ்சி என்ற பெயரில் குடித்த ஞாபகம்தான் நினைவில் நிற்கின்றன. எம் கண்முன்னே எறிகணை வீச்சில் தாய் சாவடைந்து போக தாய் இறந்தது அறியாத பிஞ்சுக் குழந்தை முலையில் பால் குடிப்பதையும், பிள்ளை இறந்துபோக தாய் பரிதவிப்பதையும், கடலில் மூழ்கி இறந்து போவதையும், நினைவுகள் எப்படி மறக்கும்? பாதுகாப்பு இல்லை, பதுங்கு குழியில்லை, உணவில்லை, ஒருபுறம் பசியும் மறுபுறம் மழை வெள்ளமும் இன்னொரு புறம் போரும் எம்மை ஆட்கொள்ள, பதுங்கு குழிக்கு வெள்ளம் எம்மை நனைக்க நிம்மதியான நித்திரைகூட இல்லாமல், சொல்லப்போனால் இயற்கை உபாதைகளைக் கூடப் போக்குவதற்கு வழியில்லாமல் பசியாலும் பயத்தாலும், குளிராலும் நடுங்கிக் கொண்டிருந்தோம்.

எல்லாவற்றையும் அனுபவித்த வேதனைகள் எம்மை வதைத்துக் கொண்டிருக்கின்றன. போதாததற்கு மே பதினெட்டே வருடாவருடம் வந்து வருத்துகிறாய், கண்ணீர் சிந்த வைக்கிறாய்.. மீள் நினைவுகளாய்... போரில் இருந்து விடிவு கிடைத்தாலும் நினைவுத்தாயே சோக நினைவுகளில் இருந்து எப்போது எமக்கு விடுதலை தரப்போகிறாய்? போர் காவுகொண்ட ஆசிரியர்களான சிவமாலா, வசந்தராணி ஆகியோருக்கும் நண்பி பர்மிகாவுக்கும் சகோதரிகள் சர்மிகா, நிர்மிகா உறவினர் பத்மநாதனுக்கும் மற்றும் போர் காவுகொண்ட பலருக்கும் கண்ணீர்க் காணிக்கை செலுத்துவதோடு ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்...

விசுவமடு அபிக்குட்டி

# ஏமாற்றாதே மாறாதே....

## சொல்லத்தான் நினைக்கிறார் செல்லத்தம்பி 06

செ.மகேஷ்

ஒருவரை ஒருவர் ஏமாற்றித் திரிவதைப் பலரும் பெரியதோர் புத்திசாலியின் செயல் போலச் சொல்லிப் பெருமைப்படுகிறார்களே: இவர்களையெல்லாம் நாம் என்ன செய்யலாம்? சிவபாதத்தார் செல்லத்தம்பியிடம் கேட்டார்.

செல்லத்தம்பிக்குப் பலர் தன்னை ஏமாற்றிய சம்பவங்கள் மனத்திலே வந்து நிழலாடின. ஏமாறாதே ஏமாற்றாதே என்கிறார்களே! இவற்றை எண்ணியபோது மனத்தில் நிரம்பிய குழப்பம்! தானும் தன்னைச் சுழ்ந்திருப்பவர்களும் ஏமாற்றத்தின் வாயிலாகவே வாழ்ந்தும் தாழ்ந்தும் இருப்பதாக அவருக்குத் தோன்றியது.

யார் யாரை ஏமாற்றுகிறார்கள்? இந்தச் சூழலில் பார்த்தால் ஏமாற்றங்கள் நிறையவே காணப்படுகின்றன. வியாபாரத்தில், வேலைத்தலங்களில் பயணத்தில் பங்கீடுகளில் காதலில், கலியாணத்தில் அரசியலில் ஆட்சியில் என்று எங்குமே பல்வேறு சந்தர்ப்பங்களிலும் ஏமாற்றங்களும் ஏமாற்றுக்காரர்களும் இருக்கவே செய்கின்றனர். அவர்கள் வலிமையோடு வலம் வருவதைக் கண்டும் கேட்டும் அழுவதா சிரிப்பதா என்று அங்கலாய்த்தாலும் செல்லத்தம்பியர் அமைதியாகச் சிவபாதத்தாரைப் பார்த்தார்.

நினைவுகள் அவரை உசுப்பின. ஒருவரை ஒருவர் ஏமாற்றுவதற்குப் பொய்யும் புளுகும் அவசியமானதாகப் போய்விடுவது என்னவோ உண்மைதான். அதேபோலப் புடைவைவியாபாரத்திலே சுருங் காது! சாயம் போகாது! நீண்டநாள் பாவிக்கும் என்று பொய்யுரைத்து ஏமாற்றுவதிலும் அவ்வாறே மிகவும் சுவையானது! சுத்தமானது! சத்துள்ளது எனக் கூறித் தின்பண்டங்களை விற்பனை செய்வதிலும் ஏமாற்றங்கள் இருக்கவே செய்கின்றன. இவை மாத்திரமா? சிந்தித்துப் பார்த்தால் எமது கண்ணுக்குப் புலப்படாமலேயே எங்குமே எதிலுமே ஏமாற்றங்களே நிறைந்திருப்பது தெளிவாகும்.

செல்லத்தம்பியர் முச்சக்கரவண்டி வைத்திருந்த நாள்களில் பயணிகள் பலரையும் ஏமாற்றிப் பயணத் தூரத்தைக் கூட்டி நியாயமற்ற முறையில் பணம் வசூலித்ததால் வந்த இலாபத்தை எண்ணி மகிழ்ந்து போனதுண்டு. அந்தப் பயணங்களினால் ஏற்பட்ட நட்டங்களையும் அதற்கான காரணங்களையும் வெளியே சொல்ல அவருக்கே வெட்கமாகவும் இருந்தது உண்மைதான். அவற்றினால் ஏற்பட்ட பல ஏமாற்றங்களை நினைத்தார். அவை தமது ஏமாளித்தனத்தை வெளிக்காட்டிவிடும் என்பதால் அனைத்தையும் நினைத்தார் வெளியே சொல்லவில்லை. முச்சக்கரவண்டியை ஓட்டிய அன்றைய நாள்களில் அவரது நெற்றியிலிருந்த திருநீற்றுப்பூச்சு அவரை ஒரு நேர்மையாளனாகக் காட்டத் தவறியதில்லை. அதுவும் ஒரு ஏமாற்று வேடந்தான். ஒருநாள் அப்பிரதேசத்துக்குப் புதிதாக வந்த ஒரு பாதிரியார் அயலிலுள்ள உறவினரின் வீடு தேடிப்போக வழிதெரியாமையால் செல்லத்தம்பியரின் முச்சக்கர வண்டியை வாடகைக்கு அமர்த்தினார். ஊருக்குப் புதியவரான பாதிரியாரிடமிருந்து இருநூறு ரூபாதான் செலத்தம்பியர் அறவிட்டிருக்க வேணும். ஆனால் ஐநூறு ரூபாவை ஏமாற்றி அறவிட்டார். இவ்வாறு செல்லத்தம்பியர் பலரையும் ஏமாற்றி அதிகமான கூலியைப் பெற்றதுண்டு. பாதிரியாரை ஏமாற்றிய அன்று முச்சக்கரவண்டி பழுதடைந்து அதனைத் திருத்தி எடுப்பதற்கு ரூபா ஐயாயிரம் வரையில் செலவு செய்ய வேண்டியதாயிற்று. அதனை எண்ணியவருக்கு மீண்டும் சிந்தனையில் சில தெளிவுகள். எதனையும் மனைவிக்குச் சொல்லாமல் இருக்கும் எண்ணமில்லாத செல்லத்தம்பியர் இதனை மனைவிக்குச் சொன்னபோது ஏனப்பா பாதிரியாரை ஏமாற்றி இவ்வளவு பணத்தைக் கூலியாக வாங்கினீர்கள்? என அவள் கேட்டாள். அதற்குச் செல்லத்தம்பியர் அலட்சியமாக அவரொரு வேதக்காரன்தானே என்று பதில் சொன்னபோது அவருக்கும் கடவுள், நம்முடைய கடவுள்தானப்பா என்றாள் மனைவி. ஆதைக் கேட்டதும் செல்லத்தம்பியரின் விழிகள் விரிந்து பெருத்தன.

தனது நெற்றியிலிருந்த திருநீற்றைத் தொட்டுப் பார்த்தார். வெட்கமும் வேதனையும் அவரைத் தின்று தீர்த்தன. இதன் பின்னர் ஏமாற்றிப் பணம் பிடுங்குவதைச் செல்லத்தம்பியர் நிறுத்தியே விட்டார். ஆனால் அதன் பின்னரும் அவர் ஏமாந்த சந்தர்ப்பங்கள் நிறையவே இருந்தன. இந்தச் சம்பவத்தைச் செல்லத்தம்பியர் இப்பொழுது மீட்டுப் பார்த்துக் கொண்டாலும் மீற்றர் பூட்டிய முச்சக்கர வண்டிகள் இதோ வரப் போகிறது என்றார்களே அதுவும் ஏமாற்றம் தானோ! என்று சிந்தித்தார். சிவபாதத்தாரிடத்தில் எதனையும் சொல்லி ஆறத் துணிவு வரவில்லை. உண்மைகள் ஒருபோதும் இலாபத்தை ஈட்டித் தருவதில்லை என்ற உண்மையொன்றேதான் இந்த ஏமாற்றுக்காரர்களின் எண்ணத்தில் இருந்து கொண்டிருக்கிறது. அது என்னவோ உண்மைதான். ஆனாலும் நீதியும், நேர்மையும் நியாயமுமான வார்த்தைகளும் செய்கைகளுமே ஒருவனை வாழ்க்கையின் உச்சத்துக்கு இட்டுச்செல்லும் என்பதை உணர்ந்திருத்தலே அவருக்குத் திருப்தியைத் தந்தது. ஏமாற்றுவதும் ஏமாறுவதும் ஆகிய இரண்டுமே ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என்ற தெளிவு ஏற்படப் பலமுறை அவர் ஏமாந்திருப்பதே காரணம் என்பதை நான் சொல்லத் தேவையில்லை. அவரும் அதனைச் சொல்லத் தயங்கினார். ஆனால் அவரது நினைவிலிருந்து அவை அகலவில்லை.



# முள்ளிவாய்க்காலில் இருந்து மீண்டெழுவோம்!

அன்ரன்

முள்ளிவாய்க்கால் உணர்ச்சியால் கொந்தளித்துக்கொண்டிருந்தது. கடந்த முறை போன்றில்லை, இந்த முறை அந்தப் பகுதி கொஞ்சம் ஒழுங்கமைக்கப்பட்டதாக இருந்தது. ஓங்கி நிமிர்த்தி நடப்பட்டிருந்த கம்பத்திலிருந்து தரையை நோக்கி இழுத்து வரப்பட்டிருந்த நூல்களில் சரசரத்தபடி ஆடிக்கொண்டிருந்த மஞ்சள் சிவப்புக் கொடிகள் விடுதலைப் புலிகளின் காலத்தை நினைவூட்டிக்கொண்டன.

கனத்த அமைதியும் பழுத்த அனுபவமுமாக அந்த வெண் மணல் பிரதேசம் கிடக்கிறது. கடந்த முறைபோன்ற கெடுபிடிகள் இல்லை. ஆயுதங்களின் அணிவகுப்பும், அதிகாரத்தின் பதற்றமும் அங்கில்லை. அரசியல்வாதிகள் வந்து குவிந்திருக்கிறார்கள் என்பதை மினுமினுப்புடன் காலை வெயிலில் பிரகாசிக்கும் பிராடோக்களும் வேறும் வாகனங்களும் கட்டியம் சொல்கின்றன.

இரண்டாவது வருடமாக இந்த இடத்தில்தான் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இடம்பெறுகிறது. போர் முடிந்து 5 ஆண்டுகள் கடந்த பின்னர்தான் மே 18ஆம் திகதி அந்த மண்ணை மீண்டும் எட்ட முடிந்தது கடந்த வருடத்தில். இப்போதையுடன் ஒப்பிட்டால் அந்தச் சூழலே வேறு மாதிரியிருந்தது. புதுக்குடியிருப்பில் இருந்து போகும்போதே வீதி நெடுகிலும் ஆயுதம் தாங்கிய பச்சை உடுத்த இராணுவத்தினர் முகம் கடுக்க நின்றிருந்தனர். பொலிஸாரும் பதற்றத்துடன் மூர்க்கமாகத் தான் தெரிந்தனர். பிரதான வீதியில் இருந்து கப்பலடிப் பக்கமாக (கப்பலடி என்பது சுற்றுலாவிகளுக்குப் போர் எச்சமாகக் காட்டப்பட்ட 'பர்கா-4' என்ற கப்பலின் அடிப்பாகம் கிடக்கும் கடற்கரை) வாகனங்களை உள்ளே நுழையவிடக்கூட மறுத்தார்கள். முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் அங்குதான் நடக்கிறது என்று தவறுதலாக நினைத்து மெதுவாக அந்தத் பக்கம் திரும்ப முயற்சித்த அரசியல்வாதிகளின் வாகனங்களைக்கூட திமுதிமுவென ஆயுதங்களுடன் சூழ்ந்துகொண்டு "ஹேய்... ஸ்டொப்" என்றார்கள். பொலிஸார் வந்து நிகழ்ச்சி இங்கே இல்லை, பிரதான பாதையிலேயே சற்றுத் தொலைவுக்குப் போங்கள் என்றார்கள். வேறு எந்த வாகனத்தையும் பிரதான பாதையில் வேகம் குறைக்கக்கூட அவர்கள் அனுமதிக்கவில்லை. அவசியத் தேவை கருதி அந்தப் பாதையைக் கடக்க முயன்றவர்கள்கூட ஒருவிதப் போர்ப் பதற்றத்துடன் அவசர அவசரமாகவே ஓடினார்கள். விரட்டியும் மிரட்டியும் கொண்டிருந்தவர்களின் முகங்களைக் போலவே உளங்களும் இருண்டு கிடந்தன.

நினைவேந்தல் இடமும் அவசர அவசரமாகவே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நினைவேந்தல் நிகழ்வுகள் எல்லாமுமே ஒருவிதப் பதற்றத்துடன்தான் நடந்தேறின. அவசர அவசரமாக எல்லாவற்றையும் முடித்துக்கொண்டு அங்கிருந்து கிளம்பிவிட்டார்கள். ஒருசில மணி நேரத்தில் அந்த இடத்தை மீண்டும் மயான அமைதி சூழ்ந்துகொண்டுவிட்டிருந்தது. இந்தத் தடவை எல்லாமும் பளிச்சென்றிருந்தது. எங்கும் எந்த ஆயுதங்களும் இல்லை. நினைவேந்தல் இடத்துக்குச் செல்லத் திரும்பும் இடத்தில் மட்டும் இரு பொலிஸார் நின்றனர். வேறு பதற்றங்கள் ஏதுமில்லை. இனம்புரியாத அமைதி மட்டும் நீடு பரவிக் கிடந்தது. நினைவேந்தல் இடம் பளிச்சென்று இருந்து. கடந்த முறை இடம்பெற்ற இடத்திலிருந்து நினைவேந்தல் இடம் சில நூறு அடி தூரத்துக்கு இடம்பெயர்ந்திருந்தது. வேகாத வெயிலைப் பொருட்படுத்தி இரு தகரக் கொட்டகைகளும் போடப்பட்டிருந்தன, வந்திருந்தவர்கள் இளைப்பாறுவதற்காக.

நிகழ்வுகள் சரியாக காலை 9 மணிக்கே ஆரம்பமாகின. வடக்கு மாகாண சபையின் முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினர் து.ரவிகரன் நிகழ்வை வழிப்படுத்தினார். முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் முதலாவதாகச் சுடரை ஏற்றி வைத்தார். தொடர்ந்து கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் நான்கு கட்சிகளின் தலைவர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் மாகாண சபை உறுப்பினர்களும், கற்பூரங்களால் உரமேற்றி அந்தத் தீயைக் கொழுந்துவிட்டெரிய வைத்தனர். அரசியல்வாதிகளுக்கு வழங்கப்பட்ட அதே வாய்ப்பு வந்திருந்த அனைவருக்கும் வழங்கப்பட்டது. அனைத்துக் கைகளும் சேர்ந்து உரமேற்றியதால் அபயம் கேட்ட இரு கைகளுக்கு இடையே கொழுந்துவிட்டது சுடர் அடர் காற்றையும் எதிர்த்து உரத்து நின்றது.

பாதிக்கப்பட்டவர்கள் நினைவேந்தியபோது அவர்களிடம் மிச்சமிருந்த அழுகை வெடித்தெழுந்தது. கண்ணீராய் மண்ணை நனைத்தது. "என்பிள்ளையை இங்கேதான் புதைத்தேன். இப்ப எங்கே என்று தெரியவில்லையே" என்று ஒரு தாய் கதறியது நெஞ்சை உருக்கியது. "மூன்று பேரை இங்கே புதைச்சிட்டுப் போனனே! இப்ப எங்கயெண்டு தேடுவன்" என்று மற்றொரு தாய் கதறினார். கனத்த மனங்களில் இருந்து குருதிக் கசிவை உணர முடிந்தது. நூற்றுக்கணக்கான மக்களும் இந்தமுறை நினைவேந்தலில் தன்னார்வமாகக் கலந்துகொண்டமை காரணமாக அது நீண்ட நேரம் தொடர்ந்தது. அரசியல் வாதிகளின் பேச்சுக்கு இடமளிக்க வேண்டியிருந்ததால் நினைவேந்தலை இடைநிறுத்திக்கொண்டு பேச்சுக்கு இடமளிக்கப்பட்டது. முதலில் கட்சிகளின் தலைவர்கள் உரையாற்றினார்கள். கடைசியில் முதலமைச்சர் உரையாற்றினார். அத்துடன் நிகழ்வுகள் முடிந்தன. மக்களின் நினைவேந்தல் தொடர்ந்தது.

இந்த நினைவேந்தல் இடத்தை யாரும் சொந்தம் கொண்டாத வகையில், அரசியல் அதிகாரங்களைப் புகுத்தாக வகையில் பாதுகாத்து ஒரு நினைவிடத்தை ஏற்படுத்த வேண்டும் என்று தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா கோரிக்கை வைத்தார். இதற்கென அறக் கட்டளை ஒன்றை உருவாக்கி அதனை அரசியல் சார்பற்றதாக நிர்வகித்து அனைத்துத் தரப்பினருக்கும் பொதுவான நினைவிடமாக்குவதை முதலமைச்சர் பொறுப்பெடுத்துச் செய்யவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

முற்கூட்டியே தயாரித்து வந்த உரையை வாசித்ததாலோ என்னவோ முதலமைச்சர் இந்தக் கோரிக்கை குறித்துப் பதிலளிக்கவில்லை. எனினும் அவர் இதனைக் கருத்தில் எடுத்து செயற்படுத்துவார் என்று எதிர்பார்க்கலாம். ஈழப் பெரும் துயரமான இறுதிப் போரில் பல ஆயிரக் கணக்கான மக்கள் கொன்றொழிக்கப்பட்டதன் நினைவாகவும் 21ஆம் நூற்றாண்டின் மிகப்பெரும் இன அழிப்பின் சாட்சியமாகவும் முள்ளிவாய்க்காலில் ஒரு நினைவிடம் எழுப்பப்படவேண்டும். அது ஒட்டுமொத்தத் தமிழர்களின் ஆன்மாவையும் பிரதிபலிப்பதாகவும் அமையவேண்டும். எல்லோர் மனங்களிலும் கனன்றுகொண்டிருந்த நெருப்பு கடந்த ஆண்டு முள்ளிவாய்க்காலில் ஏற்றப்பட்டது. இந்த ஆண்டு அது கொழுந்துவிட்டு எரிந்துள்ளது. அது தொடர்ந்து பாதுகாக்கப்படவேண்டும். அதற்கு அனைவரும் ஒன்றிணையவேண்டியது அவசியம். முள்ளிவாய்க்கால் முடிவல்ல என்பதை உறுதிப்படுத்த தமிழர்கள் அதிலிருந்தே தான் மீண்டெழ வேண்டும். அங்கேதான் நாம் பலத்தைப் பெற்றாக வேண்டும். அதற்கேற்ற வகையில் இனி வரும் காலங்களில் இந்த நினைவேந்தல் ஒருங் கிணைக்கப்பட்டு ஒழுங்குபடுத்தப் படவேண்டியது அவசியம்.








# உன்னோடு கா

## வெற்று முழக்கம்

சிவலிங்கபுரம் என்றொரு கிராமம். அந்த ஊரைச் சேர்ந்த ஜெயவேலுவும் (பிரபு), கீர்த்திவாசனும் (தென்னவன்) உயிர் நண்பர்கள். ஆனால் இருவரது குடும்பங்களுக்கும் இடையில் உருவான குடும்பப் பகை, ஊர்ப் பகையாக மாறிவிடுகிறது. இதனால் ஐந்து தலைமுறைகளாகப் பிளவுபட்டுக் கிடக்கிறது ஊர். குழுவாகப் பிரிந்து கையில் வீச்சரிவாளுடன் அலையும் ஊர்க்காரர்களுக்குத் தெரியாமல் சென்னையில் குடியேறி வசிக்கிறார்கள் நண்பர்கள். பகைக்கு முடிவுகட்டத் தனது மகன் சிவாவை (ஆரி), நண்பன் கீர்த்திவாசனின் மகள் அபிராமிக்கு (மாயா) திருமணம் செய்துவைத்துவிட நினைக்கிறார் ஜெயவேலு. கீர்த்திவாசன் தம்பதிக்கும் அதில்தான் விருப்பம். தங்கள் வாரிசுகள் ஊரைவிட்டு ஓடிப்போனால் அதைவிட தங்களுக்கு பெரிய மகிழ்ச்சி இல்லை என்று நினைக்கிறார்கள். ஆனால் சிவாவும் அபிராமியும் சண்டைக் கோழிகள். இந்த நேரத்தில் சிவலிங்கபுரம் ஊர்க்காரர்களின் கண்களில் இந்தக் குடும்பங்கள் மாட்டிவிடுகின்றன. சிவலிங்கபுரத்துக்கு இழுத்துச் செல்லப்படும் ஜெயவேலுவுக்கும் கீர்த்திவாசனுக்கும் என்ன நடந்தது, ஊர்ப்பகைக்கு அவர்களால் முடிவுகட்ட முடிந்ததா, அவர்களது வாரிசுகள் இணைந்தார்களா இல்லையா என்பதுதான் கதை.

காதல், மண்வாசனை, குடும்பம் ஆகியவற்றின் பின்னணியில் நகைச்சுவை அம்சத்தைக் கலந்து பொழுதுபோக்குப் படம் தர நினைத்திருக்கும் இயக்குநர் அதில் ஓரளவு வெற்றியும் பெற்றிருக்கிறார். இரண்டு குடும்பங்களுக்கு இடையில் உருக்கொள்ளும் பகைக்கான மூல காரணம் அபத்தமாக இருந்தாலும் அதை வெளிப்படுத்தும் காட்சியில் திரையரங்கு சிரிப்பலையில் அதிர்கிறது. ஆரி – மாயா, பால சரவணன் – மிசா ஆகிய இரண்டு இணைகளின் இளமைத் துள்ளல் மிக்க காதல் கலாட்டாவும் கிராமத்து முரட்டு மனிதர்களின் நடவடிக்கைகளும் திரைக்கதையின் கலகலப்பான பகுதிகள்.

அதேபோல சிலைக் கடத்தல் பேர்வழியாக வரும் மன்சூர் அலிகான், மாஸ்டர் மணி என்ற ஆள் கடத்தல் பேர்வழியாக வரும் எம்.எஸ்.பாஸ்கர் ஆகியோர் வந்துபோகும் காட்சிகளும் நகைச்சுவை விருந்து.

முக்கியக் கதாபாத்திரங்களில் நடித்திருப்பவர்கள், துணைக் கதா பாத்திரங்களில் வந்து போகிறவர்கள், குறிப்பாக, வீச்சரிவாளை வைத்துக்கொண்டு தலைவிரி கோலத்துடன் முகத்தில் கொலை வெறி காட்டியபடி கலக்கியிருக்கும் அந்த இரண்டு ஊர்ப் பாட்டிகளின் பங்களிப்பு என இயக்குநர் பெரிய நட்சத்திரப் பட்டாளத்திடம் தேவையான நடிப்பை வாங்கியிருக்கிறார். சத்யாவின் இசையில் பாடல்களும், பின்னணி இசையும் ரசனை. சிவலிங்கபுரம் கிராமத்துக்காட்சிகள், சென்னை மாநகரின் பிரம்மாண்டம் இரண்டையும் வெவ்வேறு பரிமாணங்களில் கதைக்கு ஏற்ப வேறுபடுத்திக் காட்டியிருக்கிறார் ஒளிப்பதிவாளர் சக்தி சரவணன்.

கிராமத்து மனிதர்கள் இப்படியும் இருப்பார்களா, இதுபோன்ற பெற்றோர்களைக் காணமுடியுமா என்று கேட்பவர்களுக்குப் படத்தின் நகைச்சுவைச் சரம் பிடிக்காமலும் போய்விடலாம். மற்றவர்கள் குடும்பப் பின்னணியில் அமைந்த நகைச்சுவைப் படமாக இதை ரசிக்கலாம்.

## மீண்டும் ஒரு சாதாரண படம்



முதல்வரைச் சுற்றி நடக்கும் குற்றங்களைச் சுட்டிக்காட்ட முதல்வரையே கடத்தும் ஒரு பத்திரிகையாளரின் கதைதான் 'கோ 2'. பத்திரிகையாளர் பாபி சிம்ஹா முதல்வர் பிரகாஷ்ராஜைக் கடத்துகிறார். ஆளுங்கட்சித் தொண்டர்கள் பட்டினிப் போராட்டம், கடை அடைப்பு, பேருந்து எரிப்பு என்று கலவரத்தில் ஈடுபடுகிறார்கள். முதல்வரை மீட்க காவல்துறை ஆணையாளர் ஜான் விஜய் தலைமையில் ஒரு தனிக் குழு உடனடியாக அமைக்கப்படுகிறது. முதல்வர் மீட்கப்பட்டாரா? கடத்தலுக்குக் காரணம் என்ன? கடத்திய பாபி சிம்ஹாவின் நிலை என்ன? எல்லாவற்றுக்கும் விடை தருகிறது படம்.

பிரபலங்கள் கடத்தப்படுவதை மிகப் பெரிய அதிரடி நாடகமாக விவரிக்கும் காலாவதியான காட்சியமைப்பு அறவே கூடாது என்று நினைத்ததற்காகவே அறிமுக இயக்குநர் சரத்தைப் பாராட்டலாம்.

2014இல் தெலுங்கில் வெளியான பிரதிநிதி படத்தின் மறுஆக்கமாக இருந்தாலும் தமிழக அரசியல் சூழலுக்கு ஏற்ப காட்சிகளைச் சேர்த்தும், நடப்பு நிலவரங்களைச் சுட்டிக் காட்டியும் கதையுடன் ஒன்ற வைப்பதில் படம் ஈர்க்கிறது. ஆனால் முதல்வர் கடத்தப்பட்ட முக்கியப் பிரச்சினையின் மையத்தை நோக்கி தீர்க்கமாகப் பயணிப்பதற்குப் பதிலாக முக்கோணக் காதல் ஒன்றுக்குள் புகுந்துகொண்டு தட்டுத் தடுமாறி, எரிச்சலூட்டுகிறது படத்தின் முதல் பாதி. முதல்வர் கடத்தப்பட்டதன் காரணத்தை பாலசரவணன் காமெடியாகச் சொல்லும் இடமும் பெரிதாகக் கைகொடுக்கவில்லை.

இரண்டாம் பாதியில் தடம் மாறாமல், தடுமாறாமல் வேகமாக நகரும் திரைக்கதையும் ஏற்றுக்கொள்ளும் விதமாக அமைக்கப்பட்டிருக்கும் முடிவும் படத்தை வலுவான செய்தி சொல்லும் விறுவிறுப்பான படமாக ஆக்குகின்றன. பாக்யம் சங்கரனின் வசனங்கள் இதற்கு உதவியிருக்கின்றன. ஆட்சியாளர்களின் தவறுகளைத் தேர்தல் நேரத்தில் மக்களுக்கு நினைவூட்டுவது போல வசனங்கள் அமைந்துள்ளன. முதல்வரை மீட்கும் பொறுப்பு காவல்துறையிடம் இருந்து தேசிய பாதுகாப்புப் படைக்கு மாறுகிறது. அப்படி மாறும்போது காவல் துறையின் தலையிடல் இருக்க முடியாது. ஆனால், இங்கே தேசிய பாதுகாப்புப் படையினரை காவல்துறை ஆணையாளர் கேலி செய்துகொண்டிருக்கிறார். அவ்வளவு சாதுரியமாக பாபி சிம்ஹாவை நெருங்கும் தேசிய பாதுகாப்புப் படையினர், வேறொரு இடத்தில் இருந்து எல்லாமும் இயக்கப்படுகிறது என்று கண்டுபிடித்துச் சொல்கிறார்கள். ஆனால், படத்தின் பின் பாதியில் அதே கட்டடத்திலிருந்து முதல் வரும் பாபி சிம்ஹாவும் வருகிறார்கள். என்ன தர்க்கம் என்பது புரிபடவேயில்லை. கடத்தலுக்குப் பின்னால் இருக்கும் சூத்திரதாரி யார் என்பதை முன் பாதியில் ஊகிக்க முடியவில்லை. கடத்தலுக்கான காரணத்தை வெளிப்படுத்தும் இடங்களை இயக்குநர் திறமையாகக் கையாண்டிருக்கிறார். முடிவில் பாபி சிம்ஹா பத்திரிகையாளராக வெளியே வருவதும், முதல்வர் பிரகாஷ்ராஜ் அனைத்தையும் மறந்து இயல்பு நிலைக்கு மாறுவதும் அழகு.

படத்தை இரண்டு மணிநேரத்துக்குள் சுருக்கியது, இரண்டு பாடல்களை மட்டுமே வைத்தது, கதைக்குத் தேவையான அளவில் மட்டும் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்திக் கொண்டது போன்றவை சரத்தின் நெறியாள்கைத் திறனைக் க்காட்டுகின்றன. தேடிச் சோறு நிதந் தின்று என்று பாரதியின் வரிகளோடு வசனம் பேச ஆரம்பிக்கிறார், பாபி சிம்ஹா. அந்த இடத்திலிருந்தே அவரது நடிப்பும் முக பாவனைகளும் பாத்திரத்து டன் பெரிதாக ஒட்டவில்லை.

இரண்டாம் பாதியில் வேகமாக நகரும் கதையும் நடிகர்களைப் பயன்படுத்திக் கொண்ட விதமும், சொல்லவரும் செய்தியில் இயக்குநர் காட்டும் கூர்மையும் படத்தைக் காப்பாற்றிவிடுகின்றன. முன் பாதி திரைக்கதை அமைப்பிலும், பாபி சிம்ஹா கதாபாத்திரத்திலும் மேலும் மினக்கெட்டிருந்தால் 'கோ 2' இந்தப் பரபரப்பான அரசியல் சூழ்நிலையில் பட்டையைக் கிளப்பியிருக்கும்.




# எகிப்து எயார் விமான விபத்துக்கு தீவிரவாத தாக்குதல் காரணமா?

அதிரன்

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற எகிப்து விமான விபத்துக்குத் தீவிரவாதிகளின் தாக்குதல் காரணமா என்ற பலத்த சந்தேகம் எழுந்துள்ளது. எகிப்தின் அரச வட்டாரங்கள் இந்தச் சந்தேகத்தை எழுப்பியுள்ளன. விமானத்தின் பல இடங்களில் இருந்து புகை வெளிப்பட்ட பின்னரே அது ராடரில் இருந்து காணாமற்போயுள்ளமையால் இந்தச் சந்தேகம் மேலும் பலமடைந்துள்ளது. அத்துடன் விமானத்தின் செயற்பாடுகள் அனைத்தும் நல்ல நிலையில் இருந்தமையால் அது தொழில்நுட்பக் கோளாறினால் விழுவதற்குச் சாத்தியமில்லை என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மத்தியதரைக் கடலில் 66 பேருடன் வியாழக்கிழமை விழுந்து நொருங்கிய எகிப்து விமானத்தைக் கண்டறிந்ததாக எகிப்து ராணுவம் கடந்த வெள்ளிக்கிழமை அறிவித்தது.

இது குறித்து ராணுவ செய்தித் தொடர்பாளர் முகமது சமீர் முகநூல் சமூக வலைத்தளத்தில் கூறுகையில்;

விழுந்து நொருங்கிய எகிப்து எயார் விமானத்தின் சிதறிய பாகங்களையும், அதிலிருந்த பயணிகளின் உடைமைகளையும் எகிப்து விமானம், கடற்படைக் கப்பல்கள் ஆகியவை கண்டறிந்தன.

அலெக்சாண்டிரியா துறைமுகத்துக்கு வடக்கே 290 கி.மீ தொலைவிலுள்ள மத்தியதரைக் கடல் பகுதியில் அந்தப் பொருள்கள் கண்டறியப்பட்டன என்று அந்தப் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விழுந்த விமானத்தின் கறுப்புப் பெட்டியையும், விமானத்தில் இருந்தவர்களின் உடல்களையும் தேடும் பணியில் மீட்புக் குழுவினர் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் விமானத்திலிருந்தவர்கள் எவரும் உயிர்ப் பிழைத்திருக்க வாய்ப்பில்லை.

பிரான்ஸ் தலைநகர் பாரிஸிலிருந்து எகிப்து தலைநகர் கெய்ரோ நோக்கி 56 பயணிகள், ஏழு விமானப் பணியாளர்கள், 3 விமானப் பாதுகாவலர்களுடன் எகிப்து எயார் நிறுவனத்துக்குச் சொந்தமான விமானம் கடந்த வியாழக்கிழமை புறப்பட்டது.



எகிப்து வான் எல்லைக்குள் நுழைந்தபோது கட்டுப்பாட்டு அறையுடன் தொடர்பு துண்டிக்கப்பட்ட அந்த விமானம், மத்தியதரைக் கடலில் விழுந்து நொருங்கியது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

37,000 அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்த அந்த விமானம், 15,000 அடி உயரம்வரை வேகமாக விழுந்து, கடல்மட்டத்திலிருந்து 10,000 அடி உயரத்தில் இருந்தபோது, ராடர் பார்வையிலிருந்து மறைந்ததாக கிரீஸ் ராணுவம் தெரிவித்தது. விழுவதற்கு முன்னதாக அந்த விமானம் இடது புறம் 90 பாகை சாய்ந்து, பிறகு தலைகீழாகிக் கடலுக்குள் வீழ்ந்தததாக அவர்கள் கூறினர்.

கடந்த வியாழக்கிழமை மட்டும் ஐந்து இடங்களுக்குப் பறந்து சென்ற அந்த விமானம், பிரான்ஸ் வருவதற்கு முன்னர் துனீசியாவில் நிறுத்தப்பட்டிருந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

விமானம் விழுந்து நொறுங்கியதற்குப் பயங்கரவாதத் தாக்குதல் காரணமாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

விமானம் தொடர்பை இழப்பதற்குச் சில விநாடிகளுக்கு முன் அதன் கபினுக்குள் புகை வெளிப்பட்டதாக விமானத் துறைகள் பற்றிய செய்திகளை வெளியிடும் ஏவியேஷன் ஹெரால்ட் என்ற இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில், விமானத்தின் கழிப்பறை மற்றும் மின்னணு அறையில் இருந்து புகை கிளம்பியமை கண்டறியப்பட்டதாக தெரிவித்துள்ளது. ஆனால், விமானத்தில் புகை எச்சரிக்கை ஒலித்தது குறித்து எந்த அதிகாரப்பூர்வ அறிவிப்பும் வெளியிடப்படவில்லை. எகிப்து அதிகாரிகள் தீவிரவாதத் தாக்குதல் இருக்க வாய்ப்பு உள்ளதாகத் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில், அந்த விமானம் விபத்துக்குள்ளானதற்கு எந்த அறிகுறியும் தென்படவில்லை என்று பிரான்ஸ் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜீன் மார்க் ஆய்ராவுல்ட் தெரிவித்துள்ளார். எகிப்து விமானம் 66 பயணிகளுடன் கடலில் விழுந்து நொறுங்கியமைக்கு தீவிரவாதத் தாக்குதலுக்கு அதிக வாய்ப்பு உள்ளதாக எகிப்து அதிகாரிகள் தெரிவித்திருந்த நிலையில், விமானம் எவ்வாறு விபத்துக்குள்ளனது என்பதற்கு எந்த அறிகுறியும் தென்படவில்லை என்று பிரான்ஸ் வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

எகிப்து விமானம் கடலில் விழுந்தது எதனால், என்பதை அனைத்துக் கோணங்களிலும் ஆராய்ந்து வருகிறோம். இருப்பினும், விபத்துக்கான காரணத்தைக் கண்டறிவதற்கு ஏதுவான எந்த அறிகுறியும் தென்படவில்லை என அவர் மேலும் கூறியுள்ளார்.

அதிநவீன தொழில்நுட்பம் உள்ள இந்த காலத்திலும் விமானங்கள் மாயமாக மறைவதும், விபத்துகளுக்கான காரணங்கள் தெரியாமல் இருப்பதும் ஆச் சரியத்தை ஏற்படுத்துகின்றன. இது போன்ற அசம்பாவிதங்கள் ஏற்படு முன் தடுக்கும் நடவடிக்கைகளை மேற் கொண்டால் தான் அச்சமில்லாமல் விமானப் பயணம் மேற்கொள்ள முடி யும். எது எவ்வாறாயினும் விமான விபத்துக்கான சரியான காரணம் கண்டறியப்படாதவரை இதனால் எழும் சந்தேகங்களுக்கும் முடிவு கிட்டப் போவதில்லை.





**மேடம்:** அடுத்தவர் நலனில் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். குடும்பத் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். சுப விடயத்தில் இருந்த தடைகள் அனைத்தும் விலகும்.

**இடபம்:** எதிரியும் இடம் மாறிச் செல்வர். புதிய முயற்சியில் ஈடுபட்டு, வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில், அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். வருமானம் அதிகரிக்கும். சொத்துச் சேர்க்கை உண்டாகும்.

**மிதுனம்:** நண்பரின் ஆலோசனை, நன்மைக்கு வழிவகுக்கும். தொழிலில் அதிசிரத்தையுடன் பணியை நிறைவேற்றுவீர்கள். வருமானம் உயரும். வெளியூர்ப் பயணத்தில் திடீர் மாற்றம் உண்டாகும்.

**கடகம்:** நண்பர்களிடம் யோசித்துப் பேசுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் விடாமுயற்சி தேவைப்படும். பணவரவு மிதமாக இருக்கும். பிள்ளைகளின் செயற்பாடு கண்டு ஆறுதல் கொள்வீர்கள்.

**சிங்கம்:** மன உறுதியுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சி திருப்திகரமாகும். இலாபம் அதிகரிப்பதால், சேமிப்பு உயரும். நண்பர்களிடம் நற்பெயர் உண்டாகும்.

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**கன்னி:** குடும்ப விடயத்தைப் பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில், புதிய முயற்சியில் ஈடுபட்டு இலாபம் காண்பீர்கள். பெண்கள், சிக்கனத்தின் மூலம் சேமிக்க முயல்வர். வாகனப் போக்குவரத்தில் கவனம் தேவை.

**துலாம்:** பணிகளை நேர்த்தியுடன் நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் அதிகரிக்கும். எதிர்பார்த்த சுபச் செய்தி தேடிவரும். பயனுள்ள பொழுது போக்கில் ஈடுபடுவீர்கள்.

**விருச்சிகம்:** பொது விடயம் பற்றிப் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில், பொறுப்பு அதிகரிக்கும். பெண்கள் வீட்டுச் செலவில் சிக்கனம் கடைப்பிடிப்பது நல்லது. பணம், நகை இரவல் கொடுக்க வாங்கக் கூடாது.

**தனுசு:** சமூகத்தில் நற்பெயர் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில், திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு பூர்த்தியாகும். இலாபம் அதிகரிக்கும். குடும்பப் பிரச்சினைக்கு நல்ல தீர்வு கிடைக்கும். விரும் பிய உணவு உண்டு மகிழ்வீர்கள்.

**மகரம்:** பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில், தாராள பணவரவு கிடைக்கும். பெண்கள், ஆடை, ஆபரணம் வாங்குவர். இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள்.

**கும்பம்:** பிறர் ஏளனமாக பேசும் சூழல் உருவாகலாம். தொழில், வியாபாரத்தில், விடாமுயற்சி தேவைப்படும். வாகனப் போக்குவரத்தில் கவனம் தேவை. பெற்றோர் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**மீனம்:** நல்லவர்களின் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், மந்தநிலை சரியாகும். இலாபம் உயரும். பெண்கள், வீட்டுச் செலவில் சிக்கனம் பின்பற்றுவர். உடல்நலம் சீராக, ஓய்வு அவசியம்.

**சௌமியா**

**எந்தச் சூழ்நிலையிலும் வாழ்ந்து பழகிக் கொள், நாளை எப்படி வேண்டுமானாலும் மாறும்...**

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | | | | | | 8 | | |
| | 5 | | | | | | 1 | |
| | 6 | | | | 3 | | 4 | |
| | | | 1 | 6 | | | | 4 |
| | 8 | | | 3 | | 9 | | |
| 5 | 2 | | | | | 7 | | |
| | | | | 8 | | | | 3 |
| | | | | 9 | 2 | | | |
| 4 | | | | | | | 2 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 6 | 4 | 5 | 7 | 3 | 1 | 8 | 9 |
| 8 | 1 | 7 | 2 | 4 | 9 | 3 | 6 | 5 |
| 9 | 3 | 5 | 1 | 6 | 8 | 2 | 7 | 4 |
| 1 | 8 | 6 | 4 | 3 | 5 | 9 | 2 | 7 |
| 4 | 7 | 2 | 8 | 9 | 1 | 6 | 5 | 3 |
| 3 | 5 | 9 | 6 | 2 | 7 | 8 | 4 | 1 |
| 5 | 9 | 3 | 7 | 8 | 2 | 4 | 1 | 6 |
| 7 | 4 | 8 | 3 | 1 | 6 | 5 | 9 | 2 |
| 6 | 2 | 1 | 9 | 5 | 4 | 7 | 3 | 8 |

சுடோக்குஒருஎண்விளையாட்டு.தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப் பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவேநிரப்பப்பட்டிருக்கும்.தர்க்கரீதியில்ஏனையவற்றைநிரப்பவேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதா கும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றி கரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.




''படையப்பா'' படத்தில் ''அடுத்த ஜென்மத்தில் உன்னைப் பழிவாங்குவேன்'' என்றுகூறி நீலாம்பரி இறந்து போகிறார். நீலாம்பரி மறு ஜென்மம் எடுத்து படையப்பாவை பழிவாங்கினாரா எனும் பதினெட்டு ஆண்டுகள் காலக் கேள்விக்கு விடையே, "கபாலி"யின் கதை.
படையப்பாவின் மகளுக்கும், மருமகன் அப்பாஸுக்கும் ஒரு பேரன் பிறக்கிறான்.; பங்குனித் திருவிழா காலத்தில் பிறந்ததால், கபாலீஸ்வரர் நினைவாக அவனுக்கு "கபாலி" என்று பெயர் வைக்கிறார் படையப்பா. கபாலி வளர்ந்து வாலிபனாகிறான். ஒரு நாள் இரவில் திடீரென தன்னுடைய தாத்தா படையப்பாவின் அறைக்குச் சென்று அவரைக் கழுத்தை நெரித்துக் கொல்ல முயற்சிக்கிறான். விழித்து எழுந்து கபாலியை உதறித் தள்ளும் படையப்பா, திகைப்பாக பேரனைப் பார்க்கிறார்.
கபாலி திடீரென பெண்குரலில், ''படையப்பா, உன்னைக் கொல்லாமல் விடமாட்டேன்'' என்று அமானுஷ்யமாக சொல்கிறார். அந்தக் குரல், அப்படியே நீலாம்பரியின் குரல். மீண்டும் படையப்பாவின் கழுத்தை கபாலி நெரிக்கிறான். அதற்குள்ளாக சப்தம் கேட்டு வேலையாள்கள் ஓடிவந்து இருவரையும் பிரிக்கிறார்கள். திடீரென கனவில் இருந்து மீண்டதைப் போல கப்பாலி மலங்க மலங்க விழிக்கிறான்.
படையப்பா மீதான கொலைமுயற்சிகளை அடுத்தடுத்து மேற்கொள்கிறான் கபாலி. ஒவ்வொரு முறையும் சாமர்த்தியமாகத் தப்பிக்கிறார் படையப்பா. இதற்குப் பரிகாரம் காண இமயமலையிலிருந்து "பாபா" ரஜினி வருகிறார். கபாலியின் உடலுக்குள் நீலாம்பரியின் ஆத்மா குடிகொண்டிருப்பதால், பழைய பகையைத் தீர்த்துக் கொள்ளவே கபாலியைப் பயன்படுத்திக் கொள்கிறது என்று அறிகிறார்.
இதற்கிடையே ஒரு கார் விபத்தில் படையப்பா படுமோசமாகக் காயமடைகிறார். அவரைக் கொல்ல முயன்றது கபாலிதான் என்று ஆதாரபூர்வமாக பொலிஸாருக்குத் தகவல் வருகிறது. இதையடுத்து கபாலியைக் கைது செய்கிறார்கள். ஆனால், தான் அவரைக் கொல்ல முயற்சிக்கவில்லை என்று நீலாம்பரி குரலில் கபாலி வாதாடுகிறார். எனினும் நீதிபதி அவருக்கு கடுங்காவல் தண்டனை கொடுக்கிறார்.
உண்மையை அறிவதற்காக பாபா, கபாலியை சிறையில் சந்திக்கிறார். "எல்லாப் பிரச்னைகளுக்கும் தீர்வு இருக்கிறது. நீலாம்பரி, புடையப்பாவை அடைய முடியாத ஆத்திரத்திலேயே ஆத்மாவாக அலைகிறாள். நீலாம்பரியின் நட்சத்திரத்தில் பிறந்த ராதிகா ஆப்தேவை மணந்து கொண்டு வாழ்க்கை நடத்தினால், அந்த ஆத்மா சாந்தியடையும்'' என்று பரிகாரம் சொல்கிறார்.
படையப்பாவைக் கொல்ல முயற்சித்தது அவரது தொழில் எதிரிகள் என்பதையும் இருவரும் தெரிந்து கொள்கிறார்கள். எனவே, அவர்களை வீழ்த்த கபாலி சிறையிலிருந்து வெளியே வரவேண்டும். உருவ ஒற்றுமை காரணமாக பாபா, கபாலியைப் போல வேடத்தை மாற்றிக் கொண்டு கைதியாகிறார். பாபா வேடத்தில் வெளியே வரும் கபாலி, எதிரிகளை வேட்டையாடுகிறார். ராதிகா ஆப்தேவை கைபிடித்து, நீலாம்பரியின் ஆத்மாவையும் சாந்தியடைய வைக்கிறார். இது தானாம் அந்தப் படத்தின் கதை.

o my god

கடவுள் கிட்டயும் மருத்துவர் கிட்டயும் கோபமா பேசக்கூடாது...
கடவுள் பதற்றம் ஆனா உடம்புக்கு நோயை உண்டாக்கி மருத்துவர் கிட்ட அனுப்புவார்... மருத்துவர் பதற்றம் ஆனா கடவுள் கிட்ட அனுப்பிடுவார்...

RMS



"சார், நீங்க எந்தக் கடவுளைக் கும்பிடுவீங்க?"
"கல்யாணத்துக்கு முன்னாடியா, பின்னாடியா?"
"கல்யாணத்துக்கு முன்னாடி சொல்லுங்களேன்"
"கல்யாணத்துக்கு முன்னாடி, முருகன் தான் ரொம்பப் பிடிக்கும்"
"அப்போ பின்னாடி"
"அதை ஏன் கேக்குறீங்க, கல்யாணத்துக்கு அப்புறம் நான் வேண்டாத தெய்வமே இல்லை"

மனைவி: என்னங்க சொர்க்கத்தில் கணவனும் மனைவியும் சேர்ந்து வாழ முடியாதாமே?
கணவன்: அதனாலதான்டி அது சொர்க்கம்





# வீட்டுக்கு அழகு சேர்க்கும் வண்ணக் கொடிகள்

பூக்களைத் தரும் கொடிகளில் இரு வகைகள் உள்ளன. சில வகைக் கொடிகளில் தண்டுக்கு நெருக்கமாகப் பூக்கும். சிலவற்றில் பூக்கள் கொத்துக் கொத்தாய்ப் பூத்துத் தொங்கும். முதல் வகைக் கொடிகளை தூண்களில் படர விடலாம். தூணோடு தூணாக அழகிய திரை போலப் படர்ந்து சூழலை அழகுப்படுத்தும். இரண்டாம் வகைக்கொடிகளை கூரை மீது படர விடலாம். படபடவெனப் பரவி கூரையில் பூக்களின் தோரணங்கள் கண்ணைப் பறிக்கும் விதமாக மலர்ந்து பார்ப்போரைக் கவரும்.

செங்குந்தான இடங்களுக்கா அல்லது கிடை மட்டப்பகுதிகளுக்கா என்பதை பொறுத்துத் தேவையான கொடிகளின் விதைகளை வாங்கிக் கொடிகளை வளர்த்து வீட்டை அழகுப் படுத்தலாம். வீடுகளின் ஜன்னல்கள், கதவுகள், வீட்டின் முன்புறச் சுவர்கள் போன்ற இடங்களில் எல்லாம் தேவைக்கேற்ப கொடிகளைப் படர விட்டு வீட்டை வண்ண மயமாக்கலாம். பூக்கள் மிகுந்த கொடிகள் வண்ணமயமான தோற்றத்தைத் தருவதுடன், நறுமணத்தையும் பரப்பும். மேலும், இது போன்ற கொடிகள் எமது இடத்தை அழகாக மாற்றிவிடும்.



# நேற்றைய கடலுணவு

## விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 800 | 600 | 800 | 800 | 800 | 800 |
| நண்டு | 250 | 400 | 300 | 450 | 400 | 200 | – |
| கணவாய் | 600 | 700 | 500 | 500 | 600 | 800 | – |
| பாரை | 550 | 600 | 500 | 600 | 600 | – | 400 |
| சுறா | 500 | 700 | 600 | 800 | 800 | – | – |
| சீலா | 300 | 500 | 400 | 500 | 400 | – | 400 |
| விளை | 650 | 400 | 400 | 500 | – | 600 | 350 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 300 | – | 300 |
| கும்பிளா | 400 | 500 | 300 | 450 | 400 | – | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | – | 600 | 300 | – |
| ஓரா | 400 | 400 | – | – | 450 | 500 | 250 |
| திரளி | 300 | 300 | 200 | 200 | – | 400 | 200 |
| நகரை | 250 | 300 | – | 250 | 300 | – | 200 |
| ஆடை | 150 | 200 | 100 | 200 | 100 | – | – |
| ஓட்டி | 300 | 250 | 150 | 250 | 250 | 400 | 150 |
| திருக்கை | 150 | 400 | 200 | 400 | 300 | – | 150 |
| மதனம் | 150 | 300 | 180 | 300 | 250 | – | 350 |
| கொய் | 100 | 200 | 60 | 80 | 100 | 200 | – |
| பாலை | 400 | 300 | 250 | 350 | 400 | 300 | – |
| வாழை | 100 | 200 | 200 | 400 | 300 | – | – |

நாளை
வைகாசி-10
திங்கட்கிழமை -
23.05.2016
திதி: துதியை
பி.இ.05.26 வரை
நட்சத்திரம்: கேட்டை
மு.இ.11.26வரை
ராகுகாலம்:
07.22-08.52 வரை
சுபநேரம்:
11.52-01.22 வரை

# கடலைமா லட்டு




## தேவையான பொருள்கள்

கடலை மா– 4 கப்
பசும்பால் – இரண்டரைக் கப்
நெய் – இரண்டரைக் கப்
சீனி – 2 கப்
ஏலக்காய் – 2 தேக்கரண்டி
உலர்ந்த திராட்சை – சிறிதளவு


## செய்முறை

* நெய்யை உருக்கி கடலை மாவில் சேர்க்கவும்.
* பாலையும் காய்ச்சி கடலை மாவில் விட்டு நன்கு கலக்கவும்.
* கடலை மாவைத் தளர்த்தியாக பிசைந்து அரை மணி நேரம் ஊற விடவும்.
* பின்னர் ஒரு பெரிய சல்லடையில் மாவைக் கொட்டி சலிக்கவும்.
* இப்போது வரும் பூந்திகளை சட்டியில் நெய் விட்டு அதில் போடவும்.
* சீனியை அரைத்து சட்டியில் சேர்க்கவும்.
* ஏலக்காய், திராட்சை ஆகியவற்றை சேர்த்து ஒரு கிளறு கிளறி சூடாக இருக்கும் போதே லட்டுகளாக உருட்டிக் கொள்ளவும்.



# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 100 | 80 | 120 | 80 | – | 40 | 70 |
| கத்தரி | 140 | 120 | 80 | 160 | 120 | 120 | 70 | 80 |
| கரட் | 120 | 120 | 80–200 | 120 | 140 | 160 | 70 | 140 |
| மரவள்ளி | 60 | 60 | 60 | 60 | 60 | 60 | 40 | 40 |
| பயிற்றை | 200 | 200 | 80 | 300 | 160 | 220 | 90 | 100 |
| பாகல் | 140 | 120 | 130 | 160 | 160 | 160 | 120 | 120 |
| கருணைக்கிழங்கு | 100 | – | 100 | 100 | 80 | 120 | 60 | 60 |
| பெ.வெங்காயம் | 80 | 98 | 80 | 100 | 80 | 100 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 120 | 120 | 100 | 140 | 120 | 180 | 100 | 120 |
| பூசணி | 40 | 40 | 40 | 40 | 40 | 80 | 15 | 35 |
| தக்காளி | 100 | 200 | 140 | 240 | 180 | 280 | 140 | 180 |
| வாழைக்காய் | 40 | 30 | 40 | 40 | 30–40 | 40 | 35 | 30 |
| கீரை | 30 | 30 | 40 | 20 | 40 | 40 | 25 | 40 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 35 | 30 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 400 | 120 | 200 | 140 | 180 | 140 | 60 | 200 |
| புடோல் | 100 | 120 | 120 | 80 | 70–80 | 80 | 30 | 80 |
| கோவா | 140 | 140 | 100 | 160 | 120 | 160 | 90 | 100 |
| வெண்டி | 100 | 200 | 80 | 120 | 80–120 | 120 | 50 | 80 |
| போஞ்சி | 200 | 180 | 200 | 220 | 180 | – | – | 180 |
| லீக்ஸ் | 200 | 160 | 100–160 | 180 | 140 | 160 | 100 | 140 |
| தேங்காய் | 40 | 30 | 50 | 20–30 | 30–40 | 30 | 15–30 | 30 |
| உருளைக்கிழங்கு | 90 | 110 | 80 | 120 | 80–100 | 120 | 75 | 120 |
| தேசிக்காய் | 500 | 300 | 600 | 350 | 380–400 | 200 | 350 | 350 |
| வல்லாரை | 25 | 20 | 10 | 15 | 20 | 20 | 10 | 12 |
| கறிமிளகாய் | 140 | 120 | 200 | 140 | 160–180 | 140 | – | 150 |
| இராசவள்ளி | 150 | 130 | 180 | 160 | 140–160 | 160 | 110 | 120 |
| முருங்கைக்காய் | 150 | 200 | 150 | 140 | 170–180 | 140 | 150 | 150 |



# இது புதுசு — கல் மாற்றும் ஆபரணம்

கற்கள் மாற்றும் ஆபரணங்கள் அறிமுகமாகியுள்ளன. பென்ரன், தோடு என்பவற்றின் கற்களை ஆடையின் நிறத்துக்கு ஏற்ப மாற்ற முடியும். இவை 800 ரூபாவில் இருந்து 850 ரூபா வரை விற்பனை செய்யப் படுகின்றன.

# காசு, பணம், துட்டு கடைசியில் துண்டு

பிரகாஸ்



ஆசியாக்கிண்ணம், ரி-20 உலகக்கிண்ணம், ஐ.பி.எல். தொடர்கள் என ரி-20 அலைகளாக அடித்துக்கொண்டிருந்த கிரிக்கெட் உலகில் படிப்படியாக வெள்ளைச் சீருடைகளைக் காணும் காலம் நெருங்கிவிட்டது. இதன் முதற்கட்டமாக இலங்கை அணி 3 ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடருக்காக இங்கிலாந்துக்குச் சென்றுள்ளது. இந்தத் தொடரில் இலங்கையின் செயற்பாடுகள் எவ்வாறு இருக்கப்போகின்றன என்று பலரும் பலவிதமான கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர். சாதகமாகவும், பாதகமாகவும் இக்கருத்துக்கள் பகிரப்பட்டுள்ளன. இலங்கையின் ஜாம்பவானான மகேலவும் தனது கருத்துக்களை முன்வைத்துள்ளார். அதே நேரம் தனது கருத்துக்களாக சொந்த ரசிகர்களாலேயே விமர்சனங்களையும் வாங்கிக் குவிக்கிறார். அதாவது குறித்த தொடரில் இலங்கையின் பந்துவீச்சாளர்கள் மீது மகேல நம்பிக்கை தெரிவித்துள்ளார். இதுவே பலருக்கு எரிச்சலைக் கிளப்பியுள்ளது. இலங்கையின் பந்துவீச்சு நுட்பங்களுக்கு எதிராக எதிரணியுடன் கூட்டுச் சேர்ந்து செயற்பட்டு பந்துவீச்சில் நம்பிக்கை தெரிவித்தால் எரிச்சல் வாராதா என்ன ?


இலங்கைக்கு எதிரான தொடருக்காகவும், ஆசிய ஆடுகளங்களின் அறிதலுக்காகவும் இங்கிலாந்து விரித்த வலையில் கச்சிதமாய் போய் மாட்டியவர்தான் மகேல. கடந்த வருடத்தின் இறுதியில் இங்கிலாந்து அணியின் துடுப்பாட்ட ஆலோசகராக மகேல நியமிக்கப்பட்டார். இதற்கு இருபெரும் காரணங்கள் உள்ளன. முதலாவது, இந்த வருட ஆரம்பத்தில் இந்தியாவில் ரி-20 உலகக்கிண்ணம் நடைபெற்றது. எனவே இந்திய ஆடுகளங்களைப் பற்றி அறிந்த ஒருவரை வைத்து ஆடுகளங்களின் துல்லியத்தன்மையையும் நுட்பங்களையும் அறிந்துவிட இங்கிலாந்து முடிவெடுத்தது. ரி-20 உலகக்கிண்ணத்துக்குப் பிற்பாடு இலங்கை இங்கிலாந்துக்குச் செல்லும் என்பது கடந்த வருடத்தின் இறுதிப் பகுதியிலேயே நிச்சயமாக்கப்பட்டுவிட்டது. இதனால் இலங்கையில் இருந்து ஒருவரை துடுப்பாட்ட ஆலோசகராக நியமித்தால் ரி-20 உலகக்கிண்ணத்துக்கு உதவுகின்ற அதே நேரம் இலங்கையை வீழ்த்தவும் முடியும். மொத்தத்தில் ஒரு கல்லில் இரு மாங்காய்கள். சாலப் பொருத்தமுடையவரான மகேலவை பிடித்துக் கொண்டது இங்கிலாந்து. மகேலவும் இதற்கு உடன்பட்டார். ஆசிய ஆடுகளங்களைப் பற்றிப் போட்டுடைத்தார். இதனால் ரி-20 உலகக்கிண்ண லீக் ஆட்டத்தில் இலங்கையை வீழ்த்தியது இங்கிலாந்து.

இரண்டாம் கட்டமாக, அடுத்தடுத்த ஆட்டங்களில் இலங்கையின் பந்துவீச்சு முடிச்சுக்கள் மகேலவால் கட்டவிழ்க்கப்படவுள்ளன. எல்லாம் காசு, பணம், துட்டு செய்கிற வேலை. இலங்கைத் தொடர் முடிந்ததும் மகேல இங்கிலாந்தால் சில சமயங்களில் கழற்றி விடப்படலாம். அவ்வாறு கழற்றிவிடப்பட்டால் 'தலையில் துண்டைப் போட்டுக்கொண்டுதான் இலங்கை வந்து சேர வேண்டும். மொத்தத்தில் காசு, பணம், துட்டு கடைசியில் துண்டு இதுவே மகேலவின் தற்போதைய மற்றும் எதிர்கால நிலைப்பாடு.

## இந்தாப்பா கோக்லி நிறுத்துவியா? மாட்டியா?

இந்திய அணியின் நட்சத்திர வீரரான கோக்லியை நடப்பு வருடத்தில் புகழாதவர்கள் இல்லை. அரைச்சதங்கள், சதங்கள் என்று அமர்க்களப்படுத்திக் கொண்டிருக்கிறார். களமிறங்கும் ஆட்டங்களில் எல்லாம் நொறுக்கித் தள்ளுகிறார். ஐ.பி.எல். தொடரும் இதற்கு விதிவிலக்கல்ல. இன்னும் சொல்லப் போனால் ஐ.பி.எல். தொடரில்தான் அவர் இன்னும் ருத்ர தாண்டவம் காட்டிக் கொண்டிருக்கிறார். இந்த வருட ஐ.பி.எல். தொடரில் மட்டும் நான்கு சதங்களைப் பதிவுசெய்துள்ளார். இவற்றையெல்லாம் பார்த்த ஆஸ்திரேலிய அணியின் நட்சத்திர வீரரான பின்ஞ், கோக்லிக்கு டுவிட்டரில் ஒரு குட்டிக் கடிதம் எழுதியுள்ளார்.

அதில் அன்புள்ள கோக்லி, மிகவும் இலகுவாகத் துடுப்பெடுத்தாடக்கூடிய உனது திறமையை நிறுத்துவியா? மாட்டியா?. உன்னால் உலகில் உள்ள ஏனைய துடுப்பாட்ட வீரர்கள் எல்லோரும் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளார்கள் நன்றி. என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பின்ஞ்சின் பதிவு ஒரு புறத்தில் நகைச் சுவையாக இருந்தாலும் மறுபுறத்தில் உண்மையாகவும் இருக்கத்தான் செய்கிறது.



## கவனிக்க வைக்கும் பென்சிச் ; செரபோவாவுக்குப் பதில் ரிமா






சர்வதேச ரென்னிஸ் சம்மேளனம் பெண்களுக்கான தனது புதிய தரவரிசைப் பட்டியலை அண்மையில் வெளியிட்டிருந்தது. வழக்கம்போல செரீனா வில்லியம்ஸ் முதலிடத்தைப் பிடித்திருந்தார். செரீனாவை அடுத்து தரப்படுத்தலில் தம்மைக் கவனிக்க வைத்தவர்களாக இருவர் பெயரிடப்படுகின்றனர். ஒருவர் பென்சிச், மற்றொருவர் ரிமா. ரென்னிஸ் உலகில் வளர்ந்து வரும் இளம் வீராங்கனையென்றால் அது பென்சிச்சே. 19 வயதான இவர், கடந்த வருடமே ரென்னிஸ் உலகில் அறிமுகமானார். அறிமுகமாகிய சில மாதங்களிலேயே றோயேர்ஸ் கிண்ணத்தைக் கைப்பற்றியிருந்தார். மட்டுமல்லாமல் பிரான்ஸ், ஆஸ்திரேலியத் தொடர்களில் முறையே காலிறுதி, அரையிறுதிகளுக்கு முன்னேறி தரப்படுத்தலில் துரிதமான முன்னேற்றம் கண்டு தற்பொழுது எட்டாவது இடத்தில் பெயரிடப்பட்டுள்ளார். இதனால் இந்த வருடம் இல்லாவிட்டாலும் இன்னும் சில வருடங்களில் தரப்படுத்தலில் முதலிடத்துக்கு வந்து ரென்னிஸ் உலகை ஆட்டிப்படைக்கக்கூடிய வாய்ப்புக்களும் திறமையும் இவருக்கு உண்டு.

இரண்டாமவர் ரிமா. ஊக்கமருந்தைப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் தடை விதிக்கப்பட்ட செரபோவா படிப்படியாக தனது தரப்படுத்தலை இழந்து, தற்போது பத்தாவது இடத்துக்கு அப்பால் தூக்கி வீசப்பட்டுள்ளார். செரபோவா வெளியேற்றப்பட்டதன் பின்னர் அவரது இடத்தை பிரதியீடு செய்தவராக சுவிற்ஸர்லாந்தின் ரிமா உள்ளார். இவர் பத்தாவது இடத்தில் பெயரிடப்பட்டுள்ளார். ரிமா தொடர்ந்தும் தரப்படுத்தலில் முதல் பத்து இடங்களுக்குள் இடம்பெறுவாரா என்பது செரபோவா மீதான விசாரணைகளின் அடிப்படையிலேயே தங்கியுள்ளன. செரபோவா மீதான விசாரணைகள் இங்கிலாந்தில் வைத்து மேற்கொள்ளப்படவுள்ளன என்று சர்வதேச ரென்னிஸ் சம்மேளனம் அறிவித்துள்ளதால், அடுத்த மாதத்துக்குள் முழுமையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு முடிவுகள் வெளிப்படுத்தப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. விசாரணைகளின் முடிவில் செரபோவா மீதான தடை நீக்கப்பட்டால் அடுத்த சில வாரங்களிலேயே அவர் ரிமாவை ஊதித்தள்ளி விடுவார். மொத்தத்தில் செரபோவா வந்தால் ரிமா வெளியே.



மருத்துவர் சி.இராஜேந்திரா

# நீரிழிவு (சலரோக) நோயாளிகளின் பாதங்களைக்குறிவைத்து மறக்காமல் தாக்கும் மாறாப் புண்கள்!!

நீரிழிவு நோயாளர்களுக்கு காலிலும் பாதங்களிலும் ஏற்படும் காயங்கள், இலகுவில் கிருமித் தொற்றுக்கு உள்ளாகுகின்றன. சிலருக்கு இது மாறாப் புண்களை ஏற்படுத்துகின்றன. இன்னும் சிலருக்கு சத்திர சிகிச்சை மூலம் அவயவ இழப்பு செய்யப்பட வேண்டிய பாரதூரமான நிலையையும் மற்றும் சிலருக்கு உயிரிழப்பு ஏற்படக்கூடிய பரிதாப நிலையையும் ஏற்படுத்துகின்றன.

**நீரிழிவு நோயாளர்களுக்கு ஏன் காலில் புண்கள் ஏற்படுகின்றன?**

1. நீரிழிவு பாதிப்பினால் தசைகளில் ஏற்படும் வலிமை இழப்புக் காரணமாக, பாதங்களில் சாதாரணமாகக் காணப்படும் வளைவுத் தன்மைகள் சீரற்றுப் போகின்றன. இதனால் உடற்பாரமானது பாதங்களில் ஒழுங்கின்றிப் பரவி விழுகின்றது. இது பாதத் தோல்களில் சிறிய காயங்களும் தோல் தடிப்பு (ஆணிக்கூடு) போன்றவையும் ஏற்பட வழிவகுக்கின்றது.
2. நரம்பு மண்டலத்தில் ஏற்படும் நீரிழிவு பாதிப்பு காரணமாக காலில் உள்ள தொடுகை உணர்ச்சி குறைவடைவதால் காலில் ஏற்படும் காயங்கள் நோ, வலி என்பவை, இலகுவாக உணரப்படுவது இல்லை. இந்த நிலை மேலதிக கிருமித் தாக்கம் ஏற்படுவதற்கு ஏதுவாக அமைகின்றது.
3. நீரிழிவு நோயின் பாதிப்பின் ஒரு கட்டமாக காலுக்கும் பாதத்துக்கும்இரத்தவோட்டம் குறைவடைகிறது. இதனால் கால் பாதங்களில் உள்ள தோல் மற்றும் இழையங்களுக்கு போசணையும் நல் இரத்தமும் குறைவாகவே கிடைக்கிறது. இதனால் கிருமித் தாக்கத்தைக் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்படுகிறது.

**எவ்வாறான நீரிழிவு நோயாளர்களுக்கு இவ்வாறான கால் புண்கள் வரச் சாத்தியங்கள் அதிகம்?**

1. காலில் பாதத்தில் உணர்வுத்திறன் குறைவடைந்தவர்கள்.
2. காலில் குருதிச் சுற்றோட்டம் குறைவாக உள்ளவர்கள்.
3. பாதங்களின் விரல்களின் வடிவ மாற்றம் ஏற்பட்டவர்கள்.
4. சிறுநீரக, கண் பாதிப்பு ஏற்பட்ட நீரிழிவு நோயாளர்கள்.
5. ஒரு முறை காலில் புண் வந்து மாறியவர்கள்.
6. கால் மற்றும் பராமரிப்பு குறைபாடு உள்ள நீரிழிவு நோயாளர்கள்.

**காலில், பாதங்களில் ஏற்படும் புண்களைத் தவிர்க்க நீரிழிவு நோயாளிகள் செய்யக் கூடியவை என்ன?**


1. கால்களையும் பாதங்களையும் தினசரி அவதானித்து பராமரிக்க வேண்டும்.
2. ஏதாவது சிறு காயங்கள் மற்றும் மாற்றங்கள் பாதங்களில் ஏற்படின் உடனடியாக வைத்திய ஆலோசனை பெறுதல் வேண்டும்.
3. குருதியில் குளுக்கோசின் அளவைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும்.
4. குருதி அழுத்தம் கொலஸ்ரோல் அதிக மாதல் போன்றவற்றுக்கு மருத்துவ ஆலோசனையுடன் மருந்துகளைக் கையாள வேண்டும்.
5. புகைபிடிக்கும் பழக்கத்தைக் கைவிட வேண்டும்.

**கால் புண்கள் ஏற்பட்டால் நீரிழிவு நோயாளர்கள் என்ன செய்ய வேண்டும்?**

1. கை வைத்தியம் மற்றும் சுயவைத்தியம் செய்தல் போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும்.
2. சிறிய காயம் எனினும், தகுதியான மருத்துவரிடம் சிகிச்சை பெற வேண்டும்.
3. காயங்களுக்கும் புண்களுக்கும் உரிய மருந்திட்டு பாதுகாப்பாகப் பராமரிக்க வேண்டும். கிருமித் தொற்றுக்கான மருந்துகளை வைத்திய ஆலோசனைப்படி கிரமமாக எடுக்க வேண்டும்.

சத்திர சிகிச்சை நிபுணரும்,
சிரேஷ்ட விரிவுரையாளரும் ,
யாழ்.போதனா வைத்தியசாலை.



எதிர்வரும் 27 ஆம் திகதி யாழ். மருத்துவ பீடத்தில் (கூவர் கேட்போர் கூடம்) காலை 9 மணிக்கு நீரிழிவு நோயாளர்களுக்கான பாதப் பராமரிப்பு மற்றும் பாதணிகள் உபயோகம் சம்பந்தமான விளக்கங்கள் வழங்கப்படவுள்ளன. இந்தியாவில் இருந்து வருகை தரும், பாதபராமரிப்பில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற வல்லுநர்களால் நீரிழிவு நோயாளர்களுக்கான கருத்தரங்கு நடத்தப்பட உள்ளது.

பாத பராமரிப்பு பற்றி அறிந்து கொள்ள விருப்பமுடைய நீரிழிவு நோயாளர்களும், பாதங்களில் பாதிப்புள்ள நீரிழிவு நோயாளர்களும் இந்தக் கருத்தரங்கில் இலவசமாகப் பங்கு பற்றலாம்.

பாதணிகள் தேவை பற்றிய ஆய்வுகள் நீரிழிவு நோயாளர்களுக்கு இலவசமாகச் செய்து கொடுக்கப்படும். இந்த ஆய்வைச் செய்ய விரும்பும் நோயாளிகள் யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ள நீரிழிவு சிகிச்சை நிலையத்தில் (Diabetes Centre)இருந்து பெறப்பட்ட உரிய கடிதத்தை சமர்ப்பிக்க வேண்டும். நீரிழிவு நிலையத்தில் 24 ஆம் திகதியிலிருந்து 26 ஆம் திகதி வரை பதிவுகளை மேற்கொள்ள முடியும் (காலை 8 மணி தொடக்கம் மாலை.4 மணி வரை)

தொடர்பு இல : 021 2220179

## நீரிழிவு நோயாளர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!!!

# ராசி இல்லாத ராசா...

(27ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கல்யாணப் பேச்சு ஒப்பேறவில்லை என்பதற்காக சூட்டோடு சூடு மற்றுமொரு கல்யாணப் பேச்சை ஆரம்பித்து அந்தப் பெண்ணையும் பார்ப்பதற்காகக் கிளம்பிவிட்டோம்.

பெண் வந்து அமைதியாகக் கதிரையில் அமர்ந்திருந்தாள். செக்கச் செவேல் என்று வெள்ளைத் தோலில் வெளிச்சமாகத் தெரிந்தாள். மெல்லிய உடல்வாகு, அளவான உயரம். எல்லாமே திருப்தியாக இருந்தாலும் இங்கேயும் ஒரு நெருடல் இல்லாமல் இல்லை.

மிகப்பெரிய கண்கள். மூக்கே இல்லாத முகம். சீனப்பெண்களைப் போன்று மிகவும் தட்டையாக மிகவும் சிறியதாக இருந்தபடியால் மூக்கைத் தேடிப்பிடிக்க வேண்டியநிலை. மிகச் சிறிய நெற்றிப் பரப்பு. ஒழுங்கற்ற பல்வரிசை திக்கொன்றாக வளர்ந்து சாய்ந்து போயிருக்கும் மரங்கள் போல நீளமாகக் காட்சியளித்தன. மொத்தத்தில் முகத்தைப் பார்க்க சகிக்க முடியவில்லை. உடல் அமைப்பு மட்டும் சும்மாசொல்லக்கூடாது இன்றைய சினிமா கதாநாயகிகளுடன் போட்டி போடக்கூடியது. அதற்காக முகத்தைத் தவிர்த்து அவள் உடல் அழகை மட்டும் பார்த்து ரசித்துக் கொண்டிருக்க முடியுமா!

அம்மா முகம் சுளித்தார். மாமா உடலை நெளித்தார். புரோக்கர் உதட்டைக் கடித்து அதிகமாகச் சிந்தனை வயப்பட்டார். எத்தனை கல்யாணங்களை எத்தனை சுலபமாக ஒப்பேற்றிய புரோக்கர் பசுபதியால் எனக்கு மட்டும் ஒரு திருப்திகரமான பெண்ணைப் பார்த்து திருமணம் செய்து தர முடியவில்லை என்பதை நினைக்க எனக்கே அதிசயமாக இருந்தது.

"கடவுளே! உங்கை என்னைவிடக் கேவலமானவன் எல்லோரும் நினைச்ச உடனே என்ன மாதிரியான இடத்தில் எல்லாம் கல்யாணம் செய்றாங்கள்! எனக்கு மட்டும் இப்பிடி ஒரு பலனாய்க் கிடக்குதே! எனக்கென்றொரு பொம்பிளை இந்த உலகத்திலை இல்லையோ! அல்லது இனித்தான் பிறக்க வேண்டுமோ!"

உண்மையில் எனக்கு என்னுடைய விதியை நினைக்க நினைக்க மிகவும் கவலையாக விருந்தது. எனக்கு மனம் சோர்ந்து கொண்டது. ஆனால், புரோக்கரின் மனம் மட்டும் இன்னமும் சோர்ந்ததாகத் தெரியவில்லை. மீண்டும் ஒரு பெண் பார்க்கும் படலத்தை ஆரம்பித்து விட்டோம்.

"இதுதான் கடைசி. இதுவும் பிழைச்சுதெண்டால் கடவுளாணை இனிக் கல்யாணமே செய்யிறதில்லை. குருடோ, செவிடோ, சொத்தியோ, ஊமையோ! இதுவும் என்ன மாதிரியோ! கல்யாணமும் வெறுத்துப் போச்சுது"

சுண்டினால் குருதி தெறிக்கும் சிவப்பு நிறம் ஆனால் குருதி தெறிப்பதற்கு அவளின் உடலில் குருதிதான் இருக்கவில்லை. அத்தனை மெல்லியவளாக இருந்தாள், பாவைப் பிள்ளைக்கு சேலை கட்டிவிட்டது போல. இனி மேலும் முன்னைய 'நிசா' சூறாவளி போன்று ஒன்று அடிக்குமாயிருந்தால் இவளை இழக் கத்தான் வேண்டி வரும். இவளிடம் வேறு எந்த விதமான குறைகளுமிருக்கவில்லை. இவள் பிறந்த வீட்டில் இவளுக்கு மேலால் தேரை பாய்ந்து தொலைந்திருக்குமோ என்று அம்மா சந்தேகப்பட்டார். நடிகர் ஓமக்குச்சிக்கு இரத்த உறவாகவிருப்பாளோ என்றுநான் சந்தேகப்பட்டேன். இதையும் விட்டால் எனக்கு இனி ஒரு பெண்ணைத் தேடிப்பிடிக்கலாமோ என்று மாமா சந்தேகப்பட்டார்.

"தம்பி! ராசா! பொம்பிளை மெல்லிசுதான். மற்றும்படி நல்ல லட்சுமிகரமாய் லட்சணமாயிருக்குது. நல்ல இறைச்சி, மீன், முட்டையெண்டு சத்தானசாப்பாடுகளைவாங்கிச்சாப்பிட்டால்பெட்டை கொழுத்திடும். உதுக்குப் போய் யோசிக்காதை. எல்லாம் உன்ரை கையிலை தானிருக்குது."

புறோக்கரின் இந்த அபிப்பிராயத்தை அம்மா, மாமாவும் ஏற்றுக்கொண்டனர். உள்ளதைச் சொன்னால் என்ன அவளின் முகத்தில் தேங்கியிருந்த கனிவும், கருணை தவழும் பார்வையும் என்னையும் அவள் வசம் ஈர்த்துவிட்டதென்பதையும் மறுக்க முடியவில்லை. சூறாவளி அடித்தால் பிரச்சினைதான். அதற்கு வானிலை அவதான நிலையம் விடுக்கும் அறிவிப்புக்களை அவ்வப்போது கேட்டு அதற்குத்தக்க மாதிரி அவதானமாக இருக்க வேண்டியதுதான். இவளையே திருமணம் செய்து கொள்ளலாம் என்று எல்லோருமே ஏகோபித்த முடிவுக்கு வந்து விட்டோம். திருமணமும் ஒப்பேறி விட்டது.

பெயர் ஈஸ்வரி. ஒல்லியோ! சல்லியோ! அன்பாக நடந்தாள். மாமியாரை உச்சிய மருமகளாக இல்லாது மாமியார் மெச்சிய மருமகளாக இருந்தாள். அவள் சும்மா வரவில்லை. மூன்று லட்சங்களைச் சீதனமாகச் சுமந்து வந்தாள். நகை நட்டுக்களை அதிகம் சுமக்க முடியாத படியாலோ என்னவோ! குறைந்தளவு நகைகளைத்தான் கொண்டு வந்திருந்தாள். என்னுடைய தகுதிக்கு இந்த மூன்று லட்சங்களுமே போதுமென்னும் திருப்தியில் ஈஸ்வரியுடன் அன்பாகவே வாழ்ந்தேன்.

அம்மாவுக்கு ஒரு பேரப்பிள்ளையைப் பார்த்துவிடவேண்டுமென்று ஆசை. அதைத்தான் எங்களால் நிறைவேற்றிக் கொடுக்க முடியவில்லை. அவளின் தென்னீர்க்கு உடம்பில் என்னுடைய கைகள் பட்டாலோ, அல்லது அவளில் ஆசைப்பட்டு அவளை நெருங்கினாலோ நான் கொலைக்குற்றம் சாட்டப்பட்டுக் கம்பி எண்ணும் நிலையும் வந்துவிடலாம். வற்றிக் காய்ந்து போயிருக்கும் குளத்தில் மீன் பிடிக்க முடியுமா! இந்தச் சூழ்நிலையில் பேரனாவது பேர்த்தியாவது!

முன்பு பார்த்த கோகிலவதன சிங்கார ரூபினி அதிபருமனாக இருந்தாள். ஈஸ்வரியோ மிகமெல்லியவளாக வாய்த்து விட்டாள். விட்டால் குடும்பி அடித்தால் மொட்டை. யாரிடம் நோவேன்! யார்க்கெடுத்துரைப்பேன்!

கிணற்றுத் தண்ணீரை இறைத்தால் அது மீண்டும் ஊற்றெடுக்கும். ஆனால் தொட்டித் தண்ணீரை இறைத்தால் நிலைமை என்னவாகும்! இங்கே நானும் தொட்டித் தண்ணீரை இறைப்பது போலவே இறைத்து இறைத்து ஈஸ்வரி சீதனமாகக் கொண்டு வந்த மூன்று லட்சங்களையும் ஒரு வழி பண்ணியாயிற்று. தினமும் இறைச்சி, ஈரல், முட்டை, மீன் என்றும் மருந்து மாத்திரைகளென்றும் அவள் கொண்டு வந்ததை அவளே முடித்துக் கொண்டிருந்தால் என்னால் என்னதான் செய்யமுடியும்? என்னால் உழைக்கவும் முடியவில்லை. முன்னொரு காலம் துருத்தியையாவது ஆட்டினேன். இப்போது எதை ஆட்டுவது! ஒன்றுமே புரியவில்லை.

இப்படித்தான் ஆகுமென்று தெரிந்திருந்தால் இந்தக் கல்யாணத்தையும் நிராகரித்திருக்கலாம். நான் நினைத்தது அவளின் பிணியைக் குணமாக்கி ஒரு புஷ்டியானவளாக்கி ஒரு பிள்ளை குட்டியைப் பெற்று இனியாவது மகிழ்ச்சியாக வாழலாமென்று. எல்லாமே வெறும் கற்பனைகளாகவே ஆகிவிட்டன. ஈஸ்வரி எனக்கு எத்தனை விதமான அசௌகரியங்களைத் தந்துகொண்டிருந்தாலும் அவள் மீது வெறுப்போ கோபமோ ஏற்படுவதில்லை. மாறாக மேலும் மேலும் அனுதாபமும் அன்புமே வளர்ந்து கொண்டிருந்ததை நினைக்க விசித்திரமாகவேயிருந்தது.

எனதுஈஸ்வரியின்நோயைஎப்படியும்மாற்றவேண்டும். அதற்காக இன்னும்என்னென்னதுன்பங்கள் வந்தாலும் ஏற்கத் தயார். அதுதான் இப்போது புதிய ஆயுள்வேத வைத்தியரின் ஆலோசனைகளுடன் சிகிச்சையளிக்கப்படுகின்றது. எல்லாம் ஒரு நம்பிக்கையின் அடிப்படையிலேயே!

## சொற்சிலம்பம் - போட்டி இல: 421

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | | ■ | 5 |
| 6 | | ■ | 7 | | ■ | 8 | |
| 9 | | 10 | | ■ | 11 | | |
| | ■ | | ■ | 12 | | | ■ |
| ■ | 13 | | 14 | | ■ | 15 | 16 |
| 17 | | | | ■ | 18 | | |
| 19 | | | ■ | 20 | | ■ | |
| 21 | | ■ | 22 | | | | |

அனுப்புபவர் பெயர்:..............................................

பூரணமான தபால் விலாசம்: ..............................................

..............................................

கையொப்பம்:..............................................

### இடமிருந்து வலம்

1. இலங்கையின் புனித நகரங்களில் ஒன்று
6. ஒரு திசையின் சுக்கம்
7. வெட்டி வீழ்த்து
8. இரு பாலாரில் ஒரு பாலார்
9. ஓர் உப கறி வகை
11. ஒரு காட்டு மிருகம்
12. அலறல்
13. ஓர் இராசி
15. சாதுவான மிருகம்
17. பெருமை மிக்கவர்; போற்றப்படுபவர்
18. ஓர் அரிசி வகை
19. மிகக் குறுகிய நேர அலகு
20. பன்மையைக் குறிப்பது
21. சாப்பிடு
22. மக்கள் கூட்டத்தின் சிறிய அடிப்படைத் தொகுதி

### மேலிருந்து கீழ்

1. பாதுகாப்பாக அமைவது
2. உறுதியானது
3. அன்பின் ஒரு வடிவம்
4. தடு
5. நாதியற்றவன்
8. தொடக்கம்
10. நகரம்
11. சேர்
12. இணைக்கச் சொல்

கிருஷ்ணன்

டி

பண்பு

ர்க்கதி ரி க்குத் தள்ளப்பட்டவன்

குப் போ

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில்பெரும்பாலானோர்முற்றிலும்சரியானவிடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 419 இற்கான சரியான விடைகள் வருமாறு:-

**இடமிருந்து வலம்**

(1)அகம்பாவம் (6)சனி (7)வட (8) கட (9) அலம்புதல் (11) பாமரன் (13) வலி (14) விதம் (15) என (17) தலை (18) விரும்பல் (20) கொடுமை (21)கல (22) சடுதி (23) கல்வி

**மேலிருந்து கீழ்**

(1)அசம்பாவிதம் (2)கனி (3)பாவலன் (4)வடம் (5)கடல் (8)கதலி (9)அரம் (10)புவனம் (12)மதலை (15) எருமை (16)பல்லவி (18)விடுதி (19)பகல் (20) கொடு

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 419 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**
A.தனுஜன்,
குடத்தனை வீதி,
மாசேரி, வரணி.

**2 ஆம் பரிசு**
ச.அன்சிகா,
'மீன பவனம்',
நெல்லியடி, கரவெட்டி.

**3 ஆம் பரிசு**
K.M.கறீம்,
பிரதான வீதி, நாச்சிக்குடா,
முழங்காவில்.

**4 ஆம் பரிசு**
கு.சிவகடாட்சம்பிள்ளை,
இந்துக் கல்லூரி வீதி,
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.

**5 ஆம் பரிசு**
மே.பா.யோ.பசில்,
இல.41/2, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

**பாராட்டுப் பெறுவோர்**

செ.ஜெயபாலன் பறுநாந்து,
3ஆம் வட்டாரம்,
பேசாலை.

அ.அமிர்தநாயகம்,
சாந்தசோலை,
அல்வாய்.

சுந்தரி கிருஷ்ணபிள்ளை,
எல்லை வீதி,
செங்கலடி (கி.மா.)

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி
இல.421
பூர்த்தி செய்யப்பட்ட
கூப்பன்கள்
நியூ உதயன் பப்ளிக்கேஷன்
(பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார்
வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு
எதிர்வரும் புதன்கிழமைக்கு
அடுத்து வரும்
புதன்கிழமைக்கு முன்னர்,
(01.06.2016 ஆம் திகதிக்கு
முன்னர்) கிடைக்கத்
தக்கதாகத் தபாலட்டையில்
ஒட்டி அனுப்பி
வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.421இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 05.06.2016 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவோருக்கான பரிசுக் காசோலைகள் வெற்றி பெற்றோரால் கொடுக்கப்படும் விலாசத்துக்கே அனுப்பி வைக்கப்படும். சரியான தபால் விலாசம் கொடுக்கப்படாமையால் சில சமயம் காசோலைகள் உரிய வெற்றியாளரைச் சென்றடையாமை அவதானிக்கப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 419 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக் கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

# யாழ். மறைமாவட்டத்தின் யாத்திரைத் தலங்களில் தனிச்சிறப்பு வாய்ந்த செம்பியன்பற்று புனித பிலிப்பு நேரியார் யாத்திரைத் தலம்

அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளை
*ஊடக விரிவுரையாளர் – யாழ் பல்கலைக்கழகம்*

*யாழ். மறைமாவட்டத்தின் மிகப் பிரசித்திபெற்ற யாத்திரைத்தலமான செம்பியன்பற்று புனித பிலிப்பு நேரியார் யாத்திரைத்தல வருடாந்தப் பெருவிழா எதிர் வரும் 26 ஆம் திகதி வியாழக்கிழமைகொண்டாடப்படுவதையொட்டி இந்தக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.*

செம்பியன்பற்று புனித பிலிப்பு நேரியார் யாத்திரைத்தல வருடாந்தப் பெருவிழா எதிர்வரும் 26 ஆம் திகதி யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் யோசப்தாஸ் ஜெபரட்ணம் அடிகளார் தலைமையில் காலை 6.30 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது. இதற்கு முந்திய தினம் வேஸ்பர் ஆராதனை யாழ். மறைமாவட்ட நிதியாளர் அருள்திரு ம. நேசநாயகம் அடிகளார் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது. யாழ் நகரில் இருந்து பஸ் ஒழுங்குகள் மற்றும் சுகாதார குடிதண்ணீர் ஒழுங்குகள் அனைத்தும் செய்யப்பட்டுள்ளதாகச் செம்பியன்பற்று புனித பிலிப்பு நேரியார் யாத்திரைத்தல பரிபாலகர் எல்மோ அடிகளார் தெரிவித்துள்ளார்.

**செம்பியன்பற்று புனித பிலிப்பு நேரியார் யாத்திரைத்தல ஆரம்பப் பதிவு**

1842ஆம் ஆண்டு இலங்கையில் இருந்த தியான சம்பிரதாய சபையைச் சேர்நத கயித்தானோ அன்ரோனியோ என்ற அப்போஸ்தலிக்க பதில் ஆளுநர் உரோமுக்கு அனுப்பிய அறிக்கையில் இலங்கையில் இருக்கும் 17 மாவட்டங்களில் பச்சிலைப்பள்ளி தனிமாவட்டமாக விளங்கியதாக அறிய வருகிறது. தற்போது அமைந்திருக்கும்புனித பிலிப்பு நேரியார் ஆலயத்துக்குத் தெற்கே அரை மைல் தொலைவில் இதற்கு முந்திய ஆலயம் கொட்டிற் கோவிலாக அமைந்திருந்தது. மக்கள் குடியிருப்புக்கள் இந்த ஆலயத்தைச் சூழ்ந்தே அமைந்திருந்தன. 1897 ஆம் ஆண்டுக்குப் பின்னர்தான் மக்கள் கடற்கரையோரமாகக் குடியமர்ந்தனர். சுவாமி ஞானப்பிரகாசரின் குறிப்புப்படி, 1925ஆம் ஆண்டு இந்தப் பங்கு பச்சிலைப்பள்ளிப் பங்கு என்று அழைக்கப்பட்டது. வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, தாளையடி, செம்பியன்பற்று, குடாரப்பு, புல்லாவெளி ஆகிய ஆலயங்கள் இணைந்ததாக இந்தப் பங்கு அமைந்திருப்பினும், குருவானவர் அனைத்து ஆலங்களுக்கும் பொதுவான இடம் என்றபடியால், தாளையடியையே பொதுவான தங்குமிடமாக அமைத்துள்ளார். இருப்பினும் திருவிழாக் காலங்களில் அந்தந்த ஆலங்களில் தங்கியுள்ளார். இந்த நடைமுறை இன்றும் பின்பற்றப்பட்டு வருவதைக் காணக் கூடியதாகவுள்ளது. 1870ஆம் ஆண்டு தற்போதைய ஆலயக் கட்டடப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. கட்டடம் நிறைவு பெறும் வேளை தற்செயலாக ஏற்பட்ட தீ விபத்தில் ஆலயமும், அருகில் இருந்த பாடசாலையும் எரிந்து அழிந்து போனதாக சுவாமி ஞானப்பிரகாசரின் குறிப்புத் தெரிவிக்கிறது. 1899ஆம் ஆண்டு முகப்பு வேலையைத் தவிர மற்றைய வேலைகள் அனைத்தும் நிறைவாகியுள்ளன. இந்தக் காலப்பகுதியில் குருக்கள் தங்குவதற்கான மனையும் அமைக்கப்பட்டது.

**மகிழ்ச்சியே கிறிஸ்தவத்தின் அடையாளம் என்பதை கொள்கையாகக் கொண்டவர் புனித பிலிப்பு நேரியார்**

பிலிப்பு நேரியார் இத்தாலியின் புளோரன்சு நகரில் 1515 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 22ஆம் நாள் பிறந்தார். வழக்குரைஞரான பிரான்செஸ்கோ என்பவருக்கும், அவருடைய மனைவி லூக்ரேசியா தா மோஷியானோ என்பவருக்கும் கடைசிக் குழந்தையாக அவர் பிறந்தார். அவர்தம் பெற்றோர் அரசுப் பணி சேர்ந்த மேல்குடி மக்கள். புனித பிலிப்பு நேரியார் உரோம் நகரில் ஏழை மக்கள் மற்றும் நோயுற்றோர் நடுவே பணிபுரிந்தார். அதன் காரணமாக மக்கள் அவரை 'உரோம் நகரின்திருத் தூதர்' என்று அழைக்கலாயினர். அதே சமயம் அவர் சமுதாயத்தால் ஒதுக்கிவைக்கப்பட்ட தொழிலாளரின் நலனைக்கருத்தில் கொண்டு அவர்களிடையேயும் பணிபுரிந்தார். பிலிப்புநேரியார் வாழ்ந்த காலத்தில் உரோம் நகரில் பல சீர்கேடுகள் நிலவின. குருகுலத்தினர் பலர் மக்கள் நலனின்அக்கறையின்றி இருந்தனர். அப்பின்னணியில் பிலிப்புநேரியார் மக்கள் நடுவே பெயர் பெற்றவராகத் திகழ்ந்தார்; மக்களுக்குப் பணி புரிவதில் மிகுந்த ஆர்வம் காட்டினார். மறைமாவட்ட குருக்களுக்கான 'இறைவேண்டல் சபை' என்றொரு அமைப்பை ஏற்படுத்தியவரும் இவரே ஆவார். 1538ஆம் ஆண்டி லிருந்து பிலிப்புநேரியார் உரோம்நகரின் எல்லாப் பகுதிகளுக்கும் சென்று, மக்களை நேரடியாகச் சந்தித்து உரையாடி அவர்களைக் கடவுள் பற்றியும் ஒழுக்க நெறி பற்றியும் சிந்திக்கத் தூண்டினார். 1548ஆம் ஆண்டு, பிலிப்பு நேரியார் பெர்சியானோ



> பிலிப்புநேரியார் ஒரு சீர்திருத்தவாதியாகச்செயல் படவில்லை. ஆனால் தமது அன்றாட மறைப் பணி வழியாக அவர் மனித உள்ளங்களைச் சீர்திருத்துவதில் ஈடுபட்டார். அவர் கத்தோலிக்க திருச்சபையின் போதனைகளை முற்றிலுமாக ஏற்றார். ஆனால் உலகைத் துறந்த வாழ்க்கையை விட உலகில் முழுமையாக ஈடுபட்டு மக்களை நன்னெறியில் வழி நடத்துவதே சிறப்பு என்று அவர் கருதினார்

ரோசா என்னும் குருவோடு இணைந்து 'திருப்பயணிகள் மற்றும் நோயுற்று குணமாவோருக்கான மூவொரு கடவுள் குழு' என்றொரு இயக்கத்தைத் தொடங்கினார். அந்தக் குழுவின் நோக்கங்கள் உரோம் நகருக்குத் திருப்பயணமாக வரும் ஆயிரக் கணக்கான மக்களுக்கு பணி புரிவது, மருத்துவமனைகளிலிருந்து வெளியேறியும் வேலை செய்யத் திறனற்ற நிலையிலிருந்தோரின் துயரம் போக்குதல் என்பனவாக அமைந்திருந்தன.

**புனித பிலிப்பு நேரியாருக்கு புனிதர் பட்டம்**

பிலிப்புநேரியார் பல கோவில்களில் ஒப்புரவு அருட்சாதனம் வழங்கினார். இவ்வாறு, பல மக்களைக் கடவுள்பால் ஈர்த்து, அவர்களை மறை நம்பிக்கையில் வளரச் செய்தார். 1615ஆம் ஆண்டு திருத்தந்தை ஐந்தாம் பவுல் பிலிப்பு நேரியாருக்கு முத்திப்பேறு பெற்ற பட்டம் வழங்கினார். 1622ஆம் ஆண்டு திருத்தந்தை பதினைந்தாம் கிரகோரி பிலிப்பு நேரியாருக்கு புனிதர் பட்டம் அளித்தார். உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்று பாராமல், பிலிப்புநேரியார் எல்லா மக்களோடும் சமமாகப்பழகினார். எப்போதும் மகிழ்ச்சியோடு காணப்பட்டார். கவலை தோய்ந்தமுகத்தோடு வாழ்வதல்ல கிறிஸ்தவம். மாறாக, மகிழ்ச்சியே கிறித்தவத்தின் அடையாளம் என்பது அவருடைய கொள்கையாக இருந்தது. அவர் நகைச்சுவைக்குப் பேர்போனவர். எனவே, எல்லா இடங்களிலும் மகிழ்ச்சியைப் பரப்புவதை அவர் தம் பணியின் இலக்காகக் கருதினார். இவ்வாறு, எல்லா மக்களாலும் அவர் பெரிதும் மதிக்கப்பட்டார். அவர் பல புதுமைகள் புரிந்தார் என மக்கள் அவரைப் போற்றினர். அவர் சால்பு நிறைந்த, எல்லாரையும் மதிக்கின்ற, மகிழ்ச்சியோடு தோற்றமளிக்கின்ற மனிதர். உலக நடப்பு என்னவென்றுஅறிவதில் மிகுந்த ஆர்வம் காட்டினார். தகவல் பெறுவதிலும்கொடுப்பதிலும் ஈடுபட்டார். நன்முறையில் ஆடை அணிந்தவர் அவர். நகைச்சுவை மிகுந்த அவர் கூர்மையான உலக அறிவையும் கொண்டிருந்தார். அவருடைய அறையில் நவீன மரப்பொருள்கள் எளிமையான விதத்தில் இருந்தன. ஆனால் அவர் வறுமையில் வாடவில்லை. இவ்வாறு, எல்லா மக்களாலும் அவர் பெரிதும் மதிக்கப்பட்டார். அவர் பல புதுமைகள்புரிந்தார் என மக்கள் அவரைப் போற்றினர்.

**புனித பிலிப்பு நேரியார் ஒரு சாதாரண மனிதராக வாழ்ந்தார்**

பிரடெரிக் வில்லியம் என்பவர் பிலிப்பு நேரியாரின் குண நலன்களைப் பின்வருமாறு விவரிக்கிறார்: பிலிப்பு நேரியார் கடுமையான உபவாசங்களில் ஈடுபடவில்லை. மாறாக, அவர் ஒரு சாதாரண மனிதராக வாழ்ந்தார். அவர் சால்பு நிறைந்த, எல்லாரையும் மதிக்கின்ற, மகிழ்ச்சியோடு தோற்றமளிக்கின்ற மனிதர். உலக நடப்பு என்னவென்றுஅறிவதில் மிகுந்த ஆர்வம் காட்டினார். தகவல் பெறுவதிலும் கொடுப்பதிலும் ஈடுபட்டார். நன்முறையில் ஆடை அணிந்தவர் அவர். நகைச்சுவை மிகுந்த அவர் கூர்மையான உலக அறிவையும் கொண்டிருந்தார். அவருடைய அறையில் நவீன மரப்பொருள்கள் எளிமையான விதத்தில் இருந்தன. ஆனால் அவர் வறுமையில் வாடவில்லை. அவர் நல்ல குடிமகனாக வாழ்ந்தார். எல்லோருடனும் பழகினார். அவர் வழக்கமான துறவறவாழ்க்கையைத் தழுவ விரும்பவில்லை. மாறாக, புதிய முறையில் கிறித்தவ நம்பிக்கையைக் கடைப்பிடித்து வாழ முயன்றார். அவரது பணியின்போது மக்களுக்கு மறையுரை ஆற்றுவதில் அவர் பெரிதும் கவனம் செலுத்தினார். தனி செபத்தில் நேரம் செலவழித்தார். "இன்று நான் என் வாழ்வை நன்முறையில் வாழ்ந்தால், நாளை என்ன நடக்கும் என்று நான் கவலைப்பட வேண்டியதில்லை" என்பது அவருடைய மன்றாட்டாக இருந்தது. எந்தவொரு பணியில் ஈடுபட்டிருந்தாலும், எவராவது அவரைத் தேடி ஆன்ம ஆலோசனை கேட்க வந்தால் உடனேயே அவர் புறப் பட்டுச் செல்லும் வழக்கம் கொண்டிருந் தார். அப்போது அவர் "கிறித்துவைச் சந்திப் பதற்காக, கிறித்துவைவிட்டுச் செல்ல நாம் முன்வரவேண்டும்'' என்று அவர் கூறுவாராம். பிலிப்பு நேரியார் ஆழ்ந்த இறை பற்றுக்கொண்டிருந்தார். அவர் பலமுறைபரவசக்காட்சிகள் கண்டதுண்டு. கடவுளோடு தனிமையில் இருப்பதையே அவர் வாழ்க்கையின் மிகப் பெரும் மகிழ்ச்சியாகக்கண்டார். அதே நேரத்தில், அவருடைய உதவியை நாடி எவராவது வந்தால் தனது இறைவேண்டலைவிட்டுவிட்டு உடனடியாக ஓடிச்செல்வார். அவருடைய வாழ்வு முழுவதுமே "கடவுள் அனுபவத்தில் தோய்ந்த பிறரன்பு" என்னும் குறிக்கோளின் அடிப்படையில் அமைந்தது.

**பிலிப்புநேரியார் ஒரு சீர்திருத்தவாதியாகச் செயல் படவில்லை**

பிலிப்புநேரியார் ஒரு சீர்திருத்தவாதியாகச்செயல்படவில்லை. ஆனால்தமது அன்றாட மறைப்பணிவழியாக அவர் மனித உள்ளங்களைச் சீர்திருத்துவதில் ஈடுபட்டார். அவர் கத்தோலிக்கதிருச்சபையின்போதனைகளை முற்றிலுமாக ஏற்றார். ஆனால் உலகைத் துறந்த வாழ்க்கையை விட உலகில் முழுமையாக ஈடுபட்டு மக்களை நன்னெறியில் வழிநடத்துவதே சிறப்பு என்று அவர் கருதினார். பிலிப்புநேரியார் திரு இசையை வளர்ப்பதில் மிகுந்த ஆர்வம் காட்டினார். அவர் நிறுவிய இறைவேண்டல் குழு செபிக்கக் கூடும்போது "ஆன்ம இறைபுகழ்" பாட வேண்டும் என்று அவர் வழிவகுத்தார்.

**புனித பிலிப்பு நேரியார் மக்கள் மனதறிந்த மறைப் போதகர்.**

புனித பிலிப்பு நேரியார் மக்கள் மனதறிந்த மறைப் போதகர். அவரது போதனைகளில் மிகவும் பிரசித்தி பெற்றுக் காலாகாலமாக நினைவு கூரப்படுகின்ற ஒரு கதையுண்டு. தன்னிடம் பாவமன்னிப்புப்பெற வந்த பெண் ஒருவர் மற்றவர்களின் நற்பெயருக்கு எதிராகச் செயற்படும் பாவம் ஒன்றைச் சொல்லி அதில் இருந்து விடுதலை பெற முடியாமல் வேதனைப்பட்டுள்ளார். அவருக்கு நல்ல படிப்பினையையும் மனமாற்றத்தையும் வழங்க விரும்பிய புனித பிலிப்பு நேரியார் அவரிடம் கோழி ஒன்றை கொடுத்து அதன் இறகுகளை ஒரு மலை உச்சியில் இருந்து ஒவ்வென்றாக ஓடித்து எறியும்படி சொன்னார். அவ்வேலை அப்பெண்ணுக்கு மிகவும் இலகுவான வேலையாகத் தென்பட்டது. அவ்வேலையை மிக மிக இலகுவாக முடித்துவிட்டு வந்த பெண்ணிடம் இப்போது நீர் சென்று அந்த இறகுகள் அனைத்தையும் சேர்த்துக் கொண்டு வாரும் என்று சொன்னபோது அப்பெண் அதிர்ந்து போனார். மலை உச்சியில் இருந்து நான் எறிந்த இறகுகள் அனைத்தும் பல்வேறு பக்கமும் பறந்து போவதை நானே பார்த்தேன். அவற்றை என்னால் என்றுமே சேகரிக்க முடியாது என்றார். அப்போது புனித பிலிப்பு நேரியார் அப்பெண்ணிடம் இப்படித்தான் நீர் அழித்த மற்றவர்களின் பெயர்களையும் என்றுமே திருப்பி கொடுக்க முடியாது என்றார். அந்த நொடிப்பொழுதில் அதிர்ந்து போன அப்பெண் தன் வாழ்வையே மாற்றிக்கொண்டு இனிமேல் மற்றவர்களின் நற்பெயர்களைக் கெடுப்பதில்லை என்று முடிவெடுத்தார். இன்றும் புனித பிலிப்பு நேரியார் பதிகளில் கோழிகள் காணிக்கையாகக் கொண்டு வரப்படுவதற்கும் கோழிப் பெருநாள் என இப்பெருநாள் அழைக்கப்படுவதற்கும் இதுவே காரணமாக அமைந்துள்ளது.

செம்பியன்பற்று புனித பிலிப்பு நேரியார் தமிழ் மக்கள் வாழ்விலும் மாற்றம் ஏற்பட அருள்மழை பொழிவாராக.

# இளம் சந்ததியினருக்கு எதிர்காலம் சிறக்க ஆன்மிகத்தை ஊட்டுங்கள்



சி.நற்குணலிங்கம்

எமது இளைஞர்கள் நவீன கலாசாரங்களால் மூளைச் சலவை செய்யப்பட்டு தமது குடும்ப, சமூக கலாசார விழுமியங்களை மறந்து வாழ முற்படுகிறார்கள். இளம் தலைமுறையினரிடம் வன்முறைப் போக்கு துர்நடத்தை மட்டுமன்றி பெற்றோருக்கு, ஆசிரியர்களுக்கு, முதியோர்களுக்கு கட்டுப்படாமை, புகைத் தல், மது பாவனைக்கு அடிமையாதல், கஞ்சாப் பாவனைக்கு ஆளாதல், பாலியல் நடத்தைகள் எனச் சமூகப் பிறழ்வான வழிகளில் சென்று தம்மையும் ஏனையோரையும் அழிக்கிறார்கள். இந்த நிலை இனிவரும் சந்ததியினருக்கு கைமாற்றப்படக் கூடாது. இந்த விடயத்தில் பெற்றோர்கள் மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும். இதற்கு ஒரே வழி பிள்ளைகள் மத்தியில் ஆன்மிக உணர்வு விதைக்கப்பட வேண்டும்.

ஆன்மிகம் என்பது ஆலய வழிபாடு மாத்திரமல்ல அதையும் தாண்டி ஒவ்வொரு உயிரையும் நேசிப்பது, அவர்களுக்கு சேவை செய்வது என சுவாமி விவேகானந்தர் குறிப்பிட்டுள்ளார். இந்த ஆன்மிக உணர்வை மாணவப் பருவத்திலேயே ஊட்ட வேண்டும். மாணவர்களின் மனம் பிஞ்சு. களைகள் அரும்பாத நல்ல நிலம். நல்ல விதைகளை விதைத்து அதனைப் பராமரித்தால் செழிப்பாக வளரும். அவர்கள் உலகவாழ்வில் காலடி எடுத்து வைக்க இருக்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ஒரு மாணவன் காகத்தை போல கவனிக்க வேண்டும். நாயைப் போல செவிக் கூர்மையுடன் இருக்க வேண்டும். என்பன மாணவப்பருவப் பண்புகளாகும்.. இந்துமதத்தின் அடிப்படையே மாணவர்களிடம்தான் ஆரம்பிக்கின்றது. குழந்தைப் பருவத்திலேயே நல்ல தத்துவங்களை உணர்த்துவதற்குரிய நிலை மாணவரின் நிலை என இந்து மதம் கூறுவதும் இன்னொரு மேலான சிறப்பியல்பாகும்.

புத்தர் 40 ஆண்டுகளுக்குப் பின்புதான் ஞானம் அடைந்தார். ஆனால் அவரது சீடர்கள் அனைவரையும் அவர் மிக இளம் வயதினராகவே தேர்ந்தெடுத்தார்.காரணம் கேட்டபோது வயது போனவர்களால் ஞானம் அடைவதற்குத் தேவையான முழு சக்தியையும் உள்வாங்குவது கடினம் என புத்தர் குறிப்பிட்டார். இளம் வயதினரின் சக்தி என்ன என்பது உங்களுக்கு இப்போ புரிந்திருக்கும். எனவே சிறு மாணவப் பராயத்திலேயே சாதிக்க எழுந்து விடுங்கள். உங்கள் தீய செயல்கள் மறைய ஆன்மிக வழிக்கு வாருங்கள். ஆன்மிகத்தை புறக்கணித்துவிட்டு மேலை நாட்டு நாகரிகத்தை நோக்கிச் செல்லத் தொடங்கினால் மூன்றே தலை முறைகளில் நம் பண்பாடு முற்றிலும் அழிந்துவிடும் என சுவாமி விவேகானந்தர் குறிப்பிட்டுள்ளார்.

ஆன்மிகமும் கல்வியும் ஒன்று சேரும் போதுதான் மனித விழுமியங்களும் மனிதப்பெறுமானமும் பேணப்படும். கல்வியானது ஆன்மிகத்துடன் சேர்ந்து வணங்கப்படும் போதுதான் ஒரு மாணவன் முழுமை பெறுகிறான். ஆன்மிகமும் கல்வியும் ஒன்று சேரும் போதுதான் சமுதாயத்தில் அன்பு, அமைதி, ஒழுக்கம், நேர்மை என்பவை நிலைத்து நிற்கும். ஆனால் இன்றைய மாணவர்கள் ஆன்மிக விழுமியங்கள் சார்ந்த போட்டிகளில் பங்குபற்றத் தவறிவிடுகின்றனர். இந்த் விடயத்தில் பாடசாலை மட்டுமல்ல பெற்றோரும் கூடிய கவனம் எடுக்க வேண்டும். இதனால் தான் கல்வியை முடித்து வெளி யேறும் மாணவர்களில் பெரும்பாலானவர்கள் நல்ல பண்புகளுடன் வெளியேறுவதாகத் தெரியவில்லை.

பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு ஆன்மிக வழியைக் காட்டுவார்களாயின் அவர்கள் மனித குலத்துக்கு ஒரு வரப்பிரசாதமாக இருப்பார்கள். உடலையும் புலன்களையும் வழிநடத்தும்போது மனம் என்ற கடிவாளத்தை உறுதியாகப் பிடித்துக்கொள்ள முடியும். ஒருவன் தன்னையே வெறுக்கும் சந்தர்ப்பம் வாழ்வில் ஏற்படாது. ஒருவன் தன்னை வெறுக்க ஆரம்பித்துவிட்டால் அவன் கீழ் நிலைக்குச் செல்வதற்கான கதவு திறந்துவிட்டது என்று பொருள். ஆன்மிக அறிவு உணர்வின்றி லௌகீக அறிவு மட்டுமே செயற்படுவது எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போல், தீமையையே ஏற்படுத்தும். நாம் உண்மையான ஆன்மிக நெறியில் சமூகத்தை உருவாக்க வேண்டும்.

> “ ஆன்மிகம் எமக்கு ஏற்படுத்தும் சக்தியைப் போன்று வேறு எவையும் சக்தி வாய்ந்ததில்லை. இவ்வழியில் நாம் அக்கறை செலுத்தா விட்டால் தமிழர் கலா சாரம் கேள்விக்குறியாகி எதிலும் அன்னிய கலா சாரம் அன்னிய மோகம் ஏற்பட்டு தமிழர் என்ற அடையாளத்தைக் கூட தேடித்தான் காணவேண்டும்.

ஆன்மிகத்தினால் அகிலத்தையே வெல்லலாம். ஆன்மிகம் எமக்கு ஏற்படுத்தும் சக்தியைப் போன்று வேறு எவையும் சக்தி வாய்ந்ததில்லை. இந்த வழியில் நாம் அக்கறை செலுத்தாவிட்டால் தமிழர் கலாசாரம் கேள்விக்குறியாகி எதிலும் அன்னிய கலாசாரம் அன்னிய மோகம் ஏற்பட்டுதமிழர் என்ற அடையாளத்தைக் கூட தேடித்தான் காணவேண்டும். ஆன்மிகத்தை மறந்துவிடாதீர்கள் அதுதான் உயர்ந்தது.

நாம் வாழ்வில் வெற்றி பெற வேண்டுமானால், உணர்ச்சிகள் எம்மை ஆளக் கூடாது. உணர்ச்சிகளை நாம் ஆளவேண்டும் எனும் எண்ணத்தை நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இவை மனதைப் பொறுத்த விடயம். பக்தியால் நமது மனித மனம் பக்குவம் பெறும். எனவே மனதை ஆன்மிக சாதனைகளால் ஒரு முகப்படுத்துங்கள், வெற்றி நிச்சயம், எண்ணம் சிறக்கும்.

நாம் ஒவ்வொருவரும் மற்றவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பு அளிக்க வேண்டும். ஒவ்வொரு மனிதனும் தான் வாழ்வதுடன் பிறரையும் வாழவிட வேண்டும். இதனை வழிபாட்டின் மூலம் இலகுவாகப் பெற்றுக்கொள்ளமுடியும். அனைத்து உயிர்கள் மீதும் செலுத்தப்படும் அன்பின் வடிவமான இறைவன் ஆலயங்களில் குடியமர்ந்துள்ளார். இதுமட்டுமல்ல உடல் உள ரீதியான நன்மைகள் பல கிடைக்கின்றன. கோயில் என்பது விஞ்ஞானபூர்வமாக மனிதனுக்கு உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் பல நன்மைகள் செய்வதற்காக அமைக்கப்பட்ட ஒரு கிளினிக் என்று கூடச் சொல்லலாம்.

உலக வாழ்விலிருந்து தப்பியோட எவரும் முயற்சி செய்ய வேண்டாம் வெற்றியோ, தோல்வியோ போராடுங்கள். பாமரன் பண்புள்ளவனாகவும் பண்புள்ளவன் தெய்வமாகவும் உயரவேண்டும். இதுவே ஆன்மிகத்தின் பயன். பிள்ளைகளின் எதிர்கால இழி செயல்களுக்கும் முழுப்பொறுப்பாளிகளும் பெற்றோர்களே. ஒவ்வொரு பெற்றோரும் தம் பிள்ளைகளை நல்ல மனிதனாக சமுதாயம் ஏற்கும் பண்புகளைக் கொண்டவனாக சிறந்த குடிமகனாக காண ஆன்மிக நெறி உள்ளவர்களாக வளர்த்தெடுக்க வேண்டும். மகத்தான செயல்களைச் செய்வதற்காகவே ஆண்டவன் எம்மைப் படைக்கின்றான். நீங்கள் கடவுளின் குழந்தைகள். எனவே ஆன்மிக வழி சென்று தீயவற்றை அகற்றி எதிர்காலம் சிறக்க வாழ்வீர்களாக.

நல்லதை விதை, தீயதை புதை




அலியான்ஸ் காப்புறுதி நிறுவனத்தின் யாழ். பிராந்திய கிளையின் 6 ஆவது வருட பூர்த்தி நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழக சந்தைப்படுத்தல் விரிவுரையாளர் மருத்துவர் எஸ். ராஜுமேஸ், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட உதவி விரிவுரையாளர் எஸ். சிவனேந்திரா, சிரேஷ்ட வலய முகாமையாளர் மாணிக்கவாசகர் புவிராஜ், சிரேஷ்ட பிராந்திய முகாமையாளர் முருகையா மகேந்திரராஜ், விற்பனை அபிவிருத்தி விநியோக முகாமையாளர் விநாயமூர்த்தி நிதர்சன், உதவிகள முகாமையாளர் சுந்தரலிங்கம் சுஜீவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.. (ஐ-ரி)





சாவகச்சேரி சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலயத்தின் தேர்த் திருவிழா நேற்று முன்தினம் நடைபெற்றது. (ஐ-9)



முல்லைத்தீவு மாவட்டத்தில் தையல் பயிற்சியை மேற்கொள்ளும் மாணவிகளுக்கு தையலுக்கான துணிகள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் து. ரவிகரனால் வழங்கப்பட்டுள்ளன. (ஐ-21)



அண்ணாவியார் கலாபூசணம் மு.அருட்பிரகாசம் எழுதிய பண்டாரவன்னியன் நாட்டுக்கூத்து நூல் வெளியீடு அண்மையில் பாசையூரில் நடைபெற்றது. வட மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா நூலை வெளியிட்டு வைக்க, மாகாண சபை உறுப்பினர் இ.ஆனோல்ட் பெற்றுக் கொண்டார். (ஐ-135)



அனலைதீவு மனோன்மணி அம்பாள் ஆலயத்தின் பெருந் திருவிழாவின் தேர்த் திருவிழா நேற்று முன்தினம் நடைபெற்றது. (ஐ-9)



அ.அஜந்தனின் 'மனமெனும் கூடு' கவிதைத் தொகுப்பு நூல் வெளியீடு அண்மையில் கலைத்தூது மண்டபத்தில் நடைபெற்றது. முதற்பிரதியை பிரதம விருந்தினர் கவிஞர் சோ.பத்மநாதனிடமிருந்து ஆறுதல் நிறுவனம் சுந்தரம் டிவகலாலா பெற்றுக் கொண்டார். (ஐ-135)

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



சாவகச்சேரி சப்பச்சி மாவடிப் பிள்ளையார் ஆலயத்தில் கடந்த வெள்ளிக் கிழமை நடைபெற்ற தேர்த் திருவிழாக் காட்சி. (ஐ-9)



வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தால், போரால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்டம் இரணைமடு - பாரதிபுரம், உடையார்கட்டு, புதுக்குடியிருப்பைச் சேர்ந்த பயனாளிகள் இருவருக்கு மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டன. (ஐ)



கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தை மட்டக்களப்புக்கு இடமாற்றுமாறு அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம் கோரிக்கை ஒன்றை முன் வைத்துள்ளது. இந்தக் கோரிக்கை தொடர்பான மகஜர் ஒன்றை சங்கத் தலைவர் எஸ். லோகநாதன், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல். நஸீரிடம், அவரது அட்டாளைச் சேனை அலுவலகத்தில் வைத்துக் கையளித்தார். (ஐ-30)



வடமாகாணசபை உறுப்பினர் மயில்வாகனம் தியாகராசாவால் வவுனியாவில் வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன. (ஐ)




குருநகர் அபிவிருத்திக்கான இணையத்தின் ஏற்பாட்டில் தரம் 5 இற்கு உட்பட்ட மாணவர்களின் கல்வித்தரத்தை மேம்படுத்தும் விசேட பயிற்சி வகுப்பு அண்மையில் சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தில் நடத்தப்பட்டது. இதில் புனித யாகப்பர் ஆலயத்தின் பங்குத்தந்தை அருட்பணி ஜே.மௌலிஸ், சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை அதிபர் எ.மரியதாசன், சென்.ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை அதிபர் அருட்சகோதரி மேரி சயந்தி ஆகியோர் கலந்து கொண்டு பெற்றோருக்கும், மாணவர்களுக்கும் கல்வியின் மகத்துவம் பற்றி எடுத்துக் கூறினர். (ஐ)





மிருசுவில், விடத்தற்பளை கமலாசனி வித்தியாலய மாணவர் நாடாளுமன்ற அங்குரார்ப்பண நிகழ்வுகள் அண்மையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றன. நிகழ்வுக்கு வருகை தந்த விருந்தினர்கள் பாண்ட் வாத்திய சகிதம் அழைத்து வரப்பட்டனர். (ஐ-9)









இணுவில் பொதுநூலகம் சனசமூக நிலைய பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா இணுவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் ம.கபிலன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி றூபா உதயரட்ணம், சிறப்பு விருந்தினர்களாக வலி. தெற்கு உடுவில் சமுர்த்தி மகாசங்க முகாமையாளர் திருமதி ஆனந்தகௌரி ஜெயக்குமார், யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர் எஸ்.ரி.குமரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ)



உடற்கல்விப் போட்டியில் தேசிய மட்டத்தில் முல்லைத்தீவு மாவட்ட மாணவர்கள் பதக்கம் பெற்றதை பாராட்டும் முகமாக யாழ். மாவட்ட உடற் கல்வி ஆசிரியர் சங்கத் தலைவர் ப.தர்மகுமாரன், ஐந்தாயிரம் ரூபாவுக்கான காசோலையை வடமாகாண உடற்கல்வி பணிப்பாளர் கே.சத்தியபாலனிடம் கையளித்தார். (ஐ-50)



உடுவில் மகளிர் கல்லூரியின் 190 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் முத்திரை வெளியீட்டு நிகழ்வுக்கு முன்னாள் அதிபர் செல்வி சி.வி. செல்லையா மங்கல விளக்கேற்றுவதையும், அருகில் விளையாட்டு இணைப்பாளர் ப.தர்மகுமாரன் நிற்பதையும் காணலாம். (ஐ-50)

# UNIVERSITY COLLEGE OF JAFFNA

UNIVERSITY OF VOCATIONAL TECHNOLOGY
MINISTRY OF SKILLS DEVELOPMENT AND VOCATIONAL TRAINING

UNIVERSITY COLLEGE

## VACANCIES

Applications are invited from suitable qualified persons for the below mentioned posts in University College of Jaffna.

### 1. LECTURER (PROBATIONARY) IN CONSTRUCTION TECHNOLOGY

**Qualifications:**

1. A Degree with specialization in a relevant subject with First Class or Second Class (Upper Division) Honors.

OR

2. A degree with specialization in a relevant subject with Second Class (Lower Division) Honors and at least 01 year of experience in teaching /research/professional work in recognized mercantile establishment /postgraduate studies in a recognized University or Higher Education Institution;

OR

3. (a) A degree with specialization in the relevant subject without Honors or any other general degree with at least Second Class Honors,

AND

(b) A Postgraduate Degree with duration of at least 02 academic years in the relevant subject with a research component by way of thesis/dissertation;

OR

4. (a) A Degree or equivalent professional qualification offered or recognized by a professional institution established by an Act of Parliament of Sri Lanka in the relevant subject.

AND

(b) One year Master Degree in the relevant subject or equivalent further professional qualification offered or recognized by a professional institution established by an Act of Parliament of Sri Lanka.

AND

(c) Five (5) years professional experience after graduation or after securing professional qualification given in 4(a).

OR

5. (a) A degree or equivalent professional qualification offered or recognized by a professional institution established by Act of parliament of Sri Lanka in the relevant subject.

AND

(b) Eight (8) years professional and/ or teaching experience after graduation or after securing professional qualification given in 5(a)

**Age Limit** - 22 – 60yrs
**Selection Procedure**: Through an Interview.
**Salary Scale**: U-AC 3 (IV) - 2006A- Rs. 27,775 – 10 x 645 - 13 x790 – 8 x 1050 – 52895 p.m

### 2. LECTURER (PROBATIONARY) / TEMPORARY/ VISITING LECTURER IN COSMETOLOGY (BEAUTY CULTURE)

**Qualifications:**

1. Candidates shall possess the academic qualifications required for the Category 1 Mentioned above

OR

Possess Diploma or equivalent qualification offered or recognized by local or foreign institution with 5 years professional experience.

**Note: Siddha medicine and Ayurvedic medicine graduates can also apply**

**Age Limit** - 22 – 60yrs
**Selection Procedure**: Through an Interview.
**Salary Scale**: U-AC 3 (IV) - 2006A- Rs. 27,775 – 10 x 645 -13 x790 – 8 x 1050 – 52895p.m (For Permanent Posts)

### 3. LABORATORY ASSISTANT– FOOD TECHNOLOGY

**Qualifications:**

1. Persons who have sat for the G.C.E. (O/L) Examination and passed a minimum of 02 subjects

AND

2. National Vocational Qualification (NVQ) Level 4 in the relevant field.

**Salary Scale** :U- PL3- 2006A – Rs.15,650 – 10X140 – 10 X155 – 10X185 -12 X200 – 22,850p.m
**Age Limit** - 18 – 45yrs
**Selection Procedure**: Through a Trade test & Interview.

### 4. MAINTENANCE TECHNICIAN

**Qualifications:**

(a) Having passed the G.C.E. (O/L) Examination in six subject in one sitting with credit passes for 04 subject including;
(i)Sinhala/Tamil
(ii)English Language
(iii)Mathematics

(b) Having achieved the performance level required to follow a tertiary education course by passing the required number of subjects other than the 'General Papers' at the G.C.E.(A/L) Examination.

AND

(c) Not below National Vocational Qualification (NVQ) Level 5 in Electronics, Electrical, Multi Media, Instructional Material Development, Mechanical& ICT.

**Salary Scale** : U-MT-12006A - Rs 16,535-7X155-11X185-10X245-13X320-26,265p.m
**Age Limit** - 18 – 45yrs
**Selection Procedure**: Written competitive Examination & Interview.

✓ All Posts(Except TemporaryVisiting) arePermanent with entitlement to EPF & ETF
✓ Other Government Approved Allowances.

- Specimen Application form and further details are available at our office mentioned below or visit our website www.ucj.lk. Duly filled applications forms indicating academic and professional qualifications should have sent to **"The Assistant Registrar, University College of Jaffna, No 29, Brown Road, Kokuvil, Jaffna"** by Registered post on or before **3rdJune 2016**.
- Desired **post applied** should indicate clearly on the top left hand corner of the envelope
- Applicants from Higher Education Institutions, Government Departments and Government Corporations should apply through the Heads of such Institutions. Applications which do not conform to this requirement will be rejected. Such applicants are strongly advised to submit an **advance copy** to the address given above.
- Only short listed applicants will be called for the written examination and or for the interview.

**Assistant Registrar**
**University College of Jaffna**
**22.05.2016**

# மரண அறிவித்தல்கள்



## திருமதி பாறுபதி தங்கராசா

கரணவாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாறுபதி தங்கராசா கடந்த (19.05. 2016) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.05. 2016) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக எள்ளங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படு ம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: கிருஷ்ணமாலா (மகள்)**
**077 215 6655, 021 226 3943**

**தேத்தாவளவு, கரணவாய்தெற்கு, கரவெட்டி**

## திருநாவுக்கரசு சிறீராம் (சிறீ)



அம்மன் வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு சிறீராம் நேற்று (21.05.2016) சனிக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் திருநாவுக்கரசு - இராசம்மா தம்பதியரின் அன்பு மக னும், ரிஷ்சியா, டக்சியா ஆகியோரின் அன்புச் சகோதரனும், பிரபாகரன், கஜந்தன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.05.2016) ஞாயிற்றுக் கிழமை அம்மன் வீதி, கோண்டாவில் மேற்கு, (கோண்டாவில் 'ஸ்ரேசன் அருகில்) உள்ள இல்லத்தில் பி.ப. ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: க.திருநாவுக்கரசு
(தந்தை- இளைப்பாறிய அதிபர்,
நாமகள் வித்தியாலயம்)

## திருமதி
## பத்மாவதி இராசரெத்தினம் (நயினாதீவு)



நயினாதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மாவதி இராசரெத்தினம் கடந்த (19.05.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாசிலாமணி-அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற மாசிலாமணி வாலாம்பிகையின் பெறாமகளும் காலஞ்சென்றவர்களான சின்னையா-விசாலாட்சி தம்பதிகளின் அன்பு மருமகளும் இராசரெத்தினத்தின் அன்பு மனைவியும் சபேசன் (பிரான்ஸ்), கேதீஸ்வரி (ஆசிரியை புங்குடுதீவு சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் செந்தில்நாதனின் (செந்தில்) சிறிய தாயாரும் பானுகலா (பிரான்ஸ்), அன்பரசன் (முகாமைத்துவ உதவியாளர் வலயக் கல்வி அலுவலகம் வேலணை) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான தில்லைநாதன் (நாதன் கபே) சிவக்கொழுந்து மற்றும் யோகேஸ்வரி, மாணிக்கவாசகர் சிவகாமசுந்தரி (பிரான்ஸ்), தர்மகுலசிங்கம், விஜயகுலசிங்கம் (ஜேர்மனி), கதிர்காமசுந்தரி, விஜயலட்சுமி, செல்வரெத்தினம் (சுவிஸ்), பரமேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான சிவகங்கை, மகாலிங்கம், திருநாவுக்கரசு மற்றும் திலகவதி குற்றாலம் ஆகியோரின் மைத்துனியும் பானுசன், டினோஷா, கபிஷன், அபிஷன் (பிரான்ஸ்), ஹர்சனா, கம்ஷனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.05.2016) திங்கட்கிழமை பி.ப 2.00 மணி யளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் நயினாதீவு சல்லிபரவை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நயினாதீவு-07.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**
**021 320 1490**

## கருமை தோற்றம் கொண்டவர்களுக்கு ஓர் அற்புதமான செய்தி (2Weeks Result)

ஆண், பெண் இருபாலாருக்கும் உகந்தது 2 வாரத்தில் நல்ல அழகான மேனியுடன் தோற்றமளிக்க France நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட

**Herbal Whitening Cream**

Cream விலை 2500/-,5500/-

முகப்பரு, கண் கருவளையம், முகச்சுருக்கம், உதடு கருப்பு, முதுகு கழுத்து கருப்பு, கை கருப்பு மற்றும் முகம் தாடைகளிலுள்ள தேவையற்ற ரோமங்களை அகற்றும் கிறீம் முகம் , உடம்பு பகுதியில் உள்ள காய்கள் அகற்றும் கிறீம் விற்பனைக்கு உண்டு.

ஆச்சரியம் கரும்புள்ளிகளை 10 நாள்களில் அகற்றும் Magic Peel எங்களிடம் உண்டு.

எங்களிடம்

மேலும் உடல் எடை, மார்பு கூட்டும் குறைக்கும் குளிசை ,டொனிக், பாம்மா, தலைமுடி வளரச் செய்யும் ஆயுள்வேத எண்ணெய் விற்பனைக்குண்டு.

077 210 6155

221, நாவலர் றோட்,
(பிறவுண் றோட் சந்தி அருள் கொமினிகேஷன் அருகில்) யாழ்.

## பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை

(திருநெல்வேலி, சுன்னாகம், யாழ்ப்பாணம்)

செக்குரிட்டி வேலையாள்கள். S.O Duty
O.I.C Duty (வேலை தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை)
பின்வரும் வேலையாள்கள் தேவை.

சுத்திகரிப்பாளர்
மேற்பார்வையாளர்
Room boy

வரும்போது I.D Copy, குடும்ப காட் கொப்பி. 3படம் ஆகியவற் றுடன் நேரில் வரவும்
காலை 9am - 5pm வரை
தங்கியிருந்து வேலை செய்பவர்களுக்கு முன்னுரிமை

Parameswary Rest Inn
Kaithady road, Maruthanar madam.
077 891 9367, 076 7060095

## கடி ஜோக்ஸ்



REG KADI என்று Type செய்து
Dialog - 77000 | Etisalat - 4499
ஆகிய இலக்கங்களுக்கு SMS அனுப்புங்கள்.

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

பிரபல ஆசிரியரின்
தனிப்பாவனையிலுள்ள
HONDA CD 125
ஜப்பான் மொடல் உடன்
விற்பனைக்குண்டு.

077 905 7719,
077 955 3216

## காணி விற்பனைக்கு

* கே.கே.எஸ் வீதியில் 3ஆவது மைல் கல் கொக்குவில், சம்பியன்லேன் அருகாமையில் நிலப்பரப்பு 13¾ காணி விற்பனைக்கு உண்டு.
* கொக்குவில் கிழக்கு தலையாழியில் (செல்வ மகால் திருமண மண்டபத்துக்கு முன்பாக) கே.கே.எஸ் வீதியிலிருந்து 150m தூரத்தில் நிலப்பரப்பு 6 துண்டுகளாகவும் மொத்தமாக வும் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
077 728 6061, 077 167 1174

## FAHMA - DUBAI MANPOWER
### வேலை வாய்ப்பு

ஆண், பெண் இருபாலாருக்கும் அவரவர் தகைமைகளுக்கும் தொழிலுக்கும் ஏற்ப வேலைவாய்ப்பு

**சம்பளம் ரூ.45,000 - 100,000 ரூபா வரை**

போக்குவரத்து, தங்குமிடம், உணவு கம்பனியால் இலவசமாக வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: இலங்கை - 075 639 8701,
077 253 4271, 071 787 6136
டுபாய்-00971 5216 64830

Email - fahmadubai13@gmail.com
Skype - fahmadubai4

## உடனடி வேலைவாய்ப்பு

யாழ்.நகரில் வெற்றிகரமாக இயங்கிக் கொண்டிருக்கும் **Golden Group Advertisment Company** இன் பதவி வெற்றிடங்கள்

1. வெளிக்கள உத்தியோகஸ்தர்
2. மேற்பார்வையாளர்
3. உதவி முகாமையாளர்
4. அலுவலகப் பெண்

தகைமைகள்
O/L, A/L , வயதெல்லை 18-40

பயிற்சியளித்து உள்வாங்கப்படுவதுடன் நிரந்தர வேலைவாய்ப்பு பயிற்சியின் நிறைவில் 48,000 - 75,000/= பெற முடியும். பயிற்சிக் காலத்தில் 18500 + கொமிசன் + போக்குவரத்து வசதி, தங்குமிடம், உணவு இலவசமாக வழங்கப்படும். (தூர இடங்களில் இருந்து வருவோருக்கு)

இல.38, பற்றிக்ஸ் வீதி (சென்சாள்ஸ் அருகில்), யாழ்ப்பாணம்.
077 998 7699, 021 300 4664, 077 621 9536

குளியாப்பிட்டியப் பல்கலைக்கழகக் கல்லூரி
**UNIVERSITY COLLEGE OF KULIYAPITIYA**
வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம்.
UNIVERSITY OF VOCATIONAL TECHNOLOGY

UNIVERSITY COLLEGE OF KULIYAPITIYA

UNIVOTEC

## Higher National Diploma / Diploma in Refrigeration and Air Conditioning Technology (NVQ 5&6)

குளியாப்பிட்டியப் பல்கலைக்கழகக் கல்லூரியின் **Refrigeration and Air Conditioning Technology** உயர் தேசிய டிப்ளோமா மற்றும் தேசிய டிப்ளோமா கற்கைநெறிகளுக்கு **(NVQ 5&6)** தகுதியுடைய மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- கற்கை நெறிகளுக்கான கட்டணங்கள் இலவசம்.
- சர்வதேச தரத்திலான தொழினுட்பக் கற்கை நெறியினை பயிலும் வாய்ப்பு
- மத்தியகிழக்கு, ஐரோப்பா மற்றும் உள்நாட்டிலும் பிரகாசமான வேலை வாய்ப்பினைப் பெறக்கூடிய சந்தர்ப்பம்
- கற்கைநெறிக்கு மேலதிகமாக தகவல் தொழினுட்பம் மற்றும் ஆங்கில பாடநெறியினைப் பயிலும் வாய்ப்பு

வேண்டப்படும் தகைமை:

✓ க.பொ.த உயர் தரத்தில் கணித அல்லது பொறியியற் தொழினுட்பவியல் துறையில் 3 பாடங்களில் சித்தி அல்லது கலைத் துறையில் வன் தொழினுட்பவியலில் சிறப்புச்சித்தி உள்ளடங்கலாக 3 பாடங்களில் சித்தி அல்லது பொருத்தமான தேசியதொழில் தகைமைமட்டம் 4 இல் சித்திபெற்றிருக்க வேண்டும்.

✓ வயதெல்லை: 31.12.2015 இல் 29 வயதிற்குட்பட்டோர்

விண்ணப்பப்படிவங்களை www.ucj.lk இணையத்தளத்திலும் இல.29, பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக் கழகக் கல்லூரியிலும் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகக் கல்லூரிக்கோ அல்லது www.ucj.lk யினூடாக online மூலமாகவோ 31.05.2016 ற்கு முன்னர் அனுப்பிவைக்கலாம்

மேலதிகதகவல்களுக்கு
University College of Jaffna
No 29, Brown Road, Jaffna.
தொலைபேசி இல : -021-221 7791

இணையத்தள்முகவரி : -www.uck.ac.lk

ஓம் சாயிராம்

## ஆத்ம சாந்தி பிரார்த்தனையும் நன்றி நவிலலும் விருந்துபசார அழைப்பும்



அன்னை மடியில்
04.06.1951

இறைவன் அடியில்
20.04.2016

### அமரர் வரதராணி பூரணேஸ்வரன்

(அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் உடையார் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்டவர்)

கடந்த 20.04.2016 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தாயார் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு நேரிலும், தொலைபேசியூடாகவும், கடிதம் மூலமாகவும் உள்நாடு, வெளி நாடுகளிலிருந்து அனுதாபம் மற்றும் ஆறுதல் கூறியவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டோருக்கும் பதாகைகள் மூலமாகவும் அஞ்சலி செலுத்தியோருக்கும் மறைவுச் செய்தி கேட்டு ஓடோடி வந்து இறுதிக்கிரியைகள் வரைக்கும் சகல வழிகளிலும் உதவியும் ஒத்தாசையும் நல்கிய நண்பர்கள், உறவினர்கள்,அயலவர்கள் மற்றும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றி யைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் இன்று (22.05.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணியளவில் கலட்டி அம்மன் மணி மண்டபத்தில் நடைபெறவிருக்கும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின் றோம்.

(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

பூ.ரஜீத்தன் (சுஜன்-மகன்),ர. பூரண்யா (பூஜா-மகள்),தெ.ரஜீவ் (மருமகன்)
077 165 1711

# கஞ்சா வைத்திருந்த பெண் கைது

கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் தாவடிப் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் யாழ்ப்பாணப் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து 11 கிராம் நிறையுடைய கஞ்சா கைப் பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் பொலிஸ் புலனாய்வு பிரிவினரால், குறித்த பெண் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட பெண் நேற்றுமுன்தினம் யாழ்.நீதிவான் நீதிமன்றில் முற்படுத் தப்பட்டார். அவரை எதிர்வரும் இரண்டாம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் சிவலிங்கம் உத்தரவிட்டார். (ற-ஜ-103)

# இன்று மின்தடை

யாழ்ப்பாணம், மே 22

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை யாழ். பிரதேசத்தில் குட்டியபுலம், சுதந்திரபுரம் ஆகிய இடங்களிலும், வவுனியா பிரதேசத்தில் தெற்கிலுப்பைக்குளம் பிரதேசத்திலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என வடமாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் தெரிவித்துள்ளார். (து-ரி)

## மரண அறிவித்தல்

### திருமதி ஜெயந்தி ஜெயானந்தன்



உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயந்தி ஜெயானந்தன் 20.05.2016 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இராசரத்தினம் ஜெயானந்தனின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தையா - கண்ணகை தம்பதிகளின் அன்பு நிறைந்த மகளும் இராசரத்தினம் - சிவபாக்கியம் தம்பதியினரின் இளைய மருமகளும் ஜெருஷா, ஜெனிஷாஜினி(சுஜா) ஆகியோரின் ஆருயிர் அன்னையும் காலஞ்சென்ற இராமச்சந்திரன் மற்றும் நித்தியானந்தசாமி, யோகசந்திரன், ஜெயரத்தினம், ஜெயதரன், வசந்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும் மனோ, ரஞ்சினி, சுசீலா, இந்திரா, சுஜிதா, சுகதாஸ்(வண்ணன்) மற்றும் டகிலாந்தன், பவா, சசி, சத்தியதேவி, சலூஜாதேவி ஆகியோரின் மைத்துனியும் லேகா, பாமா, தர்ஷி, செந்தூரன், துவாரகன், நிறைஞ்சினி, வினித்தா, அபிசங்கர், ஆஷா, வர்ஷா, அக்சரா, தேனு, கமல், துசி, லிக்சன் ஆகியோரின் பாசமிகு அத்தையும் வரஷா, ஷாஜினி, சாகித்தியன் ஆகியோரின் சிறியதாயும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் நாளை (23.05.2016) திங்கட்கிழமை காலை 10மணிக்கு அன்னாரது இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்வை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

செல்வம் மில் வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி இரத்தினம்



சரவணை கிழக்கு வேலணையைப் பிறப்பிடமாகவும் கந்தரோடையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி இரத்தினம் நேற்று (21.05.2016) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-தெய்வானை தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - மங்கையர்க்கரசி தம்பதிகளின் மருமகனும் மகாலிங்கம் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், பொன்னாச்சி ஆகியோரின் சகோதரரும் சறோஜினிதேவியின் அன்புக் கணவரும் உஷாந்தினி, உதயராஜ், உஷாந்தன்(C.T.B முல்லைத்தீவு), உஷாயினி ஆகியோரின் அன்புத் தந்தையும் சாந்தரூபன், சாளினி, சந்தியா, சாரங்கன் ஆகியோரின் மாமனாரும் கபிஷாயினி, டிலக்சனா, டிலாஜினி, டிலக்சன், அபிஷா, டக்சயன், விதுஜா, சங்கஜன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (22.05.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கந்தரோடை சங்கம் புலவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
உஷாந்தன்
(மகன்-C.T.B முல்லைத்தீவு)

கந்தரோடை, மடத்தடி,
சுன்னாகம்.

## மரண அறிவித்தல்

### குலசிங்கம் பாஸ்கரன்



மாலிசந்தி அல்வாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் கல்வியங்காடு புதிய செம்மணி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட குலசிங்கம் பாஸ்கரன் கடந்த (20.05.2016) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குலசிங்கம் மற்றும் அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், மகேஸ்வரன் - குணலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், உதயபானுவின் அன்புக் கணவரும், கோபிகன் (சென். ஜோன்ஸ் கல்லூரி), சோபிகன் (செங்குந்தா இந்துக் கல்லூரி), டினோகா (செங்குந்தா இந்துக் கல்லூரி), மதுமிதன் (யா/கல்வியங்காடு இந்து தமிழ் கலவன் பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், வசந்தா, சாந்தா (லண்டன்), தயாளினி, யசோதா ஆகியோரின் அன்புச் சகோதரனும், தயாபரன், சண்முகலிங்கம் (லண் டன்), இராஜகோபால், ஜெயசீலன், பிரகாஸ் (சுவிஸ்), பிரதீபன் ஆகி யோரின் மைத்துனரும், பத்மலோஜினி (சுவிஸ்), கிரிஷாந்தி, ஆகியோரின் சகோதரனும், ஜெனித்தா, நிதுஜா, கேசவன், யுவேதினி, சுரக்ஷனா, துர்க்கா, நிதுஷன், வர்ஷா, மிதுலாஸ், அபிஷா, சந்செய் ஆகியோ ரின் மாமனும், ரமணனின் சித்தப்பாவும், அட்ஷயாவின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.05.2016) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புதிய செம்மணி வீதி, கல்வியங்காடு.
021 300 7520

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி அருளம்மா தம்பித்துரை



கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி அருளம்மா தம்பித்துரை கடந்த 19.05.2016 வியாழக்கிழமை சிவபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பித்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பாலசிங்கத்தின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற இலங்கநாதன், தவமலர், செல்வநாதன் (செல்வம்), சிவலிங்கம் (சுவிஸ்), இரஞ்சினிதேவி (கிளி- லண்டன்), காலஞ்சென்ற ரவீந்திரன், காலஞ்சென்ற பாஸ்கரன், நடேசலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கமலாதேவி, பாலசுப்பிரமணியம், மோகனா, ரோசரிஜா,யோகரட்ணம், கௌரி ஆகியோரின் அன்பு மாமியும், தர்மசீலன், காலஞ்சென்ற சத்தியசீலன், குணசீலன், விபிஷா, தர்சன், லிங்கேஸ்வரன், கணேசலிங்கம், தர்சினி, தாட்சாயினி, பாஸ்கரலிங்கம், தயாளலிங்கம்,கோமதி, மதிரூபன்,காந்திமதி, பாஸ்கரன், ரவீந்திரன், அருள், நந்தகுமார், சர்மிளா, கார்த்திகா, தனுஷ், ஆர்த்திகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், டிலக்சனா, கிஷான், தீபிகன், சாளினி, கார்த்திகன், கபிலன், அபிலாஸ், துளசி, கயானா, கண்ணா, வைஷ்ணவி, திலீபன், சரணியா, சாருயன், சைந்தவி, நவிஷா,ஹரிகரன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.05.2016) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் ...டையாலடி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், ...ர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

...ரமகிருஸ்ண வீதி,
...ண்டாவில் ...ழக்கு, கோண்டாவில்.

(c/21061)
(11,17,18)

தகவல்:
குடும்பத்தினர்.

...73 4581 (Ganesh), 077 991 1753 (Selvam)

## மரண அறிவித்தல்

### திருமதி கணேஸ்வரி (தேவி) நாகரத்தினம்



கிளானை, கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும், மயிலிட்டி வடக்கை நிரந்தர வதிவிடமாகவும், தொம்பை வீதி, உடுவிலை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி கணேஸ்வரி (தேவி) நாகரத்தினம் 19.05.2016 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வயிரமுத்து - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும், நாகரத்தினத்தின் (தேசிங்கம்) அன்பு மனைவியும், மேனகா (மீரா), பிரதீபன் (தீபன் - ஜேர்மனி), சுபதீபன்(சுபாஸ் - ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயும், பரரூபசிங்கம் (ரூபன் - ஜேர்மனி), துசிக்கா (ஜேர்மனி), றதனா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமியும், ஜித்தேஸ் (தரம் - 6 - கொக்குவில் இந்துக்கல்லூரி), திரிஸ்ரன், அஜய், பவனுஜா, சஞ்சயன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், நாகராசா (பட்டு), மகேஸ்வரன் (சின்ராசு), ஜெகதீஸ்வரன் (அப்புராசா), யோகேஸ்வரன் (ராசா), பாமினிதேவி (சந்திரா), சுசிலாதேவி (சுசிலா) மற்றும் காலஞ்சென்ற இராசமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், மகாலட்சுமி, கமலேஸ்வரி, உமாராணி, கலையரசி, இராசேந்திரம், திருநாவுக்கரசு மற்றும் காலஞ்சென்ற செல்வரத்தினம் மற்றும் குணரத்தினம், அன்னரத்தினம் (கனடா), கனகரத்தினம், பாலசேகரத்தினம், தங்கரத்தினம், கணேசநாதன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.05.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொம்பை வீதி,
உடுவில்.

(J/1505)
(11,17,18)

தகவல்:
நாகரத்தினம்
(தேசிங்கம் - கணவர்)


021 224 0560

## தனிப்பட்ட ரீதியில் நிவாரணம் வழங்காதீர்

கொழும்பு, மே 22
வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாராண பொருட்களை எடுத்துக்கொண்டு தனிப்பட்ட ரீதியில் எவரும் வரவேண்டாம் என பாதுகாப்புத் தரப்பினர், பொதுமக்களைக் கேட்டுக் கொண்டுள்ளனர்.
தனிப்பட்ட நபர்கள் மற்றும் குழுவால் முன்னெடுக்கப்படும் நிவாரணம் வழங்கும் நடவடிக்கையால் சன நெரிசல் ஏற்படுவதாகவும் நிவாரணம் வழங்கும் நடவடிக்கையை முகாமைத்துவம் செய்வது கடினமாக உள்ளதாகவும் பாதுகாப்புத் தரப்பினர் தெரிவிக்கின்றனர்.
நிவாரணப் பொருள்களை வழங்குவோர், பாதுகாப்புப் பிரிவினர் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவுகளின் ஊடாக ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள மத்திய நிலையங்களில் நிவாரணப் பொருள்களை ஒப்படைக்குமாறு கேட்டுகொள்ளப்பட்டுள்ளனர். (த)

# பேருவளையில் நேற்று ரயில்-ஜீப் மோதி விபத்து

கொழும்பு, மே 22
பேருவளை காலி வீதிக்கு அருகாமையிலுள்ள வெருகமலை ரயில் கடவையில் நேற்று மாலை ரயிலொன்றும் ஜீப் வண்டியொன்றும் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.
இந்த விபத்தில் ஜீப் வண்டியில் பயணித்த இருவர் காயமடைந்துள்ளனர்.
குறிப்பிட்ட ரயில் கடவையில் பாதுகாப்புக் கடவை காணப்படு கின்ற அதேவேளை, காவலாளி ஒருவரும் பணியாற்றி வருகின்றார்.
விபத்து இடம்பெற்றபோது காவலாளியின் கவனவீனத்தினால் கடவை திறந்தே காணப்பட்டதாகவும். இதன் காரணத்தினாலேயே விபத்து இடம்பெற்றுள்ளதாகவும் பிரதேச வாசிகள் தெரிவித்துள்ளனர்.
பேருவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (த)



## அத்துருகிரிய நுழைவாயில் திறப்பு

கொழும்பு, மே 22
தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் அத்துருகிரிய நுழைவாயில் தற்போது திறக்கப்பட்டுள்ளது.
குறித்த வாயிலில் ஊடாக தெற்கு அதிவேக நெடுஞ்சாலைக்குள் பிரவேசிக்க முடியும் என வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.
சீரற்ற வானிலை காரணமாக தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் அத்துருகிரிய நுழைவாயில், கடந்த சில நாள்களாக மூடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

## மலசலகூடக்

துள்ளான் எனக் கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித் துள்ளனர்.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் கிளிநொச்சி, அக்கராயன் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதில் குலேந்திரன் தேனசன் (வயது - 6) என்னும் சிறுவனே உயிரிழந்தான்.
பெற்றோர் வெளியில் சென்றதால் தனிமையில் இருந்த சிறுவன், விளையாட்டுத்தனமாக மல சலகூடக் குழியின் அருகில் சென்றபோது, அதற்குள் தவறி விழுந்துள்ளதாக விசாரணை களின் போது தெரிவிக்கப்பட்டுள்ளது.
அத்துடன், கடந்த சில நாள்களாகப் பெய்த அடைமழை காரணமாக மலசலகூடக் குழியானது பாதுகாப்பு அற்றுப்போயிருந்ததாகவும், இதனாலேயே சிறுவன் விழுந்திருக்கலாம் எனவும் தெரிவித்த கிளிநொச்சிப் பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் கூறினர்.
மலசலகூடக் குழியினுள் தவறிவீழ்ந்த சிறுவன் உடனடியாக அக்கராயன் வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டபோதும், சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளான் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-வ-101-21)

## வடக்கு

தலைவரின் அலுவலகத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது வடக்கு மாகாண சபையின் 13 உறுப்பினர்களும் பங்கெடுத்துள்ளனர். (த-5-101)

## இளம்

காலை இடம்பெற்றுள்ளது. மாங்குளம் பகுதியில் உள்ள குறித்த தற்காலிக வீட்டின் உரிமையாளரான நாகலிங்கம் யோகேஸ் வரன் (வயது-30) என்ற இளம் குடும்பஸ்தரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
நேற்று முன்தினம் இரவு வீட்டில் நின்ற வெள்ளத்தை அங்கிருந்து அகற்றிச் சுத்தம் செய்து தன்னையும் பிள்ளைகளையும் படுக்கவிட்டு வெளியில் நின்ற கணவர், எங்கு சென்றார், எவ்வாறு உயிரி ழந்தார் என்பது தொடர்பாக எதுவும் தெரியாது. நேற்றுக் காலையில் எழுந்து பார்க்கும் போதே கணவர் இறந்து கிடந்தமையைக் கண்டதாக உயிரிழந்த குடும்பஸ்தரின் மனைவி விசாரணைகளில் தெரிவித்துள்ளார்.
இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக மாங்குளம் பொலிஸார் தெரிவித்தனர். (த-வ-ரி7-21)

## இடர் முகாமைத்

இயங்கவுள்ளது.
இடரினால் முற்றாகச் சேதமடைந்த வீடுகளை நிர்மாணித்தல், தொழில் மற்றும் ஜீவனோபாய வசதிகளை மீள் கட்டமைத்தல், இடர் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களைப் பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்தல் மற்றும் சுகாதாரப் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தல் என்பன தொடர்பில் இந்தச் செயலணி கவனம் செலுத்தவுள்ளது.
இந்தச் செயலணியின் முதலாவது கூட்டம் நாளை திங்கட்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ளதாக, ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-வ-5)

## இயற்கைப் பேரிடரினால்

காரணமாக, வெசாக் கொண்டாட்டங்கள் சோபையிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
ஆயினும், யாழ்ப்பாணத்தில் பாதுகாப்புப் படையினர் வழமையாக நடத்தும் வெசாக் கொண்டாட்டம் இம்முறையும் கோலாகலாமாக நடைபெறுகின்றது.
நாட்டில் ஏற்பட்ட பேரிடர் காரணமாக வெசாக் பண்டிகையை முன்னிட்டுத் தோரணங்கள் அமைப்பதையும், உணவு தானம் செய்வதையும் விடுத்து, இயற்கைச் சீற்றத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவி செய்யுமாறு மகாநாயக்கர்கள் ஆலோசனை வழங்கியிருந்தனர்.
இதன் காரணமாகக் கொழும்பு மாவட்டத்தில் வெசாக் பண்டிகையை விமரிசையாகக் கொண்டாடுவதற்கு இந்த முறை மக்கள் முன்வரவில்லை.
இதேவேளை, ஆண்டுதோறும் தோரணங்கள் அமைக்கும் இடங்களில் வெள்ளநீர் தேங்கியிருப்பதால், தோரணங்கள் அமைக்கும் முயற்சிகளையும் கைவிட்டுள்ளனர். எனினும் கங்காராமய, அபயராமய போன்ற பிரதான விகாரைகளில் சில தோரணங்கள் அமைத்திருப்பதைக் காணக்கூடியதாக இருந்தது.
வெசாக் தினத்தை முன்னிட்டு நேற்றும், இன்றும் அரச விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளபோதிலும் கொழும்பு உட்பட பிரதான நகரங்கள் சோபையிழந்து காணப்படுகின்றன.
இதேவேளை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று மாலை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அரச வெசாக் நிகழ்வு பேரிடரைக் கருத்திற்கொண்டுரத்துச்செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.
ஆயினும் யாழ். முற்றவெளிப் பகுதியில் பாதுகாப்புப் படையினரால் நடத்தப்படும் வெசாக் கொண்டாட்டம் இம்முறையும் கோலாகலமாக நடைபெறுகின்றது. இதன் ஆரம்ப நிகழ்வு நேற்று நடைபெற்றது. இதில் வடக்கு மாகாண ஆளுநர், யாழ்.மாவட்டப் படைகளின் தளபதிகள் ஆகியோர் உட்படப் பலர் பங்கேற்றனர். (த-வ-5)

## இராணுவத்துடன்

மையத்தின் ஏற்பாட்டில் நேற்று நடைபெற்ற போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 29 பயனாளிகளுக்கு கால்நடைகள் வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.
இதன்போது வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே மேலும் தெரிவித்துள்ளதாவது:-
புத்த பெருமான் இந்த நாட்டில் வாழும் அனைத்து மக்களும் இன, மத மொழி வேறுபாடு இன்றிச் சமாதானமாக வாழ வேண்டும் என்பதையே போதித்துள்ளார். இந்தப் புண்ணிய நாளில் இங்கு கூடியிருக்கின்ற எல்லோரும் ஒன்றாக இணைந்து, நல்லதொரு புண்ணியம் தரக்கூடிய வேலையைச் செய்திருக்கின்றோம்.
போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பசு மாடுகளை வழங்கி, அவர்களது குடும்பத்தின் வாழ்வாதாரத்தை உயர்த்தியுள்ளோம். நாட்டில் வாழுகின்ற இந்து மதத்தவரைப் பொறுத்தவரை, பசு அவர்களின் தெய்வரூபம் - சிவபெருமானுடைய வாகனம்.
எனவே பசுக்களை இறைச்சிக்காக வெட்டுவதைத் தடை செய்யுமாறு இந்து அமைப்புக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றன. அதனையே ஆளுநரான நானும் விரும்புகின்றேன். இந்தப் பசுமாடுகளை நன்றாக வளர்த்து, பட்டி பெருக்கி, அவற்றிலிருந்து பாலைப் பெற்று, உங்கள் பொருளாதாரத்தை உயர்த்திக் கொள்ளுமாறு வேண்டி நிற்கின்றேன்.
போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எம்மாலான உதவிகளை வழங்கி வருகின்றோம். பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரம் மேம்பட தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு இந்தக் கால்நடைகள் வழங்கப்பட்டுள்ளன.
போரினால் வடபகுதி மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டது. காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை, ஆனையிறவு உப்பளம் போன்ற பயன்தரு தொழிற்சாலைகள் அழிக்கப்பட்டன. இதனால், வேலை வாய்ப்புக்கள் இல்லாது போயுள்ளன. அவற்றை நிவர்த்தி செய்ய இந்தப் புதிய அரசு நடவடிக்கை எடுக்கும் - என்றார்.
நேற்றையதினம் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே, கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், கிளிநொச்சி இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகர, படை அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (த-வ-21)

## இடர் பாதித்த

ளார்.
அங்கு இடம்பெயர்ந்து, தற் காலிக நலன் புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள பாதிக்கப்பட்ட மக்களையும் பிரதமர் நேரில் சென்று சந்தித்துள்ளார்.
அத்துடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவி களையும் அவர் இதன் போது வழங்கியதாக பிரதமர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது. (த-வ-5)

## இயற்கைப் பேரிடரால்

பகுதியிலுள்ள மக்கள் அச்சத் தில் உறைந்து போயுள்ளனர்.
இலங்கையின் பேரிடர் மையமாக அரநாயக்க மாறியுள்ளது. அங்கு ஏற்கனவே மண்சரிவில் சிக்குண்டுபோன மூன்று கிராமங்களைச் சேர்ந்த சுமார் 200 குடும்பங்களைத் தேடும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.
இந்த நிலையில் நேற்றுப் பிற்பகல் 3 மணி யளவில், அந்தப் பகுதியில் மீண்டும் மண் சரிவு ஏற்பட்டுள்ளது.
அரநாயக்க கபரகல மலையிலேயே இந்த மண்சரிவு இடம்பெற்றுள்ளது. பெரியளவிலான மண்மேடையொன்று சரிந்து விழுந்துள்ளது. இந்தப் பகுதிக்கு ஏற்கனவே மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இதனால் அங்கிருந்த மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறியிருந்தனர். உயிரிழப்புக்கள் ஏற்பட்டிருக்கவில்லை. எனினும், பல வீடுகள் இந்த மண்சரிவில் புதையுண்டு போயுள்ளன.

**மண்சரிவு**

கேகாலை மாவட்டத்தின் அரநாயக்க பகுதியில் ஏற்பட்ட மண்சரிவு காரணமாக உயிரிழந்த 25 பேரின் சடலங்களே நேற்று மாலை வரையில் மீட்கப்பட்டுள்ளன. அத்துடன் 141 பேர் இந்தப் பகுதியில் மாத்திரம் காணாமற்போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. 600 இராணுவத்தினர் தொடர்ச்சியாக மீட்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். ஆனாலும் இடையிடையே மழை தொடர்வதனால் மீட்புப் பணியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.
இந்தப் பகுதியில் தொடர்ந்தும் இடர் ஏற்படுவதற்கான வாய்ப்பு இருப்பதனால், பொதுமக்களை அங்கே வரவேண்டாம் என்று பாதுகாப்புத் தரப்பினர் எச்சரிக்கை செய்துள்ளனர். அத்துடன் இந்த மண்சரிவில் தப்பியவர்கள் தமது உறவினர்களைத் தேடி அந்தப் பகுதிக்குத் தொடர்ச்சியாகப் படையெடுத்துக் கொண்டிருக்கின்றனர். தமது உறவுகள் உயிருடன் மீட்கப்படுவார்கள் என்ற நம்பிக்கையை இழந்து வருவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.
புளத்கோபிட்டியவில் மண் சரிவில் புதையுண்டுபோன 16 பேரினது சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. அத்துடன் அவர்களது இறுதிக் கிரியைகளும் நேற்று நடத்தப்பட்டுள்ளன.
அரநாயக்க மற்றும் புளத்கோபிட்டிய மண் சரிவு இடரினால் உயிரிழந்த 41 சடலங்கள் நேற்று மாலை வரையில் மீட்கப்பட்டுள்ளன. இந்த எண்ணிக்கை இன்னமும் அதிகரிக்கக் கூடும் என்று கவலை வெளியிடப்பட்டுள்ளது.

**கொழும்பு**

கொழும்பின் புறகர்ப் பகுதிகளில் வெள்ளம் மெதுவாக வடியத் தொடங்கியுள்ளது. நேற்று முன்தினம் மழை ஓரளவு குறைந்திருந்த போதும், நேற்றைய தினம் இடைக்கிடையே மழை பெய்துள்ளது. எனினும் களனி கங்கையின் நீர் மட்டத்தில் பெரியளவில் எதுவித மாறுதலும் ஏற்படவில்லை. கொழும்பின் புறநகர்ப் பிரதேசங்களில் வெள்ளம் மெதுவாக வடியத் தொடங்கியுள்ளது. ஆனாலும், மக்கள் மீளச் செல்லக் கூடியளவுக்கு வெள்ளம் வடிந்தோடவில்லை. சுமார் 10 அடிக்கு வெள்ளம் தேங்கி நிற்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

**ஒட்டுமொத்தப் பாதிப்பு**

நேற்று மாலை 4 மணிக்கு வெளியிடப்பட்ட இடர்முகாமைத்துவ மத்திய நிலையத்தின் தரவின் அடிப்படையில், 73 பேரினது உடல்கள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 29 பேர் காயமடைந்துள்ளனர். அத்துடன் 141 பேர் தொடர்பில் இன்னமும் எந்தவித தகவல்களும் தெரியவில்லை. (த-வ-5)

# மெதடிஸ்த பெண்கள் அணி சம்பியன்

## மாகாண மட்ட பூப்பந்தாட்டத் தொடரில்

கரணவாய், மே 23
மாகாண மட்டப் பூப்பந்தாட்டத் தொடரில் 19 வயது பெண்கள் பிரிவில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அணியை வீழ்த்தி சம்பியனாகியது பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி.

மன்னார் பொது விளையாட்டரங்கில் நேற்றுக் காலை குறித்த இறுதியாட்டம் நடைபெற்றது. மூன்று ஒற்றையர் ஆட்டங்கள், இரண்டு இரட்டையர் ஆட்டங்கள் என மொத்தமாக ஐந்து செற்களைக் கொண்டதாக இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. முதல் இரண்டு ஒற்றையர் செற்களையும் மெதடிஸ்த பெண்கள் அணி கைப்பற்றியது. இதனால் மூன்றாவது ஒற்றையர் செற்றையும் அந்த அணி வென்றுவிட்டால் கிண்ணம் மெதடிஸ்த பெண்களிடம் சென்றுவிடும். ஆனால் அந்த செற் சுண்டுக்குளியின் வசமாக நேர் செற் வெற்றி என்ற மெதடிஸ்த பெண்கள் அணியின் கனவு தகர்க்கப்பட்டது. முதலாவது இரட்டையர் செற்றும் சுண்டுக்குளியின் வசமாக இரண்டாவது இரட்டையர் ஆட்டத்தில் கிண்ணம் தீர்மானமாக வேண்டிய நிலை ஏற்பட்டது. இதில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை வெற்றி பெற 3:2 என்ற செற் கணக்கில் அந்த அணி சம்பியனானது.




குறித்த பிரிவின் மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியும், யாழ். இந்து மகளிர் கல்லூரியும் மோதின. இதில் 3:0 என்ற நேர் செற்கணக்கில் வெற்றிபெற்றது யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி. (ம-108,433)

## ஆவரங்கால் மத்தி சம்பியன்

யாழ்ப்பாணம், மே 22
கோப்பாய் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரில் ஆவரங்கால் மத்திய அணி சம்பியனானது.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் அணி மோதியது. 5 செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய அணி 3:2 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனானது. (ம-23)

## அசத்துவார் அஸ்வின்

இந்திய அணி அடுத்து விளையாடவுள்ள டெஸ்ட் தொடர்களில் அஸ்வின் சிறந்த பங்களிப்பை வழங்குவார் என்று இந்திய அணியின் முன்னாள் சுழல் பந்துவீச்சாளரான மணிந்தர் சிங் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அஸ்வின் தொடர்பாக மணிந்தர்சிங்மேலும்தெரிவிக்கையில் ஐ.பி.எல். தொடரில் அஸ்வினின் செயற்பாடு திருப்தியாக இருந்தது என்று சொல்லுவதற்கில்லை. ஆனால் அவர் நிச்சயம் தனது தடுமாற்றத்திலிருந்து மீண்டு பழைய போர்முக்குத் திரும்புவார். இந்த வருடம் இந்திய அணி கிட்டத்தட்ட 14 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடவுள்ளது. எனவே சுழல் வீரர் ஒருவரின் செயற்பாடு அணிக்கு மிகையாகத் தேவைப் படுகிறது. இதைக் கருத்திற் கொண்டு அஸ்வின் எழுச்சி காணவேண்டும்-என்றார். (ம)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், மே 22
**பிரதேச செயலகங்களின் துடுப்பாட்டத் தொடர்**
யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான மென்பந்து துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் நெடுந்தீவு மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சங்கானை பிரதேச செயலக அணியை எதிர்த்து தெல்லிப்பழை பிரதேச செயலக அணி மோதவுள்ளது. காலை 9.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மருதங்கேணி பிரதேச செயலக அணியை எதிர்த்து நெடுந்தீவு பிரதேச செயலக அணி மோதவுள்ளது. காலை 10.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சாவகச்சேரி பிரதேச செயலக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி மோதவுள்ளது.

**மன்னார் கிரிக்கெட் சங்கத்தின் தொடர்**
மன்னார் கிரிக்கெட் சங்கம் நடத்தும் துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் சில இன்று ஞாயிற்றுக்கிழமை மடு பிரதேச செயலக மைதானத்திலும், அடம்பன் பிரதேச சபை மைதானத்திலும் இடம்பெறவுள்ளன. இதன்படி மடு பிரதேச செயலக மைதானத்தில் காலை 9.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஸ்ரார் ஈகிள்ஸ் அணியை எதிர்த்து ஏசியன் அணி மோதவுள்ளது. அடம்பன் பிரதேச சபை மைதானத்தில் காலை 9.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் முத்தமிழ் அணியை எதிர்த்து சென்.ஜோசெப் அணி மோதவுள்ளது. (ம-23)

## யங்கம்பன்ஸ், டயமன்ஸ், சென்.ஹென்றிஸ் அணிகள் அடுத்த சுற்றுக்கு முன்னேற்றம்

யாழ்ப்பாணம், மே 22
யங்ஹென்றிஸ் வி.கழகம் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேற்றம் கண்டுள்ளன சென்.ஹென்றிஸ் கல்லூரி, யங்கம்பன்ஸ், டயமன்ஸ் அணிகள்.

இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் ஹென்றிஸ் கல்லூரி அணியை எதிர்த்து அந்தோனியார்புரம் சென்.அன்ரனிஸ் அணி மோதியது. ஆட்டம் ஆரம்பித்தது முதல் ஏக ஆதிக்கம் செலுத்திய சென்.ஹென்றிஸ் கல்லூரி அணி 7:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில், யங்கம்பன்ஸ் அணியை எதிர்த்து சென்.மேரிஸ் அணி மோதியது. 15வது நிமிடத்தில் ஜெனட் ஓர் கோலைப் பதிவு செய்ய முதல் பாதியின் முடிவில் 1:0 என்று ஆதிக்கம் செலுத்தியது சென்.மேரிஸ். இரண்டாம் பாதியின் 27ஆவது நிமிடத்தில் ரதனின் உதவியுடன் பதிலடி கொடுத்தது யங்கம்பன்ஸ். 56 வது நிமிடத்தில் யங்கமன்ஸ் அணி வீரர் பிரியதர்சன் இரண்டாவது கோலைப் பதிவுசெய்ய முடிவில் அந்த அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது.

அடுத்து நடைபெற்ற மூன்றாவது ஆட்டத்தில் டயமன்ஸ் அணியை எதிர்த்து சென்.பீற்றர்ஸ் அணி மோதியது. ஆட்டத்தின் 11 ஆவது நிமிடத்தில் சென்.பீற்றர் அணி வீரர் பகீரதன் தனது அணிக்கான முதலாவது கோலைப் பதிவு செய்தார். இருப்பினும் விடாப் போராட்டத்தை வெளிப்படுத்திய டயமன்ஸின் வீரர்களான பிறேம்குமார், துசிகரன், லக்கீசன் மூவரும் அடுத்தடுத்து கோல்களை பதிவு செய்ய இடைவேளைக்கு முன்னர் டயமன்ஸ் அணி 3:1 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது. இரண்டாம் பாதியின் 39 ஆவது நிமிடத்தில் ரஜீசனும், 48 ஆவது நிமிடத்தில்லக்கீசனும், 60 ஆவது நிமிடத்தில் ரஜீசனும் அடுத்தடுத்து கோல்களைப் பதிவு செய்ய தற்பொழுது நிலைமை 6:2. பீற்றர் அணியின் றீகன் 63 ஆவது நிமிடத்தில் ஓர் கோலைப் பதிவு செய்த போதிலும் முடிவில் 6:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது டயமன்ஸ். (ம-422)

## விற்கப்படுகிறது அஸ்டன் வில்லா

அஸ்டன் வில்லா கால்பந்தாட்டக் கழகத்தை, சீனாவைச் சேர்ந்த தொழிலதிபர் ஒருவர் வாங்குவதற்குச் சம்மதித் துள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

டொனி ஸியா என்ற அந்த சீனத் தொழிலதிபர், குறித்த கழகத்தை 60 மில்லியன் ஸ்டேர்லிங் பவுண்ட்ஸ்களுக்கு வாங்குவதற்கே சம்மதித்துள்ளார். 2006ஆம் ஆண்டில் 62.2 மில்லியன் ஸ்டேர்லிங் பவுண்ட்ஸ்களுக்கு அந்தக் கழகத்தை வாங்கியிருந்தார் அமெரிக்க கோடீஸ்வரரான றன்டி லேர்னர். இங்கிலாந்து பிறீமியர் லீக்கில் இம்முறை மோசமான பெறுபேறுகளை வெளிப்படுத்திய அஸ்டன் வில்லா, அந்தத் தொடரிலிருந்து தரமிறக்கப்பட்டுள்ள நிலையிலேயே இந்த விற்பனை நடைபெறுகிறது என அறியவருகிறது. (ம)

## வென்றது சென்.அன்ரனிஸ்



யாழ்ப்பாணம், மே 22
பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் மணற்காடு சென்.அன்ரனிஸ் அணி வெற்றிபெற்றுள்ளது.

கழுகுகளின் மைதானத்தில் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் மணற்காடு சென்.அன்ரனிஸ் அணியை எதிர்த்து உரும்பிராய் சென்.மைக்கல் அணி மோதியது. வாய்ப்புக்கள் கிடைப்பதும் வீணடிப்பதுமாக முடிவடைந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியிலும் எந்தவொரு அணியும் ஏக ஆதிக்கம் செலுத்தியபாடில்லை. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலைஏற்பட 5:4 என்றகோல்கணக்கில் வெற்றி பெற்றது சென்.அன்ரனிஸ். (ம-23)

## வவுனியா தமிழ் மத்திய ம.வி. தவிர்க்க முடியாத ஆதிக்கம்

கரணவாய், மே 22

பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்டப் பூப்பந்தாட்டத் தொடரில் 15 வயது ஆண்கள் பிரிவில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் கிண்ணம் வென்றுள்ளது. வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தின் 15வயதுப்பிரிவு அணி மாகாணத்தில் சம்பியனாவது இத்துடன் தொடர்ந்து 5ஆவது தடவையாகும்.

மன்னார் பொது விளையாட்டரங்கில் நேற்று இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தை எதிர்த்து மன்னார் பற்றிமா மத்திய மகா வித்தியாலயம் பலப்பரீட்சை நடத்தியது. மூன்று ஒற்றையர் ஆட்டங்கள், இரண்டு இரட்டையர் ஆட்டங்கள் என மொத்தமாக 5 செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் 3:0 என்ற நேர் செற்கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனாகியது.

இந்தப் பிரிவில் மூன்றாம் இடத்துக்காக இடம்பெற்ற ஆட்டத்தில் கொக்குவில் ஞானபண்டித பாடசாலையும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியும் மோதின. இதில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி வெற்றிபெற்று மூன்றாமிடத்தை தனதாக்கியது. (ம-108,433)




## யு.இ.எப்.ஏ. தலைவருக்கான தேர்தல் செப்டெம்பர் மாதம்

ஐரோப்பிய கால்பந்தாட்ட ஒன்றியத்தின் (யு.இ.எப்.ஏ.) தற்போதைய தலைவரான மைக்கல் பிளாட்டினி, இந்த மாதம் தனது பதவியில் இருந்து விலகியுள்ள நிலையில் புதிய தலைவருக்கான தேர்தல் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஊழல் முறைகேட்டில் சிக்கிய பிளாட்டினிக்கான தடை, ஆறு வருடங்கள் என உறுதிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து அவர் தனது பதவியிலிருந்து விலகினார். இதனால் ஐரோப்பிய கால்பந்தாட்ட ஒன்றியத்தின் புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல் எப்போது நடைபெறும் என எதிர்பார்க்கப்பட்டிருந்த நிலையில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 14ஆம் திகதி தேர்தல் நடைபெறும் என அறிவிக்கபட்டுள்ளது. இதற்கான விண்ணப்பங்களை எதிர்வரும் ஜுலை 20ஆம் திகதிக்கு முன்னர் சமர்பிக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)



# டோனியின் அதிரடியால் பஞ்சாப்பை வென்றது புனே

ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற பஞ்சாப்-புனே அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் டோனியின் இறுதிக்கட்ட அதிரடியால் வெற்றிபெற்றது புனே.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பஞ்சாப் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. பஞ்சாப்பின் ஆரம்பம் நேற்றைய ஆட்டத்தில் கச்சிதமாக அமைந்தது. அம்லா ஓரளவு நிதானிக்க அடிக்கொரு தடவை பவுண்டரிகளைப் பதிவுசெய்து கொண்டிருந்தார் முரளி விஜய். பவர் பிளே முடிவில் இலக்குச் சரிவின்றி 52 ஓட்டங்களை எடுத்திருந்தது பஞ்சாப். 30 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் அம்லா. இதற்காக அவர் 27 பந்துகளை எதிர்கொண்டிருந்தார். 7 பந்துகள் குறைவாக அவர் இந்த பெறுபேற்றை எட்டியிருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும். சாம்பாவின் சுழலில் சிக்கினார் சகா. இணைந்தது முரளி விஜய், குர்கீரட் சிங் இணை. மேலதிக இலக்கை இழக்காமல் நூறு ஓட்டங்களைத் தொட்டது பஞ்சாப். விஜய்யின் அரைச்சதம் 36 பந்துகளிலும், குர்கீரட் சிங்கின் அரைச்சதம் 29 பந்துகளிலும் பதிவாகின. அஸ்வினின் சுழல் இருவரையும் இருக்கைக்குத் திருப்பியது. முடிவில் பஞ்சாப் 172-7.

பந்துவீச்சில் புனேயின் சார்பாக அஸ்வின் 4 இலக்குகளையும், டின்டா, பெரேரா, சாம்பா மூவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கியது புனே. ஆரம்ப வீரர்களாக கவாயா மற்றும் ரகானே. சிறப்பான இணைப்பாட்டம் என்று சொல்லுவதற்கில்லை. ஆயினும் அதிக அழுத்தத்தை ஏற்படுத்தாத இணைப்பாட்டம் என்று சொல்லிக் கொள்ளலாம். 19 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ரகானே. அக்சர் பட்டேலிடம் வீழ்ந்தார் பெய்லி. கவாயா ஓர் முனையில் நிலைத்து நின்றாலும் மறு முனை திவாரி, இர்பான் பதான் இருவரதும் ஆட்டமிழப்புகளால் பலவீனமானதாகவே உணரப்பட்டது. கவாயாவும் ஆட்டமிழக்க களத்தில் டோனியும் பெரேராவும். இறுதி 7 பந்துப்பரிமாற்றங்களில் 86 ஓட்டங்கள் தேவை என்ற நிலைமை. இருவரும் அதிரடி காட்டினர். சிக்சர்கள் பதிவாகுவதும் பின்னர் பந்துகள் வீணடிக்கப்பட பஞ்சாப்பின் பக்கமாவும் வாய்ப்பு உருவாகுவதுமாக நகர்ந்தது ஆட்டம். 23 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் பெரேரா. இறுதிப்பந்துப் பரிமாற்றத்தில் 22 ஓட்டங்கள் தேவை என்ற நிலை. டோனி நிலைத்து நின்றதால் புனேயின் ரசிகர்களுக்கு நம்பிக்கை மிகையாகவே இருந்தது. பந்துப்பரிமாற்றத்தை முழுமையாக எதிர்கொண்டு பவுண்டரிகளையும் சிக்சர்களையும் பதிவு செய்து ஆட்டத்தை வெற்றியுடன் முடித்து வைத்தார். அவர் 32 பந்துகளில் 64 ஓட்டங்களைக் குவித்து இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் பஞ்சாப்பின் சார்பாக குர்கீரட் சிங் 2 இலக்குகளையும், சன்டீப் சர்மா, மொகிட் சர்மா, அக்சர் படடேல், ரிசி தவான் நால்வரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். (ம)

## 3 வருடங்களில் 36 மில்லியன்கள்

கடந்த மூன்று வருடங்களில் இலங்கை கிரிக்கெட் சபையுடன் தொடர்புடைய நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக 36 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதாக விளையாட்டுத் துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்விலேயே அவர் இதைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை கிரிக்கெட் சபைக்கு நிரந்தரமான சட்ட ஆலோசகர் இல்லை, நிரந்தரமான சட்ட ஆலோசகரை குறைந்த சம்பளத்துக்கு இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு செய்தால், இவ்வாறான மிதமிஞ்சிய செலவுகளைக் குறைக்கலாம். இனி வரும் காலங்களில் வழக்குகளுக்கான செலவுகளைக் குறைக்கலாம் என்று நம்புகிறேன்- என்றார். (ம)

## பிரெஞ்சுத் தொடர் இன்று ஆரம்பம்

சர்வதேச அந்தஸ்து பெற்ற ரென்னிஸ் தொடர்களில் ஒன்றான பிரெஞ்சுத் தொடர் பரிஸ் நகரில் இன்று ஆரம்பமாகிறது. களிமண் தரையில் நடைபெறும் இந்தத் தொடரில், களிமண் தரையில் விளையாடுவதில் வல்லவரான ரபேல் நடால் ஏற்கனவே ஒன்பது தடவைகள் கிண்ணம் வென்றுள்ளார். கடந்த வருடம் இறுதியாட்டத்தில் ஜோகோவிக்கிடம் தோல்வியடைந்திருந்தார். இதனால் நடப்பு வருடத் தொடரைக் கைப்பற்றி பத்து முறைகள் குறித்த தொடரை வென்றவர் என்ற சாதனையைப் படைப்பாரா என்று எதிர்பார்ப்புக்கள் நிலவுகின்றன. பெடரர் காயம் காரணமாக இந்தத் தொடரிலிருந்து விலகியுள்ளதால் நடால், ஜோகோவிக் இருவருக்குமிடையிலேயே கடும் போட்டி நிலவ வாய்ப்புள்ளது. (ம)

## மாகாணமட்ட பூப்பந்தாட்டத்தில் சுண்டுக்குளி மகளிர் சம்பியன்

கரணவாய், மே 22

பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட பூப்பந்தாட்டத் தொடரில் 15 வயது பெண்கள் பிரிவில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி சம்பியனாகியது.

மன்னார் பொது விளையாட்டரங்கில் நேற்று இடம் பெற்ற இந்த இறுதியாட்டத்தில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியும் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையும் மோதின. இதில் 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனாகியது சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அணி.

மூன்றாமிடத்திற்கான ஆட்டத்தில் மயிலணி சைவ மகா வித்தியாலயமும் மன்னார் பற்றிமா மத்திய மகா வித்தியாலயமும் மோதின. இதில் 3:0 என்ற நேர் செற்கணக்கில் வெற்றிபெற்றது மயிலணி சைவ மகா வித்தியாலயம். (ம-108)






# இன்னிங்ஸால் இலங்கை படுதோல்வி

# மூன்று நாள்களில் முடிந்த டெஸ்ட்



இலங்கை–இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டத்தில் இன்னிங்ஸாலும் 88 ஓட்டங்களாலும் இங்கிலாந்து அணி அபார வெற்றிபெற்றுள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை, முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து சகல இலக்குகளையும் இழந்து 298 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சுக்குச் சாதகமான லீட்ஸ் ஆடுகளத்தில் கிட்டத்தட்ட 300 ஓட் டங்கள் என்ற இந்தப் பெறுபேறு ஏற்கக் கூடியதே.

பந்துவீச்சில் இலங்கை சார்பாக சமீர, சானக இருவரும் தலா 3 இலக்குகளையும், கேரத் 2 இலக்குகளையும், எரங்க, பிரதீப் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கியது இலங்கை. ஓட்டமெதனையும் பெறாது ஆட்டமிழந்தார் கருணாரத்ன. முதற்கோணல் முற்றும் கோணலாக அன்டர்சனின் வேகத்தில் 91 ஓட்டங்களி ல் சகல இலக்குகளையும் பறிகொடுத்தது இலங்கை. பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பாக அன்டர்சன் 5 இலக்குகளையும், புரோட் 4 இலக்குகளையும், ஸ்டோக்ஸ் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட இலங்கை 1–0 என்றிருந்த பொழுது மழை குறிக்கிட இரண்டாம் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்டது. ஆட்டத்தின் மூன்றாவது நாளான நேற்றுக் களமிறங்கினர் கருணாரத்னவும், சில்வாவும். இரண்டாவது இன்னிங்ஸிலும் இலங்கையை விடவில்லை அன்டர்சன். ஏழே ஓட்டங்களுடன் கருணாரத்னவை வீழ்த்தினார். சக ஆரம்ப வீரரான சில்வாவும் அன்டர்சனின் பந்தில் பவிலியனுக்குத் திரும்ப, 35 ஓட்டங்களுக்கு ஆரம்ப வீரர்கள் இருவரையும் இழந்தது இலங்கை. குசல் மென்டிஸுடன் இணைந்தார் சந்திமல். அளவுக்கு அதிக நிதானமே இலக்குச் சரிவுக்கு காரணமாகிறது என்பதை உணர்ந்து அவ்வப்பொழுது பவுண்டரிகளைப் பதிவு செய்து கொண்டிருந்தார் மென்டிஸ். அதிகம் நிதானித்த சந்திமல் மொயின் அலியிடம் போல்ட் ஆகினார். தலைவரான மத்தியூஸால் முடிந்தது வெறும் ஐந்து ஓட்டங்களே. ஒரு முனை இவ்வாறு மிகவும் பலவீனமாக உணரப்பட்டாலும் மறுமுனையில் அரைச்சதம் கடந்தார் குசல் மென்டிஸ். நீடிக்க விடவில்லை அன்டர்சன், இலக்கைப் பிடுங்கி எறிந்தார். திரிமன்னேயை வீழ்த்தினார் ஸ்ரீவ் பின். அடுத்த சில பந்துப் பரிமாற்றங்களிலேயே இலங்கையின் இன்னிங்ஸ் 119 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது.

பந்துவீச்சில் அன்டர்சன் 5 இலக்குகளையும், பின் மூன்று இலக்குகளையும், புரோட், மொயின் அலி இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

ஆட்டநாயகனாக, 140 ஓட்டங்களை வீசிய இங்கிலாந்தின் இலக்குக் காப்பாளரான பரிஸ்ரௌவ் தெரிவானார்.

இலங்கை அணி தொடரைக் கைப்பற்ற வேண்டுமாயின் அடுத்த இரண்டு ஆட்டங்களிலும் வெற்றி பெற்றேயாக வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. ஆனால் இங்கிலாந்து தொடரைக் கைப்பற்ற வேண்டுமாயின் அடுத்த இரு ஆட்டங்களில் ஒரு ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தாலே போதும். இரண்டாவது டெஸ்ட் எதிர்வரும் 27ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. (ம)

சிங்கள வகுப்பு
புலமைப் பரிசில் மாணவர்களுக்கும், க.பொ.த.சாதாரண தர மாணவர்களுக்கும், அரச உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் ஏனையோருக்குமான சிங்கள மொழி வகுப்புக்கள் பிரத்தியேகமாக தனியார் கல்வி நிலையங்களிலும் வீடுகளிலும் வந்து கற்பிக்கப்படும். மணித்தியாலம்- 300/=
075 406 4454

ஆள்சேர்ப்பு
யாழ். மாவட்டத்தில் கட்டுமான பணிகளுக்கு உடனடியாக ஆள்சேர்ப்பு தேவைப் படுகின்றது. தேவையானோர்:
1. பொறியியலாளர் (சிவில்)
2. தொழில்நுட்பவியலாளர் (NCTCIVIL/HND) - 3 வருட அனுபவம்.
3. தேர்ச்சி பெற்ற கொத்தனார் (மேசன்)
4. தேர்ச்சி பெற்ற சட்டரிங் தச்சர்
25-55 வயதுக்குட்பட்ட தகுதியானவர்கள் ஆவணங்களுடன் தொடர்பு கொள்ளவும்.
ஆஞ்சநேய கென்ரக்ஷன்,
இல.225, பார் வீதி, மட்டக்களப்பு.
தொ.இல: 0652059063, 0653063376
மின்னஞ்சல்: ancheneye@live.co.uk
(J/1309)
(10.17)

FLC FRENCH LANGUAGE CENTRE FOR BETTER FRENCH
பிரெஞ்சு மொழி வகுப்பு
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர் ...
விரிவுரையாளர் MR. V. JEGAN (Trained in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)
DELF A1, A2 Exam இல் 100 % சித்தி.. 1095 மாணவர்கள் French கற்றுள்ளனர்...
DELF A1,A2,B1 வகுப்புக்கள் ஆரம்பம் உடன் பதியுங்கள்...
No. 40, பலாலி வீதி, இலுப்பையடி. 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 28.05.16 சனி 10 am.
பிரதான வீதி, நெல்லியடி TP: 021 3202973 ஆரம்பம்: 30.05.16 Mon@ 4pm.
ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → அப்பலோ Hospital → FLC

Study in Australia
Diploma / Degree / Masters Degree
* James Cook University
* Curtin University
* MIBT - Deakin University
* ACN - La Trobe University
* PIBT - Edith Cowan University
* SAIBT - University of South Australia
* QIBT - Griffith University
* NIC - University of New Castle
* MQC - Macquarie University
Apply now for the 2016 /2017 Intake
# Entry with G.C.E O/L
# Paid internships available
Study in USA
* Northwood University
* University of New Hampshire
* Western Kentucy University
* University of Umass Boston
Study MBBS in China, Bangladesh, Russia
iCS Study Overseas
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்
107, B-1/1 Galle Road , Colombo- 06
Admission Help line 077 3013060

# குஜராத்தால் வெளியேறியது

# நடப்புச் சம்பியனான மும்பை



ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் குஜராத்தால் தொடரில் இருந்து வெளியேற்றப்பட்டது மும்பை இந்தியன்ஸ்.

இந்த ஆட்டத்தில் வென்றால் மட்டுமே மும்பையால் பிளே ஓவ் சுற்றை நினைத்துப் பார்க்க முடியும். தோல்வியடைந்தால் தொடரில் இருந்து வெளியேற்றப்படும். நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற குஜராத் முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. ஆரம்பம் முதலே சிக்சர் பவுண்டரிகளாக அடித்து நொறுக்கி 30 ஓட்டங்களுடன் இலக்குச் சரிவையும் ஏற்படுத்தி விட்டுச் சென்றார் ரோகித் சர்மா. குப்ரீல், குருனல் பாண்டியா இருவரையும் வெளியேற்றினார் சிமித். ரணாவுடன் இணைந்தார் பட்லர். பட்லர் நிதானம், ரணா அதிரடி என நகர்ந்தது மும்பையின் இன்னிங்ஸ். 28 பந்துகளில் அரைச்சதம் கடந்தார் ரணா. 33 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் பட்லர். இதற்காக அவர் 31 பந்துகளை எதிர்கொண்டிருந்தார். 70 ஓட்டங்களுடன் ரணாவை வெளியேற்றினார் பிராவோ. பொலார்டால் முடிந்தது 9 ஓட்டங்கள் மட்டுமே. இதற்காக அவர் 11 பந்துகளை எதிர் கொண்டிருந்தார். முடிவில் மும்பை 172–8.

பதிலுக்குக் களமிறங்கிய குஜராத்துக்கு முதல் பந்திலேயே ஆட்டமிழந்து தடுமாற்றமான ஆரம்பத்தைக் கொடுத்தார் பின்ஞ். ரெய்னா, மக்கலம் இணைந்து குஜராத்தின் வெற்றியை படிப்படியாகக் கட்டியெழுப்பினர். பவர்பிளே முடிவில் அந்த அணி 70–1 என்றிருந்தது. அணியின் ஓட்ட எண்ணிக்கை 96 ஆக இருந்த பொழுது 48 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் மக்கலம். 30 பந்தில் அரைச்சதம் கடந்தார் ரெய்னா. 46 பந்துகளில் 51 ஓட்டங்கள் தேவை என்றிருந்த பொழுது ரெய்னா ஆட்டமிழந்தாலும் ஜடேயா, சிமித் இணைய 13 பந்துகள் மீதமிருக்க மும்பையை வென்றது குஜராத். (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.05.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.